# திருமந்திரக் கதைகள்


## தழிழறிஞர்

## கே.வி.குணசேகரம்



குணம்பிரசுரம்

நூல் விபரம்

நூலின் பெயர் :- திருமந்திரக் கதைகள்

(பாடல், உரை, விளக்கம், கதைகள்)

நூலாசிரியர் :- கே.வி.குணசேகரம்

பதிப்பாண்டு :- 2015.மார்கழி

மொத்தப் பக்கங்கள்

விநியோகம் :- லங்கா புத்தகசாலை

F.L. 1/14, டயஸ் பிளேஸ்

குணசிங்கபுர, கொழும்பு-12

tel: 011-2341942

fax: 011-245943

விலை :-

ISBN NO:-

# என்னுரை

தமிழில் செய்யுள் வடிவில்லமைந்த நூல்களுக்கெல்லாம் கதைகள் எழுதிய பின் அடுத்து எந்தச் செய்யுள் நூலுக்குக் கதை எழுதுவதென்று பல காலமாகச் சிந்தித்தித்தேன். முக்கியமான நூல்கள் யாவும் முற்றுப் பெற்றமையால் என்னால் முடிவெடுக்க முடியவில்லை. 12.12.2011 அன்று பகல் எனது வீட்டுக்கொருவர் வந்தார். வெள்ளை வேட்டி, வெள்ளைச் சட்டை, முழுச் சால்வை நெற்றியில் நீற்றுக்குறி, சந்தணப்பொட்டு, ''மகனே, தமிழுக்கும் சைவத்திற்கும் யாரும் செய்யாத சேவையை செய்து வருகிறாய். வேதங்கள், உபநிடதங்கள், திருக்குறள், பகவத் கீதை, இந்து தத்துவங்கள் யாவற்றையும் எளிமையான கதைகளாக்கி விட்டாய். அதனால் சைவ சமயத் தத்துவங்கள் யாவும் பாமரர்களுக்கும் புரிந்துவிட்டன. இனிச் சிவபெருமான் திருமூலருக்கு உபதேசித்த திருமந்திரத்தை எளிமைப்படுத்திக் கதைகளாக்கு. முன்பு வாழ்ந்தோர் அறிவில் மேதாவிகள். அவர்களுக்கு யாவும் புரிந்தது. இப்போது அறிஞர்கள் என்று சொல்பவர்களுக்கே எதுவும் புரிவதில்லை. உனக்கு யாவும் புரியும். அதனால் திருமந்திரத்திற்குப் பொருத்தமான கதைகளை எழுது. நீ எழுது கோலைக் கையில் எடுத்தால் சிவன் உனது மனதில் வந்தமர்ந்து விடுவார். அதனால் தான் நீ மற்றவர்கள் இதுவரை எழுதாதவற்றையெல்லாம் எழுதி வருகிறாய். எழுதி முடி. அதன் பின் நான் உன்னை வந்து சந்திப்பேன்'' என்று கூறிவிட்டுச் சென்றவர் பின் வரவில்லை. அடிக்கடி கனவில் வந்து, 'எழுதி முடித்த கதைகள் பிரமாதம்' என்று சொல்கிறார். அதனால் அவர் சிவனோ தெரியவில்லை.

திருமந்திரம் என்பது சிவமந்திரம். அது சிவனின் இயல்புகள் அனைத்தையும் தவறாது கூறுகிறது. சைவசித்தாந்த நூல்களுக்கெல்லாம் மூலம் திருமந்திரமே. என்னைப் பொறுத்தவரை சிவன் தான் திருமூலனாக அவதரித்துச் சைவசித்தாந்த மெய்ப்பொருளை அணுவளவும் பிசகாமல் கூறியுள்ளார். அதனால் திருமந்திரம் கூறாத எதையும் சைவசித்தாந்த நூல்கள் கூறவில்லை. ''அன்பு தான் சிவம், அன்பும் சிவமும் வேறல்ல'' என்று கூறுவதன் மூலம் சிவம் மிகவும் எளிமைப்படுத்தப்படுகிறது. அதாவது, ''ஓர் உயிரில் வைக்கும் அன்பு

இறைவனைச் சென்றடையும்'' என்று உபநிடதங்கள் கூறுகின்றன. அதை மெய்ப்பிப்பது திருமந்திரம். திருமந்திரம் கூறும் வழிபாட்டு முறைகளும் தானதர்மங்கள் செய்யும் முறைகளும் மிகவும் எளிமையானவை.

''கோவிலினுள்ளே குடி செய்து வாழ்பவர் தாயினும் நல்லார்'' உள்ளக் கோவிலில் சிவனை இருத்தி வாழ்பவர்கள் உலகத்தில் வாழும் மக்களுக்கெல்லாம் தாயிலும் மேலானவராவர்'' என்பதன் மூலம் உள்ளம் முதன்மைப்படுத்தப்படுகிறது. உள்ளத்தினுள்ளே சிவனையிருத்துவது மிகமிக எளிது. இவ்வாறு எளிமையான வழிபாட்டு முறைகளைத் திருமந்திரம் கூறுகிறது.

**யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை**

**யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை**

**யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி**

**யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே.**

இதே கருத்தைப் பகவத் கீதையும் கூறுகிறது. இலைகள், நீர், மலர்கள், கனிகள் வைத்து என்னை இடையறாது மனதால் பூசிப்பவனிடம் நான் எளிதில் அகப்படுவேன் என்று மகாவிஷ்ணு கூறுகிறார்.

பிறஉயிர்கள் மீது அன்பு வைப்பதன் மூலம் தன்னை அடையலாம் என்று கூறுவது மிகவும் எளிமையான வழிபாட்டு முறையாகும். இவற்றைக் கடைப்பிடிப்போர் மேன்மையடையலாம் என்பது திருமந்திரத்தின் உட்கருத்து. இது இன்று வரை மக்களுக்குப் புரியாத புதிராகவே இருக்கின்றது. அதற்குக் காரணம் திருமந்திரத்தை விளங்கிப் படித்து அதன் உட்ப்பொருளைப் பாமரர்களும் புரிந்து கொள்ளும்

வகையில் அறிஞர்கள் கூறாமையேயாகும். பொதுவாக எல்லோரும் பழந்தமிழ் நூல்களுக்கு உரை எழுதுகிறார்கள். செய்யுள்களை விட பலரின் உரைகள் கடினமானதாக இருப்பதால் அவை கற்றவர்களுக்கே விளங்குவதில்லை. உரை என்பது பார்த்தெழுதல், சில சொற்களை மாற்றியெழுதல் என்பது எனது கருத்து.

உரையாசிரியர்கள் ஒரு பாடலுக்கு உரையெழுதும் போது பதவுரை, பொழிப்புரை, விரிவுரை, விளக்கவுரை என்றும், சிலர் பொருள், சொற்பொருள், விளக்கம், ஐயவுரை என்றும் பாடலைப் பிரித்துத் தமது வித்துவத் திறமைகளைக் காட்டுகிறார்களே தவிர பாடலின் தத்துவத்தைப் பாமரர்கள் உணர வேண்டும் என்று எண்ணுவதில்லை. வித்துவம் உள்ளோர் தமது வித்துவத் திறமையை வெளிப்படுத்த மக்களுக்கு புரியாத சொற்களைப் பயன்படுத்துகிறார்கள். இச்சொல் நடை பல வித்தகர்களுக்கே புரிவதில்லை. தமக்கு விளங்காதவற்றைத் தேடிச் சென்று விளக்கம் கேட்கும் காலம் மறைந்து விட்டது. ஒரு வினாடியில் ஒரு செய்தி உலகம் பூராகவும் பரவிவிடும் இவ்வேளையில் விளங்காதவற்றை ஒதுக்கிவிடுவதே மக்களின் செயலாகவுள்ளது. அதனால் அருமையான பழம்தமிழ், சமயச் செய்யுள்களைச் சுருக்கமாகவும் விளங்கக் கூடியதாகவும் எழுதுவதே இன்றைய தேவையாகும்.

பழக்கப்பட்ட மிருகங்களைக் கொண்டு காட்டு மிருகங்களைப் பிடித்தல் வேண்டும். அது போல நன்கு பழக்கப்பட்ட குருவால் தான் சீடனை வசியப்படுத்த முடியும் என்று சைவசித்தாந்த நூலான திருவருட்பயன் கூறுகிறது. இதைப் படித்த அறிஞர்கள் தமது வித்துவத் திறத்தைக் காட்ட நினைத்துத் தம் இருப்பை இழக்கிறார்கள். அதனால்

தான் மிக இலகுவான மொழியில் பகவத்கீதை, திருவருட்பயன், சிவஞானபோதம், மாயை என்பவற்றிற்குக் கதையெழுதினேன். அவை எழுத வாசிக்கத் தெரிந்த அனைவருக்கும் இலகுவாகப் புரிந்தது. இந்த முயற்சி வெற்றி பெற்றதால் இந்து சமய தத்துவ நூல்களுக்கும், ஒழுக்கக் கோட்பாட்டை விளக்கும் பதின்ணெண் கீழ்க்கணக்கு நூல்களுக்கும் கதைகள் எழுதினேன். யாரின் துணையுமின்றிப் பாமரர்கள் வாசித்து அறிய வேண்டும் என்பது எனது விருப்பம். அது நிறைவேறி விட்டது. திருமந்திரக் கதைகளை எழுதிவிட்டுச் சந்நிதியான் ஆச்சிரமம் வெளியிடும் "ஞானச்சுடர்" என்ற சஞ்சிகைக்கு அனுப்பினேன். அவர்கள் பன்னிரு கதைகளை மட்டும் வெளியிட்டார்கள். சைவசித்தாந்த நூலான திருமந்திரத்தின் மெய்ப்பொருளைச் சைவச்சிறார்கள் விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே அவற்றை அனுப்பி வைத்தேன். ஆனால் எனது எண்ணம் நிறைவேறவில்லை.

திருமந்திரம் உலகிலுள்ள அனைத்தும் பொய், சிவன் ஒருவன் தான் மெய்யான பொருளென்று கூறுகிறது. அன்பு, காதல், பற்று, உதவி யாவும் தேவைக்காகவே உண்டுபண்ணப்படுகின்றன. தேவை முடிந்ததும் அவை தானகவே விலகிச் சென்றுவிடுகின்றன. பணம், பொருள் ஆகிய இரண்டையும் முதன்மையாகக் கொண்டது வாழ்க்கை. இவ்விரண்டும் இல்லாதவிடத்து உயர்ந்த காதல், உன்னதமான அன்பு, அளவற்ற பாசம் என்று சொல்லப்படுவன யாவும் வலுவிழந்து விடுகின்றன. அதனால் பல்வேறு விதமான பிரச்சினைகள் உருவாகின்றன. எதிர்பார்ப்பில்லாத செயல்கள் எவையும் உலகில் இல்லை. எதிர்பார்த்தவை கிடைத்தாலும், எதிர்பார்த்தவை கிடைக்காது போனாலும் செயல்களில் மாறுபாடு ஏற்படும். செத்த மாட்டிலிருந்து தெள்ளு, உண்ணி என்பன விலகிச்

செல்வது போல எதிர்பார்ப்புக்கள் பொய்த்தாலும், நிறைவேறினாலும் எதிர்பார்த்தவர்கள் விலகிச் சென்றுவிடுவார்கள்.

பணம் பொருள் நிலையில்லாதது, அழகு, இளமை நிலையில்லாதது, உடல் நிலையில்லாதது. ஆனால் சிவன் நிலையானவன். அவன் செலுத்தும் அன்பு நிலையானது, அவனது அருள் நிலையானது. அதனால் நிலையான சிவன் மீது அன்பு கொண்டு நித்தமும் இன்பம் பெறுங்கள் என்று திருமந்திரம் கூறுகிறது. இதைத் தவிர திருமந்திரம் உலக வாழ்க்கையைப் பற்றி விரிவாகக் கூறுகிறது. நோய்கள் எப்படியுண்டாகின்றன என்றும் அதை குணப்படுத்தும் வழிவகைகளையும் திருமந்திரம் கூறுகிறது. ஒழுக்கமான பிள்ளைகளைப் பெறும் முறைகள், பெற்ற பிள்ளைகளை ஒழுக்க சீலர்களாக வளர்க்கும் முறைகள் என வாழ்வின் ஒவ்வொரு பிரிவுகளைப் பற்றியும் விளக்கமாகவும் விபரமாகவும் கூறுகிறது. இவற்றையெல்லாம் பாமரமக்கள் அறிந்து அதன்படி வாழவேண்டும் என்பதற்காகவே திருமூலர் கூறியவற்றைக் கதைகளாக எழுதியுள்ளேன்.

மரணம் என்பது உறுதியானது. படைக்கப்பட்ட உயிர்கள் அனைத்திற்கும் வருவது. அதை எதனாலும் தடுக்க முடியாது. யாக்கை நிலையாமை பற்றித் திருமந்திரம் இருபத்தாறு பாடல்களில் கூறுகின்றது.

இருநூற்றோராவது பாடல் இவ்வாறு கூறுகிறது. “உடலை விட்டு உயிர் நீங்கியதும் அன்புள்ள சுற்றத்தினரும் பெண்களும் மக்களும் கூடி அழுவார்கள். பின்பு பிரேதத்தைப் பாடை மீது வைத்துச் சுமந்து சென்று சுடலையில் எரியூட்டுவார்கள். பின் சாம்பலைப் புனித நீரில் கரைப்பார்கள். புனித கங்கைக் கரையில் ஆத்ம சாந்திக் கிரியைகளைச் செய்வார்கள். பின்பு புனித கங்கையில் நீராடுவார். அதன் பின் புனித

நீரைக் கொண்டு வந்து வீடு முழுவதும் தெளிப்பர். அதன் பின் இறந்தவரின் நினைவு யாருக்கும் வராது.”

இவ்வாறு கூறுகிறதே தவிர அபரக்கிரியைகள் பற்றி எதுவும் கூறவில்லை. அக்காலத்தில் அபரக்கிரியை செய்ய வேண்டுமென்று திருமந்திரம் கூறவில்லை. நாகரிகம் வளர வளரத் தமது செல்வம் செல்வாக்கைக் காட்டுவதற்காகப் புதுப்புதுக் கிரியை முறைகள் அறிமுகப்படுத்தப்படுகின்றது. வருமானத்திற்காகக் கிரியை முறைகள் மாற்றப்படுகின்றன. திருமந்திரம் சொல்லாத ஒன்றைச் செய்ய வேண்டிய தேவை என்ன? இனி மேலாவது திருமந்திரம் சொன்னபடி வாழ்வோம்.

நான் கந்தர் வைத்திலிங்கம் திரவியம் தம்பதிகளின் மூத்த புதல்வன். பெற்றோர் கற்ற கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலத்தில் நான் ஆரம்பக் கல்வியைக் கற்றேன். உயர்தரக் கல்வியைக் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியிலும் பட்டப்படிப்பை பேராதனைப்பல்கலைக்கழகத்திலும் கற்றேன். அதன் பின் ஆரம்பக் கல்வி ஆசிரியராக இரத்தினபுரி நீலகாமம் தமிழ் வித்தியாலத்தில் நியமனம் பெற்றேன். அதன் பின் கோப்பாய் தெற்கு றோமன் கத்தோலிக்கத் தமிழ் வித்தியாலத்திலும் பின் நல்லூர் சீசீ பாடசாலையிலும் ஆசிரியராகக் கடமைபுரிந்தேன். அதன் பின் கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலத்திற்கு 01.10.1989 இல் அதிபராக நியமனம் பெற்றேன். அப்போதைய சூழ்நிலையில் சிலரின் அதிகாரவெறிக்காட்பட்டு கோப்பாய் மகாவித்தியாலத்திற்கு 01.01.1990 இல் உதவி ஆசிரியராக இடம்மாற்றப்பட்டேன். இக்காலத்தில் நீர்த்தாங்கியொன்றை அமைக்க முற்பட்டேன். நான் இடம்மாற்றம் பெற்றுச் சென்ற பின் ஒரு மாணவன் நீர் குடிப்பதற்காக அருகிலுள்ள வயற்கிணற்றடியிக்குச் சென்ற போது தவறி

விழுந்து மரணமானான். இதற்குக் காரணமாக இருந்தவர் அப்போதய கல்விப்பணிப்பாளராவர்.

இராசுந்தரலிங்கம் அவர்கள் கல்விப்பணிப்பாளராக இருந்த போதே நான் நாவலர் தமிழ் வித்தியாலத்திற்கு அதிபராக நியமிக்கப்பட்டேன். அவரையும் சில நாசகாரச்சக்திகள் இடம்மாற்றின. அவரின் பின் செல்வி திலகவதி பெரிய தம்பி நியமிக்கப்பட்டார். அவர் தான் என்னை இடம்மாற்றினார். காலஓட்டத்தில் அவருக்கும் இடம்மாற்றம் வந்த போது மீண்டும் இராசுந்தரசலிங்கம் யாழ்மாவட்டத்திற்கான கல்விப்பணிப்பாளராக இடம்மாற்றப்பட்டார். அவர் இடம் மாறிவந்தவுடன் என்னையும் நாவலர் தமிழ் வித்தியாலய அதிபராக இடம்மாற்றினார். அன்றிலிருந்து 30.09.2005 வரை நாவலர் தமிழ் வித்தியாலத்தில் அதிபராகக் கடமையாற்றினேன். எனது காலத்தில் சகல வழிகளிலும் பாடசாலை முன்னேறியது. கல்வியிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் பாடசாலை யாழ்மாவட்டத்தில் பல சாதனைகளைப் புரிந்தது. நான் கடமை புரிந்த காலத்தில் பாடசாலையில் நாவலரின் சிலையைத் தாபனம் செய்தேன். பாடசாலையைச் சுற்றி மதில் அமைத்தேன். பிள்ளையார் கோவில் ஒன்றைக் கட்டிப் பிரதிஷ்டை செய்தேன். நீர்த்தாங்கி அமைத்தேன். பாடசாலைக்கென விளையாட்டு மைதானத்தைக் கொள்வனவு செய்தேன். விஞ்ஞானகூடம், கணனி அறை என்பவற்றை அமைத்தேன்.

இருப்பினும் எனக்கு நாவலர் தமிழ் வித்தியாலத்தைப் பிடிப்பதே இல்லை. சாதித்திமிர் பிடித்தவர்கள் ஆசிரியர்களாகவும், பெற்றோர்களாகவும், அதிகாரிகளாலும், பழையமாணவர்களாகவும் இருந்து ஓயாது தொல்லைகள் பல தந்து கொண்டே இருந்தனர். சில ஆசிரியர்களை நம்ப முடியாது. அதிகாரிகள் சிலர் தமது சொந்த

நலனுக்காகப் பாடசாலைக்குத் தொல்லைகள் கொடுத்தனர். அவர்களோடு சேர்ந்து சில ஆசிரியர்களும் சொல்லெனாத் துன்பங்களைத் தினமும் செய்து கொண்டிருந்தனர். பாடசாலை உச்ச வளர்ச்சியடைந்த போதும் பாடசாலையைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்குவதையே நோக்கமாகக் கொண்டிருந்தனர். பாடசாலைக்காக நான் உயிரைக் கொடுத்த போதும் யாரும் பாராட்டவில்லை. 1998ம் ஆண்டு வீரகேசரி வாரஇதழ் அகில இலங்கை ரீதியாக ஒரு நாவல் போட்டியை நடத்தியது. அதில் எனது "அவிழாத முடிச்சுக்கள்" என்ற நாவலுக்கு முதல் இடம் கிடைத்தது. அதைப் பாராட்டி வைத்திய கலாநிதி லயன்.வை.தியாகராஜா அவர்கள் தற்போது உபஆளுனர் சர்வதேச அரிமாகழகம் பெரியதொரு விழாவை வைத்தார். அவ்விழாவின் அழைப்பிதழ் ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும் பழையமாணவர்களுக்கும் கொடுத்த போதும் அவ்விழாவிற்கு யாரும் வரவில்லை. கல்வியலாளர்கள் நாவலரின் தொண்டின் சிறப்பைப் போற்றி அன்றிலிருந்து பெரும் விழாக்களைக் கொண்டாடி வருகின்றனர். இருந்த போதும் நாவலர் தமிழ் வித்தியாலத்தைக் கவனிப்பதேயில்லை. 1872ஆம் ஆண்டு நாவலரால் கட்டப்பட்ட இருசுண்ணாம்புக்கல் மண்டபத்திற்குள்ளேயே 2009 ஆம் ஆண்டு வரை பிள்ளைகள் நிலத்தில் இருந்து கற்றனர். இதைக் கண்ணுற்ற ஊவாமாகாணச் சிங்கள மக்கள் மனம் வருந்தி இருமாடிக்கட்டிடம் ஒன்றைக் கட்டித் தந்தனர். பல்வேறுபட்ட தொல்லைகளுக்குள் பாடசாலையை நடத்திய வேளைகளில் இன்பமான நிகழ்வுகள் சிலவும் நடைபெற்றன. அதனால் மனதிற்கு இன்பம் உண்டானது. அதனால் பட்டதுன்பங்கள் மறைந்தன. அவற்றை இப்பொது நினைத்தாலும் அவை கண் முன்னே தோன்றி மனத்தை இனிக்கப் பண்ணும். அதே வேளை அவற்றையெல்லாம்

செய்திருக்கக் கூடாது என்ற கவலையும் உண்டாகும். அதனால் அவற்றை இப்போது நினைத்துப் பார்ப்பதில்லை. அதனால் துன்பமும் இல்லை.

இருப்பினும் சில நிகழ்வுகளை மறக்க முடியவில்லை. பாடசாலை தொடங்கிய நாள் முதல் விளையாட்டு மைதானம் இல்லை. பொது இடங்களிலும் அயற்பாடசாலை மைதானங்களிலுமே விளையாட்டுப் போட்டியைப் பெரும் இன்னல்களுக்கு மத்தியில் நடத்தி வந்தோம். இந்நிலையில் பாடசாலைக்கருகில் ஒரு காணி விற்பனைக்கு வந்தது. அதை வாங்க முயற்சித்த போது பல தொல்லைகளைப் பழைய மாணவர்கள் தந்தனர். வெளிநாட்டில் இருந்து வந்த ஒரு பழைய மாணவன் அக்காணியை வாங்கத் தேவையானளவு பணம் அனுப்புவதாகச் சொன்னான். அதை நம்பி காணியை வாங்குவதற்கான முற்பணம் கொடுத்து காணியை வாங்கினேன். பணம் அனுப்புவதாகச் சொன்னவன் பணம் அனுப்பவில்லை. அவனைப் பாடசாலைச் சமூகத்தைச் சேர்ந்த பழையமாணவர்கள் சிலர் பணம் கொடுக்க வேண்டாம் என்று கூறித்தடுத்து விட்டனர்.

என்னால் எதுவும் செய்ய முடியவில்லை. பாடசாலையின் பழைய மாணவர் ஒருவரது நிலம் அது. அவர் கடனைக்கட்டத் தவணை தராது நீதிமன்றம் சென்றார். நீதிபதி என்னை எச்சரித்தார். வேறுவழியின்றி மிகுதிக்காசில் ஒரு பகுதியையும் நீதிமன்றச் செலவையும் வட்டியையும் எனது பணத்தில் கட்டினேன். இல்லாவிட்டால் நான் வேலை இழந்து சிறை செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். இன்று காலம் மாறிவிட்டது. பாடசாலைக் காணியை விற்றவர், வட்டிப்பணம் வாங்கியவரின் பெயரை விளையாட்டு மைதானத்திற்குச் சூடும் நிலை

ஏற்பட்டு விடுமோ என்ற சந்தேகம் எனது மனதில் உண்டு. நான் வாங்கிய விளையாட்டு மைதானத்திற்கு அதை விற்றவரினதும், வழக்குத் தொடுத்த பழைய மாணவரதும் பெயரைச் சூட்ட வேண்டும் என்று நூல்களில் எழுதுகிறார்கள். இவையாவும் தெரியாத ஒரு சமூகம் உருவாகி வருவதால் தான் இதை எழுத வேண்டிய நிலை ஏற்பட்டது.

ஒரு நிகழ்வைப் பற்றி உயர்வாகப் பேசுவது, பேச்சு முடிந்த பின் காற்றோடு சென்று விடும். நூறு நூல்களுக்கு மேல் எழுதினேன். அவற்றில் சுமார் பத்தாயிரம் கதைகள் உண்டு. பகவத்கீதை, திருவருட்பயன், திருக்குறள், பதிணென்கீழ்கணக்கு நூல்களில் ஒழுக்கம் பற்றிக் கூறும் பன்னிரண்டு நூல்கள், சிவஞானபோதம் ஆகிய நூல்களில் உள்ள பாடல்கள் அனைத்திற்கும் உரை , விளக்கம், கதை என்பன எழுதினேன். இதை உணர்ந்த பேராசிரியர் சிலர் 2011ஆம் ஆண்டு எனக்கு இலக்கியக் கலாநிதிப்பட்டம் கொடுக்குமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குச் சிபார்சு செய்தனர். அதுவும் யாழ்ப்பாண முறைப்படி நடந்ததே தவிர உண்மையான கல்வியாளருக்குக் கொடுக்கப் படவில்லை. இவற்றிற்குப் பதிவு வேண்டும். அதனால் தான் மிக முக்கியத்துவம் வாய்ந்த இந்நூலில் இதை எழுதுகிறேன்.

இதை அழகாகக் கணனி மயப்படுத்தியும், அட்டைப் படத்தை அழகாக வடிவமைத்தும் தந்த செல்வி ப.யாழினிக்கும், கவிச்சக்கரவர்த்தி கம்பனுக்குச் சடையப்பவள்ளல் கிடைத்தது போல எனக்கு லங்கா புத்தகசாலையின் அதிபர் உயர் திரு.கந்தசாமி ராஜேந்திரன் அவர்கள் கிடைக்கப் பெற்றமையால் ஐம்பதிற்கு மேற்பட்ட அரிய நூல்களை வெளியிட முடிந்தது. அவை யாவும் காலம் கடந்து நின்று அவரது பேருதவியைப் பறைசாற்றும், அத்துடன் எனது பெறுமதி

மிக்க நூல்கள் பலவற்றைத் தமிழக அறிஞர்களைக் கொண்டு விமர்சிக்கும் தமிழ்நாடு பொதிகைத் தொலைக்காட்சிக்கும், எனது நூல்களை மதிப்பீடு செய்யும் திருவாவடுதுறை ஆதீனத்திற்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

www. kv kuna. com இலும், Kunasegaram vaththilingam முகநூலிலும் இலும் எனது ஆக்கங்களை வாசிக்கலாம்.

கே.வி.குணசேகரம், குணம் பதிப்பகம்.

கோப்பாய் மத்தி, ஸ்ரீலங்கா.

மார்கழி.2015.

## அணிந்துரை

திரு. கே.வி.குணசேகரம் அவர்கள் மாணவர்களையும் எழுத வாசிக்கத் தெரிந்தவர்களையும் நினைத்தே தனது ஆக்கங்களை வெளியிட்டு வருகிறார். நான் ஆங்கில மொழி மூலம் கல்வி கற்றவன். அத்துடன் சைவப்பாரம்பரியங்கள் அனைத்தையும் பேணுபவன். அவற்றில் நம்பிக்கை கொண்டவன். சைவசித்தாந்தத்தைப் பற்றியும் வேதங்கள் உபநிடதங்கள் திருக்குறள் போன்றவற்றையும் அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவலில் பல வகையான நூல்களைத் தேடிக் கற்றேன். எதுவும் விளங்கவில்லை. உரை நூல்களை எடுத்துப் பல முறை வாசித்தேன். ஆனால் விளங்காது.

கே.வி.குணசேகரம் அவர்கள் எனது நண்பர். அவர் எழுதும் நூல்களில் ஒவ்வொரு பிரதி எனக்குத் தருவார். அவற்றை ஒரு முறை வாசித்தாலே போதும். எல்லாம் விளங்கிவிடும். அவ்வளவு இலகுவான மொழி நடை. கதைகள் மூலம் தத்துவங்கள் விளக்கப்படுகின்றன.

“அரிய தத்துவக் கருத்துக்களைக் கதைகள் மூலமாக விளக்கி எளிதாக்குவதும், மனதில் நிலையாகத் தங்கிட வழிவகுப்பதும் பராட்டுக்குரிய முயற்சி. பல இடங்களில் கதைகளும் கருத்துக்களும் பொருத்தமுற அமைந்துள்ளன, நுட்பமான, விளங்கிக் கொள்ள முடியாத தத்துவங்களைப் படிப்படியாக விளங்கித் தெளிவாக்குவதில் நூலாசிரியர் மிகவும் திறமை மிக்கவராக விளங்குகிறார்” என்று திருவாவடுதுறை ஆதீன கர்த்தா சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் கூறியுள்ளார். அது உண்மையான கூற்று. இப்போது எனக்குத் திருக்குறள், சைவசித்தாந்தம், வேதங்கள், உபநிடதங்கள், திருவருட்பயன், மாயை, பகவத்கீதை என்பன தெளிவாகப் புரிகின்றன. அதற்குக் காரணம் அவற்றிற்கு அவர் கூறிய கதைகள் தான்.

வேதகாலம் முதல் கதைகள் மூலம் வாழ்க்கைத் தத்துவங்கள் விளக்கப்பட்டு வந்துள்ளன. ஆனால் அவை முழுமை பெறவில்லை. இப்போது சமயத் தத்துவங்கள் சுமார் பத்தாயிரம் வரை கதைகளாக்கப்பட்டு வரலாறு அமைக்கப்பட்டுள்ளது. திருவருட்பயன் நான் கல்வி கற்கும் காலத்தில் சமய பாடத்திற்குரிய பாடநூலாக இருந்தது. அப்போதைய மாணவர்கள் பொருள் விளங்காது மனனம் செய்து ஒப்புவித்துச் சித்தியடைந்தனர். இப்பொழுதும் திருவருட்பயன் பாடநூலாகவுள்ள போதும் அதை யாரும் கற்பதில்லை. அதை விட ஆசிரியர்கள் கற்பிப்பதில்லை. அதை விட்டு விட்டு வேறு வினாவைத்

தெரிவு செய்வர். இப்போ திருவருட்பயன் அருமையான நாவலாகியுள்ளது. சமூகத்தில் நடைபெறும் பிரச்சினைகளைச் சைவசித்தாந்தத்துடன் இணைத்துத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அதனால் அது முழுமையாக விளக்கப்படுகிறது.

இதை விட மாயை பற்றிய தத்துவக் கதைகள், மாயையை அலசி ஆராய்ந்து தெளிவுபடுத்தப்பட்டதால் மாயையின் உண்மை நிலை தெளிவாக விளங்குகின்றது. இப்பொழுது அவர் சைவசித்தாந்த நூலான திருமந்திரத்திலுள்ள மூவாயிரம் பாடல்களுக்கும் கதையெழுதி அதன் முதலாம் பாகத்தை வெளியிடுகிறார். அதை நான் படித்தேன். அன்பு செய்வாரை அறிவான் சிவன், அன்புடைமை, இளமை, உயிர் நிலையாமை, கல்லாமை, கல்வி, கள்ளுண்ணாமை, கொல்லாமை, செல்வம் நிலையாமை, நடுவு நிலைமை, நல்குரவு, பிறன் மனை நாடாமை, புலால் மறுத்தல், மகளிர் இழிவு, யாக்கை நிலையாமை, இவற்றோடு அந்தணர் ஒழுக்கம், அரசாட்சி முறை, அறன் செயான் திறம், அறன் செய்வான் திறம், ஆகமச் சிறப்பு, வேதச் சிறப்பு, குரு பரம்பரை, திருமூலர் தன் வரலாறு கூறல் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் எழுத வாசிக்கத் தெரிந்தவர்களுக்கு விளங்கக் கூடியதாக இனிமையான இலகு தமிழில் கதைகளாக எழுதப்பட்டுள்ளன. கே.வி.குணசேகரம் குறைந்தது பத்தாயிரம் கதைகளாவது எழுதியிருப்பார். ஒரு கதை திரும்பவும் வந்ததில்லை. பகவான் கிருஷ்ணர், திருவள்ளுவர், உமாபதிசிவாச்சாரியார், மெய்கண்டதேவர், வேதவியாசர், பதிணென்கீழ்க் கணக்கு நூல்களை இயற்றிய பெரும் புலவர்கள், திருமூலர் எல்லோருமாகச் சேர்ந்து குணசேகரமாகப் படைக்கப்பட்டுள்ளாரோ என்றே எண்ணத் தோன்றுகிறது. திருமூலர் எதைச் சொல்ல வேண்டும் என்று

நினைத்தாரோ அதைக் குணசேகரம் இலகு மொழியில் சொல்லியுள்ளார். இப்படி இதுவரை யாரும் விளக்கமாகச் சொன்னதில்லை. இதைச் சைவஉலகம் படித்துப் பயன்பெற வேண்டும் என்பதே எனது விருப்பம். தான் எடுத்துக் கொண்ட பாடலை அது எந்த நூலில் இருந்தாலென்ன அதைப் பல்வேறு சாத்திர நூல்களில் உள்ள பாடல்களோடு ஒப்பிட்டு விளக்கமளித்து வாசகர்களுக்குப் புரியவைப்பதில் கைதேர்ந்தவராகவுள்ளார். இது இறைவன் அவருக்களித்த வரம். திருமந்திரத்தோடு திருக்குறள் பகவத்கீதை பழமொழி நானூறு வேதங்கள் உபநிடதங்கள் மெய்கண்ட சாத்திர நூல்கள் எனப்பல நூல்களை ஒப்பிட்டுக் கட்டுரைகள் கதைகள் எழுதியுள்ளார். அவரது எழுத்துக்களைப் படிப்பதன் மூலம் பல்வேற வகையான பழந்தமிழ் நூல்களைப் படித்த ஓர் உன்னத நிலை உருவாகும்.

கடைசியாக அவர் வெளியிட்ட நூல், “உங்கள் வாழ் நாள் பலனை நீங்களே அறிந்து கொள்ளுங்கள்” என்ற சோதிட நூல். அதில் புராண இதிகாச நாயகன்களின் வாழ்வில் நடைபெற்ற சம்பவங்களைச் சோதிடத்துடன் தொடர்படுத்தியதோடு அவற்றைத் தற்காலத்திற்கு ஏற்றவகையில் இலகுவான மொழிநடையில் எழுதியுள்ளார். சோதிடத்தைப் பற்றி எதுவும் தெரியாத நான் அந்நூலை வாசித்த பின் முழுமையான சோதிட அறிவைப் பெற்றுள்ளேன். திரு.குணசேகரம் அவர்கள் எந்தச் சிக்கலான தத்துவங்களையும் படிப்படியாக விளக்கிப் புரியவைப்பதில் நிபுனத்துவம் பெற்றவர். அந்த வகையில் ஒரு மாமேதையின் சரித்திரப் புகழ் பெற்ற இலக்கியமான திருமந்திரத்திற்கு அணிந்துரை வழங்குவதில் பெருமைப்படுகிறேன். திரு.கே.வி.குணசேகரம் அவர்கள் நான் கல்வி கற்ற நாவலர் தமிழ் வித்தியாலத்தில் அதிபராகப் பதினைந்து ஆண்டுகள் கடமை புரிந்து அப்பாடசாலையை இமயம்

அளவிற்கு உயர்த்தியவர். கல்விப் பெறுபேறுகளில் பல சாதனைகள் நிகழ்த்தப்பட்டன. விளையாட்டுத் துறையும் உயர்வடைந்தது. அதன் பின் நான் பணியாற்றிய நல்லூர் கல்விக் கோட்டப் பணிப்பாளராகப் பொறுப்பேற்று போரால் சீர்வழிந்திருந்த யாழ்வலயக் கல்வியை இலங்கையின் ஏனைய மாவட்டங்களைவிட உயர்த்தியவர். அத்துடன் அவர் மிகுதியாகவுள்ள பிரசித்தி பெற்ற நூல்களுக்கும் கதைகள் எழுத வேண்டும் எனப்பிராத்திக்கிறேன்.

து.தனபாலசிங்கம்
சமாதான நீதிவான் (அகில இலங்கை)
கோப்பாய், கனடா

# அணிந்துரை

சைவசித்தாந்த நூல்கள் உரை வடிவிலேயே இது வரை இருந்தன. பாடலை விட உரையை விளங்கிக் கொள்வது சிரமமானது. உரையை விளங்கிக் கொள்ளக் குருவின் உதவி வேண்டப்பட்டது. கோவில்களில் உபன்நியாசங்கள் நடைபெறும் போது சைவசித்தாந்த நூல்களில் உள்ள தத்துவங்களைப் பற்றிப் பேசப்படுவதில்லை. அது பெரும்பான்மையான மக்களுக்கு விளங்காததால் பிரசங்கிகள் கதை மூலமான தத்துவங்களையே திரும்பத் திரும்பச் சொல்கின்றனர். உதாரணமாகப் பெரிய புராணக் கதைகள். இவை பெரும்பாலும் பாடநூல்களில் இருப்பதால் எல்லோரும் அவற்றை அறிந்துள்ளனர். அதனால் கோவில்களில் இவற்றைக் கேட்போர் அருகி வருகின்றனர். இந்த நிலையில் கே.வி.குணசேகரம் அவர்கள் வேதங்கள், உபநிடதங்கள், சைவசித்தாந்த நூல்களுக்கும் பழந்தமிழ் நூல்களுக்கும் கதைகள் மூலம் விளக்கமளிப்பது மெச்சத்தக்கது. ஒரு விளங்கிக்

கொள்ள முடியாத தத்துவத்தைச் சிறுசிறு கூறுகளாகப் பிரித்து இலகுவான விளங்கத்தக்க மொழியில் அதை விளக்குவதோடு அதை உள்ளடக்கிய கதையையும் கூறுவது அத்தத்துவத்தைத் தெளிவாகப் புரியவைக்கிறது. நாம் கற்கும் காலத்தில் தேடிக்கற்கும் நிலை இருந்தது. சமூகத்தில் உள்ள பலர் நுட்பமான தத்துவங்களைக் கற்றிருந்தனர். ஆனால் அவை கற்றறிந்தவர்களுக்கே விளங்கின. பாமரமக்களுக்கு விளங்குவதில்லை. முன்பு வாழ்ந்த பெரியவர்கள் சிவஞானபோதம், திருவருட்பயன் போன்ற நூல்களிலுள்ள பாடல்களை அனைத்தையும் மனனம் செய்வர். அதன் கருத்தையும் மனப்பாடம் செய்வர். அது போலத் திருக்குறளின் பெரும்பான்மையான குறள்களையும் மனப்பாடஞ்செய்தவர்கள். அவர்கள் பேசத் தொடங்கினால் பல மணி நேரம் பேசுவார்கள். ஆனால் கேட்பதற்கு யாரும் இரார். அதற்குக் காரணம் பேசுவது விளங்காமை தான். ஆனால் திரு.கே.வி.குணசேகரம் திருவருட்பயன், சிவஞானபோதம், திருமந்திரம், திருக்குறள், பகவத்கீதை போன்ற நூல்களிலுள்ள பாடல்கள் அனைத்திற்கும் கதைகளை எழுதியுள்ளார். அவை பெரும்பாலும் கதை வடிவினிலே இருக்கும். அதன் பாத்திரங்கள் சமூகத்தில் வாழும் மனிதர்களாகவே இருப்பார்கள். சமூகத்தில் நடைபெறும் அன்றாட நிகழ்வுகள் மூலம் சமயத்தத்துவங்கள் விளங்கப்படுத்தப்படும். சிவஞானபோதம், திருவருட்பயன், பகவத்கீதை என்பவற்றிலுள்ள மிகமிகக் கடினமான தத்துவங்கள் கூட மிகமிக எளிதாகப் புரியக் கூடியவகையில் கதைகளாக இருக்கும். ஆணவம், கன்மம், மாயை என்பன புரியாத புதிராகவே இன்று வரை இருக்கின்றன. ஆனால் திருவருட்பயன் கதைகள் நூறும், மாயை பற்றிய தத்துவக் கதைகள் ஐம்பதும் மிகவும் எளிமையாக இவற்றைப் புரியவைக்கின்றன. கதைகளைப் போல புரியவைப்பவை உலகில் எவையும் இல்லை.

“புத்தி மான் பலவான், புத்திமான் பலவான் ” என்று ஆயிரம் தடவைகள் கூறினாலும் மாணவர்களுக்கு அது புரியாது. புத்திமான் பலவான் என்ற பஞ்சதந்திரக் கதையான சிங்கமும் முயலும் கதையைச் சொன்னால் ஐந்து வயதுப் பாலகனும் புரிந்து கொள்வான். பஞ்ச தந்திரக் கதைகளைப் போலவே திருமந்திரக் கதைகளும் உள்ளன. அதனால் திருமந்திரம் கூறும் தத்துவங்கள் அனைத்தும் மிகவும் இலகுவாக விளங்குகின்றன. திருமந்திரம் மிகவும் கடினமான கடைப்பிடிக்க முடியாத தத்துவங்களைக் கொண்ட உயர்ந்த நூல் என்ற எண்ணத்தை மாற்றி அது ஓர் அரிய இலகுவாகக் கற்கக் கூடிய தத்துவங்களைக் கொண்ட உயர்ந்த நூல் என்பதைப் பொருத்தமான கதைகள் மூலம் திரு.கே.வி.குணசேகரம் உணர்த்துகிறார்.

சிவன் எளிமையானவன், எங்கும் இருப்பவன், பாகுபாடு காட்டாதவன், பற்றற்றவன் என்றும், உலகம் மாறுபாடு உடையது. மாற்றங்களைக் கொண்டது. நிரந்தரமில்லாதது என்றும் தத்துவங்கள் கூறியவற்றை கே.வி.குணசேகரம் கதைகளாகக் கூறும் போது ஒவ்வொருவரும் அக்கதைகள் தத்தமது குடும்பங்களுக்குள்ளே நடைபெறுவதாக நினைக்கிறார்கள். அந்த நினைவு பாடல்களையும் அதிலுள்ள உண்மைகளையும், தத்துவங்களையும் உணரச் செய்து மனதில் நிலையாகத் தங்கி இருக்க வழி செய்கிறது.

திருவருட்பயன், சிவஞானபோதம், திருமந்திரம், பகவத்கீதை போன்ற அரிய நூல்களை வாசிப்போர் குறைந்து கொண்டு வரும் இவ்வேளையில் அருமையான கதைகள் மூலம் இவற்றிற்கு புதுப் பிறவியளித்த திரு.கே.வி.குணசேகரத்தை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

கலாபூசணம் து.மாணிக்கவாசகர் மறவன்புலவு.

# திருமந்திரக்கதைகள்

## 1. கடவுள் வாழ்த்து

**ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்**

**நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தான்ஐந்து**

**வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்**

**சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே.**

உலகம் தோன்றுவதற்கு முன்பும், உலகப்பேரொடுக்கத்தின் பின்பும் நிலைத்திருக்கும் அழிவில்லாத ஒருவன் சிவபெருமானே. அவனின் அருள் சிவயநம என்னும் திருவைந்தெழுத்தில் காணப்படும் வகரமும் நகரமும் ஆகிய இரண்டெழுத்துக்குரிய வனப்பாகிய பராசக்தியும் நடப்பு ஆகிய ஆதிசக்தி என இரண்டாகும். அன்பு அறிவு ஆற்றல் என்ற மூன்றாகும். இவற்றை இச்சை, ஞானம், கிரியை என்றும் சொல்வர். சிவசிவ எனப்பொருள் மறை நான்காகும். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனத் திருவருட்தொழில்கள் ஐந்தாகும். அவனது திருவடியைச் சேர்ப்பிக்கும் முறைகள் ஆறாகும். சக்தி, விந்து சக்தி, மனோன்மணி, மகேசை, உமை, திரு, வாணி என்ற ஏழுவகையான ஆற்றலை உடையவன் சிவன். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், நிலவு, சூரியன், புலனாய மைந்தன் என எண்வகை வடிவங்களையும் உடையவன்.

எட்டுத் திசைகளிலும் சிவனின் முப்பண்புகளும் நிலைபெற்றுள்ளன. தூயஉடம்பினனான அவனே ஆதிசக்திக்குத் தலைவன்.

திருவருளோடும், அவ்வருளின் ஆணையுடனும் ஆருயிர்களோடும் மாயையோடும் ஒப்பநிற்பவன். பிறப்பு, இறப்பு, கேடுகள் இல்லாத சிவனை விண்ணவர்களும் போற்றிப் புகழ்வர்.

சிவனுக்குப் ஒப்பான தெய்வம் எதுவும் இல்லை. அவனை வணங்காதவர்களுக்கு வாழ்வு இல்லை. அவனருள் இல்லாமல் அயன், அரி, அரன் என்னும் மூவராலும் இயங்க முடியாது.

அவனை அறியாதவர்களும் இல்லை. அவன் ஆருயிர்களின் இதயத் தாமரையில் பொன் போல ஒளிர்வான். தீயைக் காட்டியும் வெப்பமுள்ளவன். நீரைவிடக் குளிர்மையானவன். சிற்றுணர்வாலும் சுட்டுணர்வாலும் அறியமுடியாதவன். திருச்சடையை உடைய சிவன் யாரையும் தொழக்கூடியவனல்ல. சீலம், நோன்பு, துறவு, செறிவு, அறிவு ஆகிய நான்கால் அறியமுயலும் அடியார்களுக்கு வெளிப்பட்டு அருளுபவன்.

அவன் என்றும் அழியாத அறிவொளியாய், எல்லாவற்றையும் ஒளிரச் செய்யும் ஒளிக்கொளி வண்ணன். நெற்றிக் கண்ணையுடைய அவன் அன்பு செய்யும் ஆருயிர்களுக்குப் பேரின்பம் வழங்குபவன். இது தெரிந்தும் பலர் அவன் மீது அன்பு கொள்ளாதிருக்கின்றனர். ஈரடியால் உலகையளந்த மாலும், நான்முகனும் ஏனைய தேவர்களும் கூடச் சிவனின் ஆற்றலை அறியாதவரே யாவர். அத்தகைய சிவன் உலகங்கள் முழுவதையும் கடந்து நின்றாலும் அவற்றில் நிறைந்தும் உள்ளான்.

கொன்றை மலர் மாலையை அணிந்த சிவபெருமான் உமாதேவியாரை ஒருபாகத்தே வைத்துள்ளான். ஏழு உலகங்களையும் கடந்து நிற்கும் சிவன் சுடுகாடாகிய முதுபதியினையே தன் இருப்பிடமாகக் கொண்டவன். தன்னை நினைத்துத் திருவைந்தெழுத்தை

ஓதும் அடியாரின் மனக் குறைகளைத் தீர்த்து அவர்களின் மனதில் வாழ்பவன். ஆருயிர்களின் பேரின்பத்திற்காகத் தினமும் திருவைந்தெழுத்தை ஓதுவோரைப் பின்தொடர்ந்து செல்பவன். அனைத்துயிர்க்கும் தந்தையானவன். உண்ண உண்ணத் தெவிட்டாத அமுதத்தை ஒத்தவன். பிழைகளைப் பொறுத்தருளும் வள்ளல் தன்மையுள்ளவன். ஊழிக்காலத்தின் பின்பும் உயிர்களைப் படைப்பிப்பவனான மேலான சிவனை எந்நாளும் தொழுங்கள்.

திருவைந்தெழுத்தால் வாழ்த்தும் முனிவர்களின் உள்ளத்தில் ஞானப்பேரொளியாய் ஒளிர்பவன். வஞ்சனையில்லாத மெய்யன்பர்களின் உடம்பினைப் புறக்கணிக்காது அதன் கண் புகுந்து நிற்பவன். தன்னைப் புறக்கணித்து விட்டுப் பாற்கடலைக் கடைந்த தேவர்கள் அதிலிருந்து எழுந்த நஞ்சால் தாக்கப்பட்ட போது அவர்களைக் காத்தவன். இன்பவேட்கையால் தேவர்களும், பொருள் வேட்கையால் அசுரர்களும் போற்றித் துதிப்பர். ஆனால் நான் அருள் வேட்கையால் சிவனைப்போற்றித் துதிக்கிறேன். விதிப்படி உலகம் இயங்கிய போதும் சிவன் அருள்வழி நிற்பார்க்கு விதியால் வரும் துன்பங்கள் துன்பங்களைக் கொடுக்க மாட்டாது. படைத்தற் பொருட்டுச் செந்நிறமும், அழித்தற்பொருட்டு நீலநிறமும், அருளற்பொருட்டு வெண்ணிறமும் கொண்ட சிவன், திருவருளால் ஐந்து நிறங்கொண்ட முத்தி வண்ண முதல்வன் எனப்போற்றப்படுகிறான். உள்ளத்தில் வீற்றிருந்து அருள் சொரியும் சிவனை ஓம்புவோர்க்கு மெய்ஞ்ஞானப் பேறு உண்டாகும். அப்பேறு அவனை நினையாதவர்களுக்கில்லை. என்றும் நின்று நிலைபெறும் அருட்பெருகும் விளக்கான அவனை வணங்கினால் மலஇருள் அகன்று பேரொளியான திருவருள் அலை போல வரும்.

**சூடுவன் நெஞ்சிடை வைப்பன் பிரான்என்று**

**பாடுவன் பன்மலர் தூவிப் பணிந்துநின்று**

**ஆடுவன் ஆடி அமரர்பி ரான்என்று**

**நாடுவன் நானின் றறிவது தானே.**

திருவருளின் துணையால் சிவபெருமானின் திருவடி மலரைத் தலையிற் சூடுவேன். அத்திருவடி நினைவை மறவாது நெஞ்சத்துள் வைப்பேன். என்னுயிருக்குயிரான பெருந் தலைவன் அவனென்று செந்தமிழால் போற்றிப் பாடுவேன். பல்வேறு வகையான நறுமலர்களை அவனது பாதத்தில் தூவிப்பணிவேன். மகிழ்ச்சி மேலீட்டால் ஆனந்தக் கூத்தாடுவேன். அமரர்களின் தலைவன் அவனென்று கூறிப்பரவசமடைவேன். அவனுக்குரிய தொண்டுகளை மகிழ்வுடன் செய்வேன்.

## 2. மும்மூர்த்திகளின் முறைமை

என்றும் குன்றாத இளமையும் அழகும் பெருமையும் உடைய சங்கரனான சிவன் அளவில்லாத பெருமைகளை உடையவன். அவனது பெருமைகளை அரி, அயன் ஆகிய இருவராலும் அறியமுடியாது. ஐந்தொழில்களை ஐவரும் செய்த போதும் அதற்குக் காரணமாக இருப்பவன் சிவனே. இருவினைகளுக்கு இருப்பிடமான மாயைக்கு அப்புறம் இருப்பவன். அதனால் தெய்வமான அவனே ஈசன் எனப்படும். அருவுருவமான அருளோனே சதாசிவம், சிவக்கொழுந்து என்ற உண்மையை உணர்ந்தவர்கள். அது இது என்று வேற்றுமைப்படக் கூறார். திருவருளால் அகமும் புறமும் தூய்மையானோர் மூலத்தை உணர்ந்தவராவார். அகத்தூய்மை திருவைந்தெழுத்தாலும், புறத்தூய்மை திருநீற்றாலும் உண்டாகும்.

சிவம், சக்தி, நாதம், வித்து ஆகிய அருவம் நான்கும். சிவன் முதல் மூவர் அருளோன்(சதாசிவன்) அருவுருவம் ஒன்று. ஆண்டான் அரன், அரி, அயன் என்றும் நால்வரும் எண்ணால் வேறுபட்ட போதும் பொருளால்

ஒன்றே. அதுவே சங்கரன். பெருமைகள் பலவும் கொண்ட சிவனைப் பாலொத்த மேனியன் என வியந்து தொழுவர். ஒளியருளுகின்ற சிவனின் பேரொளியாகத் திகழ்வன அன்பு, அறிவு, ஆற்றல்(சக்தி, சிவம், விந்து) ஆகிய மூன்றுமாம். இப்பேரொளி அருளோன், ஆண்டான், அரன், அரி, அயன் என்ற ஐந்து நிலைகளாக விளங்கும். இவை அனைத்தும் ஆதியாகிய திருவருளின் கண் அமைவன. இதையுணராத மூடர்கள் தான் ஆண்டான், மால், அயனென வேறுபடுத்திக் கூறுகின்றனர்.

சக்தியோடு கூடிய சிவன் சதாசிவன். சதாசிவன் அருளோன் என்றும் கூறப்படுவான். அறிவாகிய பராசக்தியுடன் கூடிய சிவமே திருவருளாகும். அத்திருவருள் குளிர்ச்சியாய் இருப்பதால் சிவன் தண்ணளியான் ஆவன்.

## 3. வேதச்சிறப்பு

வேதம் ஒழுக்கத்தைப் பற்றிக் கூறுவதால் அதற்கு அறநூல் என்னும் சிறப்புப் பெயருண்டு. வாதம் செய்யாது வேதத்தையோதி முத்தி பெறல் வேண்டும். படைத்தல் தொழிலைச் செய்யும் நான்முகனும் வேதத்தை உணர்ந்தவனாகான். வேதத்தை உணர்ந்தவன் சிவனே. அவனை நினைத்தே வேள்விகள் வேட்கப்படுகின்றன. மந்திரங்களின் தொகுப்பு மறை எனப்படும். இம்மறையைச் சிவவேதியர் சொல்வர். கண்ணன் முதலிய தேவர்களுக்கும் முக்கண்ணனே மூலகுருவாய் இருக்கிறான். அறிவிக்க அறியும் சித்தும், அறிவித்தாலும் அறியாத அசித்தும் அல்லாதவன் சிவன். அவன் பேரறிவாளன். அறநெறியின் முதல்வன். அப்பெருமானை நினைக்கும் திருவடியுணர்வை நல்கியருளும்

சிவகுரு எழுந்தருள்வது குருநெறியாகிய சிவமாநெறியாகும். இதுவே சிவனடியைச்சேரச் செய்யும் ஒப்பில்லாத தனிநெறி. இவற்றை ஓதுவது மறைமுடிவாம் வேதாந்தம் எனப்படும்.

அறுவகைச் சமயங்களையும் ஆறு அறங்களாகக் கொண்டு நிகழும் வேதங்களையோதி அருளிய சிவபெருமானின் பேரருட் குணத்தைத் திருவடியுணர்வோடு ஓதியுணர்ந்தவர் எவருமில்லை. வேதப்பாடல்களையும், ஏனைய இசை ஒலிகளையும், சிவனின் முழுமுதல் தன்மையை விளக்கிக் காட்டி ஆடும் ஆட்டங்களையும் ஏற்றுக்கொள்ளாதவர்கள் கொலைகளுடன் கூடிய வேள்விகளைச் செய்வர். அதனால் அவர்கள் நரகத்தையே அடைவர்.

## 4. ஆகமச்சிறப்பு

நீலமேனி கொண்ட உமையொரு பாகனான சிவபெருமான் இருபத்தெட்டுச் சிவாகமங்களையும் அருளினான். இவற்றை விஞ்ஞகர் என்றும் நல்லார் இருத்தெண்மரும் அவற்றைக் கேட்டுணர்ந்தனர். இருபத்தெட்டாகமங்களையும் ஒப்பில்லாத திருமூலகங்கள் ஐந்துள் உச்சித் திருமுகத்தால் உணந்தருளினார். அவ்வாகமங்களின் திருப்பாட்டுக்களின் தொகை இருபத்தெட்டுக் கோடி நூறாயிரமாகும். இவற்றை அயனாலும் மாலாலும் விளங்கிக் கொள்ள முடியாது. ஆகமங்களிலுள்ள மெய்ப்பொருள் உண்மையை அறியாவிட்டால் அவை நீர் மேலுள்ள எழுத்துப் போலப் பயன் தரமாட்டாது. உலகில் சிவபுண்ணியங்களில் எல்லாம் மேலானது சிவபூசையாகும். சிவவுலகத்தாரால் வழிபடப்படும் சிவபெருமானையும் அவனோடு சேர்த்து வழிபடப்படும் நந்தியும் அவர்களுக்கு உறுதியளித்துத் தரும்படி ஆகமமாக ஓங்கி நிற்பவன் சிவன். சிவத்திலிருந்து திருவருளால் அன்னையாகிய சக்தியும், அச்சக்தியிலிருந்து ஆண்டானாகிய மகேசனும்,

அம்மகேசனின் ஆசானாகிய நந்தியங் கடவுளும், அரன், அரி, அயன் என்றும் இவர்களும் தங்களுக்குள்ளே பெற்ற சிவாகமங்கள் ஒன்பதாகும். அவை முற்றும் ஆசானான நந்தியங் கடவுள் பெற்றவை. இவை காரணம், காமியம், வீரம், சிந்தம், வாதுளம், வியாமளம், காலோத்தரம், சுப்பரம், மகுடம் எனப்பெயர் பெறுகின்றன. சிவன் முதலாகவுள்ள ஒன்பதின்மர் வழியாக வந்த சிவாகமங்கள் இருபத்தெட்டாகும். பிறப்பற்றுச் சிறப்பாக வாழ வழிகாட்டுபவை இவ்வாகமங்கள். இவை வேதாகமங்கள் மயக்குவது போன்று மயக்கும் தன்மையானவையல்ல. அதனால் இவை மோகமில்லாதவையென்று கூறப்படுகின்றன. இருபத்தெட்டு ஆகமங்களும் மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை திருக்கோவில், திருவுரு, நாள்விழா, சிறப்பு விழா முதலியன பற்றிய செய்கைப் பகுதி, வழிபாட்டுப் பகுதி, முப்பொருள் உண்மையைக் கூறும் மெய்மைப் பகுதியென மூன்றாக வகுக்கப்பட்டுள்ளன. இவை முறையே கருமகாண்டம், உபாசனைக் காண்டம், ஞானகாண்டம் எனப் பெயர் பெறும். வேதாந்தமும் சித்தாந்தமும் கூறும் மெய்மைகளாகிய முப்பொருள் ஒன்றே. எனினும் இவை மூன்றும் முடிவு இரண்டும் ஒன்றாக கொண்டொழுகுவோர் சுத்த சைவர் எனப்படுவர்.

## 5. அந்தணர் ஒழுக்கம்

அந்தணர் என்போர்

**75. அந்தண ராவோர் அறுதொழில் பூண்டுளோர்**

**செந்தழல் ஓம்பிமுப்போதும் நியமஞ்செய்து**

**அந்தவ நற்கரு மத்துநின் றாங்கிட்டுச்**

**சந்தியும் ஓதிச் சடங்கறுப் போர்களே.**

நாகையூர்ச் சிவன் கோவிற் குருக்கள் சுந்தரேஸ்வரர். விடியற் காலையில் இருந்து இரவு பத்துமணி வரை கோவிலிலேயே இருப்பார். அவரை எவ்வேளையிலும் சந்தித்துத் தம் குறைகளைக் கூறிப் பரிகாரம் பெறலாமென நினைத்து அவ்வூர் மக்கள் அங்கு வருவார்கள். குருக்கள் மக்களின் குறைகளைக் கேட்டறிந்து பரிகாரஞ் செய்வார். சிவனிடம் முறையிடுவார். அதனால் குறைப்படும் மக்களின் குறைகள் யாவும் தீரும். அவர் சோதிடம் பார்ப்பார், பேய் பிசாசுகளை விரட்டுவார், நோய்கள் வந்தால் பார்வை பார்த்து நூல் கட்டுவார், கிரகதோஷங்களுக்குப் பூசைகள் செய்வார், அந்தணச் சிறுவர்களுக்கு வேதப்பாடம் கற்பிப்பார். இதனால் எந்நேரமும் கோவிலில் வேதபாராயணம் நடைபெறும்.

அன்று பகல் பத்து மணிக்கு அவ்வூரில் வாழும் பெரியதொரு தனவந்தனான குணபாலன் சிவன் கோவிலுக்கு வந்தான். அப்போது குருக்கள் இன்னொருவருக்கு ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார். குருக்கள் ஒருவருடன் பேசும் போது மற்றவரை அங்கிருத்துவதில்லை. குணபாலன் பெருந்தனவந்தன். அத்துடன் இரக்க சுபாவம் உள்ளவன். சகலரையும் நேசிப்பவன். உதவிகள் செய்பவன். அதனால் குருக்கள் குணபாலனைத் தனக்கருகில் வந்து அமருமாறு கூறினார்.

‘‘மகனே, உழைத்துச் சம்பாதிக்கும் பணத்தை மிச்சப்படுத்தப் பழகிக்கொள். வருமானம் மிகமிகக் குறைவானாலுங் கூட ஒரு சிறு தொகையை மிச்சம் பிடித்தால், அத்தொகை நாட்செல்லப் பெருகிவிடும். நீ நல்ல உழைப்பாளி. கஷ்டப்பட்டு உழைக்கும் பணம் முழுவதையும் செலவு செய்து விட்டு இப்போது உனது மகனைப் பாடசாலையில் சேர்ப்பதற்கும் கற்றல் உபகரணங்களை வாங்குவதற்கும் உதவி செய்யுமாறு கேட்கிறாய். ஏழைகள், அங்கவீனர்கள், வயோதிபர்களுக்குத் தான்உதவி செய்தல் வேண்டும். இனிமேலாவது உழைக்கும் பணத்தின்

ஒரு பகுதியைச் சேமி'' என்று கூறிவிட்டு ஒரு தொகைப் பணத்தைக் கொடுத்தார்.

குணபாலன்,''நான் கொடுக்கிறேன்'' என்றான்.

குருக்கள் சிரித்தார் ''அந்தணர்கள் கொடுத்துதவவும் வேண்டும்'' என்றார்.

கலக்கத்துடன் வந்த குணபாலன் சொன்னான்,''சுவாமி, எனது மகளுக்குத் திருமண நிச்சயார்த்தம் செய்தது நீங்கள். இப்போ மாப்பிள்ளைப் பகுதியினர் எனது மகளுக்கு நோய் உள்ளதாகக் கூறித் திருமணத்தை வேண்டாம் என்கிறார்கள்..'' விம்மி விம்மி அழுதான் குணபாலன்.

குணபாலனுடன் நடராசா என்பவன் அடிக்கடி சண்டைபிடிப்பவன். அவன் சில தினங்களுக்கு முன் குடித்துவிட்டுக் குணபாலனின் சம்பந்தத்தைக் குழப்புவேன் என்று கூறியிருந்தான். அதைக் குருக்கள் கேள்விப்பட்டிருந்தார்.

''குணம், உனது மகளின் திருமணம் நடக்கும். நீ துயரப்படாது வீட்டுக்குச் செல்'' என்றார் குருக்கள்.

அன்று மாலை குருக்கள் குணபாலனின் சம்பந்தியான தம்பிப்பிள்ளையின் வீட்டுக்குச் சென்றார். அவரைக் கண்ட தம்பிப்பிள்ளைபரபரப்புடன் எழுந்து வந்து அவரை வணங்கி விட்டுச் சொன்னான், ''சுவாமி, யாரிடமாவது சொல்லியனுப்பியிருந்தால் நான் வந்திருப்பேன். தாங்கள் சிரமப்பட்டுப் பல வேலைகளைக் கைவிட்டு விட்டு வந்துள்ளீர்கள். இதனால் எவ்வளவு மக்கள் துன்பப்படுவார்கள்'' என்றான்.

“அடியார்களுக்குப் பிரச்சினையென்றால் எதையுஞ் செய்யத் தானே வேண்டும். அது சரி ஏன் நீ குணபாலனின் மகளை உனது மகனுக்குக் கல்யாணம் செய்ய விரும்பவில்லை. கல்யாணம் என்பது ஆயிரங்காலத்துப் பயிர். ஒரு பெண்ணைப் பார்த்துச் சம்மதம் தெரிவித்த பின் அப்பெண் தனது கணவன் என்று அவனையே நினைத்திருப்பாள். அதன் பின் அவர்கள் நாளுங் குறித்து விட்டார்கள். இப்போ நீ ஏன் வேண்டாம் என்கிறாய். சரியான காரணத்தைச் சொல்”

முற்றத்தில் நின்று கொண்டு கதைத்துக் கொண்டிருந்த குருக்களை உள்ளே வந்து அமரும்படி சொன்னான் தம்பிப்பிள்ளை.

“நான் இப்போ விருந்தினராகவோ, தொழில் நிமிர்த்தமோ வரவில்லை. நான் நிட்சயித்ததால் அப்பெண்ணும், அக்குடும்பமும் அதை நம்பிச் செயற்பட்டுள்ளனர். இப்போ அவர்களுக்குத் தீராத அவமானம் வந்துள்ளது. காரணமில்லாது திருமணம் குழம்பியதால் ஊருக்குள்ப் பல வதந்திகள் உலாவுகின்றன. அதனால் காரணத்தைச் சொல்”அதட்டினார் குருக்கள்.

மணப்பெண்ணுக்கு வலிப்பு வியாதி உள்ளதாகப் பேசிக்கொள்கிறார்கள்..” தம்பிப்பிள்ளை வார்த்தைகளை முடிக்க முன்கோபத்துடன் குறுக்கிட்டார் குருக்கள்,“யார் சொன்னது..? ஊரில் உள்ளவர்களின் சாதகம் முழுவதும் என்னிடம் உண்டு. அதைவிட ஊரவரின் சரித்திரம் முழுவதும் எனக்குத் தெரியும். காய்ச்சல் கறுப்பு என்று கூடப்பாயிற்படாத பெண்ணுக்கு வலிப்பு என்று யார் சொன்னது?” என்று கர்ச்சித்த குருக்கள் சிறிது நேரம் கழித்துச் சொன்னார், “அந்தக் குடிகார நடராசா தானே சொன்னவன். ஒரு விஷயத்தைக்க் கேள்விப்பட்டால் அதை விசாரிக்க வேண்டும். நீ என்னிடம் வந்து

கேட்டிருக்கலாம் தானே? உனக்குப் பணத்தின் மீது பேராசை. நாகராசா, குணபாலனிலும் கூடுதலாகச் சீதனம் தருவதாகச் சொன்னதும் மனம் மாறிவிட்டாய். அதுக்காக ஒரு பெண்ணின் வாழ்வைச் சீரழித்து விட்டாய். இனிமேல் நான் உனக்கோ அல்லது உனது குடும்பத்திற்கோ பூசை, சடங்குகள் செய்ய மாட்டேன்'' என்று கூறிவிட்டு வீட்டை விட்டு வெளியே சென்றார் குருக்கள்.

''சுவாமி, ஆராயாமல் தவறு செய்து விட்டேன். என்னை மன்னியுங்கள். நான் எனது மகனிற்குக் குணபாலனின் மகளைத் திருமணம் செய்து கொடுக்கிறேன். நீங்கள் மனம் வருந்தினால் எனது சந்ததி அழிந்துவிடும்'' தம்பிப்பிள்ளை குருக்களின் காலைப்பிடித்துக் கொண்டு கதறினான்.

ஆராய்ந்து சொல்வோர்

**76. காயத் திரியே கருதுசா வித்திரி**
**ஆய்தற் குவப்பர் மந்திரமாங் குன்னி**
**நேயத் தேரேறி நினைவுற்று நேயத்தாய்**
**மாயத்துள் தோயா மறையோர்கள் தாமே.**

சுந்தரேஸ்வரக் குருக்கள் சிவ பூசையை முடித்துக் கொண்டு வெளியே வந்தார். அவரைக் கண்டு தம் குறைகளைத் தீர்ப்பதற்காகப் பல பக்தர்கள் காத்து நின்றனர்.

சுந்தரேஸ்வரக் குருக்கள் சிவனுக்குப் பூசை செய்யும் போது உலகை மறந்து விடுவார். அவரது வாயிலிருந்து மந்திரங்கள் உதிர்ந்து கொண்டிருக்கும். அவரது வலது கை பூக்களைச் சொரிந்து கொண்டிருக்கும். சாத்திர ரீதியாக அவர் பூசை செய்வதால் பார்ப்பவர்கள் மெய்மறந்து பரவசமடைவர். பெண்கள் அவர் அம்பாளுக்குப் பூசை செய்வதைக் காணக்கூடி நிற்பர். கன்னிப் பெண்கள் அவர் அம்பாளுக்குப் பூசை செய்யும் போது தமது குறைகளை அம்பாளுக்குச் சொல்லி அர்ச்சனை செய்விப்பார்கள்.

மாலதி அன்று சிவன் கோவிலுக்கு வந்திருந்தாள். குருக்களைக் கண்டதும் ஒவ்வொருவரும் தமது எண்ணங்களைக் கூறி அர்ச்சனை செய்வித்தனர். மாலதி ஆறுதலாக இருந்தாள். எல்லோரும் சென்ற பின் அவள் குருக்களின் அருகே வந்தாள். அவர் தான் மிகவும் பொருத்தமான மாப்பிள்ளை என்று கூறி ஆதவனை அவளுக்குத் திருமணம் செய்து வைத்தவர். திருமணமாகி ஐந்து வருடங்கள் கழித்தும் அவளுக்குக் குழந்தை பிறக்கவில்லை. அது ஆதவனுக்குப் பெருங்கவலையைக் கொடுத்தது. அவனது குடும்பத்தில் பிள்ளைகள் பிறப்பது குறைவு. அவனது சகோதரர்கள் எழுவரில் மூவருக்குப் பிள்ளைகள் இல்லை. ஏனைய இருவருக்கு ஒரு பிள்ளையும் மற்றய இருவருக்கு இரண்டு பிள்ளைகளும் உண்டு. அதனால் தனக்குப் பிள்ளை பிறக்காதென்று அவன் பயந்தான். அது குருக்களுக்குத் தெரியும்.

கண்கள் கலங்கப் பேசமுடியாது தவிக்கும் மாலதியை அன்புடன் நோக்கினார் குருக்கள். பின் சொன்னார், “மகளே, எந்நேரமும் உன் நினைவுடன் தான் நான் இருக்கிறேன். தினமும் உமாதேவியாருக்குப் பூசை செய்யும் போது உனது எண்ணங்களை வெளிப்படுத்துவேன். அம்பாள் அருள் தருவதில் வல்லவள். நீ தினமும் நீலநிற மலர்களைக்

கொண்டு வந்து தா. நான் அதனால் அம்பாளுக்கு அர்ச்சிக்கிறேன். அத்துடன் வெள்ளிக்கிழமைகளில் விரதமிரு'' என்றார்.

அவள் சென்ற பின் பாடசாலை உடையுடன் காயத்திரி வந்திருந்தாள். அவளது முகத்தில் என்றுமில்லாத மகிழ்ச்சி தாண்டவமாடியது, ``சுவாமி, தாங்கள் கூறியபடி நான் சரஸ்வதியை பூசை செய்தேன். இன்று நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் என்னைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். முன்நூறு பேர் வந்தனர். அதில் எனக்குக் கிடைக்க காரணமாக இருந்தவர் நீங்கள்'' என்று கூறி அவரின் பாதங்களைப் பணிந்தாள் காயத்திரி.

``மகளே, அம்பாள் அடியவர்க்கு உதவவே சரஸ்வதி என்னும் நாமத்துடன் கல்வித் தெய்வமாக வீற்றிருக்கிறாள். அவள் தன்னை முழுமனதோடு வணங்கும் அடியார்களின் குறைகளைத் தீர்த்து வைப்பாள். நீ அம்பாளை நம்பி நான் கூறியபடியெல்லாம் நடந்தாய். ஒழுங்காக மந்திரங்களை ஓதினாய். அதனால் தான் உனக்குப் பெரிய வேலை கிடைத்தது'' என்றார் குருக்கள். ``இல்லை சுவாமி, எனக்கு நம்பிக்கையூட்டியது நீங்கள். மனஒடுக்கத்துடன் பூசை செய்தது நீங்கள். அதைவிட நெஞ்சில் பதிந்திருந்த மந்திரங்களைச் சொன்னது நீங்கள். என்னைச் சொல்லவைத்தது நீங்கள். இதனால் தான் யாவும் நடைபெற்றன. இதில் என்பங்கு எதுவுமில்லை'' என்றாள் காயத்திரி.

ஒரு வருடத்திக் பின் மாலதி ஓர் ஆண் குழந்தையுடன் சிவன் கோவிலுக்கு வந்து குருக்களின் காலடியில் தனது மகனைக் கிடத்தினாள்.

சிவமறையோர்

**77. பெருநெறி யான பிரணவம் ஓர்ந்து**

**குருநெறி யாலுரை கூடிநால் வேதத்**

**திருநெறி யான கிரியை யிருந்து**

**சொருபம தானோர் துகளில்பார்ப் பாரே.**

சுந்தரேஸ்வரக் குருக்கள் தனது குருவைச் சந்திப்பதற்காக அவரது ஆச்சிரமத்திற்குச் சென்றார். பல பிராமணர்கள் அவரிடம் பாடங்கேட்டுக் கொண்டிருந்தனர். அட்சரசுத்தத்துடன் அவரது சீடர்கள் மந்திரமோதிக் கொண்டிருந்தனர். குரு கண்களை மூடியபடி அமர்ந்திருந்தார். மந்திரமோதும் பிராமணர்கள் யாககுண்டலத்திற்கு நெய்விட்டுக் கொண்டிருந்தனர். சுந்தரேஸ்வரக் குருக்கள் குருவின் அருகே சென்று அவரது பாதங்களைத் தொட்டு வணங்கிவிட்டு யாககுண்டலத்தின் முன்னால் அமர்ந்தார். யாகம் முடிந்ததும் கண் விழித்த குரு, சுந்தரேஸ்வரக் குருக்களைக் கண்டு மகிழ்வுடன் புன்னகைத்து விட்டுச் சொன்னார், ‘‘மாணவர்களே, எனது சீடன் சுந்தரேஸ்வரன் இன்று என்னைச் சந்திப்பதற்காக வந்துள்ளான். அவன் முழுமையான சீடன். ஓ மொழியானது ஏனைய மந்திரங்களின் விரிவிற்கும் ஒலிப்புக்கும் தாயாய் அமைந்த பெருநெறியாகும். அதனை அருளால் உணர்ந்து சிவகுருவின் துணையுடன் திருவைந்தெழுத்தின் பொருளை உணர்ந்து, குருவின் உபதேசத்தால் திருநெறியான திருவருளைக் கையேற்று மற்றவர்களுக்கு உபதேசித்து அவர்களை ஈடேற்றுவோர் சிவவடிவினராவர். அவ்வாறு சிவவடிவானோர் குற்றமற்ற சிவமறையோராவர். சுந்தரேஸ்வரர் சிவமறையோன். சிவனடியார்கள் அவரின் சிவவேடத்தைச் சிவனென நினைத்து வணங்குகின்றனர். அவரைச் சிவனென வணங்குவோர் சிவனருளையும் பெறுகின்றனர். அவரைப் போல நீங்களும் குருவின் திருவருள் நெறிப்பட்டு மெய்யுணர்வடைந்து திருவைந்தெழுத்தின்

பொருளையும் பெருமையையும் உணர்ந்து சிவமறையோராகுங்கள்'' என்றார்.

சுந்தரேஸ்வரக் குருக்கள் குருவின் பாதங்களை நீரால் கழுவிப் பட்டால் அதைத் துடைத்துத் தூபதீபங்காட்டி, அவரது பாதங்களைத் தனது சிரசில் தூக்கி வைத்து வணங்கினார்

சிவவடிவினர்

**78. சத்திய முந்தவம் தான்அவன் ஆதலும்**
**எய்த்தகும் இந்தியம் ஈட்டியே வாட்டலும்**
**ஒத்த உயிர்கள் உண்டா யுணர்வுற்றுப்**
**பெத்தம் அறுத்தலு மாகும் பிரமமே.**

சிவன் கோவிலின் இரவுப் பூசை முடிவடைந்ததும் மக்கள் சிவன் கோவிலுக்கு முன்னால் நின்ற அரசமரநிழலில் சென்றமர்ந்தனர். அன்று வெள்ளிக்கிழமை. வெள்ளிக்கிழமைகளில் மாலைநேரப் பூசை முடிவடைந்ததும் சுந்தரேஸ்வரக் குருக்கள் அருளுரை நிகழ்த்துவார்.

''அன்பான சிவனடியார்களே, நீறணிந்து உருத்திராக்கம் தரித்து, காவியுடையணிந்து, தலை முடியை மழிப்பதோ அல்லது வளர்ப்பதோ சிவனடியார்களின் வடிவமல்ல. தேவாரதிருவாசகங்களைப்பாடிக் கொண்டு அருளுரை வழங்குகிறோமெனக் கூறி மக்களைப் பல வழிகளாலும் கவர்ந்து பொருள் சம்பாதிப்பதையே நோக்கமாகக் கொண்டு பலர் சிவவேடமிட்டுள்ளனர். இது சாதாரணமாகக் காணக்கூடிய நிகழ்வு''

“சிவவடிவைப் பெறவிரும்புவோர் சிவனின் திருவடிகளை நினைத்து நற்றவம் புரிதல் வேண்டும். சிவவடிவுக்குத் தோற்றமோ அலங்காரமோ தேவையில்லை. நல்லொழுக்கம் தான் வேண்டும். ஐம்பொறிகளையும் அடக்கிச் சிவவுணர்வுடன் அவை தன்வழி மீறாது நல்வழிப்படுத்துதல் வேண்டும். பொறிகள் ஒழுக்கமான முறையில் அடங்கினால் தான் சிவநினைவுண்டாகும். அண்மையில் எமது ஊரின் மத்தியில் மடமமைத்திருந்த ஒரு போலிவேடதாரி பலரிடமிருந்து பொருட்களை ஏமாற்றி வாங்கிக் கொண்டு தலைமறைவானான். இவனுக்கு உண்மையான சில சிவபக்தர்கள் சீடர்களாக இருந்தனர். அவர்கள் உண்மையை அறியாது சீடர்களாக இருந்தமையால் தான் சாதாரண மக்கள் ஏமாந்தனர். ஊர்ப்பெரியவர்கள் செய்வதைச் சாதாரண மக்கள் ஆராய்வின்றிப் பின்பற்றுவர். அதனால் பெரியவர்கள் அவதானமாகச் செயற்படல் வேண்டும். கட்டான உடலும், வினைகளுக்கேற்ப பிறந்து இறந்து உழலும் உயிரும் ஒன்றென்றே மருள் உணர்வுள்ளோர் கருதுவர். அவை இரண்டும் வேறானவை. உடலும் உயிரும் ஒன்றானால் உடல் இயக்கமற்றுப் போகாது, இறப்பு நிகழாது. சிவவுணர்வோடு அருள் உணர்வும் சேர்ந்து ஒழுக்க மேம்பாட்டால் மெய்யுணர்வையடைந்த சிவவடிவினன் உடலையும் உயிரையும் இரண்டாகக் கருதி அதைத் துறந்து சிவனையடையவே விரும்புவான். அத்தகைய சிவவடிவானவன் ஐம்பொறிகளால் உண்டாகும் உணர்வுகளையடக்கி மெய்யுணர்வையுண்டாக்கிச் சிவனைத் தொழுது சிவனது திருவடியை அடைவான். எனவே அன்பான சிவனடியார்களே, முதலில் ஒழுக்கமாக வாழப்பழகுங்கள். பின் சிவனது திருவடியை நினைத்துத் திருவைந்தெழுத்தையோதுங்கள். மெய்யுணர்வுண்டாகும். அதை விட்டு விட்டுப் போலியானவற்றை உண்மையென்று நினைத்து ஏமாந்து பிறப்புக்களை உருவாக்காதீர்கள்” என்றார் சுந்தரேஸ்வரக் குருக்கள்.

**79. வேதாந்தங் கேட்க விரும்பிய வேதியர்**
**வேதாந்தங் கேட்டுந்தம் வேட்கை ஒழிந்திலர்**
**வேதாந்த மாவது வேட்கை ஒழிந்திடம்**
**வேதாந்தங் கேட்டவர் வேட்கைவிட் டாரே.**

சிவன் கோவில் குருக்களின் முன் சிவகுருநாதன் நின்று கொண்டிருந்தான். அவனது கண்களாற் கண்ணீர் பெருகியபடியிருந்தது. அவனால் பேசக்கூட முடியவில்லை. பெண்களைப் போல விம்மி விம்மி அழுது கொண்டிருந்தான். அவன் பெரும் சிவபக்தன். சிவன் கோவிலில் தினமும் சரியைத் தொண்டுகள் புரிபவன். அத்துடன் சிவவிரதங்கள் அனைத்தையும் அனுட்டிப்பவன்.

“சுவாமி, நான் சிவனுக்கு என்ன செய்யவில்லை?” என்று சொல்லிவிட்டுப் பேசமுடியாது அவதிப்பட்ட அவன் விக்கி விசும்பி அழுதவாறு சொன்னான். அவனது வாயிலிருந்து சொற்கள் தடைப்பட்டுத் தடைப்பட்டு வெளிவந்தன, “நான் ஏழை. இருப்பினும் எனது தொழிலை விட்டுவிட்டுச் சிவனுக்குத் தொண்டு செய்கிறேன். ஆனால் சிவன் எனது வேதனைகளை உணர்கிறாரில்லை. எனது மகள் இன்னதென்று தெரியாத நோயால் அவதிப்படுகிறாள். எனது ஒரே மகள் படும்துன்பத்தை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இரவில் எழுந்து ஓடுகிறாள், கத்துகிறாள், பேய் போலக் கூக்குரலிடுகிறாள். வைத்தியர்கள் மருந்து கொடுக்கிறார்கள். ஆனால் சுகப்படவில்லை. மந்திரங்கள் கற்ற அந்தணர் ஒருவர் கழிப்புக்கழிக்க வேண்டும் என்கிறார். அதற்கு மூன்று சேவல்களைப் பலியிட வேண்டும் என்றும் பத்தாயிரம் ரூபா செலவாகுமென்கிறார். அந்தப் பணத்திற்கு நான் எங்கே

போவேன்? புலால் சமைக்காத எனது வீட்டில் எப்படிக் கொலை செய்வது..?'' அழுதான் சிவகுருநாதன்.

''மகனே, அழாதே உனது துன்பங்கள் அனைத்தையும் சிவன் அறிவான். அதனால் அவன் உனக்கு உதவிகள் செய்வான். தீமைகள், துயரங்கள், கஷ்டங்கள் வருவது அடுத்து இன்பங்கள் வரப்போகின்றன என்று அறிவிக்கவே. உனது மகளுக்குத் திருமணம் நடைபெறப்போகிறது. மந்திரங்களின் விரிவிற்கும் அவற்றின் ஒலிப்பிற்கும் ஏற்ப அவற்றை உணர்ந்து அனுபவித்து ஓதுபவர்கள் அந்தணர்கள். அவர்கள் சிவகுருவின் திருவருள் நெறியால் திருவைந்தெழுத்தின் அருமறைக் கேட்டு அவற்றை உபதேசித்துச் சிவநெறியான திருவருளைக் கையேற்று நடப்பர். அத்தகையவர்களைச் சிவவடிவினராக அம்மறைமாற்றும். இவ்வாறு சிவவடிவானோர் குற்றமற்ற சிவமறையோர் ஆவர். முப்பொருள் உண்மையைக் கண்டதால் உண்டாகும் திருவடியுணர்வும், சிவனைத்தொழுவதால் உண்டாகும் தவவடிவும் சிவவடிவிற்கு உறுப்புக்களாகும். இத்தவத்தினை மேற்கொள்பவர் ஐம்பொறிகளையும் அடக்குதல் வேண்டும். இவ்ஐம்பொறிகளும் அடங்குவதற்கு திருவருளின் துணையைத்தேட வேண்டும். கட்டழகான உடம்பும், அவ்வுடம்பின் வினைக்கேற்ப பிறந்து இறந்து பின் பிறந்திறக்கும் உயிரும் வெவ்வேறெனக்கருதாது ஒன்றேன்றே கருதி அறியாமை நீங்கப்பெற்றுச் சிவனே கதியென உணர்ந்து கொள்பவர்களே சிவவடிவினர். இவர்கள் தான் வேதாந்தம் கேட்கத் தகுதியானவர்கள். ஏனையோர் வேதாந்தம் கேட்டும் பயன் அடையார். இத்தகையவர்கள் தாம் முன்பு கற்ற உயிர்ப்பலி கொடுக்கும் சடங்குகளை மனம் கூசாது செய்வர். இத்தகைய சடங்குகளால் எந்தப்பிரயோசனமும் வராது. நீ சிவனை நம்பு. நாளை மீண்டும் வா. அப்பொழுது உனக்கு உண்மை புரியும்'' என்றார்.

மறுநாள், சிவகுருநாதன் வந்து சிவன் கோவில் குருக்களுக்குச் சொன்னான், ‘‘சுவாமி, நீங்கள் கூறியவையெல்லாம் உண்மை. நான் அறியாமையால் சிவனைக் குறைகூறிவிட்டேன். எனது மகள் ஓர் இளைஞனைக் காதலித்தாள். அது தெரியாத நான் அவளுக்குத் திருமணம் பேசினேன். அவளது அழகை விரும்பிய ஒரு தனவந்தன் அவளைத் திருமணம் செய்ய முன் வந்தான். இதையறிந்த எனது மகள் தனக்குப் பேய்பிடித்து விட்டதாக நடித்தாள். அதனால் அவளைத் திருமணம் செய்ய விரும்பியவன் மறுத்து விட்டான். ஊரில் இவளுக்கு விசர் என்று கதைக்கிறார்கள். இவளை விரும்பிய இயைஞனின் பெற்றோர் நேற்று வந்து பெண்கேட்ட பின்பு தான் எல்லாம் எனக்குப் புரிந்தது. சிவனை நம்பிய எனக்குத் துன்பங்கள் எதுவும் வராது’’ என்றான்.

‘‘சிவவடிவம் பெற்ற பிராமணன் உயிர்ப்பலி கொடுக்கும் எந்தச் சடங்கும் செய்யமாட்டான். சிவனை நினைத்தாலே பேய்பிசாசுகள் அஞ்சி ஓடிவிடும். சிவசிந்தனை இல்லாதவர்கள் தான் பிழைப்புக்காக இப்படியான சடங்குகளைச் செய்து மக்களை ஏமாற்றி வருகிறார்கள். சிவனை நினைத்துத் திருநீறு தரித்தால் தாக்கவரும் துன்பங்களெல்லாம் பறந்துவிடும். நீ உனது மகளை விரும்பியவனுக்குத் திருமணம் செய்து கொடு’’ என்றார் குருக்கள்.

ஒழுக்கமே மேலானது

**80. நூலுஞ் சிகையும் நுவலிற் பிரமமோ**
**நூலது கார்ப்பாச நுண்சிகை கேசமாம்**
**நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்**

**நூலுடை அந்தணர் காணும் நுவலிலே.**

சுந்தரேஸ்வரக் குருக்கள் சிவனுக்குப் பூசை செய்துவிட்டு வந்து மண்டபத்தில் அமர்ந்தார். அவர் உச்சியில் குடும்பி வைத்திருந்தார். நெற்றியிலும் உடலிலும் திரிபுண்டரமாக நீற்றை அணிந்திருந்தார். களங்கமற்ற வெண்வானில் பூரண சந்திரன் உள்ளதைப் போலப் பெரியதொரு சந்தணப் பொட்டு அவரின் நெற்றியில் பளபளத்தது. சிவந்த உடலையுடைய அவரின் உடலில் வெண்மை நிறமான பூநூல் பிரகாசித்தது. உச்சிக்குடும்பியில் வெண்நிறப் பூக்களையும் கருநீல நிறப்பூக்களையும் அணிந்திருப்பார். அவை திங்களையும், நாகத்தையும் போல இருக்கும். அவர் பூசைக்கென்றோ சாந்தி செய்வதற்கென்றோ பணம் பெறுவதில்லை. மக்கள் குருக்களின் வீட்டிற்குத் தேவையானவற்றைக் கொண்டு சென்று குருக்களின் மனைவியிடம் கொடுப்பார்கள். அவரைக் கண்டவர்கள் சிவன் வீதியுலா வருகிறாரென நினைத்து அவரை வணங்குவார்கள். அன்று சுந்தரேஸ்வரக் குருக்கள் மீது நம்பிக்கையும் பற்றும் வைத்திருக்கும் அருணாசலம் வந்து குருக்களுக்குச் சொன்னார், “சுவாமி, எனது அண்ணாவின் மகனுக்கு திடீரென்று இனம் தெரியாத ஒரு நோய் பற்றிப் பிடித்துவிட்டது. எனது சகோதரனுக்குச் சிவனிலும் உங்கள் மீதும் நம்பிக்கையில்லை என்பது உங்களுக்குத் தெரியும். அவன் எந்நாளும் உங்களுடன் பிரச்சினைப்படுபவன். நீங்கள் பூசைகளுக்குக் காசு வாங்காதுவிடுவது பொருளாகக் காசிலும் கூடக்கிடைக்கும் என்பதற்காகவென்று நாக்கூசாது சொல்பவன். அவன் வைரவர் கோயிற் குருக்கள் மீது தான் அதீதபக்தி வைத்துள்ளான். அவர் ஒழுக்கமானவரல்ல. ஆசைக்காட்டபட்டு பொருளாகவும் பணமாகவும் தங்கமாகவும் வசூலிப்பவர். சிலர் அவரது போலி வேடத்தை உண்மையென நினைத்து அவரைச் சிவனாக வழிபடுகின்றனர். நான் எனது அண்ணனுக்கு மகனை உங்களிடம் அழைத்துச் செல்லுமாறு பல முறை கூறினேன். இது வரை காலமும்

அதை மறுத்த அவன் மகனின் நோய் குணமாகாததால் உங்களிடம் அவனைக் காட்ட விரும்புகிறான். எனக்காக அவனை மன்னித்துக் கொள்ளுங்கள்'' என்றான் அருணாசலம்.

குருக்கள் அமைதியாகச் சொன்னார், ‘‘நான் ஒழுக்கமுள்ள பார்ப்பான் என்று சிவனுக்குத் தெரியும். நான் யார் எதைக் கூறினாலும் அதைக்கவனத்திலெடுக்காது சிவத் தொண்டு புரிகிறேன். அதனால் அவனை அழைத்து வா'' என்றார்.

அருணாசலம் தனது சகோதரனையும் அவனது மகனையும் கோவிலுக்கு அழைத்து வந்தான். அருணாசலத்தின் சகோதரன் தன் எதிரேநின்ற சுந்தரேஸ்வரக் குருக்களை நிமிர்ந்து பார்த்தான். அவரது அழகும், அவர் அணிந்திருந்த பூநூலும் அவரைச் சிவனெனக்காட்டின. உடனே அவன் அவரது பாதங்களைக் கட்டிப்பிடித்தவாறு அழுதழுது சொன்னான். ‘‘சுவாமி, புறஒழுக்கத்தையும் அலங்காரமான வார்த்தைகளையும் நம்பி நான் ஏமாந்துவிட்டேன். நான் கண்ட பிராமணர் ஒருவர் மக்கள் துயருடன் சென்றால் பூசைகள் கழிப்புக்கள் செய்யவென்று ஒரு பட்டியலும் பணமும் குறிப்பிட்டுக் கேட்பார். ஆனால் நீங்கள் பற்றின்றி யாவரையும் சிவனடியார்கள் என்று நினைத்துச் சேவை செய்கிறீர்கள். அப்படிப்பட்ட உங்களை நான் பல தடவைகள் அவமதித்துவிட்டேன். அதற்காக என்னை மன்னியுங்கள்'' என்று அழுதான்.

குருக்கள் அவனது மகனைப் பார்த்தார். அவன் எலும்பும் தோலுமாக இருந்தான். முகத்திலுள்ள எலும்புகள் வெளியே தெரிந்தன. கண்கள் சோபை இழந்து கறுத்திருந்தன. அவர் அவனை அன்போடு பார்த்து நீற்றை அவனது தலையிலும் உடலிலும் தூவினார். பின் நெற்றியிலிடும்படி கூறி நீற்றைக் கொடுத்தார். பின் மந்திரங்கள்

சொல்லியபடி நீரைத் தெளித்தார். பின் அவனது கையைப்பிடித்து நாடிபார்த்தார்.

“அருணாசலம், பயப்படும்படியாக எதுவுமில்லை. ஐந்து தினங்களுக்கு மருந்து தருகிறேன். குடிக்கச் சொல். ஒவ்வொருநாளும் மாலை நேரப்பூசை முடிந்தபின் வந்து பார்வை பார்க்க வேண்டும்” என்றார். குருக்களுக்கு மருத்துவம் தெரியும். நோயைக் குணப்படுத்த வல்ல அரிய மூலிகைகளை அரைத்து அவர் நோயாளிகளுக்குக் கொடுப்பார். ஆறாவது நாள் அவனது நோய் குணமானது. அதனால் பெருமகிழ்வடைந்த அருணாசலத்தின் சகோதரன் பெருந்தொகையான பணத்தைக் கொடுத்தான். அதை வாங்க மறுத்த குருக்கள் சொன்னார், “வேதங்களைக் கற்று அதை முழுமையாக உணர்ந்து கொண்ட பிராமணன் எல்லாவற்றையும் சிவசேவையாகச் செய்வான். அதற்குக் கூலியைச் சிவன் தருவான். அதனால் நான் சிவனின் அடியவர்களிடம் பணமோ பொருளோ பெறுவதில்லை. நீ எனக்குத் தரவிருந்த பணத்தை ஏழைகளுக்குக் கொடு. நடராசாவின் மகளின் திருமணம் சீதனம் இல்லாததால் தடைப்படுகிறது. அதை நடராசாவுக்குக் கொடு” என்றார் குருக்கள்.

அருணாசலத்தின் சகோதரன் திகைத்துப் போனான், “அகஒழுக்கமுள்ளவன் தான் பார்ப்பான். அவனே சிவன்” என்று நினைத்தபடி வீட்டுக்குச் சென்றான்.

பிராமணர்

**81. சத்தியம் இன்றித் தனிஞானந் தானின்றி**

**ஒத்த விடையம்விட் டோரும் உணர்வின்றிப்**

**பத்தியும் இன்றிப் பரன்உண்மை யின்றிப்**

**பித்தேறும் மூடர் பிராமணர் தாமன்றே.**

சுந்தரேஸ்வரக் குருக்கள் சிவன்கோவிலுக்கு வந்த போது என்றும் இல்லாத கூட்டம் சிவன் கோவில் வாசலில் குழுமியிருந்தது. அங்கு குழுமியிருந்தோர் பெரிதாகக் கத்திக் கதைத்துக் கொண்டு நின்றனர். எப்பொழுதும் அமைதியாக இருக்கும் கோவிலில் அன்று என்ன நடக்கிறது? என்று நினைத்தபடி சுந்தரேஸ்வரக் குருக்கள் வாசலுக்கு வந்தார். அவரைக் கண்டதும் மக்கள் மகிழ்வுடன் கைகட்டி வாய்பொத்தி நின்றனர். பலர் குடங்களில் நீர் கொண்டு வந்து அவரது கால்களைக் கழுவி விட்டு தொட்டு வணங்கினர்.

சுந்ரேஸ்வரக் குருக்கள் நிமிர்ந்து பார்த்தார். மக்கள் அமைதியாக விலகி நின்றனர். நிலத்தில் நிதானமின்றி அவரது மைத்துனன் புரண்டு கிடந்தான். அவன் கட்டியிருந்த வேட்டி அவிழ்ந்திருந்தது. அவனை ஊரிலுள்ள யாரும் பிராமணன் என்று மதித்ததில்லை. சிறுவர்கள் கூட கெங்காதரம் என்று பெயர் சொல்லியே அழைப்பர். வீட்டுக்கு வீடு திரிந்து பிச்சை எடுப்பதும் மக்கள் கொடுக்கும் பணத்தைக் கொண்டு குடித்து விட்டு வீதிகளில் கலகம் செய்வதும் அவனது தொழில். அன்று பிரச்சினைப் பட்டவன் சிவன் கோவில் பக்கம் சென்று மறைந்து விட்டான். அதனால் கெங்காதரன் அவனைத் தேடிவந்து பேசக் கூடாத வார்த்தைகளைக் கூறித்திட்டிக்கொண்டு இருந்தான். அதைக் கண்டு பொறுக்க முடியாத ஊர்ப் பெரியவரான பொன்னம்பலம், “சீ, நீ ஒரு பிராமணனா?” நீ பிராமணன் என்று ஊரார் எவரும் நினைப்பதில்லை. எங்கள் குருக்களைப் பார் அவர் ஒழுக்கம் தவறாதவர், அவர் சிவனைப் பற்றியும், சிவபக்தர்களைப் பற்றியும், சிவசிந்தனைகளை கொடுக்கும் மலங்களைப் பற்றியும் முழுமையாக உணர்ந்தவர். சிவனை வணங்குவதால் ஏற்படும் பலன்களைப் பற்றித் தான் முழுமையாக அறிந்து, அவை பற்றிச் சிவனடியார்களுக்கு எடுத்துக் கூறிக்

கரையேற்றுபவர். உணர்வுகளுக்கு அப்பால்பட்டது சிவனே என்று தானும் நினைத்து ஊர் மக்களையும் நினைக்க வைப்பவர். அதனால் அவர் போன்று சிவசிந்தனை உள்ளவர்களாக மக்களும் வாழ்ந்து வருகிறார்கள். அவரின் இரத்த உறவினரான நீ சிவசிந்தனையில்லாமல் உணர்ச்சிகளுக்கு ஆட்பட்டு சிவனை மறந்து சிவநிந்தனை செய்கிறாய். பிறப்பால் வருவதல்லக் குலம் நடத்தையால் வருவது தான் குலம். நீ பிராமணக் குடும்பத்தில் பிறந்தாலும் நடத்தையால் கேவலமான மனிதனாகி விட்டாய். ஒரு பிராமணன் தான் கற்ற மந்திரத்தை மறந்தால் திரும்பவும் குருவிடம் சென்று கற்றுக் கொள்ளலாம். ஆனால் ஒழுக்கம் தவறினால் மீளவும் அதைப் பெற முடியாது. எமது குருக்களைத் தாம் வணங்கும் சிவனாகவே இவ் ஊரார்கள் கருதுகின்றார்கள். அதற்கும் காரணம் அவரது ஒழுக்கம். ஒரு தீயவனைக்கூட தண்டிப்பதோ ஏசுவதையோ பாவம் என்று கருதுபவன் நான் இன்று உனது தகாத நடத்தையால் நான் பாவம் செய்து விட்டேன் என்று கலங்கினார் பொன்னம்பலம்.

கெங்காதரன் நிமிர்ந்து பொன்னம்பலத்தைப் பார்த்தான். பின்பு சுந்தரேஸ்வரக் குருக்களைப் பார்த்தான். மக்களிற் பலர் அவரது பாதங்களைத் தொட்டு வணங்கி கொண்டிருந்தனர். அதைப் பார்க்கக் கெங்காதரனுக்குக் கவலையாக இருந்தது. முதல் முறையாக அவனது ஆத்மா விழித்துக் கொண்டது. வீதியால் அவர் சென்றால் அவருக்குக் கொடுக்கும் மதிப்பை அவன் இதுவரை கண்டும் அக்கறை கொள்ளவில்லை. சிவ சிந்தனை இல்லாததாலும், ஆசைகளுக்கு ஆட்பட்டுப் புலன்களின் உணர்வுகளுக்குக் கட்டுப்பட்டதாலும் அவை பற்றி அவன் இதுவரை சிந்தித்ததில்லை. அன்று ஊர் மக்கள் அனைவரும் கூடி நின்று தன்னை ஓர் அற்பப் புழுவைப் போல பார்ப்பதை அவனால் தாங்கி கொள்ள முடியவில்லை, “அப்பா

உங்களது நடத்தையால் ஊரவர் எவரும் எம்மை மதிப்பதில்லை. அப்படியிருக்க எனது தங்கையை யார் மணப்பார்கள்? அதை யோசித்தாவது திருந்துங்கள்" என்று அவனது மகன் கௌசிகன் கூறியது இடியோசை போல கேட்டது.

"கெங்கா, மனிதன் ஒழுக்கமாக வாழவேண்டும். ஒழுக்கமுள்ள மனதில் தான் சிவன் குடியிருப்பார். நீ சிவசிந்தனை இல்லாது பாதகமான செயல்களில் ஈடுபடுகின்றாய். இதனால் பாவம் தான் சேரும். பல முறை நான் உனக்குப் புத்திமதி கூறியுள்ளேன். தயவு செய்து சிவத்துரோகங்களை கோவிலடியிலாவது செய்யாமல் இரு" என்றார் சுந்ரேஸ்வரக் குருக்கள்.

கெங்காதரனுக்கு முதல் முறையாக அவ் வார்த்தைகள் உறைத்தன. நிமிர்ந்து சுந்ரேஸ்வரக் குருக்களைப் பார்த்தான். உண்மையில் ஊரவர் சொல்வது போலச் சிவனாகவே அவர் தெரிந்தார்.

சிவமறையோர்

**82. திருநெறி யாகிய சித்தசித் தின்றிக்**
**குருநெறி யாலே குருபதஞ் சேர்ந்து**
**கரும நியமாதி கைவிட்டுக் காணுந்**
**துரிய சமாதியாந் தூய்மறை யோர்க்கே.**

"கெங்காதரா, ஆன்மா தனது சிற்றறிவாலும் ஆணவத்தோடு கூடியிருப்பதாலும் அதற்கு சிவநினைவு வராது. அந்த இரு நிலையும் கடந்தால் தான் திருவடி உணர்வுண்டாகும். சிவனைப்பற்றிய எண்ணங்களால் மனம் பூரணம் அடைவதால் சித்தும் அசித்தும் நீங்கிவிடும். அப்போது சிவகுரு அத்தகைய ஆன்மாக்களைத் தேடி

வந்து தனது செயலால் சிவதத்துவத்தை உபதேசிப்பார். அந்த உபதேசத்தை முழுமையான மனச் சுத்தத்துடன் பெறும் ஆன்மாவினது கர்மங்கள் யாவும் பகலில் ஏற்றி வைத்த ஒளியைப் போல அடங்கி விடும். அப்படி அடங்கிய பிராமணன் தான் சிவமறையோன். உனது தந்தையார் சிவநினைவோடு வாழ்ந்த சிவப்பிராமணர். ஆனால் நீ அவருக்கு எதிர் மாறானவனாக இருக்கின்றாய். சுட்டுணர்வுடனும் சிற்றுணர்வோடும் உனது தந்தை எடுத்த முயற்சிகள் வீணாகிவிட்டன. இப்பொழுதும் காலம் கடந்தும் விடவில்லை. அளவில்லாத அன்புடன் ஒரு கணம் சிவனை நினைத்தால் மறுகணம் சிவன் உன்னைத் தேடி வந்து விடுவார். அப்படி வந்து விட்டால் சுட்டுணர்வும், சிற்றுணர்வும் மலங்களும் அகன்று விடும். பின் உனது ஆன்மா முழுவதையும் சிவசிந்தனை நிரப்பி விடும். சிவசிந்தனையால் நிரம்பிய உன்னைத் தேடி குரு வருவார். நீயும் குருவைத் தேடிச் செல்வாய். அதன் பின் எல்லையில்லாத பேரின்பம் உன்னை வந்தடையும். அப்பேரின்பம் வந்தடைந்தால் சிற்றின்ப நாட்டம் இராது. பின் சிவநினைவே இருக்கும். சிவனைத்தவிர வேறுநினைப்பிராது. அத்துடன் பிராமணன் எவ்வேயிலும் சிவநினைவுடன் இருந்து மற்றவர்களைச் சிவபக்தராக்குதல் வேண்டும். அப்படியானவர்கள் தான் சிவபிராமணர்கள்" என்றார் சுந்ரேஸ்வரக் குருக்கள்.

சிவஅந்தணர்

**83. மறையோ ரவரே மறையவ ரானால்**

**மறையோர்தம் வேதாந்த வாய்மையில் தூய்மை**

**குறையோர்தன் மற்றுள்ள கோலா கலமென்று**

**அறிவோர் மறைதெரிந் தந்தண ராமே.**

அருளம்பலத்திற்குச் சிவன் கோவிலில் மிகமிக ஆடம்பரமான யாகம் ஒன்று செய்ய வேண்டுமென்ற எண்ணம் பல நாட்களாக இருந்தது. அதை அவர் சுந்தரேஸ்வரக்குருக்களிடம் கூறிய போது அவர், "அருளம்பலம், ஆகமமுறைப்படி செய்வதுதான் யாகம். அதில் கேளிக்கைகளுக்கு இடமில்லை. சிவமறையோர் சிவனைப் பற்றியும், சிவனை அடையும் வழிமுறைகளைப் பற்றியும், யாகங்களின் மூலம் ஆன்மாக்கள் அடையும் பயனைப் பற்றியும், வினைகள் காரணமாக உயிர்கள் பிறந்திறப்பதை இல்லாமற் செய்வதையுமே நோக்கமாகக் கொண்டிருப்பர். பூசைகள் யாகங்கள் ஆகமமுறைப்படி செய்யாது அலங்காரமுறைப்படி செய்வதால் பேரும் புகழும் உண்டாகுமே தவிரப் புண்ணியம் உண்டாகாது. அது பாசத்தைப் பெருக்கிப் பிறப்புக்களை அதிகரிக்கும். அதனால் அலங்காரமான யாகங்களை நான் செய்யமாட்டேன். நீ கூறியபடி அயற்கிராமப் பிராமணர் யாகங்களைப் புகழ் பெறுவதற்காக மிகமிக அலங்காரமாகப் பெரும் பொருள் செலவிட்டுச் செய்கிறார். அர்த்தமில்லாத செயல்களால் பிரயோசனம் இல்லை. பிரயோசனமில்லாத பொருட்செலவால் பிரச்சினைகள்தான் உருவாகும். யாகம் முடிய இரவில் திருவிழாவைப் பக்தி பூர்வமாகச் செய்தல் வேண்டும். நீ சொன்ன கோவில் பிராமணர் வீதிகளை அலங்கரிக்கச் சொல்கிறார். தெருக்களில் பந்தல் போட்டுக்களியாட்ட நிகழ்வுகளை நடத்தச் சொல்கிறார். பந்தலொன்றில் பணத்திற்காக நடனமாடிய பெண்ணிற்குக் கல்லெறிந்ததால் பெரும்பிரச்சினைகள் உருவாகின. மதுவும் மாமிசமும் தாராளமாகப் பாவிக்கப்படுகிறது. இது பாவம். ஆத்மவிடுதலையை விரும்புபவர்கள் சகலவற்றிலுமுள்ள பற்றுக்களை நீக்கிவிட்டுப் பற்றில்லாத சிவன் மீது பற்றுக்கொள்ளும்படி கூறுகின்றனர். களியாட்டங்களால் சிவன் மீதுள்ள பற்றுத்தானாக விலகிக்

களியாட்டங்கள் மீது சென்றுவிடும். கோவிலில் யாகம் செய்தால் கோவிலடி புனிதப்படல் வேண்டும். யாகத்தில் கலந்து கொள்பவர்களின் மனம் தூய்மைப்படல் வேண்டும். களியாட்டங்களை வேறுஇடங்களில் வையுங்கள். யாகங்களோடு இணைக்காதீர்கள். நீ விரும்பியபடி நான் செயற்படமாட்டேன். ஆகமமுறைப்படிதான் செயற்படுவேன்'' என்றார் சுந்தரேஸ்வரக்குருக்கள்.

யாக விதி

**84. அந்தண்மை பூண்ட அருமறை யந்தத்துச்**
**சிந்தைசெய் அந்தணர் சேருஞ் செழும்புவி**
**நந்துதல் இல்லை நரபதி நன்றாகும்**
**அந்தியுஞ் சந்தியும் ஆகுதி பண்ணுமே.**

சுந்தரேஸ்வரக் குருக்கள் கூறியது அருளம்பலத்திற்குப் பிடிக்கவில்லை. அதனால் அவனுக்குச் சுந்தரேஸ்வரக் குருக்கள் மீது கோபம் வந்தது. அதை வெளிக்காட்டாமல் கதிரேசனிடஞ் சென்று கூறினான், ''சுந்தரேஸ்வரர்தான் ஒரு புதுமையான பூசை செய்கிறார். கேட்டால் சிவாகமங்கள் கூறுவதைத்தான் நான் செய்கிறேன். ஆடம்பரமும் அலங்காரமும் சிவபூசைக்கு ஆகாதென்கிறார். எனக்கு மிகமிக ஆடம்பரமாக யாகம் செய்ய வேண்டும் என்ற ஆசையிருக்கு. வேறுஊர்களில் மிகவும் பொருட்செலவு செய்து மிகமிக ஆடம்பரமாக யாகத்தைச் செய்கின்றனர். அவர்களும் ஆகமத்தில் கூறியபடிதானே செய்கின்றனர்'' கோபப்பட்டார் அருளம்பலம்.

அருளம்பலம் கூறியவற்றை அமைதியாகக் கேட்ட கதிரேசன் சொன்னார், ''யாகம் செய்வதற்கென்று விதிமுறைகள் உண்டு.

அந்தவிதிகளையெல்லாம் அறிந்தவர் சுந்தரேஸ்வரக்குருக்கள். சாதாரணவழிபாடுகளைக்கூட ஆடம்பரமும் அலங்காரமும் கெடுக்கும். ஆத்மஈடேற்றத்திற்காகச் செய்யும் யாகத்தில் அலங்கார நிகழ்வுகள் நிகழ்த்தக் கூடாது. அது கண்களுக்குக் குளிர்ச்சியாகவும், மனதுக்கு மகிழ்ச்சியாகவும் இருந்து பற்றுக்களை உண்டுபண்ணிக் கடவுளை மறக்கச் செய்யும். சில அந்தணர்கள் தாம் புகழ்பெற வேண்டுமென்ற நோக்கோடும் பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற நோக்கோடும் யாகங்களைச் செய்கிறார்கள். உயிர்களைக் கொல்லக் கூடாதென்று சைவசித்தாந்த நூல்கள் கூறுகின்றன. ஆனால் சிலர் பூசைகளில் பலி கொடுக்கின்றனர். இதனால் தம்மைப் பிடித்த பேய் பிசாசுகள் செய்வினை சூனியங்கள் அகலும் என்கின்றனர். இதில் எனக்கு நம்பிக்கையில்லை. திருவைந்தெழுத்தைவிடச் சக்தியான மந்திரமெதுவும் உலகில் இல்லை. திருவைந்தெழுத்தையோதி நீறு அணிந்தால் எல்லாப் பிசாசும் வெருண்டோடிவிடும். சிவவழிபாட்டை முறைப்படி செய்யும் அந்தணர்கள் இயல்பாகவே சிவத்தன்மையுடையோராவர். இவர்கள் ஆகமத்தவராவர். இவர்கள் ஆகமத்தில் இல்லாத கிரியைகளைச் செய்யமாட்டார்கள். சுந்தரேஸ்வரக்குருக்கள் சகலதும் அறிந்தவர். அவர் சொல்வதுதான் உண்மை. நீ அதைக்கேளாவிட்டால் உனக்குப்பாவம்தான் உண்டாகும்'' என்றார் கதிரேசன்.

## 6. ஆகுதி வேட்டல்

பாலாபிசேகம்

**85. வசையில் விழுப்பொருள் வானும் நிலனுந்**

**திசையுந் திசைபெறு தேவர் குழாமும்**

**விசையம் பெருகிய வேத முதலாம்**

**அசைவிலா அந்தணர் ஆகுதி வேட்கிலே.**

அன்று வெள்ளிக் கிழமை மாலை நேரப் பூசை முடிந்த பின் சுந்ரேஸ்வரக் குருக்கள் விபூதி, பிரசாதங்களை வழங்கினார். விபூதியையும் பிரசாதங்களையும் வாங்கிய பின்பு மக்கள் குருவின் பாதங்களை தொட்டு வணங்கிச் செல்வது வழக்கம். ஆனால் அவர்கள் செல்லாது நின்றனர். குருக்கள் நிமிர்ந்து மக்களைப் பார்த்தார். அவர்களின் முகங்கள் வாடியிருந்தன. சிலரின் கண்கள் கலங்கியிருந்தன. அதனால் ஊரில் ஏதோ விபரீதம் நிகழ்ந்து விட்டது என்று எண்ணிய குருக்கள் நிமிர்ந்து ஒவ்வொருவரினதும் முகத்தை அன்புடன் பார்த்தார்.

“எம்மை வாழவைக்கும் சிவனே, இவ்வூரவர்கள் மழையை நம்பியே உழவுத்தொழிலைச் செய்கிறார்கள். கைவசம் இருந்த நெல்லை விதைத்து விட்டோம். விதைத்த பின் மழை பெய்யவில்லை. அந்தப் பயிர் கருக ஆரம்பித்து விட்டது. இன்னும் ஒரு வாரத்துக்குள் மழை பெய்யாவிட்டால் பயிர்கள் அழிந்து விடும். அதனால் அடுத்த வருடம் பஞ்சம் ஏற்படும்” கதிரவேலு என்ற விவசாயி உணர்ச்சி மயமாக கூறிக்கொண்டு இருந்தான். அதற்கு மேல் அவனால் பேச முடியவில்லை. விம்மி விம்மி சில கணங்கள் அழுதான். பின் சொன்னான், “எனக்கு ஆறு பிள்ளைகள். பெற்றோரும் என்னுடன் இருக்கிறார்கள். மழை பெய்யாததால் அடுத்த வருடம் முழுவதும் எனது குடும்பத்தவர்கள் அனைவரும் பட்டினி கிடைக்க வேண்டியது தான்.” குருக்கள் “சிவனே” என்றார்.

இன்னொருவன் சொன்னான், “குருக்கள் ஐந்து வருடங்களுக்கு முன்பு இப்படி மழை பெய்யாத போது நீங்கள் விவசாயிகளை

அழைத்துச் சிவனுக்குப் பாலாபிசேகம் செய்தால் தான் வானிரங்கும் என்றும் எண்திசைப் பாலகர்களும் மனங்குளிர்ந்து அருள் செய்வார்கள் என்றும் சொன்னீர்கள். நாமும் அதன்படி செய்தோம். போதும் போதுமென மழை பெய்தது. அதனால் குற்றங்கள் இல்லாத சிவமறையோன் ஆன நீங்கள் சிவனுக்கு பாலாபிசேகம் செய்யுங்கள். நாம் பால் கொண்டு வந்து தருகின்றோம்.''

குருக்கள் சிரித்தார் பின்பு சொன்னார், ''நாலைந்து தினங்களுக்கு முன்பு இந்த யோசனை எனக்கு தோன்றியது.எமது சிவன் முழுமனதோடு விவசாயிகளின் துயரங்களைப் போக்குவான். அதை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்களா? என்று யோசித்தேன். உணர்ந்து விட்டீர்கள். அதுவே போதும் அபிசேகம் தேவையில்லை. இருப்பினும் அபிசேகம் செய்வதன் மூலம் எட்டுத் திக்குப் பாலகர்களும் மகிழ்வடைவர். சிவன் ஆனந்தம் அடைவான். அதனால் பாலாபிசேகம் செய்வோம். நாளை மறுதினம் எல்லோரும் பால், தயிர், இளநீர், பூக்கள் கொண்டு வாருங்கள். வேறெதுவும் கொண்டு வரக்கூடாது. முக்கியமாகத் தட்சணை பெறமாட்டேன்'' என்றார்.

அதைக் கேட்டு மக்கள் உறைந்து போயின. குற்றங்கள் இல்லாத சிவனுக்கு, குற்றங்கள் இல்லாத சிவமறையோனான குருக்கள் பலனை எதிர்பார்காது அபிசேகம் செய்வார் என்று அவர்களுக்குத் தெரியும்.

போலி வணக்கம்

**86. ஆகுதி வேட்கும் அருமறை அந்தணர்**

**போகதி நாடிப் புறங்கொடுத் துண்ணுவர்**

**தாம்விதி வேண்டித் தலைப்பட்டு மெய்ந்நெறி**

**தாமறி வாலே தலைப்பட்ட வாறே**

சுந்தரேஸ்வரக் குருக்கள் ஓமகுண்டலத்தின் அருகே வந்து நெய்சொரியத் தொடங்கினால் அவர் தன்னையும் தன்னைச் சுற்றி நடப்பவை அனைத்தையும் மறந்து சிவநினைவாகி விடுவார். அவரது மனம் அடங்கி, சிவனது நினைவுகளில் அமிழ்ந்திருக்கும். வாய் அச்சரம் பிழையாது மந்திரங்களை விதிமுறைப்படி ஓதியபடியிருக்கும். உடல் பொலிவடைந்து பளபளக்கும். வலது கை நெய்யையும் பூக்களையும் ஏனைய பூசைப்பொருட்களையும் ஓமகுண்டத்தில் சொரிந்து கொண்டிருக்கும். அவர் செய்யும் பூசையின் அழகைப் பார்ப்பதற்கு ஊரவர்களும் அயலூரவர்களும் கோவிலில் குழுமியிருப்பார்கள். ஓமகுண்டலத்தின் முன் பூசைப்பொருட்கள் குவிந்திருந்தன. பிராமணர்கள் பலர் அவருக்கு உதவி செய்து கொண்டு இருந்தனர். ஓமப்புகை கோவில் முழுவதும் பரவி சுகந்தமான நறுமணத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது.

குருக்கள் தேவைக்கதிகமாகத் தட்சணை பெறமாட்டார். தனது குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை மட்டும் பெற்றுக் கொள்வார். மிகுதியானவற்றைக் கொண்டு வருவோரிடம் திருப்பி ஒப்படைத்து விடுவார்.

அடுத்த மாதம் குருக்களின் மகள் கௌசல்யாவுக்குத் திருமணம் நடைபெறயிருந்தது. அதனால் கோவில் தலைவர் பெருந்தொகையான பணத்தை அர்ச்சனைத் தட்டில் வைத்துக் கொண்டு வந்து குருக்களை வணங்கிவிட்டு அவரின் பாதங்களில் வைத்தார். குருக்கள் சில நிமிடங்கள் அதைப் பார்த்துக் கொண்டு நின்றார். பின், “திருமாறா” என்றழைத்தார். திருமாறன் குருக்களின் அருகில் வந்து அவரை வணங்கிவிட்டு அமைதியாக நின்றான், “மனிதனுக்கு ஒழுக்கம் உயிரைவிடப் பெரிது. நீ சிவனது கோவில் தலைவனாக இருக்கிறாய் சிவனை நம்பியவர்கள் ஒரு போதும் கெட்டதில்லை. வாயால் பஞ்சாட்சர

மந்திரத்தைச் சொல்லிக் கொண்டு திருத்தொண்டு புரிவதில் பயனில்லை. நீ நடராசாவின் பெண்ணைக் காதலித்து விட்டு ஏமாற்றியுள்ளாய். அதற்கு காரணம் நடராசாவிடம் சீதனமாகக் கொடுக்கப் பொருள் இல்லாமையே. சிவனை வணங்குவோன் ஒழுக்கமாக வாழாவிட்டால் பாவம் தான் வந்து சேரும். நடராசா ஏழை. பாவம் ,பொருள் இல்லாதவன் என்று எல்லோருக்கும் தெரியும், உனக்கும் தெரியும். அப்படித் தெரிந்த நீ கடந்த இரண்டு வருடங்களாக அவளைக் காதலித்து விட்டு ஏமாற்றலாமா…? உனக்குப் பணம் தானே தேவை இந்தாபிடி. கோவிலால் செல்லும் போது அவளை அழைத்துச் செல். அவள் தற்கொலை செய்ய முயற்சி செய்துள்ளாள். பெண்களைப் பொறுத்தவரையில் காதல் புனிதமானது'' என்றார்.

திருமாறன் திகைத்துத் திகிலடைந்து போனான். அவனது தந்தை நடராசா வந்து குருக்களின் பாதங்களைக் கட்டிப்பிடித்து அழுதார், ‘‘குருக்கள் எனது மகன் தவறு செய்யவில்லை. நான் தான் பணஆசையால் அவனை எச்சரித்தேன். அவன் எனக்குப் பயந்து தான் அவளை மறக்க முயன்றான். நீங்கள் நல்ல நாள் பாருங்கள் திருமணத்தை முடிக்கலாம்'' என்றார் நடராசா.

‘‘இவர் தான் உண்மையான சிவப்பிராமணர்'' என்றார் சிவனகோவில் தலைவர்.

துணையணை

**87. அணைதுணை அந்தணர் அங்கியுள் அங்கி**
**அணைதுணை வைத்ததின் உட்பொரு ளான**
**இணைதுணை யாயத் தியங்கும் பொழுது**

**துணையணை யாயதோர் தூய்நெறி யாமே.**

அன்று வெள்ளிக் கிழமை. மாலை நேரப் பூசை முடிந்ததும் சுந்ரேஸ்வரக் குருக்கள் வெளிமண்டபத்துள் வந்திருந்தார். மக்கள் தமது குறைகளை சுந்தரேஸ்வரக் குருக்களிடம் கூறினார்கள். அவர் சிவனிடம் கூறி தமது குறைகளைத் தீர்த்து வைப்பார் என்று அங்கு குழுமியிருந்த மக்கள் நம்பினர்.

கோவில் தலைவர் வந்து குருக்களை வணங்கி விட்டு சொன்னார், ‘‘ஐயா, அடுத்த மாதம் கா.பொ.த உயர் தரப் பரீட்சை நடைபெறவுள்ளது. எமது கிராமத்தில் உள்ள மாணவர்கள் அப்பரீட்சையை எடுக்கிறார்கள். வழமையாகப் பரீட்சைக்கு முன்பு மாணவர்கள் அனைவரையும் அழைத்து அவர்கள் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்று நினைத்துச் சிவனுக்கு அபிசேகம் செய்வோம். அதை எப்போ செய்யலாம்?’’

‘‘அடுத்த வெள்ளிக் கிழமை மாலைப் பூசையின் போது செய்வோம்’’ என்றார் குருக்கள்.

‘‘சரி நான் சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் சொல்கிறேன். நீங்கள் மக்களின் குறைகளை பூர்த்தி செய்யுங்கள்’’ என்று கூறிவிட்டுச் சென்றார் கோவில் தலைவர்.

‘‘ஐயா, எனது மூத்த மகளுக்கு நான்கு நாட்களாகக் காய்ச்சல். மருந்தெடுத்தும் சுகமாகவில்லை. சிவனை வேண்டி நீறு பூசிவிடுங்கள்’’ என்றார் ஒருவர். அவரின் அருகே அவரது மகள் நின்றிருந்தாள்.

குருக்கள் நீற்றைக் கையில் எடுத்துக் கொண்டு கண்களை மூடினார். வாய் மந்திரங்களை உச்சரிக்க அவரது கை திருநீற்றை

அவளது தலையில் போட்டது. பின் உடலில் போட்டது. பின் வாயைத் திறக்குமாறு கூற அவள் வாயைத் திறந்தாள். வாய்க்குள்த் திருநீற்றைப் போட்டு விட்டு அவள் கையை நீட்டக் குருக்கள் அவளது கையில் நீற்றைக் கொடுத்தார். பின் அவளது இடது கையில் சிவமந்திரம் ஓதப்பட்ட நூலைக் கட்டினார்.

“ஐயா, நான் புதிதாக விவசாயம் தொடங்கப்போகிறேன் தொடங்கலாமா? எப்போ தொடங்கலாம்?” என்று கேட்டான் ஒருவன்.

“குமார், உனக்கு அட்டமத்துச் சனி நடைபெறுகிறது. இவ்வருட இறுதியில் அது முடிவடையும். அடுத்த வருடம் வா...” என்ற பின் அவன் எழுந்து செல்ல இன்னுமொருவர் வந்தமர்ந்தார்.

“எனது வியாபாரத்தில் பங்காளியாகயிருக்கும் கார்த்திகேயனுக்கு இவற்றில் நம்பிக்கையில்லை. சென்ற வருடம் ஒரு வாகனம் வாங்கலாமா? என்று குருக்களைக் கேட்டான். குருக்கள் வாங்க வேண்டாம் என்றார். அவன் அதில் நம்பிக்கை கொள்ளாது பல லட்சம் பெறுமதியான வாகனம் ஒன்றை வாங்கிப் பொருட்களை ஏற்றிக் கொண்டு கொழும்புக்குச் சென்றான். வாகனம் விபத்துக்குள்ளானது. அதனால் பல இலட்சம் ரூபா நட்டம் அடைந்தான். இப்போது நாமிருவரும் தங்க நகை வியாபாரம் செய்ய எண்ணியுள்ளோம். தொழில் தொடங்கும் முன் குருக்களைக் கேட்கச் சொன்னான். குருக்கள் தொடங்கவேண்டாம் என்கிறார். அடுத்த வருடம் தொடங்குவோம்” என்று குமார் தனது நண்பனின் சகோதரனுக்குச் சொன்னான்.

“குருக்கள் தன்னைச் சிவனுக்கு அர்ப்பணித்தவர். அதனால் சிவன் அவருக்கு எல்லாவற்றையும் சொல்வார்” என்றான் நண்பனின் சகோதரன்.

**88. தானே விடும்பற் றிரண்டுந் தரித்திட**

**நானே விடப்படு மேதொன்றை நாடாது**

**பூமேவு நான்முகன் புண்ணிய போகனாய்**

**ஓமேவும் ஓரா குதிஅவி உண்ணவே.**

சுந்தரேஸ்வரக் குருக்கள் வேதங்களையும் ஆகமங்களையும் உபநிடதங்களையும் சைவசித்தாந்தத்தையும் வடமொழியையும் கற்றவர். அதனால் கற்றவர்களும் கற்றுணர்ந்தவர்களும் அவரை நாடி வந்து தமக்குரிய சந்தேகங்களை நீக்கிச் செல்வர். அவர் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் மாலை ஆறு மணி தொடக்கம் இரவு எட்டு மணி வரை அந்தணச் சிறுவர்களுக்கு வடமொழியையும் வேத உபநிடதங்களையும் கற்பிப்பார்.

ஒவ்வொரு திங்கட் கிழமையும் இரவு எட்டு மணி தொடக்கம் இரவு பத்து மணி வரை ஊரவர்களுக்குச் சமயப் பிரசங்கம் செய்வார். கல்வி அறிவில்லாதவர்கள் அவரது சமயப் பிரசங்களைக் கேட்டுச் சமயத்தில் முழுமையான அறிவைப் பெற்றனர். பாடசாலைக்குச் செல்லாத தம்பிராசா என்ற விவசாயி சைவசித்தாந்தத்தில் முழுமையான அறிவைப் பெற்றிருந்தார். அதனால் குருக்கள் அவரைச் சமயப் பிரசங்கம் செய்யுமாறு கூறி, ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும் மாலை நேரப் பூசை முடிந்ததும் பிரசங்கம் செய்யச் சொல்வார். அப்பிரசங்கத்தைக் கேட்கக் கல்வியாளர்கள் பலரும் வருவார்கள்.

அன்று வெள்ளிக் கிழமை மாலை நேரப்பூசை முடிவடைந்ததும் மக்கள் வெளிமண்டபத்தில் கூடியிருந்தனர். தம்பிராசா சில கணங்கள் சிவனைத் தியானித்தார். பின்,

“அன்பான சிவனடியார்களே, சிவனைப் பற்றிப் பூரணமாக அறிந்தவர்கள் நீங்கள். என்றாலும் சிவனின் பெருமைகளைச் சாதாரண மக்களாற் கூறமுடியாது. கூற கூறப் பெருகிக் கொண்டே போகும். அது போலச் சிவனது அருளும் அளப்பரியது. சிவன் மக்களுக்கு அருளையும் வேண்டிய வரங்களையும் அள்ளி வழங்கும் தெய்வங்களுக்கே அருள் புரிபவர். உலகிலுள்ள எந்தத் தெய்வமும் சிவனின் அருளால் தான் உயிர்களுக்கு உதவி செய்கின்றன. சிவனின் உதவி இல்லா விட்டால் ஏனைய தெய்வங்களுக்குச் சக்தி இராது. சிவன் செந்தாமரை மலரில் வீற்றிருந்து படைத்தல் தொழிலைச் செய்யும் பிரம்மாவிற்குப் படைக்கும் சக்தி வழங்கியவன். ஊழிக் காலத்தில் உயிர்கள் யாவும் சிவனுடன் இரண்டறைக் கலக்கும் போதும், உலகிலுள்ள தெய்வங்களும் சிவத்துள்க் கலந்து விடுகின்றன. பின் சிவன் உயிர்களோடு சேர்த்துத் தெய்வங்களையும் படைத்தருள்கின்றான். அத்துடன் சிவனின் அருளாற் தான் உலகமும் ஏனைய தெய்வங்களும் செயற்படுகின்றன. அப்படிப்பட்ட சிவனின் திருவடியை வேறெதையும் எண்ணாது பஞ்சாட்சர மந்திரமான “நமசிவாய” என்ற மந்திரத்தை ஓதுவோர்க்கு நான், எனது, என்ற இருவகைப் பற்றும் நீங்கி விடும். அதனால் அவர்கள் சிவனோடு கலந்து பேரின்ப வாழ்வைப் பெறுவார்கள். அந்தணர்கள் இவ்வாறு செயற்பட்டால் அவர்கள் என்றும் இல்லாத பேரின்பத்தை அடைவார்கள். நான் எனது என்ற பற்றுத் தான் மனிதர்களைத் தீய வழியில் வாழச்செய்கிறது. அதனால் அடியவர்களான அனைவரும் சிவனை முழுமனதுடன் வணங்கிப் பஞ்சாட்சர மந்திரத்தைச் ஜெபியுங்கள். உங்கள் வாழ்வு இன்பமாகும்” என்றார் சுந்தரேஸ்வரக் குருக்கள்.

விளக்கு

**89. நெய்நின் றெரியும் நெடுஞ்சுட ரேசென்று**
**மைநின் றெரியும் வகையறி வார்கட்கு**
**மைநின் றவிழ்தரு மத்தின மாம்என்றுஞ்**
**செய்நின்ற செல்வம் தீயது வாமே.**

திங்கட் கிழமை மாலை கோவில் மண்டபத்தில் சுந்தரேஸ்வரக் குருக்கள் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். மக்கள் எல்லோரும் தம்மை மறந்து அவரது பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தனர். அவர் பேசினால் மக்கள் கேட்டுக் கொண்டே இருப்பார்கள். சபையில் உள்ளவர்களின் மனம் அறிந்து பேசுவதில் வல்லவர் அவர். கேட்பவர்கள் இன்னும் கொஞ்ச நேரம் பேசி இருக்கலாம் என நினைப்பார்கள். கேளாமல் விட்டவர்கள். தம் வாழ்நாளில் நல்ல சில மணி நேரத்தை இழந்து விட்டோம் எனக் கவலைப்படுவார்கள். சிறுவர்களைக் கவர்வதற்காக வேதஉபநிடத தத்துவங்களைச் சிறுவர்களும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும், எல்லோருக்கும் விளங்குகின்ற அருமையான மொழியில் பேசுவார். அதைவிட அத்தத்துவங்களுக்குப் பொருத்தமான கதைகளைத் தானே உருவாக்கிப் பேசுவார். அதனால் கதை கேட்பதற்காகச் சிறுவர்களும் கற்றவர்களும் வந்து அமைதியாக அமர்ந்திருப்பர்.

அன்று அவர் உபநிடதத் தத்துவத்தை விளக்கும் கதையொன்றைக் கூறிக்கொண்டிருந்தார். சபையோர் அவரின் பேச்சில் மயங்கியிருந்தனர். தமக்கு அருகில் யார் இருக்கிறார்கள் என்று கூட அறியாமல் பலர் இருந்தனர். அப்போது, “குருக்கள் ஐயா, என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்” என்று பெருங் குரலில் சொன்னான் மாதவன். அவன் பெரும் பணக்காரன். திமிர்பிடித்தவன். கோவிலில்

நடைபெறும் நிகழ்வுகள் யாவும் தன்னைக் கேட்டபின்பே செய்தல் வேண்டும் என நினைப்பவன். அவனை யாருக்கும் பிடிக்காது. கோவிலில் நிற்கும் பசுக்கள் கூட அவன் நிற்கும் பக்கம் வரமாட்டாது.

சபையோர் வெறுப்புடன் அவனை ஒரு நாயைப் பார்ப்பது போலப் பார்த்தனர். எனினும் அவன் யாரையும் கவனிக்காது சொன்னான், "குருக்கள், நீங்கள் நான் கோவிலடியில் பிரச்சினைப்படும் போதெல்லாம், "மாதவா சிவசிந்தனையில்லாததால் நீ ஆணவமிடுக்குடன் கோவிலில் கலகம் செய்கிறாய். சிவபக்தன் கோவிலடியில் யாராவது தன்னைத் தாக்கினாலும் பேசமாட்டான். ஏன் என்றால் சிவனை நினைத்தவர் வேறு நினைவுகளில் இருந்தால் பாவம் தான் உண்டாகும். நீ குழப்பம் செய்யும் போது சிவனை நினை. நமசிவாய என்ற பஞ்சாட்சர மந்திரத்தை ஓது உனக்குக் கோபம் வராது, பகை வராது" என்றீர்கள். நான் அதை நம்புவதில்லை. ஆனால் அதை ஓதுபவர்கள் சாதுவாக இருப்பதைக் கண்டு நானும் ஓதினேன். இப்போது எனக்கும் கோபம் வருவதில்லை. எல்லாவற்றையும் சிவன் கவனிப்பார் என்ற நினைவு தான் வருகிறது. உலகின் இருளை விளக்குப் போக்குவது போல எனது மனதினில் உள்ள இருளை நமசிவாய என்னும் ஐந்தெழுத்து நீக்கி விட்டது. நீங்கள் ஒரு ஞானி. என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று கூறியவாறு அவரது பாதங்களைத் தொட்டு வணங்கினான். சுந்தரேஸ்வரக் குருக்கள் மகிழ்வுடன் சிரித்தார்.

மருந்தாபவன்

**90. பாழி அகலும் எரியுந் திரிபோலிட்டு**

**ஊழி அகலும் உறுவினை நோய்பல**

**வாழிசெய் தங்கி உதிக்க அவைவிழும்**

**வீழிசெய் தங்கி வினைசுடு மாமே.**

சிவன் கோவிலில் பங்குனி மாதம் திங்கட் கிழமை காலையில் இருந்து மாலை வரை அவ்வூர் மக்கள் பொங்கிப் படைப்பார்கள். அப்போது பறைமேளம், நட்டுவ மேளம், உடுக்குப் போன்றன ஒலிக்கும். கோவிலின் உள்ளே சுந்தரேஸ்வரக் குருக்களின் தலமையில் யாகம் நடைபெறும். பெரிய அகல்விளக்குப் போன்று யாக குண்டலம் அமைத்து அதற்குள் ஆல், அத்தி, அரசு போன்ற மரங்களின் சுள்ளிகளை இட்டு நெய்யும் இட்டு ஓமத் தீ வளர்ப்பார்கள். அன்று காலையிலிருந்து மாலை வரை பல நூறு பிராமணர்கள் மந்திரம் ஓதுவார்கள்.

பங்குனி மாதம் பிறந்து விட்டது. கோவிலின் தலைவரின் வீட்டில் கிராம மக்கள் அனைவரும் கூடியிருந்தனர்.

“ஐயா, பங்குனி மாதம் பிறந்து விட்டது. வழமையாகப் பங்குனி பிறந்ததும் பங்குனிக் கடைசி திங்கள் அன்று செய்யும் யாகத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்குவோம். அயற்கிராமங்களில் அடிக்கடி கொள்ளை நோய்கள் வந்து தாக்கி மக்களைப் பலியெடுக்கிறது. பத்து வருடங்களுக்கு முன் எமது கிராமத்தவர்களுக்கும் கொள்ளை நோய் வந்து மக்கள் சென்ற சென்ற இடங்களில் விழுந்து விழுந்து இறந்து போனார்கள். அதற்கு காரணம் யாகம் செய்யாமயே என்று குருக்கள் கூறித் தனது செலவில் பெரியதொரு யாகம் செய்தார். அதன் பின் கொள்ளை நோய் எதுவும் எமது கிராமத்தைத் தாக்குவதில்லை. அதனால் நாம் ஒவ்வொரு வருடமும் தவறாமல் யாகம் செய்து வருகிறோம். இன்னும் மூன்று வாரத்தில் யாகம் செய்தல் வேண்டும். வழமையை விட இம்முறை சிறப்பாகச் செய்தல் வேண்டும். வேள்வியின் போது எழும் புகையும், வேள்வியின் பயனாக விளைந்த திருவருட்கண் எழும் சூட்டினால் எழும் அருள் கிராமம் எங்கும் பரவி கிராமத்தைப்

புனிதமாக்கும். அதனால் மக்களின் வாழ்வு சிறக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும். அதனால் யாகத்திற்கான ஆயத்தங்களைச் செய்யத் தொடங்க வேண்டும்.''

“அதற்காகத் தானே கூடியிருக்கின்றோம். நாவுக்கரசு கூறுவது போல இம்முறை யாகத்தைச் சிறப்பாக செய்தல் வேண்டும். இப்பொழுது சேர்ந்த பணமே யாகம் செய்யப் போதுமானது. அத்துடன் எமது அயற்கிராமத்து மக்களும் யாகத்தில் பங்கேற்க விரும்புகிறார்கள். சென்ற வருடம் அக்கிராம மக்களிற் பலருக்குச் சின்னம்மை நோய் வந்தது. அதனால் அவர்களும் எம்முடன் சேர விரும்புகிறார்கள்'' என்றார் தலைவர்.

“இது கோவிற் காரியம். அவர்களின் ஊரில் சிவன் கோவில் இல்லை. சிவன் தான் தெய்வங்களுக்கே அருள் புரியும் தெய்வம் என்று அவர்கள் இப்போது தான் உணர்ந்துள்ளனர். அதனால் அவர்களையும் சேர்த்து யாகம் செய்வோம். இது பற்றி குருக்களிடம் கேளுங்கள்'' என்றான் ஒருவன்.

“குருக்கள் சிவமறையோர். அவருக்கு மலபந்தமில்லை. இருவினைகளும் இல்லை. வினைகள் இருந்தால் தான் பற்று, பாசம், அவா என்பன வரும். குருக்கள் மக்களின் நலனுக்காக வாழ்பவர். அத்துடன் சிவன் அகப்புற நோய்களுக்கு மருந்தாபவன் என்பதும் குருக்களுக்குத் தெரியும். இருப்பினும் அவரையும் கேட்போம்'' என்றார் தலைவர்.

கேடு

**91.பெருஞ்செல்வங் கேடென்று முன்னே படைத்த**
**அருஞ் செல்வம் தந்த தலைவனை நாடும்**
**வருஞ்செல்வத் தின்பம் வரவிருந் தெண்ணிப்**
**பருங்செல்வத் தாகுதி வேட்கநின் றாரே.**

அன்று சுந்தரேஸ்வரக் குருக்களின் மூத்த மகளின் திருமணம் சிவன் கோவிலில் நடைபெற்றது. அதை அவர் மிகவும் எளிமையான முறையில் செய்ய விரும்பினார். ஊர் மக்கள் ஒவ்வொருவரும் அதைத் தமது வீட்டுத் திருமண நாள் போல வெகு விமர்சையாகக் கொண்டாட விரும்பினர். ஆனால் குருக்கள் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. “பெருஞ்செல்வம் வினைகளை அதிகரித்துப் பிறப்புக்கு வழிவகுக்கும். திருமணம் என்பது பெரியவர்கள் மனமகிழ்ந்து ஆசீர்வதிக்கப்படுவதே தவிர அலங்கார விழா அல்ல. வாழ்வின் தத்துவங்களை நன்கு புரிந்து கொண்ட இரு சிவநினைவுடைய உள்ளங்கள் இணைந்து வாழ்வின் சகல இன்பங்களையும் சிவனின் அருளால் அனுபவிப்பதற்காக இருவரும் தம்மை இணைத்துக் கொள்ளும் நாளே திருமண நாள் ஆகும். அன்று அந்தணர்கள் சிவனது திருவடிச் செல்வமாகிய சிவஞானப் பேரின்பம் இருவருக்கும் வாழ்நாள் முழுவதும் கிடைக்க வேண்டும் என்று சிவனுக்குப் பற்றற்று வேள்வி செய்து ஆகுதி அளிப்பதே இந் நன்நாளாகும். அதில் கலந்து கொள்வோர் மணமக்களுக்குச் சிவஞானப் பேறுகிடைக்க வேண்டும் என்று பிராத்தனை செய்து ஆசீர்வதிக்க வேண்டுமே தவிர அதை அமர்க்களப்படுத்தி வினைகளை அதிகரிக்கச் செய்யக் கூடாது” என்றார் சுந்தரேஸ்வரக் குருக்கள். அதனால் ஊரவர்கள் சிவவேள்வியைச் சிறப்பாக செய்ய விரும்பினர்.

பெரியதொரு யாககுண்டம் அமைத்து யாகத்திற்கானப் பொருட்கள் அனைத்தையும் குறைவின்றி வாங்கிக் குவித்தனர். திருமணத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்பே அந்தணர்களால் யாகம் தொடங்கப்பட்டுத் திருமணத்தன்று யாகம் பூர்த்தியானது. அதன் பின் சுந்தரேஸ்வரக் குருக்கள் மணமக்களை ஆசீர்வதித்துவிட்டுச் சபையோருக்குச் சொன்னார்.

“அன்பான சிவனடியார்களே, பணம் கேட்டையே தரும். பெரும் பணம் அளவில்லாத ஆசைகளைத் தூண்டிப் பல்வேறு வகையான உணர்வுகளை உண்டாக்கிப் பாவத்தை அதிகரிக்கும். அதனால் அளவுக்கதிகமான பணத்தையோ, பொருட்களையோ தேடக் கூடாதென்பதற்காகவே நான் உங்களிடமிருந்து அன்பளிப்புப் பொருட்களைப் பெற விரும்பவில்லை. முற்பிறவிகளில் செய்து கொண்ட எஞ்சு வினையாகிய சஞ்சிதத்தின்படி வாழ்வினைத் தந்த தலைவனாகிய சிவனையே நல்லோர் நாடுவர். முன்வினையின் பயனால் இப்பிறப்பில் சிவனால் அருளப்பட்ட நல்வாழ்வையும் அதனைத் தந்துதவிய சிவனையுமே நல்லோர் விரும்புவர். அந்தப் பேரின்பம் தொடர்ந்து வரும் பிறவிகளிலும் கிடைப்பதையே நல்லோர் விரும்புதல் வேண்டும். அதனால் தான் நீங்கள் தரவிருந்த பெருஞ்செல்வத்தை நான் ஏற்கவில்லை. திருவடிச் செல்வமான சிவஞானம் உள்ளவர்கள் சிவனைத் தவிர, சிவனருளும் சிவஞானச் செல்வத்தை தவிர வேறெதையும் விரும்பக் கூடாது” என்றார் சுந்தரேஸ்வரக் குருக்கள்.

தலைவன்

**92. ஒண்சுட ரானை உலப்பிலி நாதனை**

**ஒண்சுட ராகிஎன் னுள்ளத் திருக்கின்ற**

**கண்சுட ரோன்உல கேழுங் கடந்தஅத்**

**தண்சுட ரோமத் தலைவனு மாமே.**

“எனது மகளின் திருமணச் சடங்கில் கலந்து சிறப்பித்து, அவர்களை வாழ்த்திய இக் கிராமத்தின் சான்றோர்களே, கிரியைகளைச் செய்யும் சிவமறையோர் தாம் செய்யும் கிரியைகளைப் பற்றி அதைப் பார்ப்போருக்குச் சொல்லல் வேண்டும். பொருள் தெரியாது ஓதப்படும் மந்திரங்களால் ஓதுவோருக்குப் பயனில்லை. அது போல செய்யும் கிரியைகள் எதற்கென செய்யப்படுகின்றன என்று தெரியாதவர்களுக்குப் புண்ணியம் இல்லை. இன்று ஓமகுண்டம் அமைத்து அறவடிவானவனும் எருதின் மீது பவனி வருபவனும் ஏழு உலகங்களையும் கடந்து ஒளிமயமாக நின்றவனுமான சிவபெருமானைத் தலைவராகக் கொண்டே யாகம் செய்தோம். சிவனே ஓமத் தலைவன். அவனைத் தலைவனாகக் கொண்டே சிவமறையோர் யாகம் செய்கின்றனர். இருவரது வாழ்வு இன்று ஒருவரது வாழ்வாகிறது. அந்த இருவரும் சிவனின் தலைமையில் நடைபெற்ற யாகத்தின் வழியாக ஒன்றிணைகின்றனர். சிவன் உலகை ஆழ்பவன். உலக மக்களின் துயரத்தைப் போக்கி இன்பம் அளிப்பவன். அதற்காகத் தான் சிவனின் சந்நிதியில் சிவனைத் தலைவனாகக் கொண்டு யாகம் செய்து ஆணையும் பெண்ணையும் இணைத்து வைக்கின்றனர். இனியவர்கள் சிவனையும் சக்தியையும் போலப் பிரியாது வாழ வேண்டும். சிவன் ஒளிப்பிழம்பாக ஏழு உலகங்களையும் கடந்து நின்றவன். அதனால் அந்த ஏழு உலகங்களிலும் நடைபெறும் அனைத்து விடையங்களையும் அறிந்தவன். அவனை அறியாமல் எதுவும் நடக்காது. அத்துடன் ஒளிர்கின்ற ஒளிகளுக்கெல்லாம் ஒளி கொடுப்பவன். உயிருள்ள உடல்களுக்கெல்லாம் உயிர் கொடுப்பவன். அதனால் தான் சிவமறையோர் அவனைத் தலைவனாகக் கொண்டு யாகம் செய்கின்றனர்.

எந்த யாகமும், அவிப் பொருளும் சிவனை நினைக்காது செய்யப்படுமானால் பயன் தராது'' என்றார் சுந்தரேஸ்வரக் குருக்கள்.

எல்லை கடந்தவன்

**93. ஓமத்துள் அங்கியின் உள்ளுளன் எம்இறை**
**ஈமத்துள் அங்கி இரதங்கொள் வானுளன்**
**வேமத்துள் அங்கி விளைவு வினைக்கடல்**
**கோமத்துள் அங்கி குரைகடல் தானே.**

''ஐந்தெழுத்தால் ஓமத்துள் வளர்கின்ற ஓமத் தீ சிவபெருமான். ஒவ்வொருவருக்கும் இறுதியாகச் செய்யப்படுகின்ற அந்தியேட்டிக் கிரியையில் வளர்க்கப்படும் ஓமத் தீயும் அவனே. மக்களின் நன்மைக்காக அவனைத் தலைவனாகக் கொண்டே யாகம் செய்யப்படுகிறது. அதற்குக் காரணம், மக்களின் வினைகள் கடலைப் போல விரிந்திருக்கும். அவ்வாறு விரிந்திருக்கும் பொல்லாத வினையை அழித்தொழிப்பவன் சிவன். அதற்காகவே அவனைத் தலைவனாகக் கொண்டு சிவமறையோர் யாகம் செய்கின்றனர்'' என்று சுந்தரேஸ்வரக் குருக்கள் கூறிக்கொண்டிருக்கும் போது வாதவூரன் எழுந்து சொன்னான், ''ஐயா, எனக்கு யாகம், பூசை, கிரியைகள் என்பவற்றில் நம்பிக்கையில்லை. வேள்வித் தீயை வளர்த்து மக்களுக்குத் தேவையான பொருட்களை அதனுள் போட்டு எரிக்கிறார்கள் என்றே நான் நினைத்தேன். இன்று தான் அதன் உண்மைத் தன்மையைப் புரிந்து கொண்டேன். ஒவ்வொரு கிரியையும் ஏன் செய்யப்படுகின்றன என்பதை முதலில் சிவமறையோர் அறிந்து கொள்ள வேண்டும். பின் அது பற்றிய விளக்கங்களை முழுமையாக மக்களுக்குத் தெரியப்படுத்துதல்

வேண்டும். அப்படிச் செய்தால் தான் மக்கள் தாம் பிறந்ததன் பயனை அடைவார்கள். எமது மக்களிற் பலருக்குச் சிவனைப் பற்றித் தெரியாது. எமது குருக்களின் விளக்கம் எம்மை விழிப்படையச் செய்கிறது'' என்றார்.

தேவையில்லை

**94. அங்கி நிறுத்தும் அருந்தவர் ஆரணத்து**
**அங்கி இருக்கும் வகையருள் செய்தவர்**
**எங்கும் நிறுத்தி இளைப்பப் பெரும்பதி**
**பொங்கி நிறுத்தும் புகழது வாமே.**

''சிவனடியார்களே, உலகின் மெய்ப்பொருளாக விளங்குபவன் சிவபெருமான். அதனால் தான் வேள்வித் தீயை மெய்ப்பொருள் என்கின்றனர். மெய்ப்பொருளான சிவபெருமான் வேள்வியின் தீயாக இருப்பதால் தான் வேள்வித் தீயான பயன் கிடைக்கின்றது. அசுரர்கள் அதனால் தான் வேள்வியை அழிக்கின்றனர். முனிவர்கள் மூட்டும் வேள்வித் தீயை அழித்தால் சிவன் அழிந்து விடுவான் என நினைக்கிறார்கள். தக்கன் யாகம் செய்த போது தக்கனும், யாகம் செய்த முனிவர்களும் வேள்வி செய்யும் இடத்தில் வேள்வித் தீயாக ஒளிரும் தீச்சுவாலையைச் சிவன் என அறியவில்லை. அந்த இடத்தில் இருந்த சிவசக்தியான உமாதேவியார் அத்தீயின் வடிவம் சிவனென உணர்ந்து அதில் குதித்துச் சிவனுடன் கலந்து கொண்டார். ஓமகுண்டத்தில் எழுந்த அக்கினி அணைந்தது. முக்கண்ணன் என்று சொல்லப்படும் சிவனின் நெற்றிக் கண்ணில் இருந்து தோன்றிய நெருப்புத் தான் மன்மதனையும் தக்கனின் யாகத்தையும் அழித்தது. எனவே யாகத்தீயைக் காண்போர் சிவனைக் காண்கின்றனர்'' என்றார் சுந்தரேஸ்வரக் குருக்கள்.

# 7. அரசாட்சி முறை

காலன்மேலானவன்

**95. கல்லா அரசனுங் காலனும் நேரொப்பர்**
**கல்லா அரசனிற் காலன் மிகநல்லன்**
**கல்லா அரசன் அறம்ஓரான் கொல்லென்பான்**
**நல்லாரைக் காலன் நணுகநில் லானே.**

நாகையூரை மணிமாறன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் கடவுளை மதிப்பதில்லை. கோவில்களுக்கு மானியம் வழங்குவதில்லை. நீதி நியாயம் பார்ப்பதில்லை. பெரியவர்களை மதிப்பதில்லை. தீயவர்களுடன் சேர்ந்து தீமையான செயல்களையே செய்து வந்தான். இதனால் நாட்டு மக்கள் சொல்லெனாத் துன்பங்களை அனுபவித்து வந்தனர். முதலமைச்சர் அரசனின் சொற்படி நடப்பார். அரசன் ஒரு தீமையைச் செய்தால் முதலமைச்சர் பத்து தீமைகளை அரசனைக் கொண்டு செய்விப்பார். இதனால் முதலமைச்சருக்கே எல்லோரும் பயந்தனர். முதலமைச்சர் தனக்கு வேண்டாதவர்களைத் தேசத்துரோகிகள் என்று அரசனுக்குக் கூற அரசன் முதலமைச்சரின் வார்த்தைகளை நம்பிச் சம்பந்தப்பட்டவர்களுக்கு மரணதண்டனை வழங்குவான்.

இந்நிலை மாறவேண்டும் என நினைத்து மக்கள் நாகையூர் சிவன் கோவிலில் பூசை செய்வார்கள். அன்று ஊர்ப் பெரியவரான முருகையன் என்ற பெரியவர் முதலமைச்சரைப் பற்றித் துணிந்து அரசனிடம் கூறிவிட்டார். அரசன் நம்பாது முருகையன் கூறியனவற்றை முதலமைச்சரிடம் கூறி அதற்கு என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான். ஏற்கனவே முருகையன் மீது பகை கொண்டிருந்த

முதலமைச்சர் முருகையனை ஒரு கண்ணாடி கூண்டில் அடைத்து வைத்து அதனுள் கொடிய நாக பாம்பொன்றை விட்டு விடும்படி கூறினார்.

முதலமைச்சரின் வேண்டுகோளின்படி முருகையனைக் கண்ணாடிக் கூண்டில் அடைத்து விட்டு கொடிய நாகபாம்பொன்றைக் கண்ணாடிக் கூட்டுள் அரசன் விடச்சொன்னான். ஊரவர்கள் சிவன் கோவிலுக்குச் சென்று சிவனைப் பிராத்தித்தனர், “சிவனே, காலன் நல்லவன். அவன் விதி முடியுமுன் உயிர்களைக் கவரமாட்டான். கல்லாத அரசன் தான் கொடியவன். அவன் நன்மை தீமைகளை ஆராயமாட்டான். நல்லவர்களைக் கெட்டவர்களாக கருதுவான். கடவுளை மதிக்க மாட்டான். அதனால் காலனைத் தீயனவற்றை செய்ய அனுமதிக்காதே. ஒரு வேளை முருகையனின் ஆயுட்காலம் முடிவடைந்தாலும் காலனைக் கவரவிடாதே” என்று வழிபட்டனர்.

கண்ணாடிக் கூட்டினுள்ச் சிவனை நினைத்தபடியிருந்தான் முருகையன். கொடிய விசமுள்ள நாகபாம்பு கண்ணாடிக் கூண்டில் ஒரு கரையில் சுருண்டுபடுத்திருந்தது. விடியக் காலையில்விட்ட பாம்பு இரவாகியும் அசையாது கிடந்தமையினால் கோபம் கொண்ட அரசன் கண்ணாடிக் கூட்டுக்குள்ச் சென்று பாம்பைக் காலால் உதைத்தான். செத்தது போலக் கிடந்த பாம்பு சீறி எழுந்து அரசனின் காலில் கொத்தியது. அது கொடிய விசப்பாம்பாகையால் அரசன் கண்ணாடிக் கூண்டுக்குள்ளேயே விழுந்து இறந்தான்.

“கொடிய கல்லாத அரசனை விடக்காலன் இரக்கமானவன், நல்லவன், நீதி நெறி தவறாதவன்” என முருகையன் நினைத்தான்.

மக்களை அறியாத மன்னன்

**96.நாள்தோறும் மன்னவன் நாட்டில் தவநெறி**
**நாள்தோறும் நாடி யவன்நெறி நாடானேல்**
**நாள்தோறும் நாடு கெடுமூட நண்ணுமால்**
**நாள்தோறும் செல்வம் நரபதி குன்றுமே.**

நாகையூர் மன்னன் மணிமாறன் இறந்ததும், அவனது தம்பி வேல்மாறன் அரசனானான். வேல்மாறனுக்கு மணிமாறனின் போக்குப் பிடிப்பதில்லை. பலமுறை அவன் புத்திமதிகள் கூறிய போதும் மணிமாறன் கேட்கவில்லை. மணிமாறன் முதலமைச்சருடன் சேர்ந்து தீமைகள் பலவற்றை மக்களுக்குச் செய்து வந்தான். வேல்மாறனின் போக்கினால் சினம் கொண்ட மணிமாறன் வேல்மாறனைச் சிறையில் அடைக்க முயன்றான். அதை அறிந்த வேல்மாறன் தப்பி சென்றுவிட்டான். மணிமாறன் இறந்ததும் மறைந்து வாழ்ந்த வேல் மாறன் அரண்மனைக்கு வந்த போது மக்களும் படைவீரர்களும் ஒன்று சேர்ந்து வேல்மாறனை அரசனாக்கினர். வேல்மாறன் நீதியானவன். தன்னைப்போல மக்களை நேசிப்பவன். ஒழுக்கமுள்ளவன். அதனால் அவன் முதலமைச்சரையும் அவரோடு சேர்ந்து நாட்டுக்குத் தீங்கிளைத்தவர்களையும் கைது செய்து சிறையில் அடைத்தான்.

அதன் பின் ஊரில் உள்ள பெரியவர்களையும், அறிஞர்களையும், மந்திரி, பிரதானிகளையும் அழைத்துச் சொன்னான், ‘‘அன்பான பெரியோர்களே, மந்திரி பிரதானிகளே, அமைச்சர்களே, நாட்டில் தினமும் என்ன நடைபெறுகின்றது என்று மன்னன் அறிந்து கொள்ளல் வேண்டும் அதற்காக மன்னன் பெரியவர்களைத் தினமும் சந்தித்தல் வேண்டும். கோவில்களில் விதிமுறைப்படி பூசைகள் நடைபெறுகின்றனவா என்றும்,

பாடசாலைகளில் கல்வி சரியான முறையில் போதிக்கப்படுகின்றனவா என்றும், மக்களுக்குப் பொருட்கள் யாவும் உரிய முறையில் கிடைக்கின்றனவா என்றும் அறிதல் வேண்டும். இப்போது நான் ஒவ்வொரு துறைக்கும் பொறுப்பான அதிகாரிகளை நியமித்துள்ளேன். அவர்கள் அன்றன்று நடைபெறும் சம்பவங்களை உடனுக்குடன் எனக்குத் தெரியப்படுத்த வேண்டும். நான் தினமும் இவற்றை எல்லாம் கவனிப்பேன். முன்னய அரசர் இவற்றை எல்லாம் நேரடியாகக் கவனிக்காது தீயவர்களின் பேச்சைக் கேட்டு நடந்ததால் தான் நாட்டின் செல்வம் அற்றுப் போனது. பெரியவர்களின் மனதை புண்படுத்தியமையால் தான் கேடுகள் யாவும் நடை பெற்றன. வறுமை, நோய், விபச்சாரம் என்பன பெருகியமைக்குக் காரணம் நாட்டில் என்ன நடைபெறுகிறதென்று மன்னன் தினமும் அறியாதிருந்தது தான். நான் தினமும் இவற்றை ஆராய்வேன். அதிகாரிகளும் மக்களும் இதைத் தெரிந்து கொள்ளல் வேண்டும். நாளையில் இருந்து இவற்றிற்கெல்லாம் தண்டனை வழங்கப்படும்'' என்றான் வேல்மாறன்.

அறியாத மன்னன்

**97. வேடநெறி நில்லார் வேடம்பூண் டென்பயன்**
**வேடநெறி நிற்போர் வேடம்மெய் வேடமே**
**வேடநெறி நில்லார் தம்மை விறல்வேந்தன்**
**வேடநெறி செய்தால் வீடது வாகுமோ**

அன்று அரசபை கூடியபோது அரசனின் கட்டளைப்படி துறவிகளாக வேடமிட்டு மக்களை ஏமாற்றி வாழ்ந்த பல போலித் துறவிகளைப் படைவீரர்கள் கைது செய்து சபையில் நிறுத்தியிருந்தனர்.

அவர்களைப் பார்த்து கோபம் கொண்ட வேல்மாறன் சொன்னான், "ஒருவன் தவக் கோலம் கொள்வதனால் அவன் ஒழுக்க சீலனாக இருத்தல் வேண்டும். மக்களின் உண்மையான இன்பத்திற்காக அவன் தன்னை அர்ப்பணிக்க வேண்டும். அதனால் தான் உரிய பயன் கிடைக்கும். நீங்கள் எல்லோரும் போலிவேடம் தரித்து மக்களை ஏமாற்றுகிறீர்கள். மந்திரித்த தாயத்தை கட்டிவிடுகிறீர்கள், வசியம் செய்கிறீர்கள். ஒருவனைக் கெடுக்கச் செய்வினை செய்கிறீர்கள். இவற்றையெல்லாம் பொன்னும் பொருளும் வாங்கிக் கொண்டு செய்கிறீர்கள். உங்களை நம்பிய மக்கள் பலர் பைத்தியக்காரர்களாகிவிட்டனர். ஒருவனை இன்னொருவன் கெடுக்க முடியாது. ஒருவனுக்கு உதவிகள் செய்து அவனை உயர்த்த முடியுமே தவிரக் கெடுக்க முடியாது. நீங்கள் ஒருவர் மீதொருவர் பகைகொள்ள வைத்துப் பணம் சம்பாதிக்கிறீர்கள்."

"மந்திரத்தால் மாங்காயை விழுத்த முடியாது. உங்களின் பொய்யான வார்த்தைகளை மெய்யென மக்கள் நம்பித் தமது தொழில்களைக் கைவிட்டு பைத்தியகாரர்களாக அலைகின்றனர். இதனால் நாட்டிற்குப் பெருங்கேடுகள் வந்துள்ளன. அதனால் இன்றிலிருந்து போலிவேட நபர்கள் உண்மையான துறவிகளாகுங்கள். இல்லாவிட்டால் வேடத்தைக் கலைத்து விட்டுவேறு தொழில் பாருங்கள். இல்லாவிட்டால் பெருந்தண்டனைகள் பெறவேண்டிவரும். நாட்டின் நலன் கருதி எந்த நடவடிக்கையும் எடுக்கத் தயங்கமாட்டேன். உண்மையான தவசிகளால் நாட்டிற்குப் பெரும் நன்மைகள் உண்டாகும். அவர்களால் நாட்டு மக்கள் பேரின்பம் அடைவார்கள். சிவசிந்தனைமிக்க மெய்யுணர்வு பெற்ற தவசிகளால் தான் மழையே பெய்கிறது." என்றான் வேல்மாறன்.

போலியானவர்கள்

**98. மூடங் கெடாதோர் சிகைநூல் முதற்கொள்ளில்**
**வாடும் புலியும் பெருவாழ்வு மன்னனும்**
**பீடொன் றிலனாகும் ஆதலாற் பேர்த்துணர்ந்து**
**ஆடம் பரநூற் சிகையறுத் தால்நன்றே.**

அன்று போர்வீரர்கள், உச்சிக்குடும்பியணிந்து பூநூல் போட்டு மக்களை ஏமாற்றிப் பெரும் பொருள் சம்பாதித்து மிகவும் ஆடம்பரமாக வாழ்ந்து வந்த நடேசன் என்பவனையும் அவனது சீடர்களையும் கைது செய்து வந்து மன்னன் முன் நிறுத்தினர்.

“அரசே, இவன் போலிவேடமிட்டு மக்களை நன்கு திட்டமிட்டு ஏமாற்றிப் பெரும் பொருள் சம்பாதித்துள்ளான். அவர்கள் இவனது போலிவேடமிட்டு ஊருக்குள் சென்று ஒவ்வொருவரைப் பற்றியும் அறிவார்கள். பின் தாம் அறிந்து வந்ததை நாடேசனுக்குக் கூறுவார்கள். நடேசன் அவர்களை அழைத்துத் தனது சீடர்கள் கூறியவற்றைக் கூறச் சம்பந்தப்பட்டவர்கள் நம்பி அவன் சொற்படி நடப்பார்கள். இவனால் அழிந்து போனவர்கள் பலர். இவன் முன்னைய அரசனுடன் நட்பு வைத்திருந்தான். அதனால் மக்கள் பயந்தனர். அதனால் நம்பிய எல்லோரும் தமது பொருட்களையும் நிலபுலங்களையும் இழந்துவிட்டனர். இது நாட்டிற்குப் பெருங்கேடு மன்னா.” என்றான் போர்வீரன்.

அப்போது சபைக்கு வந்த ஆரூரன் என்பவன் சொன்னான், “அரசே, எனது வயலில் பெரும் புதையல் உண்டென்றும் அதையெடுக்க ஆயிரம் பவுண் தரவேண்டும் என்றும், புதையலாகக் கோடிக்கணக்கான பவுணைப் பெறலாம் என்றும் சொன்னான். அதை நம்பி நான் என்னிடம்

உள்ள பொருட்களையும் நண்பர்கள், இனத்தவர்களிடமிருந்தும் பெருந்தொகையான பொருட்களை பெற்றுக் கொடுத்தேன். பின் புதையலை எடுக்க வயல் நிலத்தைத் தோண்டினோம். அதற்குள் எதுவுமில்லை. அவனைக் கேட்டால் நரபலி கொடுக்க வேண்டும் என்கிறான்'' என்று அழுதான். வேல்மாறன் சபைக்கு வந்திருந்த பலரை விசாரித்துப் பார்த்தான். ஒவ்வொருவரும் தம்பொருட்களை இழந்த வரலாற்றைக் கூறினர்.

சிவகுமார் என்பவன் சொன்னான், ''அரசே, எனது மகளுக்கு வயது வந்தும் திருமணம் ஆகவில்லை. நடேசன் பூசை செய்தால் திருமணம் ஆகும் என்று கூறிப் பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை வாங்கிப் பூசை செய்தான். பூசை நடந்து மூன்று வருடங்கள் ஆகியும் திருமணம் நடைபெறவில்லை.''

சபைக்கு வந்தோர் சொன்னதைக் கேட்டு ஆச்சரியம் அடைந்த மன்னன் சொன்னான், ''இனிமேல் நடேசனை நாட்டில் நடமாடவிடக் கூடாது. அவனது உச்சிக் குடும்பியையும் பூநூலையும் அகற்றிவிட்டுச் சிறையில் அடையுங்கள். அவனது சொத்தை அரசுடமையாக்குங்கள். அதைப் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுங்கள். இனியாராவது போலிவேடம் இட்டு மக்களை ஏமாற்றினால் தகுந்த தண்டனை அளிப்பேன்'' என்றான்.

சிவமறையோர் பணி

**99. ஞானமி லாதார் சடைசிகை நூல்நண்ணி**
**ஞானிகள் போல நடிக்கின்ற வர்தம்மை**
**ஞானிக ளாலே நரபதி சோதித்து**

**ஞானமுண் டாக்குதல் நலமாகும் நாட்டிற்கே.**

அன்று வேல்மாறன் ஓய்வெடுப்பதற்காக அந்தப்புறத்திற்குச் சென்றிருந்தான். பல நாட்களாக நாட்டுப் பிரச்சினைகளால் அரசியை மகிழ்ச்சிப்படுத்த முடியாததால் அன்று அவன் அரசியுடன் முழுமையாகக் களிக்க விரும்பினான். இது தெரியாத அரண்மனையின் மூத்த சிவமறையோரான ஜெகதீஸ்வரக் குருக்கள் வந்திருந்தார், 'அவர் எந்தவேளை என்னை சந்திக்க வந்திருந்தாலும் காரணம் கேட்காது என்னை சந்திக்க வழிவகை செய்தல் வேண்டும்' என்று வேல்மாறன் கட்டளையிட்டிருந்தான். எனவே முதலமைச்சர் தானே எழுந்து மன்னரைச் சந்திக்கச் சென்றிருந்தார்.

சிறிது நேரத்தில் முதலமைச்சரும் வேல்மாறனும் சபைக்கு வந்தனர். வேல்மாறன் அவரைப் பணிந்தான், "மன்னா, நாட்டில் போலிவேடதாரிகள் அதிகரித்து விட்டனர். மக்கள் சிவனிடத்தில் பெரும் நம்பிக்கை வைத்திருப்பதையறிந்து சிலர் பொருள் சம்பாதிப்பதற்காக மக்களை ஏமாற்றி வருகின்றனர். இது நாட்டிற்கு நல்லதல்ல. அத்துடன் சமயத்திற்கும் நல்லதல்ல. சிவன் தன்னை முழுமனதுடன் வணங்குபவர்களுக்கு அவர்கள் கேட்டவற்றையெல்லாம் வழங்குவான். இதை நன்கு அறிந்த போலிவேடதாரிகள் மக்கள் விரும்புவதைப் பெற்றுத் தருவதாகக் கூறிச் சிவபூசை செய்வதற்கெனப் பெருந்தொகையாகப் பணத்தை அறவிடுகின்றனர். சிவன் விருப்பு வெறுப்பு அற்றவன். பக்தியுடன் நினைப்போரின் உள்ளத்தில் வந்தமர்பவன். ஆனால் போலிவேடதாரிகள் திருமணம் தடைப்படும் பெண்களிடமும், நோய்வாய்ப்பட்டவர்களிடமும், தொழில் தேடுபவர்களிடமும் பணமும் பொருட்களும் பெறுகிறார்கள். இதை தடை செய்தல் வேண்டும். எனது இனத்தவனான கமலேஸ்வரன் சென்ற வாரம் நோயுற்ற ஒருவரிடம் கழிப்பு கழிக்கவெனப் பல ஆயிரம் ரூபாவைப்

பெற்றுள்ளான். கழிப்புக் கழித்த மறுநாள் அவன் இறந்துவிட்டான். இதனால் அந்தக் குடும்பம் கடவுளை நம்பாதுள்ளது. ஒருவருக்கு நடைபெறும் நன்மை தீமைகளுக்குக் காரணம் பழைய வினை. அதை விதியென்று சொல்கிறோம். மந்திர தந்திரங்களாலோ பூசைகளாலோ இறைவனைத் திருப்திப்படுத்த முடியாது. ஒருவன் வேறெந்த நினைவுகளும் இல்லாமல் சிவனை வணங்கினால் சிவன் அருள் புரிவார். இதை எண்ணாது மக்கள் பூசைகளையும், கழிப்புக்களையும் நம்புகின்றனர். இந்த நிலையை மாற்ற வேண்டும்.''

“உண்மை தான் குருவே, பூசைகள், சமய அருட்டாணங்கள், விதிமுறைகளை அறிந்த சிவமறையோர் தான் மக்களுக்கு விளக்கிச் சொல்லல் வேண்டும். இதற்கான முழுப்பொறுப்பும் உங்களுடையது. உண்மையான சிவமறையோர் யார்? போலிவேடத்தாரிகள் யார்? என்பது நீங்கள் தான் இனம் கண்டு அவர்களை எவ்வாறு திருத்த வேண்டும் என்று கூறுதல் வேண்டும். அத்துடன் உங்கள் தலைமையில் பல சிவமறையோரைத் தெரிவு செய்து மக்களுக்கு உண்மையான தகவல்களை வழங்கவேண்டும்'' என்றான் வேல்மாறன்.

“அப்படியே ஆகட்டும் மன்னா, மணிமாறனிடம் சொன்னால் அவன் கேட்க மாட்டான். நீ நீதியான மன்னன். அதனால் தான் சொன்னேன். தர்மப்படி போலிவேடதாரிகளைக் கண்காணிக்கவும், திருத்தவும், தண்டனை வழங்கவும் மெய்யுணர்வுடையோரால் தான் முடியும். என்பதை உணர்ந்துள்ளாய். அதனால் நாட்டிற்கும் உனக்கும் எந்தக்கேடும் வராது'' என்றார் ஜெகதீஸ்வரக் குருக்கள்.

உண்மை நிலை

**100. ஆவையும் பாலையும் மற்றற வோரையுந்**

**தேவர்கள் போற்றுந் திருவேடத் தாரையுங்**

**காவலன் காப்பவன் காவா தொழிவனேல்**

**மேவும் மறுமைக்கு மீளா நரகமே.**

வேல்மாறனும் போர்வீரர்கள் சிலரும் துறவிகளைப் போல மாறுவேடமிட்டு நகரைச் வலம் வந்தனர். அவர்கள் முதலில் சிவன் கோவிலுக்கு அருகே உள்ள மடத்திற்கு வந்தனர்.

மடத்தின் தலைவன் ஓடோடி வந்து அவர்களை வரவேற்றான், "வாருங்கள், உள்ளே வாருங்கள் நீண்ட தூரம் நடந்து வந்தமையினால் களைத்து விட்டீர்கள். குடிப்பதற்கு பால் தரட்டா? பாலைக் குடித்துவிட்டு இளைப்பாறுங்கள். பக்கத்தில் ஆறு பாய்கிறது களைதீரக் குளிக்கலாம். என்ன உணவு வேண்டும் என்று சொல்லுங்கள். நான் தயாரிக்கிறேன்" என்றான் மடத் தலைவன்.

"என்ன உணவு வேண்டும் என்றாலும் தருவீர்களா?"

"ஆம் சுவாமி, மன்னரின் கட்டளை அது. சிவனடியார்களின் மீது அளவில்லாத பக்தியுள்ள எமது அரசன் அவர்கள் விரும்பியவற்றை எல்லாம் செய்து கொடுக்கும் படி கட்டளையிட்டுள்ளான். ஆனால் சிவனடியார்கள் எதையும் விரும்பிக் கேட்பதில்லை."

"அப்படியா? எமக்கு சோறும் கறியும் சமையுங்கள்" என்றான் மன்னன்.

அவர்கள் குளித்துவிட்டு வந்த போது அருமையான உணவு தயாரிக்கப்பட்டிருந்தது, "இப்படி என் வாழ்நாளில் உண்டதில்லை. நல்ல அருமையான உணவு" என்றான் மன்னன்.

அடுத்து அவர்கள் அவ்வூரில் வாழும் தனசேகரன் என்பவனது பட்டிக்குச் சென்றனர். அங்கு பசுக்கள் எல்லாம் அலங்கரிக்கப்பட்டு மகிழ்வுடன் நின்றன. அடுத்து அவர்கள் சில வீடுகளுக்குச் சென்றனர். அங்கு பசுக்கள் மகிழ்வுடன் நின்றன. அவ் வீட்டுக் குடும்பத் தலைவி அவர்களை அன்புடன் அழைத்தாள். "ஐயா, எனது கணவன் வெளியில் சென்றுவிட்டார். நீங்கள் களைப்பாருங்கள். வந்துவிடுவார். நான் உங்களுக்கு உணவு சமைக்கின்றேன்" என்றாள்.

"அம்மா, முன்பொருமுறை நாங்கள் இங்கு வந்த போது தலைவிரி கோலமாக நின்றீர்கள். உங்கள் கணவன் குடித்துவிட்டு வந்து தாக்கினான். இப்போது மகிழ்ச்சியா இருக்கிறீர்கள். அது எப்படி?" என்று கேட்டான் மன்னன்.

"உண்மை தான் ஐயா, எனது கணவன் பெரும் குடிகாரன். ஒருமுறை அயலவர்கள் எனது கணவன் குடித்துவிட்டு வந்து என்னை அடித்துத் துன்புறுத்தியதை மன்னனுக்குச் சொல்லிவிட்டார்கள். அதனால் மன்னன் அவரை அழைத்துப் புத்திமதிகள் கூறினார். அதைக் கேட்ட எனது கணவன் திருந்திவிட்டார். ஐயா, எமது மன்னன் கடவுளைப் போன்றவன். பெண்களை மட்டுமல்ல பசுக்களையும் சிவனடியார்களையும் காப்பவர். யாருக்காவது ஏதாவது குறை ஏற்பட்டதாக அறிந்தால் அவர் கடும் நடவடிக்கையெடுப்பர். பசுக்களைக் குளிப்பாட்டித் தூபதீபம் காட்டி அலங்கரித்து நல்ல உணவு கொடுக்க வேண்டும் என்றும் கட்டளையிட்டதோடு மட்டுமல்லாமல் அதிகாரிகளை அனுப்பி கண்காணிக்கிறார். அதனால் யாரும் குற்றம் செய்ய முடியாது. கடவுள் போன்ற மன்னன் நெடுங்காலம் வாழ்ந்து எம்மைக் காக்க வேண்டுமென்று நானும் இவ்வூர் மக்களும் தினமும் சிவனை வேண்டுவோம்" என்றாள்

அப்பெண். அவள் அப்படிக் கூறும்போது உணர்ச்சி மேலீட்டால் அவளது கண்கள் கலங்கியிருந்ததை மன்னன் கண்டு கொண்டான்.

“நான் எனது கடமைகளைச் செய்கிறேன். அதனால் எனக்குக் கொடிய நரகம் கிடைக்காது” என்று நினைத்தான் மன்னன். அது அவனுக்கு மகிழ்சியைக் கொடுத்தது.

பற்றற்ற பணி

**101. திறந்தரு முந்தியுஞ் செல்வமும் வேண்டின்**
**மறந்தும் அறநெறி யேஆற்றல் வேண்டும்**
**சிறந்தநீர் ஞாலஞ் செய்தொழில் யாவையும்**
**அறைந்திடில் வேந்தனுக் காறிலொன் றாமே.**

அன்று அரசசபை கூடிய போது தனசேகரன் என்ற தனவந்தன் சபைக்கு வந்திருந்தான். அரசனின் சார்பில் வரி வசூலிக்கும் அதிகாரிகள் அவனது வருமானத்தின் ஆறில் ஒரு பங்கிற்கு மேலாக வரி வசூலித்திருந்தனர். அதை அவன் பல முறை எடுத்து சொல்லியும் அதிகாரிகள் கேட்கவில்லை. அதனால் அவன் அரச சபைக்கு வந்திருந்தான்.

“அரசே, என்னிடம் ஆயிரம் பசுக்கள் உள்ளன. அவற்றிலிருந்து கறக்கப்படும் பால், பாலிலிருந்து தயாரிக்கப்படும் நெய், மோர், தயிர் என்பவற்றை நான் அரசனின் பாற்பண்ணைக்கே கொடுத்து வருகிறேன். பசுக்கள் போடும் சாணத்தை மகேஸ்வரன் என்ற விவசாயிக்குக் கொடுத்து வருகிறேன். அவற்றின் கணக்கை அரசஅதிகாரியிடம் கொடுத்துள்ளேன். தற்போது நான் வாழும் வாழ்க்கை முறைக்கேற்பவே எனக்கு மறுமை இன்பம் கிடைக்கும். இவ்வுலக இன்பத்தையும், மறுமை

இன்பத்தையும், முத்தியையும் நினைத்து சிவ உணர்வுடன் தொழில் செய்பவன், ஒரு போதும் களவு செய்யமாட்டான். மறந்தும் நான் களவு செய்வதில்லை. செக்கிழுக்கும் மாடு போல வேறு எண்ணங்களின்றிச் சிவ உணர்வுடன் வாழ்ந்து வரும் நான் எனது செயல்களைத் தவறாது செய்வேன். எனது வருமானத்தின் ஆறில் ஒரு பங்கு அரசனுக்கு முறைப்படி செலுத்தப்பட வேண்டியது. மிகுதியான ஐந்து பங்கை வைத்துக் கொண்டு தான் தென்புலத்தார், தெய்வம், விருந்தினர் எனது குடும்பத்தினரைக் கவனித்தல் வேண்டும். இந்த ஆண்டு எனது வருமானத்தின் ஆறில் ஒரு பங்கிற்கு அதிகமாக வரிவசூலிக்கப்பட்டதால் நான் செய்யும் தர்ம காரியங்கள் தடைப்பட்டுள்ளன. அதனால் இப்பூவுலக வாழ்வும், மேலுலக வாழ்வும் இன்பம் இல்லாது போய்விடும். அத்துடன் நீதிக்கு மாறாக வரிவசூலித்த மன்னனான உங்களுக்கும் கேடு உண்டாகும். எனவே தயவு செய்து எனது வருமானக் கணக்கை மீளாய்வு செய்து நீதி வழங்குங்கள்'' என்றான்.

அவனது கோரிக்கையை ஏற்ற மன்னன் தானே அவனது வருமானக் கணக்கை ஆராய்ந்து பார்தான். அவன் சொன்னது உண்மை என்று புரிந்து கொண்டான்.

''தனசேகரா, என்னை மன்னித்து விடுங்கள். தாங்கள் சிவநினைவோடு நடுநிலையில் நின்று செய்யும் செயல்கள் தூய்மையானவையென்று புரிந்து கொண்டேன். அத்துடன் எனது அதிகாரியின் தவறால் எனக்கு வரவிருந்த நரகலோக வாழ்வு உம்மால் கண்டுபிடிக்கப்பட்டது. அதற்கு நன்றி கூறுவதோடு, அதிகாரிகளின் தவறுக்காக நான் தங்களிடம் மன்னிப்புக் கேட்கிறேன்'' என்றான் மன்னன். சபை அதிர்ந்தது. தனசேகரன் மகிழ்வுடன் சென்றான.

**102. வேந்தன் உலகை மிகநன்று காப்பது**
**வாய்ந்த மனிதர்கள் அவ்வழி யநிற்பர்**
**பேர்ந்திவ் வுலகைப் பபிறர்கொள்ளத்**
**தாங்கொள்ளப்**
**பாய்ந்த புலியன்ன பாவகத் தானே.**

“அரசே, எமது அயல் நாடாகிய வேலூரின் அரசன் கொடுங்கோலனாகித் தனது நாட்டு மக்களை ஈவிரக்கமின்றித் வருத்துகிறான். அதனால் அவ்வூர் மக்கள் அந்நாட்டை விட்டு விட்டுத் தமது உடைமைகளுடன் எமது நாட்டுக்குள் அத்துமீறிப் பிரவேசிக்கிறார்கள். காவல் செய்யும் வீரர்களால் அவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை, எமது நாட்டுக்குள் வரவேண்டாம் என்று மட்டும் எமது வீரர்கள் கூறுகிறார்கள். தாங்கள் காருண்ணியமானவர். அவர்களைத் தாக்கக்கூடாது என்று கூறியமையால் காவற்படைவீரர்களால் அவர்களைத் தாக்க முடியவில்லை. மக்கள் கூட்டம் கூட்டமாக வருவதால் அவர்கள் செயலற்றுப்போனார்கள். இதற்கு என்ன செய்ய வேண்டும் என்று என்னை கேட்கிறார்கள். நான் தங்களின் விருப்பை அறியாமல் செயற்பட முடியாது. எனவே என்ன செய்ய வேண்டும் என்று கூறுங்கள்” என்று கேட்டார் படைத்தளபதி.

“தளபதியாரே, மன்னனானவன் சிவவுணர்வுடன் தன்னைப்போல மக்களையும் நேசித்தல் வேண்டும். மன்னர்கள் சிவனின் பிரதிநிதிகள். சிவன் மக்களுக்கு அருளுவது போல மன்னன் பாகுபாடின்றி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும். எல்லாம் சிவன் செயலெ்ன

நினைக்கும் மன்னன் நீதியிலிருந்து தவறமாட்டான். வேலூர் மன்னன் சிவனின் மீது நம்பிக்கையில்லாதவன். தனது எண்ணப்படி தான் யாவும் நடக்கவேண்டும் என்று நினைப்பவன். தான் தான் அரசன், தான் நினைப்பது தான் சட்டம், தான் சொல்வதை தான் எல்லோரும் கேட்கவேண்டும் என்ற நினைப்புடையவன். இது ஆணவத்தின் அறிகுறி. அதனால் அவனால் நீண்ட நாட்களுக்குப் பதவியில் இருக்கமுடியாது. மக்களுக்கு துன்பம் செய்பவன் காட்டில் வாழும் கொடிய புலியைப் போன்றவனாவான். காட்டில் வாழும் புலி நாட்டிற்குள் நுழைந்து எத்தனை நாட்களுக்குத் தீமைகளைச் செய்யும். அது ஒரு நாள் அகப்படும். அது போல வேலூரின் அரசனின் கொடுங்கோல் ஆட்சி விரைவில் முடிவுக்கு வரும். அதுவரை அந்நாட்டு மக்களை எமது நாட்டில் தங்க அனுமதியுங்கள்'' என்றான் வேல்மாறன்.

“நல்லது அரசே, தங்களின் கட்டளைப்படி நடப்பேன்'' என்று கூறிவிட்டுச் சென்றான் தளபதி.

நல்லரசனின் பணி

**103. கால்கொண்டு கட்டிக் கனல்கொண்டு**
**மேலேற்றிப்**
**பால்கொண்டு சோமன் முகம்பற்றி**
**உண்ணாதோர்**
**மால்கொண்டு தேறலை உண்ணும் மருளரை**
**மேல்கொண்டு தண்டஞ்செய் வேந்தன் கடனே.**

வேல்மாறனும் சிலபோர்வீரர்களும் மாறுவேடமிட்டு நகரை வலம் வந்தனர். முதல் நாள் ஒரு பெண் அரசசபைக்கு வந்து, “அரசே, எனது கணவன் பெரும் குடிகாரன் அவன் தான் உழைப்பதையும், நான்

உழைப்பதையும் கவர்ந்து சென்று மூக்குமுட்டக் குடித்துவிட்டு வந்து வீட்டில் கலகம் செய்வான். பக்கத்தில் ஒரு சிவன் கோவில் உள்ளது. அவனும் அவனது நண்பரகளும் குடித்துவிட்டுக் கோவிலுக்கு வரும் அடியவர்களைத் துன்பப்படுத்துவார்கள். தான் உழைப்பதைக் குடித்துவிட்டு நான் உழைத்ததையும் பயமுறுத்திப் பறித்துச் சென்று குடித்துவிடுவான். பணம் கொடுக்காவிட்டால் எம்மை அடிப்பான். வீட்டில் உள்ள சட்டிபானைகளை உடைப்பான். வீட்டைக் கொழுத்த முயல்வான். இதனால் நாம் நிம்மதியில்லாது வாழ்கின்றோம். எனது பிள்ளைகள் கற்பதற்காகப் பாடசாலைக்குச் செல்வதில்லை. வயது வந்த எனது இரண்டு பிள்ளைகளையும் தன்னுடன் வேலைக்கு அழைத்துச் சென்றுவிடுவான். பின் அவர்களது சம்பளத்தையும் வாங்கிக் குடித்துவிடுவான். அயலவர்கள், இனத்தவர்கள், நண்பர்கள் புத்திமதி சொன்னால் அவர்களைத் தாக்குவான். இதனால் நான் பெரும் துன்பப்படுகின்றேன். தயவு செய்து எனது துன்பத்தைப் போக்குங்கள்'' என்று அழுதாள்.

அதனால் அரசரும் போர்வீரர்களும் அப்பெண் கூறிய சிவன்கோவிலுக்குச் சென்றனர். அப்போது பூசை நடைபெற்றுக் கொண்டிருந்தது. கோவிலின் முன்பக்கத்தில் பலர் குடித்துவிட்டு வாயில் வந்தபடி பேசிக் கொண்டிருந்தனர். அவர்களைக் கைது செய்யும் படி மன்னன் போர்வீரர்களுக்கு உத்தரவிட்டான். அனைவரும் கைது செய்யப்பட்டனர்.

``அரசே, இவர்கள் குடித்துவிட்டுத் தினமும் கோவிலடியில் அட்டகாசம் செய்கின்றனர். எம்மால் சிவனை நிம்மதியாக வணங்க முடியவில்லை. இவர்கள் திரும்பவும் குடித்துவிட்டு வந்து கலகம்

செய்யாமலிருப்பதற்கு நடவடிக்கை எடுங்கள்'' என்று ஒரு பெரியவர் கூறினார்.

''குடிப்பது பாவம். அதைவிடக் குடித்துவிட்டு வந்து மக்களுடன் சண்டையிடுவது மகா பாவம். அதைவிடக் கோவிலில் குழப்பத்தை விளைவிப்பது மன்னிக்க முடியாத குற்றம். அதனால் இவர்களை அழைத்துச் சென்று உச்சில் குளத்தை ஆழமாக்கும் பணியில் ஒரு வருடம் ஈடுபடுத்துங்கள். இவர்களுக்கான கூலிப் பணத்தைக் குடும்பத்தவர்களுக்குக் கொடுத்துவிடுங்கள்'' என்று கட்டளையிட்டான் வேல்மாறன். வீரர்கள் அவர்களை அழைத்துச் சென்றனர்.

சமரசம்

**104. தத்தஞ் சமயத் தகுதிநில் லாதாரை**
**அத்தன் சிவன்சொன்ன ஆகம நூல்நெறி**
**எத்தண் டமுஞ்செயும் அம்மையில் இம்மைக்கே**
**மெய்த்தண்டஞ் செய்வதவ் வேந்தன் கடனே.**

அன்று அரச சபை கூடியபோது போர்வீரர்கள் சிவனை வழிபடுவோரையும் விஷ்ணுவை வழிபடுவோரையும் கடவுள் இல்லையென்று கூறி கலகம் செய்வோரையும் அழைத்துவந்திருந்தனர்.

''அரசே, சிவனை வழிபடுவோர் சிவன் தான் முழுமுதற் கடவுள் என்றும், விஷ்ணுவை வழிபடுவோர் விஷ்ணுதான் முழுமுதல் கடவுள்

என்றும் சொல்லித் தினமும் பிரச்சினைப்படுகின்றனர். இதனால் நாட்டில் அமைதி கெட்டுவிட்டது. கோவில்களில் நிம்மதியாக வழிபடமுடியாதிருக்கிறது. அதைவிடச் சிலர் கடவுள் இல்லையென்று கூறிப் பூசை நடைபெறுகின்ற போது கலகம் செய்கின்றனர். சமயங்கள் எல்லாம் சமமானவை. அவற்றில் பெரிது சிறிது இல்லை. ஒவ்வொருவரும் தாம் தாம் வணங்கும் கடவுளை வணங்க வேண்டும். மறுசமயக் கடவுள்களை மதிக்க வேண்டும். முரண்படக் கூடாது. முரண்பட்டால் ஆகம விதிப்படி அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படும். கடவுள் இல்லையென்று சொல்வோர் மக்களைக் குழப்பிப் பிரச்சினைகளை உண்டாக்கி அதனால் இன்பம் அடைகின்றனர். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தண்டனை உண்டு. ஒருவரின் கொள்கைகளில் மற்றவர் தலையிட்டுக் குழப்பம் விளைவிக்கக் கூடாது. எல்லோரும் தன்னை மதிப்பது போலப் பிறரையும் மதிக்கப் பழகுதல் வேண்டும். சிவனை வழிபடுவோர் விஷ்ணுவின் கோவிற் பக்கம் செல்லக் கூடாது. அது போல விஷ்ணுவை வழிபடுவோர் சிவன் கோவிற் பக்கம் செல்லக் கூடாது. சென்றால் நட்புடன் உரையாட வேண்டுமே தவிர முரண்படக்கூடாது. மீறி முரண்பட்டால் ஆகமத்தில் கூறப்பட்ட தண்டனை வழங்கப்படும். கடவுளை நம்பாதவர்களை அழைத்துச்சென்று ஞானசம்பந்தர் ஆதினத்தில் ஒப்படையுங்கள். அவர்களுக்குச் சுவாமியார் காலையும் மாலையும் சிவனைப் பற்றிய போதனை செய்தல் வேண்டும். குற்றம் செய்பவர்கள் அறியாமையாலேயே செய்கின்றனர். சமயச் சண்டைசெய்வோரையும் கைது செய்து ஆதினத்தில் ஒப்படையுங்கள்" என்றான் வேல்மாறன்.

முதலமைச்சர் சொன்னார், "அரசர் கூறியது போல அறியாமையினால் தான் சமயச் சண்டைகள் ஏற்படுகின்றன. அதனால்

சண்டையிடுவோருக்குச் சமயப்போதனை செய்தால் அவர்களது அறியாமை நீங்கும்'' என்றார்.

## 8. வானச்சிறப்பு

அழிவும் ஆக்கமும்

**105. அமுதூறு மாமழை நீரத னாலே**
**அமுதூறும் பன்மரம் பார்மிசை தோற்றுங்**
**கமுகூறு தெங்கு கரும்பொடு வாழை**
**அமுதூறுங் காஞ்சிரை ஆங்கது வாமே.**

அன்று சிவன் கோவிலில் பூசை நடைபெறவில்லை. ஒரு வருடத்திற்கு மேலாக மழை பெய்யாததால் கனி தரும் மரங்களும் பூமரங்களும் பட்டுப்போயின. புல்பூண்டுகள் எல்லாம் காய்ந்து சருகாகிவிட்டன. கிணறுகள் குளங்கள் யாவும் வற்றிவிட்டன. கால் நடைகள் இறந்துவிட்டன. அனேகமான மக்கள் அயலூர்களுக்கு இடம்பெயர்ந்து சென்றுவிட்டனர். ஊரேவெளிச்சோடிவிட்டது.

கதிரேசன் அவ்வூரின் பெரிய மனிதன். அவரது நண்பர் திருநாவுக்கரசு இருவரும் வெகுதூரத்திலுள்ள கல்லடி என்ற ஊருக்குச் சென்று பூ, பழம், பாக்கு, வெற்றிலை, இளநீர், தேங்காய், பால் முதலிய பூசைப் பொருட்களை வாங்கி வந்தனர்.

கோவிற் குருக்கள் கதிரேசனைச் சந்திக்கும் வேளைகளில் தான் தனது சகோதரனது ஊருக்குச் செல்லப்போவதாகக் கூறிக்கொண்டிருந்தார். அவரது குடும்பத்தினரைத் தனது சகோதரனின் வீட்டில் கொண்டு சென்று விட்டு விட்டு தான் மட்டும் தனியேவந்திருந்து ஒரு நாளைக்கொரு முறை பூசை செய்து கொண்டிருந்தார்.

முன்பு ஐந்து சாமப்பூசை அங்கு நடைபெறும். ஊர்மக்கள் திரண்டுவந்து திருவிழாக்களைச் செய்தார்கள். இப்போது யாரும் வருவதில்லை. குருக்கள் நீரையும் முட்கிழுவையிலையையும் படைத்துப் பூசை செய்வார்.

“செய்யவேண்டியவையெல்லாம் செய்தாயிற்று. இன்று யாகம் செய்கிறோம். இதற்குப் பின்னரும் சிவனருளால் மழைபெய்யாவிட்டால் நீங்கள் கோவிலை மூடிவிட்டு உங்கள் குடும்பத்தோடுபோயிருங்கள். மழையில்லாததால் வயலெல்லாம் காஞ்சுரஞ் செடிதான் முளைத்துக் காய்த்திருக்கிறது. மழையில்லாவிட்டால் இவ்வூரில் இருந்து என்ன செய்ய முடியும்” என்று மிகுந்த கவலையுடன் சொன்னார் கதிரேசன்.

“உண்மை தான், மழை பெய்த போது காய்த்துக் குழுங்கிய மரங்களெல்லாம் பட்டுப்போயின. கால் நடைகளுக்கு நீர் இல்லை. இன்று நடைபெறும் யாகத்தின் பயனாக மழைபெய்யும் என்று நான் நம்புகிறேன். சிவன் இப்படி முன்னெப்போதும் சோதித்ததில்லை. ஏன் தான் இப்படிச் சோதிக்கிறாரோ தெரியவில்லை. பொன் விளைந்த பூமி காய்ந்து பிளவுண்டு போய்க்கிடக்கிறது” என்று கவலைப்பட்டார் திருநாவுக்கரசு.

“எனக்குத் தெரிந்த வரை இப்படி மழை பொய்த்ததில்லை. இயற்கையை மனிதன் அழிக்கிறான். இயற்கை மனிதனையழிக்கிறது. இந்நிலைக்குக் காரணம் மனிதர்கள் தான். கோவில் நந்தவனம் காய்ந்துவிட்டது. கோவில் மரங்களில் வாழ்ந்த பறவைகள கூடச் சென்றுவிட்டன. ஊர்செழிப்பாக இருந்தபோது எல்லாப் பறவைகளும் விலங்குகளும் மகிழ்வுடன் வாழ்ந்தன. மடத்தில் மூன்று வேளை உணவு கொடுத்தோம் இப்போ…” பெருமூச்சுவிட்டார் கதிரேசன்.

அன்று யாகம் சிறப்பாக நடைபெற்றது. ஊரைவிட்டுச்சென்ற அனைவரும் யாகத்திற்கு வந்திருந்தனர்.

“மக்களைப் பார்க்கச் சந்தோசமாக இருக்கு. மழை பெய்தால் மக்கள் எல்லோரும் திரும்பி வந்துவிடுவார்கள். மரம் செடிகொடிகளெல்லாம் தழைத்துவிடும். கோவிற் பூசைகள் விமர்சையாக நடக்கும்” என்று கதிரேசன் சொல்லிக் கொண்டிருக்கும் போது இடியுடன் மழைபொழிய ஆரம்பித்தது. அது தொடர்ந்து மூன்று நாட்கள் பெய்தது.

ஆறு மாதம் கழித்துச் சிவன்கோவிலுக்குக் கதிரேசன் வந்தார். நூற்றுக்குமேற்பட்ட மக்கள் பொங்கிக் கொண்டிருந்தனர், “ஊர் வழமைக்குத் திரும்பிவிட்டது. அதற்குக் காரணம் மழை பெய்தது தான்” என்று நினைத்தார் கதிரேசன்.

ஆக்கம்

**106. வரையிடை நின்றிழி வான்நீர் அருவி**
**உரையில்லை உள்ளத் தகத்துநின் றூறு**
**நுரையில்லை மாசில்லை நுண்ணிய தெண்ணீர்க்**
**கரையில்லை எந்தை கழுமணி யாறே.**

மழை பெய்து பூமி செழித்துவிட்டது. அமுதை ஒத்த பழமரங்கள், தானியப் பயிர்கள், கரும்பு யாவும் செழித்து வளர்ந்து நிற்கின்றன. சிவனுக்குப் பூசைகள் ஆராதனைகள் தொடங்கிவிட்டன. அன்று வெள்ளிக் கிழமை. பூசை முடிந்த பின்பு மக்கள் அரசமர நிழலில் வந்தமர்ந்தனர். சுந்தரேஸ்வரக் குருக்கள் மக்களுக்கு உபதேசம் செய்வதற்காக வந்தார்.

“சிவனடியார்களே, எம் தந்தையாகிய சிவபெருமானுக்கு நாம் பூசைகள் ஆராதனைகள் யாவும் செய்கின்றோம். அவை புறத்தே செய்யப்படும் ஆராதனைகள். நம் அகத்துள்ளேயும் சிவனை இருத்தி ஆராதனை செய்தல் வேண்டும். அறிவால் செய்யப்படும் ஆராதனை தான் உண்மையான ஆராதனையாகும். கதைக்மை நெறி என்பது அறிவு நெறி. இந்த அறிவு நெறியை, உண்மை நெறி, சன்மார்க்க நெறி, ஞானநெறி என்றும் சொல்வர். ஆருயிர்களின் அகத்துள் நின்று ஊறிப்பெருகிப் பாய்ந்து ஓடிவரும் பக்தியாற்றிற்குப் புறத்தே ஓடிவரும் ஆற்றிற்குள்ளது போல நுரையில்லை, மாசில்லை, தோன்றும் இடமோ புகும் இடமோ இல்லை. எல்லைகளும் இல்லை. சிவபெருமானின் திருவடியின் மீது கொள்ளப்படும் பக்தியே கழுமணியாறாகும். இது பக்தர்களின் அருளில் தோன்றி இறவாத இன்ப ஊற்றாகப் பெருகும் தன்மை வாய்ந்தது. அதற்கு வேண்டுதல் வேண்டாமையாகிய நுரையில்லை. இருவினைகளுக்கும் வித்தான மலங்களும் இல்லை. இதற்கு எல்லையுமில்லை.”

“பக்தர்கள் சிவனைத் திருமுழுக்காட்ட விரும்பினால், சிவனை மனதில் பிரதிட்டை செய்து மாறாத அன்பை வைத்தல் வேண்டும். அவ்வண்பு புனிதமானதால் அதற்கு நிகராக எதுவும் இல்லை. குற்றமில்லாத சிவநினைவு பக்தியாகிப் பரவசமடையும் போது மனதுள்த் திருமுழுக்கு நடைபெறும். அப்படியான வேளையில் மழை காரணமாகப் பூமி செழிப்படைவது போல மனமும் செழிப்படையும். அதனால் பேரின்பம் கிட்டும். அப்பேரின்பத்திற்கு எல்லையில்லை. அதனால் அது பெருகிக் கொண்டிருக்கும்” என்றார் சுந்தரேஸ்வரக் குருக்கள்.

## 9. அறஞ்செய்வான் திறம்

காக்கை போல வாழ்

**107.ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்**

**பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்**

**வேட்கை யுடையீர் விரைந்தொல்லை**

**உண்ணன்மின்**

**காக்கை கரைந்துண்ணுங் காலம் அறிமினே.**

கதிரேசனின் வீட்டு வாசலில் வந்து நின்றார் குமாரசாமி. அவருக்கு உள்ளே செல்லத் தயக்கமாக இருந்தது. கந்தவனம் கதிரேசனின் இனத்தவன் பணக்காரன். குமாரசாமி கந்தவனத்தை நம்பி வாழ்பவன். ஏழை. தனது பிழைப்புக்காகக் கந்தவனத்துடன் சேர்ந்து தீய செயல்களைச் செய்பவன். கந்தவனத்திற்குக் கதிரேசன் மீது பகை இருந்தது. கதிரேசன் பணக்காரன், தர்மவான், யாருக்கும் உதவி செய்பவன். இதை அறிந்திருந்தும் கந்தவனத்தின் தூண்டுதலால் கதிரேசனுக்குப் பல தீங்குகளைச் செய்தவன் குமாரசாமி.

குமாரசாமி தான் குடியிருந்த வீட்டை அடைமானம் வைத்துக் கமம் செய்தான். மழை பொய்த்தமையால் கமம் அழிந்து விட்டது. பணம் கொடுத்தவன் வீட்டை மீளாவிட்டால் விற்கப் போவதாகக் கூறிவிட்டான். குமாரசாமி அதைக் கந்தவனத்திடம் கூறிக் கடனாகப் பணம் கேட்டான். கந்தவனம் கொடுக்கவில்லை. அதனால் அவன் ஊரிலுள்ள பலரை கேட்டான். யாரும் கொடுக்கவில்லை. கடன் கொடுத்தவன் வீட்டை விற்கப் போவதாக அறிவித்தான். குமாரசாமிக்கு ஐந்து பெண் பிள்ளைகள். வீட்டை விற்றால் ஐந்து பெண்களையும் எங்கே கூட்டி

செல்வது என்று தெரியாமல் அவதிப்பட்ட அவனுக்கு அவனின் மனைவி, “கதிரேசனிடம் சென்று கூறுங்கள்” என்று சொன்னாள்.

அதனால் அங்கு வந்த அவன் உள்ளே செல்லத் தயங்கினான். அப்போது அங்கே வந்த கதிரேசன், “குமாரசாமி, உன்னுடைய வீட்டை விற்கப் போவதாகத் தில்லை சொன்னான். அவன் சொன்னபடி செய்யக் கூடியவன். இப்ப என்ன செய்யப் போகிறாய்?” என்று கேட்டார்.

குமாரசாமியால் பதில்கூற முடியவில்லை. நெஞ்சுள் இடிஇடித்தது, “ நீ என்ன செய்வாய்? பாவம். முன்னேற வேண்டும் என்ற எண்ணத்துடன் கடன் பட்டு விவசாயம் செய்தாய். மழை பொய்த்ததால் ஊரில் உள்ள அனைவரும் நட்டப்பட்டு விட்டனர். சரி உள்ளே வா” என்றார்.

குமாரசாமி உள்ளே வந்தான். வெளித் திண்ணையில் நாலைந்து பேர் உணவு உண்டு கொண்டிருந்தனர்.

“போய் கால் முகம் கை கழுவிவிட்டு வா. சாப்பிட்டுவிட்டுக் கதைப்போம்” என்றார் கதிரேசன்.

“கைகழுவிவிட்டு வந்தமர்ந்த குமாரசாமிக்குக் கதிரேசன் உணவு பரிமாறினார். சோற்றை வைத்துவிட்டுக் கத்தரிக்காய்க் குழம்பு விட்டார். அதன் பின் பருப்பு வைத்தார். அதன் பின் கிழங்குக் கறி வைத்தார். அதன் பின் அப்பளம்,வடை, வாழைப்பழம் என்பவற்றை வைத்தார். இதில் மோர் உள்ளது தேவைக்கேற்ப விட்டுச் சாப்பிடு” என்றார்.

அன்று வயிறார உண்டான் குமாரசாமி. அவன் உண்டபின் வெற்றிலைத் தட்டை எடுத்து வைத்தார்.

குமாரசாமி, தயங்கித் தயங்கிச் சொன்னான், “வீடு விற்றால் பிள்ளைகள் அந்தரித்து விடும். என்னிடம் வேறு நிலம் இல்லை” என்று கூறும்போது கதிரேசன் சொன்னார், “நான் காசு தருகிறேன் வீட்டை மீள்” குமாரசாமியால் அதை நம்ப முடியவில்லை. திகைத்துப்போனான்.

அதைக் கேள்விப்பட்ட அவரது நண்பரான திருநாவுக்கரசு சொன்னார், “யாருக்கு உதவி செய்வது என்ற வரையறை இல்லையா…?” என்று கூறும் போது கதிரேசன் இடைமறித்துச் சொன்னார், “இல்லை. எல்லோருக்கும் தகுதி, தராதரம், பகை, உறவு பாராது உதவி செய்தல் வேண்டும். அப்படி செய்தால் சிவன் உதவுவார். நான் அப்படி வாழ்வதால் தான் சிவன் எப்போதும் உதவிக்கொண்டே இருக்கிறார்” என்றார் கதிரேசன். திருநாவுக்கரசால் அதற்குப் பதில்கூற முடியவில்லை.

சிவதத்துவர்

**108. தாமறி வாரள்ணல் தாள்பணி வாரவர்**
**தாமறி வாரறந் தாங்கிநின் றாரவர்**
**தாமறி வார்சிவ தத்துவ ராவர்கள்**
**தாமறி வார்க்குத் தாமர்பர னாமே.**

குமாரசாமிக்குக் கதிரேசன் பணம் கொடுத்தது திருநாவுக்கரசுக்குப் பிடிக்கவில்லை. அதனால் அவரின் முகம் விகாரம் அடைந்தது. மனம் துடிதுடித்தது. குமாரசாமி கதிரேசனின் கால்களில் விழுந்து அழுது கொண்டிருந்தான்.

“நீ நடிப்பதில் மகா கெட்டிக்காரன். உண்மையைச் சொல். நீ உன் வாழ்நாளில் கதிரேசனைப் பற்றி குற்றம் சொல்லாத நாளுண்டா? என்று கந்தவனத்துடன் சேர்ந்து எத்தனை தீமைகளைச் செய்தாய். இப்போ அதையெல்லாம் மறந்து ரோசம் கெட்டு வந்து காசு வாங்கிய பின் கதிரேசனின் கால்களைப் பிடித்து அழுகிறாய். நாளைக்குக் கந்தவனம் கள்ளு வாங்கித் தந்த பின் எல்லாவற்றையும் மறந்து பழையபடியும் கதிரேசனைத் திட்டித் திரிவாய்” என்றார் திருநாவுக்கரசு கோபமாக.

குமாரசாமி அதைக் கேட்டுக் கோபம் கொள்ளவில்லை. உண்மையத் தான் சொல்கிறார் என்று நினைத்தான்.

“திருநாவுக்கரசு, தேவர்களுக்கும், மூவர்களுக்கும், யாவர்க்கும் தலைவனாக வீற்றிருக்கும் அண்ணலான சிவனைத் தொழுபவர்களிடம் அழுக்காறு, அவா, வெகுளி, இன்சொல் ஆகிய நான்கும் இருக்காது என்பதற்காகத் தான் அவர்களை சிவதத்துவர் என்று பெரியவர்கள் அழைப்பார்கள். இவர்களிடம் பற்று பாசம் விருப்பு வெறுப்பு இராது. இதனால் இவர்கள் அறவாளர்களாக இருப்பார்கள். நான் சிவனின் அடியவன். அதனால் தீமைகள் செய்தவர்களுக்கும் உதவுகிறேன். ஆனால் சிவனடியவன் என்று சொல்லிப் பெருமைப்படும் நீ மற்றவர்கள் கொடுப்பதைத் தடுக்கிறாய். அதனால் நீ உண்மையாகச் சிவனை வணங்குபவன் தானா?...” என்று அமைதியாக கேட்டான் கதிரேசன்.

“இன்று தான் நான் சிவதத்துவத்தை உணர்ந்தேன். இனி நான் ஒரு போதும் பாவம் செய்ய மாட்டேன்” என்றான் குமாரசாமி. அதற்கு மேல் அவனால் பேசமுடியவில்லை.

"சிவதத்துவர் அறச்செயல்களைச் செய்யாதிருப்பது பாவம் இல்லை. செய்பவனைத் தடுப்பது தான் பாவம்." என்றார் கதிரேசன்.

இன்னுரை

**109. யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை**
**யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை**
**யாவர்க்கு மாம்உண்ணும் போபொரு கைப்பிடி**
**யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே.**

கதிரேசன் பெரும் சிவபக்தர். அத்துடன் பெரும் தனவந்தர். அவர் வீட்டிற்கு வரும் விருந்தினர் எல்லோருக்கும் உணவளித்து வரவேற்பார். கோவிலுக்குச் செல்லும் போது பஞ்சவில்வங்களைக் கொண்டு செல்வார். அத்துடன் கோவிலில் ஏராளமான பசுக்கள் நிற்கும். அவர் அறுகம் புல் கொண்டு சென்று பசுக்களுக்குக் கொடுப்பார். கோவில் கிணற்றடியிலுள்ள தொட்டியில் நீரை நிரப்பி விடுவார். கோவிலில் நிற்கும் பறவைகளுக்குக் காலையும் மாலையும் தானியம் கொண்டு சென்று போடுவார்.

அன்று அவருக்குக் காச்சல் நோய் வந்து விட்டது. அவரால் எழுந்து நடமாட முடியவில்லை. அவர் அனைவரிடத்தும் அன்பாக பழகுவார். அதனால் சிவனடியார்கள் அவரைக் காணாததால் வீட்டிற்கு தேடிவந்தனர். அவரைக் காணாததால் கோவிலடியில் வாழும் பசுக்கள் அவரது வீட்டிற்கு வந்துவிட்டன. தன்னைக் காணாவிட்டால் பசுக்களும் பறவைகளும் தன்னைத்தேடித் தனது வீட்டிற்கு வரும் என்று தெரிந்து வைத்திருந்த கதிரேசன் பசுக்களுக்கு வேலையாட்களைக் கொண்டு புல் சேகரித்து வைத்திருந்தார். பறவைகளுக்குத் தானியம் வைத்திருந்தார்.

பூசை முடிந்த பின் கதிரேசனது வீட்டிற்கு வந்த குருக்கள் சொன்னார், “கதிரேசா, நீ மிருகங்கள் மீதும் பறவைகள் மீதும் அளவுக்கதிகமான அன்பு வைத்திருப்பதால் கூட்டில் உள்ள மயில்களும் மான்களும் பெரும் சத்தமிட்டு ஓடித்திரிந்தன. அவை உன்னைப் பார்க்காததால் தான் அப்படிச் செய்கின்றன என்று எனக்குத் தெரியும். அதனால் அவற்றை அழைத்து வந்திருக்கின்றேன்” என்றார்.

இரண்டு மயில்களும், இரண்டு மான்களும் அவருக்கருகே வந்து நின்றன. அவர் மயில்களுக்குத் தானியங்களைத் தூவினார். மான்களுக்குப் புல்லுக் கொடுத்தார். அவை அவற்றை உண்ணாது அவருக்குப் பக்கத்தில் படுத்திருந்தன. குருக்கள் செல்லும் போது அவை செல்லவில்லை. அதனால் கதிரேசன் மான்களையும் மயில்களையும் அழைத்துக் கொண்டு கோவிலுக்குச் சென்றான்.

“நாம் அன்பு வைத்தால் மிருங்களும் எம்மீது அன்பு வைக்கும். நாம் உயிர்கள் மீது வைக்கும் அன்பு இறைவனைச் சென்றடையும் என்று உபநிடதங்கள் கூறுகின்றன” என்றார் கதிரேசன்.

சிவானந்தக் குளம்

**110. அற்றுநின் றாருண்ணும் ஊனே அறனென்னுங்**
**கற்றன போதங் கமழ்பவர் மானிடர்**
**உற்றுநின் றாங்கொரு கூவற் குளத்தினிற்**
**பற்றிவந் துண்ணும் பயன்அறி யாரே.**

கந்தவனம் கோவில் கட்டிட நிதிக்குக் கூடப்பணம் கொடுக்காதவன். ஊரவர்களைக் குருக்களும் கதிரேசனும் ஏமாற்றித் தமது பிழைப்பை நடத்துகிறார்கள் என்று தான் காண்பவர்களிடம்

கூறுபவன். அதனால் அவனைக் கண்டால் மக்கள் விலகிச் சென்று விடுவார்கள். அப்படி விலகிச் சென்றாலும் விடமாட்டான். அவர்களைப் பின் தொடர்ந்து சென்று தனது கருத்துக்களைக் கூறுவான். மக்களிற் சிலர் கோபப்பட்டு ஏசுவர். சிலர் அவனைக் கண்டதும் விரைவாகச் சென்றுவிடுவர். சிலர் அவனுடன் சண்டைக்குச் செல்வர்.

அன்று வெள்ளிக்கிழமை. சிவன் கோவில் மாலை நேரப் பூசை முடிந்ததும் மக்கள் வெளியேறிக் கொண்டிருந்தனர். மக்களிற் சிலர் சிவனைத் தரிசித்து விட்டுச் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். அடுத்தவாரம் சிவன் கோவில் கொடியேறவிருந்தது. அதனால் கதிரேசன் மக்களை அழைத்து வேலைகளைச் செய்வித்துக் கொண்டிருந்தார். நூற்றுக்கணக்கான மக்கள் அச்சிரமதானத்தில் கலந்து கொண்டனர். அப்போது அங்கு வந்த கந்தவனம் சிவநிந்தனை செய்து கொண்டிருந்தான். அதைச் சிரமதானம் செய்பவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. சிலர் வாய்க்குள் முணுமுணுத்தனர். சிலர் பக்கத்தில் நின்றவர்களுடன் குறைப்பட்டனர். ஆரூரன் ஆசிரியன். சிவபக்தன். தான் கற்பிக்கும் மாணவர்கள் அனைவரையும் அழைத்து வந்து கோவிலில் சிரமதானம் செய்விப்பான்.

பிள்ளைகள் வேலை செய்யாது அவனது கேலியான பேச்சைக் கேட்டு ரசித்துச் சிரித்தனர். சிலர் அவன் பேசுவது போலப் பேசிக் காட்டினர். அதனால் பெருங் கேடு வரும் என்றுணர்ந்த ஆரூரன் கதிரேசனிடம் வந்தான். அவன் மிகுந்த கோபத்துடன் வருகிறான் என்பதை உணர்ந்த கதிரேசன் கந்தவனத்தின் அருகே சென்றார்.

கந்தவனம், ‘‘உனக்குக் கடவுள் மீது நம்பிக்கையில்லாமல் இருக்கலாம். அதற்காய் பலரும் இருக்கும் இடத்தில் வந்து குழப்பம் செய்வது முறையல்ல. நீ சிவனை மட்டும் நிந்திக்கவில்லை.

குருக்களையும் மக்களையும் நிந்திக்கிறாய். இது பாவம். உனது விருப்பத்தை மற்றவர்களிடம் திணிக்காதே. அடுத்தவர்களைக் குறைகூறாதே. பேசாமல் இரு. இல்லாவிட்டால் இவ்விடத்தைவிட்டுப் போ. நீ மடத்தில் உணவு கொடுப்பதைப் பற்றி மிகமிகக் கேவலமாகக் கதைக்கிறாய். தவத்தோர் உண்ணும் உணவு அறப்பாங்கானது. தர்மத்தை வளர்ப்பது. திருவடியுணர்வைத் திருவருளால் பெற்றவர்கள் தான் சிவனடியார்கள். அவர்கள் திருவைந்தெழுத்தையோதியபடி கருமமாற்றுகின்றனர். அவர்களைக் குழப்பாதே. குருக்கள் சிவனது திருவடியுணர்வை ஐந்தெழுத்துக்களை ஓதித் திருவருளால் சிவஞானத்தேனைப் பெற்றவர். அவர் சிவஞானத் தேன் நிறைந்த குளத்தை ஒத்தவர். அவரை நிந்திக்காதே. அவரைச் சார்ந்த ஊரவர்கள் நல்ல முறையில் வாழ்கின்றனர். அதனால் அவர்கள் சகல செல்வங்களையும் பெற்றுள்ளனர். அவரைச் சாராதவர்கள் பிறவிப் பெரும் பயனை அறியாத பேதையராவர். தாகமுடையோர் அண்மையில் உள்ள நீர் நிலைகளுக்குச் சென்று நன்நீர் பருகி இன்புறாது, புரியாமல் வாழ்ந்து துன்பப்படுகிறார்கள். அதனால் நீ யாரைப் பற்றியும் எதுவும் கதைக்காமல் சென்று விடு இல்லாவிட்டால் துன்பப்படுவாய்'' என்றார் கதிரேசன்.

ஆரூரன் மாணவர்களுக்கு எதையோ கூறிக் கொண்டிருந்தான். கோவில் தலைவரைச் சுற்றிப் பலர் நின்று பார்த்துக் கதைத்துக் கொண்டிருந்தனர். மயூரன் முரடன். அவன் கோபத்துடன் மண்வெட்டியைத் தூக்கித் தோளில் வைத்தபடி எதையோ கூறிக் கொண்டிருந்தான். அதைப் பார்க்கக் கந்தவனத்திற்குப் பயமாக இருந்தது.

''யாரைக் குறை கூறினாலும் மக்கள் பொறுத்துக் கொள்வர். சுந்தரேஸ்வரக் குருக்களைப் பற்றிக் குறை கூறினால்

பொறுக்கமாட்டார்கள். அவர் வற்றாத நீரூற்று. சிவானந்தத் தேன் நிரம்பிய குளம். அதனால் ஊரே பயன் பெறுகிறது. அதனால் இவ்விடத்தை விட்டுப் போவது தான் உனக்குப் பாதுகாப்பு. இனி உனது விருப்பம்'' என்று கூறிவிட்டுச் சென்றார் கதிரேசன். இனி நிற்கக் கூடாதென்று உணர்ந்த கந்தவனம் மெதுவாகச் சென்றான்.

ஏழை நெஞ்சு

**111. அழுக்கினை ஓட்டி அறிவை நிறையீர்**
**தழுக்கிய நாளில் தருமமுஞ் செய்யீர்**
**விழித்திருந் தென்செய்வீர் வெம்மை பரந்து**
**இழிக்கவன் றென்செய்வீர் ஏழைநெஞ் சீரே.**

அன்று ஆடிஅமாவாசை. அதனால் பலர் கதிரேசனது வீட்டில் உணவருந்திவிட்டுத் தமது வீடுகளுக்குச் சென்று கொண்டிருந்தனர். பலர் உணவருந்த வந்து கொண்டிருந்தனர். அவர்களை வரவேற்று ஆசனத்தில் அமர்த்திக் கொண்டிருந்தார் கதிரேசன். கதிரேசனது மனைவியும் பிள்ளைகளும் உணவுண்பதற்காக வந்தமர்ந்தவர்களுக்கு உணவு பரிமாறிக்கொண்டிருந்தனர். அப்போது பெருங் குரலெடுத்து அழுதவாறு கந்தவனம் அங்கு வந்தான். கந்தவனம் தீயவன், ஏமாற்றுக்காரன். தீயவர்களை ஏவிவிட்டுத் தன் கருமம் பார்ப்பவன். தனது தாய் தந்தையர், மனைவி பிள்ளைகளுக்குக் கூட நல்ல உணவு கொடுக்காதவன்.

"இப்ப ஏன் அழுகிறாய்? விஷயத்தை சொல்லு'' என்று கதிரேசும் திருநாவுக்கரசும் பலமுறை கேட்டும் அதனைச் சொல்லாது அழுது கொண்டிருந்தான்.

“நீ அழுது முடித்துவிட்டு விஷயத்தைச் சொல். நான் வந்தவர்களுக்கு உணவு கொடுக்கப் போகிறேன்” என்று புறப்பட்டார் கதிரேசன்.

“நான் சொல்கிறேன்” என்ற கந்தவனம் விம்மி விம்மி அழுதான். பின் சொன்னான், “குமாரசாமி தந்த பணத்தையும் தங்கநகைகளையும் என்னிடம் உள்ள பணத்தையும் இரவு திருடர்கள் ஆயுத முனையில் கொள்ளையடித்துச் சென்று விட்டனர்” மீண்டும் அழுதான் கந்தவனம்.

“உனது மனதில் ஈவிரக்கம் இல்லை. அதனால் உனது மனதில் திருவருள் இல்லை. அதனால் ஆணவ முனைப்புடன் ஈவிரக்கம்பாராமல் நடப்பதால் தான் இந்நிலை ஏற்பட்டது. குமாரசாமி உனது கை ஆள். இருந்தும் அவனைக் கொடுமைப்படுத்தினாய். பயமுறுத்தினாய். அவன் கதிரேசனிடம் வந்து பணம் பெற்று உனக்குத் தந்தான். நீ அவனிடம் அறாவட்டி அறவிட்டாய். அத்துடன் ஏழை எளியவர்கள் பொறுப்பாகத் தந்துவிட்டுச் சிறிதளவு பணம் வாங்கும் பொன்னாபரணங்களை அபகரிப்பாய். உனக்குப் பணம் இருக்கிறது என்ற திமிர் அதிகம். நீ நல்ல நாள், பண்டிகை நாட்க் காலத்திலும் கோவிலுக்கு வந்ததில்லை. அத்துடன் அந்த நாட்களிற் கூட நீ ஏழை எளியவர்களுக்கு உணவு கொடுத்ததில்லை. அப்படியான உனக்கு எப்படி நல்லது நடக்கும்? சிவசிந்தனையும் அன்பும் கருணையும் இல்லாதவர்கள் கோடி கோடியாகப் பணம் வைத்திருந்தாலும் அவர்கள் பரம ஏழைகளைவிடக் கேவலமானவர்கள் என்று பெரியவர்கள் சொல்வார்கள். உனது வீட்டில் தினமும் இரவில் சண்டை நடைபெறும். இரவில் திருடர்கள் வந்தபோது நீங்கள் கூக்குரல் இட்டபோது நீங்கள் சண்டைபிடிக்கிறீர்கள் என்று அயலவர்கள் நினைத்தனர். அதனால் தான் களவு நடைபெற்றது.

சிவபுண்ணியத்தைச் செம்மையாகச் செய்யாவிட்டால் இப்படியான துன்பங்கள் தேடிவரும். இனியாவது திருந்திநட" என்றார் திருநாவுக்கரசு.

அதைக் கேட்ட கதிரேசன் கோபத்தோடு சொன்னார், "உனக்கு கதைக்கப் பேசத் தெரியாது. துன்பப்படுபவருடன் இப்படியா பேசுவது? நீ எத்தனை தரம் சொன்னாலும் திருந்த மாட்டாய்"

உள்ளபடி நடக்கும்

**112. தன்னை அறியாது தான்நல்ல ரென்னாதிங்**
**கின்மை யறியா திளையரென் றோராது**
**வன்மையில் வந்திடுங் கூற்றம் வருமுன்னந்**
**தன்மையின் நல்ல தவஞ்செய்யும் நீரே.**

சிவன்கோவில் மதிய நேரப்பூசை முடிந்தபின் அம்பலவாணர் அர்ச்சனைத் தட்டுடன் வந்தார். அன்று பிரதோச விரதம் ஒவ்வொரு பிரதோச விரத நாளிலும் சிவன்கோவில் மடத்தில் அம்பலவாணர் உணவு கொடுப்பார். அன்று அவர் தனது நண்பர்களுடன் மடத்திற்குச் சென்று உணவருந்திவிட்டு ஏழைகளுக்கு உடுப்பிடைவைகள் வழங்கினார். வறியமாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கினார்.

அம்பலவாணருக்கு நாற்பத்தைந்து வயது. அவர் ஓர் இளைஞனைப் போலச் சுறுசுறுப்பாக இருப்பார். அக்கிராமத்தில் பாடசாலைக்குச் செல்லாத மாணவர்களே இல்லை. அவர் தினமும் பாடசாலைக்குச் சென்று ஊரில் உள்ள எல்லா மாணவர்களும் வந்திருக்கிறார்களா என்று பார்ப்பார். யாராவது வராவிட்டால் வராத

மாணவரின் வீட்டிற்குச் சென்று விசாரிப்பார். மாணவர்கள் தகுந்த காரணமின்றிப் பாடசாலைக்குச் செல்லாவிட்டால் பெற்றோரைத் தண்டிப்பார். அவருக்கு மூன்று பெண்பிள்ளைகள். மூவரும் திருமணமாகாதவர்கள்.

அம்பலவாணர் கோவிலில் இருந்து வீட்டிற்கு வந்து ஒரு மணித்தியாலம் கூடக் கழிந்திருக்காது. அவரது வீட்டு வேலைக்காரன் மூச்சிரைக்க ஓடிவந்து கோவிலில் நின்றவர்களிடம் சொன்னான், “ஐயா, கோவிலால் வந்து கால் கழுவும் போது கிணற்றடியில் விழுந்து மயங்கிவிட்டார். நாம் ஓடோடிச் சென்று வைத்தியரை அழைத்து வந்தோம். அவரைப் பரிச்சோதித்து விட்டு அவர் இறந்துவிட்டதாகக் கூறினார். ஐயோ, புண்ணியவானைக் கவர யமனுக்கு எப்படி மனம் வந்தது? எனது நான்கு பிள்ளைகளையும் அவர் தான் கற்பிப்பவர். இனி நான் என்ன செய்வேன்?” என்று அழுதான்.

கோவிலடியில் நின்றோர் அம்பலவானரின் வீட்டிற்கு ஓடிச்சென்றனர். முற்றத்தில் ஏராளமான மக்கள் அழுது கொண்டிருந்தனர்.

“கண்கெட்ட யமன் ஈவிரக்கம் இல்லாமல் புண்ணியவானை அழைத்துச் சென்றுவிட்டார்.” என்று ஒரு பெண் பெருங்குரலில் கூறிக் கதறிக்கொண்டிருந்தாள்.

“இரக்கமில்லாத மகாபாவியே, உனக்குக் காலன் வரானா…?” என்றாள் இன்னொருத்தி.

“மூன்று பெண்பிள்ளைகளையும் கரை சேர்த்த பின்பு கவர்ந்திருந்தால் துக்கமில்லை” என்றாள் இன்னொருத்தி.

அம்பலவாணனின் மனைவி மயக்கமுற்றதால் அவளைத் தூக்கிக் கொண்டு வைத்தியரின் வீட்டிற்குச் சென்றனர்.

“பத்துநிமிடத்திற்கு முன்பு எனக்கருகில் இருந்து சாப்பிட்ட மனிசன். இது தான் வாழ்க்கை” என்று பெருமூச்சுவிட்டார் கதிரேசன்.

## அவன் செயல்

**113. துறந்தான் வழிமுதற் சுற்றமும் இல்லை**

**இறந்தான் வழிமுதல் இன்பமும் இல்லை**

**மறந்தான் வழிமுதல் வந்திலன் ஈசன்**

**அறந்தான் அறியும் அளவறி வாரே.**

சிவபாதம் பெரும் சிவபக்தர். எவ்வேளையிலும் சிவனை வழிபட்டபடி இருப்பார். அவர் ஒரு பெரும் விவசாயி. தானியங்களை விதைக்கு முன் சிவபூசை செய்வார். அவர் சிவசிந்தனையுடனே நீர் பாய்ச்சுபவர். அவரின் நினைவுகள் யாவும் சிவனைப் பற்றி இருந்தமையினால் அவர் எதைப் பற்றியும் நினைக்க மாட்டார். அவருக்கு ஐந்து பெண் பிள்ளைகள். மாப்பிள்ளை வீட்டார் அவரின் குணமறிந்து தேடி வந்து பெண்கேட்டனர். அவர் சிவசிந்தனையுடன் சம்மதித்தார். இளைய பெண்ணுக்குப் பணக்காரக் குடும்பத்தில் திருமணம் பேசி வந்தது. அந்த மாப்பிள்ளையை ஊரில் உள்ள ஒரு தனவந்தன் தனது மகளுக்குத் திருமணம் செய்ய விரும்பினான். மாப்பிள்ளை விரும்பவில்லை. பெண்வீட்டார் சிவபாதத்தைச் சந்தித்துத் தமது விருப்பத்தைத் தெரிவித்தனர். அதனால் அத்திருமணத்தைச் செய்ய

அவர் மறுத்துவிட்டார். பின் வேறொரு மாப்பிள்ளையைத் தனது மகளுக்குத் திருமணம் செய்து வைத்தார்.

முன்பு சிவபாதத்தின் மகளை விரும்பியவன் அத் தனவந்தனின் மகளைத் திருமணம் செய்ய மறுத்து இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்து விட்டான். அதனால் அப் பெண் தனக்குத் திருமணம் வேண்டாம் என்று கூறிவிட்டாள். அப் பெண்ணின் தந்தை சிவபாதத்திடம் வந்து சொன்னார், “ஐயா, நான் பெரும் தனவந்தன். இருந்தும் சிவநினைவில்லாதவன். அநியாயமான முறையில் பொருட்களைத் தேடினேன். அதனால் தான் எனது மகளின் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. அறநினைவும், தர்மசிந்தனையும் இல்லாதவர்கள் இறைவனிடமிருந்து அந்நியப்பட்டுவிடுவார்கள் என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். ஊரில் இறையுணர்வும் தர்மசிந்தனையும் உள்ளவர்கள் இறைவன் அருளால் நல்ல முறையில் வாழ்கிறார்கள். நான் பற்றுக்களுடன் வாழ்ந்ததால் தான் இந்நிலை ஏற்பட்டது. நான் விரும்பிய மாப்பிள்ளை மிகவும் வறிய குடும்பத்தில் உள்ள பெண்ணையே விரும்பிச் செய்துள்ளான். அதற்குக் காரணம் அந்த ஏழை சிவனின் பெரும் பக்தன் என்றறிந்தேன். சற்றும் எனக்கு அந்த நினைவு வரவில்லை. பணத்திமிரும் ஆணவமும் எனது பெண்ணின் வாழ்வைக் கெடுத்து விட்டது” என்று அழுதான்.

“சிவனை நினைத்திரு. அவனின் நினைப்போடு செயலாற்று. முடிந்தளவு தானதர்மம் செய். பற்றுடன் எதையும் செய்யாதே. சுற்றம் என்று எவனையும் நினைக்காதே. இறந்தவனைப்போல் வாழ். எல்லாப் பேரின்பமும் உன்னை வந்தடையும்” என்றார் சிவபாதம்.

## யமபயம்

**114. தான்தவஞ் செய்வதாஞ் செய்தவத் தவ்வழி**

**மான்தெய்வ மாக மதிக்கும் மனிதர்கள்**

**ஊன்தெய்வ மாக உயிர்க்கின்ற பல்லுயிர்**

**நான்தெய்வம் என்று நமன்வரு வானே.**

சிவபாதம் சிவ நினைவுடனும் பற்றற்றும் சிவனது திருவடிகளை நினைப்பதால் மக்கள் அவரைச் சிவஞானம் பெற்ற சிவன் என்று கூறி வணங்குவார்கள். கணபதி என்பவன் சிவபாதத்தோடு எந்நேரமும் இருப்பவன். அவர் செல்லும் இடமெல்லாம் செல்பவன். அவர் தனது தோட்டத்தில் வேலை செய்தால் அவனும் அவருடன் கூட வேலை செய்வான். ஊர் மக்களிடம் தனக்கு 'எல்லாம் சிவபாதம் தான். அவர் தான் நான் வணங்கும் சிவன்' என்பான்.

ஆறுமுகம் கணபதியின் நண்பன். அவன் கோவிலுக்குச் சென்றதேயில்லை. கணபதி சிவபாதத்தின் பொருட்களைத் தூக்கிக் கொண்டு அவரின் பின்னே பயபக்தியுடன் செல்லும்போது பரிகசிப்பான். அதைக் கணபதி கண்டு கொள்வதில்லை. அன்று ஆறுமுகம் வீதியால் செல்லும்போது மோட்டார் வாகனம் ஒன்று அவனை மோதிவிட்டு நில்லாமல் சென்றுவிட்டது. ஆபத்தான நிலையில் அவன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டான். அவனைப் பரிசோதித்த வைத்தியர்கள், 'நாம் செய்ய வேண்டிய சிகிச்சைகளைச் செய்து விட்டோம். இனி இறைவன்தான் துணை' என்றனர்.

இதைக் கேள்விப்பட்ட ஆறுமுகத்திற்கு மரணம் பற்றிய பயம் ஏற்பட்டது. திருமணமாகாது இருக்கும் தனது மகளையும் ஆதரவற்ற தனது மனைவியையும் நினைத்துக் கவலைப்பட்டான். யமன் தன்னை நெருங்காதிருக்க வேண்டுமென்று நினைத்தான். அதைத் தனது

நண்பனான கணபதிக்குக் கூறியபோது கணபதி சொன்னான், “நண்பா, திருவடியுணர்வில்லாதவர்களுக்குச் சிவஞானம் கிட்டாது. அதனால் இவர்கள் இறைவனிடம் இருந்து அந்நியப்பட்டு விடுவார்கள். இதனால் இவர்களுக்குக் கடுமையான நோய் வந்தால் யமபயம் வந்துவிடும். அதனால் இவர்கள் சிவனை விட யமனையே பெரிதாக எண்ணுவர். சிவ நினைவுள்ளவர்களுக்கு யமபயம் உண்டாகாது. அவர்கள் சிவனைத் தெய்வம் என நினைக்க, மற்றவர்கள் யமனைத் தெய்வமாக நினைப்பர். அதனால் யமபயம் நீங்கச் சிவனை வழிபடுவர். அத்துடன் சிவஞானிகள் சிவனுக்கு ஒப்பானவர்கள். அவர்களை வணங்குபவர்கள் தவம் செய்பவர்களாவர். அதனால் தான் நான் சிவபாதத்தைச் சிவனாக எண்ணி வணங்குகிறேன். எனக்கு யமபயம் இல்லை. அண்மையில் எனக்குக் கடும் நோய் வந்தது. வைத்தியர்கள் உனக்குச் சொன்னதையே எனக்கும் சொல்லினர். ஒருவன் இறக்கும் போது எதை நினைக்கிறானோ அதுவாவான் என்கிறது உபநிடதம். அதை நம்பிய நான் சிவனை நம்பினேன். எனது நோய் நீங்கிவிட்டது” என்றான் கணபதி.

புகழ்சேர்ப்பவன்

**115. திளைக்கும் வினைக்கடல தீர்வு தோணி**
**இளைப்பினை நீக்கும் இருவழி உண்டு**
**கிளைக்குந் தனக்கும்அக் கேடில் புகழோன்**
**விளைக்குந் தவம்அறம் மேற்றுணை யாமே**

சிவபாதம் பெரும் சிவபக்தர். பொருள் வேண்டி வருவோருக்குப் பொருட்கள் கொடுப்பார். உணவு வேண்டி வருவோருக்கு உணவு

கொடுப்பார். விதை தானியம் வேண்டி வருவோருக்கு விதை தானியங்களைக் கொடுப்பார். ஆலோசனைகள் பெற வருவோருக்கு தகுந்த ஆலோசனைகள் கூறுவார். அருள் வேண்டி வருவோர்க்கு அருளை அடையும் வழிவகைகளைச் சொல்லிக் கொடுப்பார்.

சிவபாதத்தின் மைத்துனன் பற்குணன். அவன் சிவபாதத்தின் மீது பொறாமை கொண்டவன். அதனால் மக்களிற் சிலரை ஏவி விட்டுச் சிவபாதத்தைக் கேலி செய்து மகிழ்ச்சி அடைவான்.

ஒருநாள் அவன் நன்றாக மது அருந்திவிட்டு தனது கையாளனான பரமசிவத்திற்கும் மது வாங்கி கொடுத்துவிட்டுச் சிவன் கோவிலில் சரியைத் தொண்டுபுரிந்து கொண்டிருக்கும் சிவபாதத்தைக் கேலி செய்யுமாறு கூறி அவனுடன் சிவன் கோவிலுக்குச் சென்றான்.

சிவபாதம் வெளிவீதியைத் துப்பரவு செய்து கொண்டிருந்தார். அவருடன் பலா் தொண்டுகள் செய்து கொண்டிருந்தனர். பற்குணத்தின் மகன் ஆசிரியராகக் கடமை புரிகிறான். அன்று அவனும் ஆசிரிய நண்பர்கள் சிலரும் சிவபாதத்திடம் ஆசிபெற வந்திருந்தனர், “ ஐயா, இன்று நான் பதவிஉயர்வுக்கான நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றவுள்ளேன். என்னை ஆசீர்வதியுங்கள்” என்று கூறி ஆரூரன் என்ற ஆசிரியன் சிவபாதத்தின் பாதங்களை பணிந்தான். அதன்பின் பலர் சிவபாதத்தின் பாதங்களைப் பணிந்தனர்.

“ ஐயா, உங்களைப் பணிந்து வணங்கினால் சிவனைப் பணிந்து வணங்கியமைக்குச் சமன். உங்களின் வாக்கும் சிவனின் வாக்கே” என்றான் ஆரூரன்.

சிவபாதம் பாதம் அவர்களுக்கு நீறு கொடுத்தார், ‘‘சிவனை நினைப்பவன் சகல சௌபாக்கியங்களையும் பெறுவான். உனக்கு அப்பதவி கிடைக்கும்’’ என்றார் சிவபாதம்.

மதுவைக் குடித்துவிட்டுப் பற்குணத்தின் ஏவலால் சிவபாதத்தை ஏசவந்த பரமசிவம் தான் வந்த காரியத்தை மறந்து சிவபாதத்தைப் பணிந்தான்.

‘‘மது அருந்தியவன் நீறு அணியக்கூடாது. என்னிடம் நீறு வாங்க வேண்டுமானால் குடியை விடு’’ என்றார் சிவபாதம்.

‘‘ அப்பா, நாம் வணங்கும் சிவன்தான் சிவபாதம் என்ற பெயருடன் நமது ஊரில் பிறந்து மக்களிற்கு வாழ்வளிக்கின்றார். நீங்கள் சிவபாதத்தின் மச்சானுடன் சேராதீர்கள். சேர்ந்தால் நீங்கள் செய்யும் பாவம் எங்களையும் சூழ்ந்து விடும். சிவபாதம் ஐயா செய்யும் தான தர்மங்களால் அவரது பரம்பரையும் எமது ஊரும் செல்வச்செழிப்புடன் இருக்கிறது. நீங்கள் அவரை நிந்தனை செய்து எமது குடும்பத்தையும் பரம்பரையையும் கெடுத்துவிடாதீர்கள். நாம் செய்யும் பாவம் கடலைப்போன்று பெரியது. அதில் துன்பங்கள்தான் கூட. அத்துன்பங்களைக் கடக்க உதவும் தோணி தான் தானதர்மம் என்று சிவபாதம் ஐயா கோவிலில் பிரசங்கம் செய்யும் போது கூறினவர் அதனால் பாவம் செய்யாது தர்மம் செய்யுங்கள்’’ என்று அவரது மகன் பகீரதன் கூறியது அவரது காதுகளில் எதிரொலித்தது.

‘‘ஐயா, இனிமேல் நான் குடிக்க மாட்டேன். பாவமும் செய்யமாட்டேன்’’ என்று கூறிவிட்டு பற்குணத்தின் அருகே சென்று சொன்னான், ‘‘உனது பணத்திற்காக உன்னுடன் சேர்ந்து இனி நான் பாவம் செய்யமாட்டேன். எனது மகன் இம்முறை உயர்தரப் பரீட்சை

எடுக்கிறான். அதில் சித்தியடைய வேண்டுமானால் சிவபாதத்தின் ஆசி வேண்டும். ஒருவன் செய்யும் தானதர்மம் தான் அவனைக் காப்பாற்றுவது. ஒருவன் செய்யும் பாவம்தான் அவனை அழிப்பது. எனவே என்னை நான் அழிக்க விரும்பவில்லை. என்னால் எனக்கும் எனது பரம்பரைக்கும் கேடு வருவதை நான் விரும்பவில்லை'' என்று கூறிவிட்டுப் பற்குணத்தின் பதிலை எதிர்பார்க்காது நடந்தான் பரமசிவம்.

துன்பப்படாதவர்கள்

**116. பற்றது வாய்நின்ற பற்றினைப் பார்மிசை**
**அற்றம் உரையான் அறநெறிக் கல்லது**
**உற்றுங்க ளால்ஒன்றும் ஈந்தது வேதுணை**
**மற்றண்ணல் வைத்த வழிகொள்ளு மாறே.**

மறுநாள் பரமசிவம் காலையில் எழுந்து நீராடிவிட்டுச் சிவன் கோவிலுக்கு வந்தார். ஒரு போதும் அர்ச்சனைத் தட்டுடன் கோவிலுக்கு வராத பரமசிவம் அன்று அர்ச்சனைத் தட்டுடன் வந்ததை அங்குள்ளோர் ஆச்சரியத்துடன் பார்த்தனர்.

பரமசிவத்தை ஆசாரசீலராகக் கண்ட சிவபாதம் அவனுக்கு நீறு கொடுத்தார், ''ஐயா, அனைத்துயிர்களுக்கும் பற்றுக் கோடாக நின்றருளும் சிவபெருமானை வணங்கும் பலர் எந்தத் துன்பங்களுக்கும் ஆளாகமாட்டாரகள் என்றும் அவர்கள் அறமில்லாத செயல்களைச் செய்யாததால் அவர்களும் அவர்களது குடும்பத்தினரும் மேலான வாழ்வு வாழ்கின்றனர் என்றும் நீங்கள் கூறக் கேட்ட எனது மகன் பகீரதன், தனது வாழ்வு என்னால் கெட்டுவிடும் என்று பயப்படுகிறான். தான் இம்முறை உயர்தரப் பரீட்சை எழுதவுள்ளதாகவும் அதில் சித்தியடைந்து மருத்துவக் கல்வி கற்பதே தனது நோக்கம் என்றும், அது நான்

செய்யும் பாவங்களால் கெட்டுவிடும் என்றும் கூறுகின்றான். அவன்படும் வேதனையைச் சகிக்கமுடியாத நான் இன்று முதல் சிவபக்தனாகி விட முடிவு செய்துள்ளேன். என்னை ஆசீர்வதியுங்கள்'' என்று கூறிச் சிவபாதத்தின் பாதங்களைக் கட்டிப்பிடித்தான்.

''ஒருவன் தான் செய்பவை யாவும் பாவம் என்றுணர்ந்தால், உயிர்களது மேம்பாட்டை விரும்பும் சிவன் அவனது உள்ளத்தில் புகுந்து அவனை ஆட்கொண்டுவிடுவார். அதனால் நீ கவலை கொள்ளாதே. பாவம் செய்யாதே. அறநெறி தவறாதே. சிவனே கதி, அவனே வழிகாட்டி, அவனை அடைதலே நோக்கம், அவனைச் சரணடைந்தால் நினைத்தவையெல்லாம் கிடைக்கும். குடும்பம் முன்னேறும் என்று நினைத்துச் செயற்படு. எல்லாம் உன்னை வந்தடையச் சிவன் அருள் செய்வான்'' என்றார் சிவபாதம்.

## 10. அறஞ்செய்யான் திறம்

எட்டிப் பழம்

**117. எட்டி பழுத்த இருங்கனி வீழ்ந்தன**
**ஒட்டிய நல்லறஞ் செய்யா தவர்செல்வம்**
**வட்டிகொண் டீட்டியே மண்ணின் முகந்திடும்**
**பட்டிப் பதகர் பயன் அறி யாரே.**

மகேஸ்வரன் பெரும் தனவந்தன். அவன் ஏழை எளியவர்களின் பொருட்களை வாங்கி வைத்துக் கொண்டு வட்டிக்குப் பணம் கொடுப்பவன். கொடுக்கும் போது முதல் மாத வட்டிப்பணத்தைக் கழித்துக் கொண்டே கொடுப்பான். பின் பணம் கொடுக்கும் போது பணம்

வாங்கிய நாளில் இருந்து வட்டிபெறுவான். வட்டியும் முதலும் கட்ட வேண்டி காலம் கழிந்தால் பொருட்களைக் கொடுக்க மாட்டான். ஏழைவிவசாயிகள் விவசாயத்தின் பொருட்டுத் தமது நிலத்தை அடைமானம் வைத்துப் பணத்தைப் பெற்றால் காலம் கடந்து விட்டது என்று சொல்லி நிலத்தை அபகரித்துவிடுவான்.

பட்டணத்தில் அவனுக்கொரு பெரிய வியாபார நிறுவனம் இருந்தது. அது பலகோடி ரூபா பெறுமதியானது. அவ்வூரில் சிவஞானம் என்றொரு வர்த்தகர் இருந்தார். அவர் பெரும் சிவபக்தர். ஊர் மக்களுக்குக் கடனுக்குப் பொருட்களைக் கொடுப்பார். விவசாயிகளுக்கு பணமும் உரவகையும் கிருமி நாசினியும் கடனுக்குக் கொடுப்பார். பின் விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களைக் கொடுத்துக் கடனைக் கழிப்பார்கள். அவர் தான் கொடுக்கும் பணத்திற்கு வட்டி வாங்குவதில்லை. ஒரு நாள் மகேஸ்வரனின் வர்த்தக நிலையம் மின் ஒழுக்கால் தீப்பற்றி விட்டது. அதன் அருகே சிவஞானத்தின் வியாபார நிலையம் இருந்தது. ஊரவர்கள் எல்லோரும் திரண்டு சென்று சிவஞானத்தின் வியாபார நிலையத்தில் இருந்த பெறுமதியான பொருட்களையெல்லாம் தூக்கிச் சென்று பாதுகாப்பான இடத்தில் வைத்தனர். தீ அணைப்புப் படையினர் வந்தபோது மகேஸ்வரனின் வியாபாரநிலையம் முற்றாக எரிந்திருந்தது. தீயணைப்புப் படைவீரர்களும் சிவஞானத்தின் வியாபார நிலையத்திற்குத் தீயால் பாதிப்பு ஏற்படாதவாறு பாதுகாத்தனர்.

இதைப் பார்த்துக் கோபம் கொண்ட மகேஸ்வரன், “எனது வியாபார நிலையம் எரியும் போது யாரும் வந்து உதவவில்லை. நீங்கள் மனிதர்களா?” என்று கோபமாகக் கேட்டான்.

அதற்கு ஒரு வயோதிபர் சொன்னார், ‘‘ஐயா, நல்லறம் செய்தவனது செல்வத்தை இறைவன் பாதுகாத்துக் கொடுப்பான். தர்மம் செய்யாது அதிக வட்டி வாங்கியும், மக்களை வஞ்சித்தும் செல்வந்தனானவனின் செல்வம் இயற்கையால் அழிக்கப்படும். சிவஞானத்தின் செல்வம் நல்ல கனி தரும் மரத்தைப் போன்றது. உனது செல்வம் எட்டிக் கனியைப் போன்றது. அதனால் தான் நாம் சிவஞானத்தின் செல்வத்தைக் காப்பாற்றினோம். அது எமது செல்வம். தர்மம் செய்பவனுக்கு அழிவுவராது என்பதை நீ புரியாததால் தான் உனது செல்வம் அழிந்தது. இனியாவது திருந்தி வாழ்’’ என்றார்.

கண்டும் அறியாதார்

**118. ஒழிந்தன காலங்கள் ஊழியும் போயின**
**கழிந்தன கற்பனை நாளுங் குறுகிப்**
**பிழிந்தன போலத்தம் பேரிடர் ஆக்கை**
**அழிந்தன கண்டும் அறம்அறி யாரே.**

சிவசிதம்பரம் பெரும் தனவந்தன். எனினும் எச்சில் கையாற் கூடக் காகம் கலைக்காதவன். அவனது மூத்த சகோதரன் நாகராசா. அவன் சிவசிதம்பரத்திடம் வந்து சொன்னான், ‘‘எனது மகளைப் பெண் பார்க்க அயலூரில் வாழும் பெரும் தனவந்தனும் அவரது மகனும் வருகின்றனர். பல கோடி ரூபா பெறுமதியான தங்க நகைகளும், ஆடம்பரமான வீடுகளும், மோட்டார் வண்டியும், பணமும் கொடுக்கிறேன். எனது மகள் வாழ்நாள் முழுவதும் செல்வச் செழிப்புடன் வாழவேண்டும். அதற்காகத் தான் நான் அநாவசியச் செலவுகளைக் குறைத்துப் பணத்தைத் தேடினேன். நான் தான தர்மம் கூடச் செய்ததில்லை. ஏழைகள் கல்வி கற்பதற்காகப் பாடசாலை ஒன்றைக் கட்டுவதற்காக நிதி

சேகரிக்க வந்தனர். நான் கொடுக்கவில்லை. நீங்களும் கொடுக்கக் கூடாது. கஷ்டப்பட்டு உழைக்காமல் இருந்து விட்டு மற்றவர்களின் உழைப்பைத் தான தர்மம் என்று சுரண்டி வாழப் பலர் பழகிவிட்டார்கள்'' என்றார்.

“என்னிடமும் வந்தார்கள் நான் ஏசி அனுப்பிவிட்டேன். இப்படிப் பலர் பிழைப்பு நடத்துகிறார்கள்'' என்றார் சிவசிதம்பரம்.

ஒரு வாரத்தின் பின் சிவசிதம்பரத்தின் மகளுக்குக் கோலாகலமாகத் திருமணம் நடைபெற்றது. மறு நாள் சிவசிதம்பரத்தின் மகளும் கணவனும் சென்ற மோட்டார் வண்டி விபத்துக்குள்ளாகி அந்த இடத்திலேயே இருவரும் மரணமானார்கள்.

“ஐயோ, என்னால் எழுந்து நடக்க முடியவில்லை. உடல் சோர்கிறது. கை கால்கள் இயங்க மறுக்கின்றன. அதனால் என்னைப் பார்ப்பதற்காகப் பெரும் தொகையான பணத்தைக் கொடுத்து மகளுக்குத் திருமணம் செய்து வைத்தேன். அவர்கள் போய்ச் சேர்ந்து விட்டார்கள். இனி யார் என்னைப் பராமரிப்பது?. மனைவியும் பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்டுவிட்டாள். நான் என்ன செய்வேன்?'' என்று அழுதான் நாகராசா.

ஒரு மாதம் கழிந்த பின் சிவசிதம்பரத்தின் வீட்டிற்குக் குமாரசாமி என்ற தொழிலாளி சென்று சொன்னான், “ஐயா, எனது மகளின் பாடசாலைக் கட்டணம் கட்டவில்லை. ஆயிரம் ரூபா தந்து உதவுங்கள். நான் ஒரு மாதத்தில் திருப்பித் தந்துவிடுகின்றேன்.''

“உன்னிடம் பணம் இல்லா விட்டால் ஏன் பிள்ளையைப் படிப்பிக்கிறாய்?. பாடசாலையால் மறித்துக் கூலி வேலைக்கு அனுப்பு” என்றார் சிவசிதம்பரம்.

“ஐயா, உங்களது சகோதரர் பெரிய தனவந்தர். கோடிக்கணக்காகப் பொருட்களைக் கொடுத்துத் தனது மகளுக்குத் திருமணம் செய்து வைத்தார். அவர் தனது மகளின் வாழ்வைப் பற்றி எவ்வளவு கற்பனை செய்திருந்தார். அத்துடன் அவர் வயோதிபம் அடைந்த தன்னைப் பார்ப்பாள் என்றும் நினைத்திருந்தார். எல்லாம் போய்விட்டது. இவைகளைப் பார்த்தாவது திருந்துங்கள். ஊரில் எத்தனை சாவு நடைபெறுகிறது. எத்தனை பிரச்சினைகள் நடக்கிறது. தான தர்மம் செய்து வாழ்பவனுக்கும் துன்பங்கள் வரும். ஆனால் அவனுக்கு உதவ ஆயிரம் பேர் வருவார்கள். தான தர்மம் செய்யாத உங்கள் சகோதரனைப் போன்றவர்களுக்கு உதவ யாரும் முன்வரமாட்டார்கள். உங்கள் சகோதரன் உதவியில்லாமல் பெரும் துன்பப்படுகிறார்” என்று கூறிவிட்டுச் சென்றான் குமாரசாமி.

அறியாதவர்

**119. அறம்அறி யார்அண்ணல் பாதம் நினையுந்**
**திறம்அறி யார்சிவ லோக நகர்குப்**
**புறம்அறி யார்பலர் பொய்ம்மொழி கேட்டு**
**மறம்அறி வார்பகை மன்னிநின் றாரே.**

சிவன் கோவிலில் அன்றைய மதியநேரப்பூசை முடிந்ததும் அன்னதானம் வழங்கப்பட்டது. அருளம்பலம் என்ற சிவபக்தர் மாதமொருமுறை சிவன் கோவிலில் அன்னதானம் வழங்குவார். அன்று அன்னதானம் முடிவடைந்ததும் அவர் வீட்டுக்குச் சென்றார். செல்லும்

வழியில் நாகராசாவும் அவனது நண்பர்களான சிவராசாவும் சின்னத்தம்பியும் வந்தனர்.

அவர்கள் மூவரும் சிவனின் பெருமைகளை அறியாது நிந்தனை செய்பவர்கள். அதனால் அவர்களின் முகத்தில் விழிப்பதே பாவம் என்று நினைத்த அருளம்பலம், அவர்களைக் காணாதவர் போலச் சென்றார்.

''தாம்பெரும் சிவபக்தர்கள் என்று கூறி ஊரை ஏமாற்றிக் காலங்கழிக்கும் பலர் இவ்வூரில் வாழ்கிறார்கள். அதில் இவரும் ஒருவர்'' என்றான் நாகராசா.

''ஓம் ஓம் கதிரேசன் இவர்களுக்கெல்லாம் தலைவர். அவருக்கு கோவிலால் நல்ல வருமானம். பிள்ளைகளெல்லாம் நல்லாயிருக்கு. பிறகேன் ஊரை ஏமாற்றிப் பிழைப்பான்'' என்றான் சிவராசா.

''சிவன் அது சொய்வார் இது சொய்வார் என்று மக்களுக்கு ஆசைகளைக் காட்டி அவர்களை நம்பப்பண்ணி அவர்களிடம் பணம் பெற்று வாழ்கிறார்கள். சனம் கேவலப்படுத்தியும் உணர்கிறார்களில்லை'' என்றான் சின்னத்தம்பி.

அருளம்பலத்திற்கு அளவுக்கதிகமான கோபம் வந்தது, ''சிவனின் பெருமைகளையும், சுவர்க்க வாழ்வைத்தரும் பேரின்பமயமான முத்தியைப் பற்றியும் அறியாதவர்கள் வாய்க்கு வந்தபடி கதைப்பர். இவர்கள் உலகின் போக்கைக்கூட உணர்வதில்லை. கண்ணிருந்தும் குருடராக, காதிருந்தும் செவிடராக, பகுத்தறிவிருந்தும் மூடராக, வாயிருந்தும் பைத்தியக்காரராக வாழ்கிறார்கள். அவர்களுக்கு அவர்களைப் போன்ற சிவநினைவில்லாதவர்கள் கூறுவது தான் உண்மை'' என்று கூறும்போது அங்கே வந்த கதிரேசன், ''சிவனின்

பெருமைகளை அறியாதவர்களைக் காண்பதே பாவம். நீ கதைக்கிறாய். வாபோகலாம்'' என்று கூறிவிட்டு அருளம்பலத்தின் கையைப்பிடித்து அழைத்துச் சென்றார்.

கருமியின் நிலை

**120. இருமலும் சோகையும் ஈளையும் வெப்புந்**
**தருமஞ்செய் யாதவர் தம்பால தாகும்**
**உருமிடி நாக முரோணி கழலை**
**தருமஞ்செய் வார்பக்கல் தாழகி லாவே.**

சுந்தரமூர்த்தி பெரிய வர்த்தகன். அவனிடம் பத்துக் கப்பல்கள் இருந்தன. அவை ஒவ்வொரு நாட்டிற்கும் சென்று விலையுயர்ந்த பொருட்களை ஏற்றிவரும். அவரிடம் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்தனர்.

சுந்தரமூர்த்திக்குக் கடவுள் நம்பிக்கை இல்லை. அவர் ஒரு நாளும் கோவிலுக்குச் சென்றதில்லை. தானதர்மங்களும் செய்ததில்லை.

சுந்தரம் அவரின் வீட்டில் வேலை செய்பவன். விறகு கொத்துவது, மரங்களுக்கு நீர்பாய்ச்சுவது, சுந்தரமூர்த்தி சொல்லும் வேலைகளைச் செய்வதே அவனது முக்கிய தொழில்.

அன்று சுந்தரமூர்த்தி வெளியூரில் நடைபெறும் வியாபாரக் கருத்தரங்கிற்குச் செல்லவிருந்தார். அதற்கான ஆயத்தங்களைச் சுந்தரம் செய்து முடித்திருந்தான். ஒன்பது மணிக்குச் செல்ல வேண்டும் என்ற

சுந்தரமூர்த்தி பத்து மணியாகியும் புறப்படவில்லை. சுந்தரம் அவரது அறைக்குள் சென்றான். அவர் கட்டிலில் படுத்திருந்து மூச்சுவிடாமல் இருமிக்கொண்டிருந்தார். அவரது நெஞ்சிலிருந்து “கிர்கிர்” என்ற சத்தம் வந்தது.

சுந்தரத்திற்கு அறுபது வயது எனினும் இருபது வயது இளைஞனைப் போலவே இருந்தான். அவன் நோயென்று ஒரு போதும் வேலைக்கு வராது நின்றதில்லை. சிவன்கோவில் கொடியேறினால் தேர்தீர்த்தம் முடியும் வரை வேலைக்கு வரமாட்டான். அவனைப் பார்க்கச் சுந்தரமூர்த்திக்குப் பொறாமையாக இருக்கும், “என்னிடம் கோடிக்கணக்கான சொத்திருக்கு. ஆனால் எதையும் உண்ணமுடியவில்லை. தேவைக்குமேல் பணமிருக்கு அதனால் நோய்களைச் சுகப்படுத்த முடியவில்லை. சுந்தரம் பரம ஏழை. சத்தான உணவு வாங்கப் பணமில்லை. ஆனால் அவனுக்கு வருத்தமில்லை. எனக்கு இரத்த குறைபாட்டால் சோகை நோய் வந்துள்ளது. இது ஏன்?” என்று ஒரு நாள் சுந்தரமூர்த்தி சுந்தரத்திடம் கேட்டான்.

“ஐயா, சிவநினைவோடு தானதருமம் செய்பவர்களுக்கு எந்த நோயும் வராது. சிவன் வைத்தியநாதன். அத்துடன் உயிர்களின் தந்தை. தந்தை பிள்ளைகளுக்குத் துன்பம் செய்வாரா..? தானதர்மம் செய்பவர்கள் தானதர்மம் செய்வதற்காக உழைத்தல் வேண்டும். அத்துடன் பாவபுண்ணியங்களில் நம்பிக்கையுடையோர் தீய செயல்கள் எவற்றையும் செய்யமாட்டார்கள். அதனால் அச்சம், பயம், சோர்வு, நோய்கள் எவையும் அவர்களை அண்டமாட்டாது. ஊரிலுள்ள பெரியவர்களையும் தனவந்தர்களையும் நினைத்துப்பாருங்கள். பெரியவர்களுக்கு நோய்கள் இல்லாததால் ஆரோக்கியமாக இருக்கிறார்கள். தனவந்தர்கள் தீயவழியில் சேர்த்த பணத்தின் ஒரு பகுதியைக் கோவில்களுக்கும்

தானதர்மங்கள் செய்யவும் பயன்படுத்துகிறார்கள். அப்புண்ணிய பலன் அவர்களைச் சேர்வதில்லை. அவர்கள் ஏமாற்றியவர்களையே சென்றடைகிறது. அதனால் தான் தனவந்தர்கள் நோய்கள் பலவற்றுடன் துன்பத்தோடு வாழ்கிறார்கள்'' என்றான் சுந்தரம்.

“உண்மை தான்'' என்று நினைத்தார் சுந்தரமூர்த்தி.

சிவப்பணிகள்

**121. பரவப் படுவான் பரமனை ஏத்தார்**
**இரவலர்க் கீதலை யாயினும் ஈயார்**
**கரகத்தால் நீரட்டிக் காவை வளர்க்கார்**
**நரகத்தில் நிற்றிரோ நன்னெஞ்சி னீரே.**

சுந்தரம், சுந்தரமூர்த்தியின் வீட்டில் தான் காலை உணவை உண்பான். அன்று தாயின் திவசம் என்று கூறிக்காலை உணவை அவன் உண்ணவில்லை. அவன் அந்த மாதச் சம்பளத்தை முற்பணமாகக் கேட்டான், “ஐயா, அம்மாவின் திவசத்தன்று நான் சிவன் கோவிலில் அன்னதானம் செய்வது உங்களுக்குத் தெரியும். வழமை போல எனது சம்பளத்தை முற்பணமாகத் தாருங்கள்'' என்று கேட்டான்.

சுந்தரமூர்த்தி மறுபேச்சுப்பேசாது அவன் கேட்ட பணத்தைக் கொடுத்துவிட்டுச் சொன்னார், “நான் வெளியூருக்குச் செல்ல வேண்டும். ஒரு வாரத்திற்கு இங்கேயே அம்மாவுக்குத் துணையாகத் தங்கியிரு''

“சரி ஐயா. ஆனால் மூன்று நாட்களுக்கொரு முறை நான் சிவன்கோவில் பூங்காவிற்கு நீர்பாய்ச்சுபவன். அதனால் நீர்பாய்ச்சும் நாட்களில் சற்றுத் தாமதமாக வருகிறேன்'' என்றான்.

“வேறு யாரையாவது ஒழுங்கு செய்யக்கூடாதா..?” என்று கேட்டார் சுந்தரமூர்த்தி.

“இதை நான் தொண்டாகச் செய்து வருகிறேன். அதைச் செய்யாவிட்டால் எனக்கு நிம்மதியிராது. அம்மாவினது திவசத்தைச் செய்யாவிட்டால் அம்மா கனவில் வந்து அழுவா. மன்னவர்களும் மண்ணுலகத்தவர்களும் விண்ணுலகத்தவர்களும் தம் தம் தலைவனெனப் போற்றித் துதிக்கும் சிவனுக்கு அச்சோலையில் இருந்துதான் மலர்கள் பறிக்கப்பட்டு அர்ப்பணம் செய்யப்படுகிறது. அதைச் செய்தால் தேவருலகப்பேறு கிடைக்கும். எனது மகன் இம்முறை மருத்துவக் கல்லூரியின் புகுமுகப் பரீட்சை எழுதவிருக்கிறான். நான் தானதர்மங்களும், சோலை வளர்ப்பும் செய்தல் வேண்டும்’’ என்றான் சுந்தரம்.

சுந்தரம் சென்றபின் சுந்தரமூர்த்தி நினைத்துப் பார்த்தார். சுந்தரம் மகிழ்வுடன் வாழ்கிறான். பிள்ளைகள் நன்றாகக்கல்வி கற்கின்றனர். ஆனால் பணமில்லை. என்னிடம் பணமிருக்கு மகிழ்வில்லை. பிள்ளைகளும் மூடர்கள். இது ஏன்..? சிவவழிபாட்டால் தான் இவை நடைபெறுகின்றன போலும். நானும் சிவனை வழிபட வேண்டும்’’ என்று நினைத்தார் சுந்தரமூர்த்தி.

மகிழ்வான வாழ்வு

**122. வழிநடப் பாரின்றி வானோர் உலகங்**
**கழிநடப் பார்நடந் தார்கரும் பாரும்**
**மழிநடக் கும்வினை மாசற வோட்டிட்டு**
**ஒழிநடப் பார்வினை ஓங்கிநின் றாரே.**

அன்று மாலை மகிழ்வுடன் வேலையை முடித்து விட்டு வீட்டுக்குச் செல்லத் தயாரானான் சுந்தரம். அங்கு வந்த சுந்தரமூர்த்தி, சுந்தரத்தை அழைத்துச் சொன்னார், ''சுந்தரம், அம்மா சிவன் கோவிலுக்குச் செல்லப்போகிறாவாம். துணையாக நீயும் போட்டு வா''

''சரி ஐயா'' என்று மிகுந்த மகிழ்வுடன் சொன்னான் சுந்தரம்.

பெரும்பாலும் வேலை முடிந்தபின் சிறுவேலையைக்கூடச் சொன்னாலும் கோவிலுக்குப் போகவேண்டும், மகளைக் கோவிலுக்கு அழைத்துச் செல்ல வேண்டும், மனைவியை தாய் வீட்டிற்கு அழைத்துச் செல்ல வேண்டும்'' என்று கூறுபவன் அன்று மகிழ்வுடன் ஒப்புக்கொண்டது சுந்தரமூர்த்திக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. அதனால் கேட்டார், ''இன்றைக்கு உனக்கு வீட்டில் வேலைகள் இல்லையா..?''

மகிழ்வுடன் சிரித்த சுந்தரம் சொன்னான், ''இன்றைக்கு எனது மனைவியின் பிறந்த நாள். அத்துடன் இன்று எமது திருமணநாள். அதனால் மனைவியும் நானும் பிள்ளைகளும் சிவனுக்கு அபிஷேகம் செய்கிறோம். அது முடிய மடத்தில் அன்னதானம் கொடுக்கிறோம். மனைவியின் உறவினர்களும் எனது உறவினர்களும் நண்பர்களும் எம்மை வாழ்த்தக் கோவிலுக்கு வருவார்கள். அம்மாவுடன் நீங்களும் கோவிலுக்கு வந்து எம்மை ஆசிர்வதியுங்கள்'' உற்சாகத்துடன் கேட்டான் சுந்தரம். அதைச் சுந்தரமூர்த்தி எதிர்பார்க்கவில்லை. இதைச்சாட்டாக வைத்துக் கோவிலுக்குச் செல்வோம் என்று நினைத்த சுந்தரமூர்த்தி, ''சரி'' என்று சொன்னார்.

சுந்தரத்திற்குப் பெரும் மகிழ்ச்சியாக இருந்தது. கோவிற் பக்கம் வராத சுந்தரமூர்த்தி கோவிலுக்கு வரச்சம்மதித்தது அவரது அவரது மனைவி சகுந்தலைக்குப் பெருமகிழ்வைக் கொடுத்தது.

சுந்தரத்தின் உறவினர்கள் நண்பர்களென முன்னூறு பேர் கோவிலுக்கு வந்திருந்தனர். அவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஏழைகள். அவர்கள் எல்லோருடைய நெற்றியிலும் நீறு இருந்தது. எல்லோரும் மிக்க மகிழ்வுடன் இருந்தது சுந்தரமூர்த்திக்கு ஆச்சரியமாக இருந்தது. பூசைமுடியச் சுந்தரேஸ்வரக் குருக்கள் மாலைகள் இரண்டு கொண்டு வந்து ஒன்றைச் சுந்தரத்திடமும் மற்றதை அவனது மனைவியிடமும் கொடுத்து மாலைகளைப் போடச் சொன்னார். சுந்தரம் அன்று, தான் திருமணம் செய்யப்போவதாக எண்ணி மகிழ்ந்தான்.

சுந்தரத்தின் தகப்பனும் அவனது மனைவியின் பெற்றோரும் மிக்க மகிழ்வுடன் அவர்களை வாழ்த்தினர்.

நீறு கொடுத்த குருக்கள் அவர்களை வாழ்த்திவிட்டுச் சொன்னார், “சிவனும் உமையும் போல மகிழ்வுடன் இணைபிரியாது தம்பதியினர் வாழவேண்டும். அப்படித்தான் சுந்தரமும் மனைவியும் வாழ்கிறார்கள். அறவழியில் சிவனின் நினைப்போடு வாழ்பவர்கள் பூமியிலும் தேவர்களைப் போலவே வாழ்ந்து பின்தேவருலகை அடைந்து சிவனின் திருவடி நிழலில் பேரின்பமாக வாழ்கின்றனர். அறவழியில் வாழாமலும், சிவனின் பெருமைகளை அறியாததால் அவனை வணங்காமலும் வாழ்பவர்கள் இவ்வுலகிலும் துன்பங்களுடன் கூடிய நரக வாழ்வே வாழ்கின்றனர். அதனால் வினைகளைப் பெருக்கிப் பிறப்புக்களை அதிகரித்து யுகம்யுகமாக நரக வாழ்வு வாழ்கின்றனர். சுந்தரம் அறவழியில் வாழும் பெரும் சிவபக்தன். அவன் சகல

சௌபாக்கியங்களையும் பெற்று வாழ வேண்டும் என வாழ்த்துகிறேன்'' என்றார்.

சுந்தரமூர்த்தி அதைக் கேட்டுத் திகைத்துவிட்டார். பணமும் பணக்காரர்களின் நட்பும் தான் வாழ்க்கை என்று நினைத்தவருக்குக் குருக்களின் வாழ்த்துரை மனதை உறுத்தியது, ''எவ்வளவு தான் பணமிருந்தாலும் நிம்மதியாகவோ மகிழ்வாகவோ என்னாலும் எனது நண்பர்களாலும் வாழமுடியவில்லை. பணமில்லாத பரமஏழை சிவனின் நினைவுடன் பூரணமகிழ்வாக வாழ்கிறான்'' என்று நினைத்தார்.

## திருவடியைக் காண்போர்

123. **கனிந்தவர் ஈசன் கழலடி காண்பர்**
**துணிந்தவர் ஈசன் துறக்கம தாள்வர்**
**மலிந்தவர் மாளுந் துணையுமொன் றின்றி**
**மெலிந்த சினத்தினுள் வீழ்ந்தொழிந் தாரே.**

அருளம்பலம் பெரும் சிவபக்தர். துன்பப்படும் ஏழைகள் கேட்காமலே அவர்களது துன்பத்தை உணர்ந்து உதவுபவர். சிவலிங்கம் அவ்வூரில் வாழும் மாற்றுவலுவுள்ள விவசாயி. அவனுக்குத் தேவையான உதவிகளை அருளம்பலம் செய்வார். அவனது பிள்ளைகள் கல்வியில் விற்பன்னர்கள். ஆனால் வறுமை காரணமாகப் பாடசாலைக்குச் செல்வதில்லை. சிவலிங்கத்தின் பிள்ளைகளுக்கும் ஊரிலுள்ள ஏழைப்பிள்ளைகளுக்கும் அருளம்பலம் கற்க உதவி செய்து வந்தார். அவரிடம் உதவி பெற்றுக் கற்ற பலர் நல்ல நிலையில் இருக்கிறார்கள்.

நாகராசா சிவசிந்தனை இல்லாதவன். அவன் இரப்பவர்களைக் கண்டால் கோபங் கொண்டு தகாத வார்த்தைகளால் பேசித்துரத்துவான்.

சிவலிங்கம் ஒரு நாள் நாகராசாவிடம் சென்று தனது பிள்ளைகள் கற்க உதவி செய்யுமாறு கேட்டான்.

சிவலிங்கத்தைக் கண்ட நாகராசா மிகுந்த கோபத்துடன் சொன்னான், ‘‘நீ வலது குறைந்தவன். அதனால் தொழில் செய்ய முடியாதவன். உன்னையே கவனிக்க முடியாத நீ ஏன் கலியாணம் செய்தாய்?. இப்ப உனக்கும் உனது பிள்ளைகள் ஐந்திற்கும் தினமும் உதவ யார் இருக்கிறார்கள்?. ஒரு நாள் இருநாளைக்கென்றால் உதவலாம். தினமும் உதவ முடியுமோ?. இந்தா இதைக் கொண்டு போ. இனிமேல் இந்தப் பக்கம் வராதே’’ என்றார்.

காலம் உருண்டது. சிவலிங்கத்தின் மூத்தமகன் மருத்துவராகிவிட்டான். ஏனைய நால்வரும் உயர்கல்வி கற்றுக் கொண்டிருந்தனர். நாகராசாவிற்கு மூன்று பெண்பிள்ளைகள். நாகராசா திமிராகப் பேசுவதால் ஊரிலுள்ள யாரும் அவரின் வீட்டில் திருமணம் செய்ய விரும்பவில்லை. மூத்த பெண் பிள்ளைக்கு வயது ஏறிக்கொண்டிருந்தது.

அதனால் கவலை கொண்ட நாகராசா சிவலிங்கத்தின் வீட்டுக்குச் சென்று தனது மூத்த மகளைச் சிவலிங்கத்தின் மகனுக்குத் திருமணம் செய்ய விரும்புவதாகக் கூறினார்.

‘‘ஐயா, ஏழைகளைக் கண்டவுடன் தாயைப் போல மனமுருகி உதவி செய்பவர்களைத்தான் சிவன் விரும்பி உதவிகள் செய்வார். ஏழைகளுக்கு உதவாமல் சினங்கொண்டு அவர்களை ஏசிக்கலைப்பவர்களுக்கு உதவி செய்யமாட்டார். எனது மகன் கல்வியில்

சூரன். அதனால் தான் நான் வந்து அவனது கல்விக்கு உதவுமாறு கேட்டேன். நீங்கள் உதவவில்லை. அருளம்பலம் ஐயா உதவினார். அதனால் தான் அவன் மருத்துவனானான். ஏழைகளுக்கு உதவுவோர்க்குச் சிவன் வழித்துணையாக இருப்பார். உதவாதவர்கள் இருள் உலகமான நரகலோகத் துன்பத்தை வாழும் போதே வீட்டில் அனுபவிப்பர். அதுதான் உங்களுக்கு நடக்கிறது. சிவநினைவும், தானதர்ம உணர்வும், ஏழைகளின் மீது இரக்கமும் கொள்ளாத தன்மையும் உள்ள உங்களின் மகளை எனது மகனுக்குத் திருமணம் செய்து கொடுத்தால் நீங்கள் அவனையும் தானதர்மம் செய்ய விடமாட்டீர்கள்'' என்றான் சிவலிங்கம். நாகராசா துயரத்துடன் எழுந்து சென்றார்.

இருவினைகள்

**124. இன்பம் இடரென் றிரண்டுற வைத்தது**
**முன்பவர் செய்கையி னாலே முடிந்தது**
**இன்பம் அதுகண்டும் ஈகிலாப் பேதைகள்**
**அன்பிலார் சிந்தை அறம்அறி யாரே.**

அருளம்பலத்திற்குத் தலை சுற்றியது. மயக்கம் வருவது போல இருந்தது. அதனால் அவர் சிவன் கோவில் வாசலில் நின்ற வேப்பமரத்தடியில் வந்து உட்கார்ந்தார். இதைக் கண்ட கதிரேசன் அவரின் அருகே வர அருளம்பலம் சொன்னார்.

“கதிரேசு, தலை சுற்றுகிறது. மயக்கம் வருவது போல இருக்கிறது. என்னை வீட்டிற்கு அழைத்துப்போ.''

கதிரேசன் சுற்றிவரப்பார்த்தார். தூரத்தில் பொறியியலாளர் மாதவன் நின்றார். கதிரேசன் அவருக்கு விஷயத்தைச் சொல்ல அவர் தனது மோட்டார் வண்டியில் அருளம்பலத்தை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார். அதை உணர்ந்த அருளம்பலம் சொன்னார், “காலையில் விரதம் காரணமாகச் சாப்பிடவில்லை. அது தான் தலைச் சுற்றுக்குக் காரணம். என்னை வீட்டுக்குக் கொண்டு செல்லுங்கள்”

மாதவன் அதைக் கேட்காது வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றான். வைத்தியர்களும் ஊழியர்களும் அருளம்பலத்தைக் கண்டதும் பரபரப்பாயினர்.

அருளம்பலத்திற்கு நோய்யென்று அறிந்த ஊரவர்கள் அனைவரும் வைத்தியசாலைக்கு வந்துவிட்டனர். வைத்தியர் அருளம்பலத்தின் உடலை நன்கு சோதித்துவிட்டு, “அவருக்கு ஒருவருத்தமும் இல்லை. உணவு கொடுங்கள்” என்றார்.

“இதைத்தான் நான் சொன்னனான் கேட்டீர்களா..?” என்று கவலைப்பட்டார் அருளம்பலம்.

ஊர்மக்கள் எல்லோரும் உணவுப் பொருட்களுடன் வைத்தியசாலைக்கு வந்து விட்டனர். அருளம்பலத்திடம் அடிக்கடி உதவி பெறும் நாகராசாவும் வந்திருந்தார். அங்கு திரண்டிருந்த மக்களைப் பார்த்து நாகராசா ஆச்சரியப்படவில்லை, “உதவி பெறுபவர்கள் வரத்தானே வேண்டும். வராவிட்டால் பின்பு உதவிகள் பெறமுடியாது” என்று அருகில் நின்ற கணபதிக்குச் சொன்னார்.

கணபதி சிரித்துவிட்டுச் சொன்னான், “போனகிழமை உங்கடை மச்சான் பற்குணம் விபத்துக்குள்ளாகி வைத்தியசாலையில்

அனுமதிக்கப்பட்ட போது அவரது மனைவி பிள்ளைகள் கூடச் சென்று பார்க்கவில்லை. நீங்களும் சென்றிருப்பீர்கள் என்று நான் நினைக்கவில்லை. இதற்கெல்லாம் காரணம் ஒவ்வொருவரினதும் நடத்தை. கடவுள் பாவபுண்ணியங்களுக்கேற்பவே ஒருவருக்கு இன்பதுன்பங்களைக் கொடுக்கிறார். புண்ணியம் செய்தவன் சகலவழிகளாலும் இன்பத்தை அனுபவிக்கிறான். பாவம் செய்தவன் சகலவழிகளிலும் துன்பத்தையே அனுபவிக்கிறான். அருளம்பலம் ஐயாவிற்கு வருத்தமென்று கேள்விப்பட்டதும் குருக்கள் அவர் சுகம்பெறவேண்டி சிவனுக்கு அர்ச்சனை செய்துவிட்டுப் பிரசாதத்துடன் வந்துள்ளார். ஊரவர்கள் நோய்க்கு உண்ணத்தக்க உணவுப் பொருட்களுடன் வந்துள்ளனர். அவர்கள் கொண்டு வந்தவை அருளம்பலம் ஐயாவின் குடும்பத்திற்கு ஒரு வருடத்திற்கு போதும். பற்குணம் வைத்தியசாலையில் இருந்த போது மூன்று நேரஉணவையும் வைத்தியசாலையில் பதிந்து பெற்று உண்டவர். இவைகளையெல்லாம் பார்த்தும் பலர் திருந்திருக்கிறார்கள் இல்லை'' என்றான் கணபதி.

''சனம் உதவி பெறுவதற்காக வந்திருக்கே தவிர அக்கறையில் வரவில்லை. நீ அதைப் பெரிதாகச் சொல்கிறாய்'' என்றான் நாகராசா.

''பாவம் செய்பவன் புண்ணியத்தைப் பற்றி நினைக்க மாட்டான். இவனுக்குச் சொல்வது வீண்'' என்று நினைத்து அவ்விடத்தை விட்டுச் சென்றான் கணபதி.

## கொல்விலங்குகள்

**125. கெடுவது மாவதுங் கேடில் புகழோன்**

**நடுவல்ல செய்தின்ப நாடவும் ஒட்டான்**

**இடுவதும் ஈவதும் எண்ணுமின் இன்பம்**

**படுவது செய்யிற் பசுவது வாமே.**

அருளம்பலம் வீட்டுக்கு வந்து விட்டார். சிவன் கோவிலின் பசு, பறவைகள் யாவும் வந்து அருளம்பலத்தைப் பார்த்துவிட்டுச் சென்றன. பசுவொன்று அவரின் அருகில் வெகுநேரமாக நின்றது. அவர் அதற்கு ஒரு பிடி அறுகம் புல் கொடுத்தார். அதை உண்டுவிட்டுப் பசு அவரின் கையைப் பலமுறை நக்கியது.

‘‘எனக்கு நோய் எதுவுமில்லை. நீ கண்கலங்க வேண்டாம். கோவிலுக்குப் போ’’ என்று சொன்ன பின்பு தான் அப்பசு அவ்விடத்தை விட்டுச் சென்றது.

கதிரேசன் ஒரு பெரிய பொதியுடன் வந்தார். அதைக் கண்ட அருளம்பலம், ‘‘இதை எதற்குக் கொண்டு வந்தாய்? கொண்டு சென்று மடத்தில் கொடு’’ என்றார்.

‘‘எல்லாம் சிவன் செயல். ஆக்குவதும் அழிப்பதும் அவன்தான். ஊரவர்கள் எப்போதும் உன்னிடம் பெற்றுள்ளார்களே தவிர உனக்கெதுவும் தந்ததில்லை. அது ஊரவர்களுக்குப் பெரும் மனக்குறை. அதனால் தான் சிவன் மக்களின் எண்ணத்தைப் பூர்த்தி செய்ய வழிவகுத்தார். அதனால் இதைப் பெற்றுக்கொள். மடத்திற்கு எப்போதும் போல நான் வாங்கிக் கொடுக்கிறேன்’’ என்றார் கதிரேசன்.

அருளம்பலத்தால் மறுக்கமுடியவில்லை. ஊரவர் கொடுத்த பொருட்கள் மலை போலக் குவிந்து கிடந்தன. கதிரேசன் சிறிது நேரம் அருளம்பலத்துடன் பேசிக்கொண்டிருந்து விட்டுப்புறப்பட்டார்.

சனசமூகநிலைய முன்றலில் பலர் கூடியிருந்தனர். நாகராசா பலத்துக் கதைத்துக் கொண்டிருந்தான், “ஊரிலை சமூகசேவை சமய சேவை என்று செய்யிறவை சேர்க்கிற காசிலை ஒரு பகுதியைத் தமது தேவைக்கெடுக்கின்றனர். அத்துடன் புகழ், மாலை மரியாதைக்காகவும் சேவை செய்யிறதாய் நடிக்கினை” என்று நாகராசா சொல்லும் போது நிர்மலன் சொன்னான், “ஒவ்வொருவரும் தன்னைப் போலத்தான் எல்லோரும் வாழ்கிறார்கள் என்று நினைப்பதால் தான் குற்றம் குறைகளைச் சொல்கிறார்கள்” என்றான்.

அதைக்கேட்ட நாகராசாவுக்கு சினம் தலைக்கேறியது, “சமூக சேவை செய்யிறவை ஊருக்கை நாலைந்து பேருக்குப் பொருள் கொடுத்துத் தம்மைப் புகழ்ந்து கதைக்கச் சொல்வினை. அதிலை நீயும் ஒருத்தன்” என்றான்.

நிர்மலனுக்குக் கோபம் வந்தது, “உன்னைப் போன்றவையை அடித்துத்தான் திருத்த வேண்டும்” என்று கூறியவாறு எழுந்தான்.

அப்போது அங்கு வந்த கதிரேசன் சொன்னார், “நிர்மலா, நீ படித்தவன். அத்துடன் ஆசிரியன். தேவையில்லாமல் கதைக்கலாமா?. பயனில்லாத பேச்சுக்களைப் பேசுபவர்களைவிட அதை நியாயப்படுத்துபவர்கள் தான் மூளையில்லாதவர்கள். எல்லாம் சிவன் செயல். ஆக்குவதும் அழிப்பதும் அவன். ஒவ்வொருவரின் வினைக்கேற்பவே எண்ணங்களும் உருவாகும். அதனால் பயனில்லாத பேச்சுக்களைப் பேசுவோரைப் பற்றி எண்ணக்கூடாது. ஏனென்றால் அவர்கள் ஒழுக்கத்தைப் பற்றியோ தானதருமங்கள் செய்வது பற்றியோ மனதால் கூட எண்ணமாட்டார்கள். அவர்கள் விலங்குகளில் காட்டில் வாழும் கொடிய விலங்குகளைப் போன்றவர்கள். வீட்டு மிருகங்கள்

நன்றியுடையன. கோவிற் பசுவொன்று நோயுற்ற அருளம்பலத்தைப் பார்க்க வந்து கண்ணீர்விட்டு அழுததை நான் நேரிற்கண்டேன். அதனால் நல்ல மனமில்லாதவர்களின் பேச்சையும் செயலையும் ஒரு பொருட்டாக மதியாதே'' என்றார் கதிரேசன்.

"ஓம் அண்ணை. நான் பேசியது மிகப் பெரிய தவறு என்பதை ஒத்துக்கொள்கிறேன்'' என்று கலங்கினான் நிர்மலன்.

எல்லாம் அவனே

**126. செல்வங் கருதிச் சிலர்பலர் வாழ்வெனும்**
**புல்லறி வாளரைப் போற்றித் புலராமல்**
**இல்லங் கருதி இறைவனை ஏத்துமின்**
**வில்லி இலக்கெய்த விற்குறி யாமே.**

"கதிரேசண்ணை, அருளம்பலம் ஐயா கேட்டவர்களுக்கு இல்லையென்று கூறாத தர்மவான். எனக்குத் தெரிந்த காலத்தில் இருந்து அவர் தானதர்மங்கள் செய்கிறார். அவர் யாரிடமாவது எந்த உதவிகளையும் பெற்றதாக நான் அறியவில்லை. சிவனை வணங்கிச் சிவனது ஏவலாளர் போலச் செயற்படுகிறார். அவர் ஆடம்பரமாக வாழ்ந்ததில்லை. அடித்தவனையும் மன்னித்து அவன் கேட்பதையெல்லாம் கொடுக்கும் வள்ளல் தன்மை கொண்டவர் அவர். அவரும் நீங்களும் ஒரே மாதிரியானவர்கள். இருவரையும் புகழ வார்த்தைகளே இல்லை..'' நிர்மலன் மகிழ்வுடனும் உற்சாகத்துடனும் பேசிக் கொண்டிருந்தான்.

"இதற்குமேலே பேசாதே. அருளம்பலத்தைப் பற்றிச் சொன்னால் அது சரி. ஆனால் என்னை அவருடன் ஒப்பிடாதே..'' என்று கதிரேசன் கூறிய

போது நிர்மலன் குறுக்கிட்டுச் சொன்னான், “நீங்கள் அவரை விட மேலானவர்..”

“நிறுத்து. கதைக்காதே” அதட்டினார் கதிரேசன். நிர்மலன் திகைப்புடன் அவரைப் பார்த்தான்.

கோபம் தனிந்த கதிரேசன் சொன்னார், “நிலையில்லாத வாழ்வை நிலையானதென்று நினைப்பது அறியாமை மட்டுமல்ல புல்லறிவாண்மையுமாகும். ஒரு புல்லறிவாளன் கூடப் பொருளுக்காகப் பிறரைப் புகழ்ந்து பேசக்கூடாது. எல்லாப் புகழும் சிவனுக்குரியது. நாம் பிறரைப் புகழ்வதை விடுத்துச் சிவனைப் புகழ்ந்து பாடினால் எல்லாச் செல்வமும் எடுக்கும் பிறப்புக்கள் தோறும் கிடைக்கும். இதற்காகத் தான் நான் சிவனைப் புகழ்கிறேன். சிவன் விரும்பிய எல்லாவற்றையும் செய்கிறேன். இது சிவன் செயல். அதனால் நான் புகழை எதிர்பார்க்கவில்லை. அத்துடன் என்னைப் பிறர் புகழ்வதையும் விரும்பவில்லை. எல்லாம் சிவன் செயல். அவன் தந்ததை ஆசைப்படாது பற்றின்றிக் கொடுக்கிறேனே தவிர என்னிடம் எதுவும் இல்லை” மூச்சுவிட்டார் கதிரேசன்.

“இவர் மனிதன் தானா? இல்லைச் சிவனா..?” என்று அதிசயித்தான் நிர்மலன்.

## 11. அவையடக்கம்

அண்ணல்

**127. ஆரறி வார்எங்கள் அண்ணல் பெருமையை**

**ஆரறி வார்இந்த அகலமும் நீளமும்**

**பேரறி யாத பெருஞ்சுடர் ஒன்றதின்**

**வேரறி யாமை விளம்புகின் றேனே.**

அருளம்பலத்தையும் கதிரேசனையும் கண்ட நாகராசா தனது நண்பனான சிவகுமாருக்குச் சொன்னான், "அங்கையார் கள்ளர் போயினை. காலையில் எழுந்து பல் துலக்கி முகம் கழுவி நீற்றைப் பூசி உருத்திராட்சம் தரித்துத் தண்டலுக்கு வெளிக்கிட்டுட்டினை. இனி வியாபாரம் தான். சிவனைச் சாட்டிப் பிழைக்கிறாங்கள். அதற்காகச் சிவன் செய்த திருவிளையாடல்கள் என்று உண்மைக்குப் பிறம்பான பொய்க் கதைகளைக் கூறீனை. சிவன் பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்தவராம். யானை உருவில் வந்த அசுரனைக் கொன்று அந்த யானையின் தோலை உரித்துப் போர்த்தவராம். இதெல்லாம் நடக்குமே?. ஊரிலை எத்தனை பிள்ளைகள் பாலுக்கழுகுது. அவற்றிற்குப் பால் கொண்டு வந்து சிவன் கொடுக்கலாம் தானே. புராணங்களில் கூறிய புழுகுக் கதைகளைச் சொல்லிச் சொல்லி உலகை ஏமாற்றுகிறார்கள்" கேலியாகச் சிரித்தான் நாகராசா.

கதிரேசனுக்கு என்றுமில்லாத கோபம் வந்தது. சிவநிந்தனை செய்பவனைக் கொலை செய்ய வேண்டுமென்று அவர் படித்திருக்கிறார். அதனால் அவர் சினங் கொண்டு வீதியோரத்திலிருந்த கல்லொன்றை எடுத்தார்.

கதிரேசனுக்குக் கோபம் வந்தால் யாராலும் அதை அடக்க முடியாதென்று அருளம்பலத்திற்குத் தெரியும். அதனால் கதிரேசனின் கையைப் பலமாகப் பிடித்தார். கதிரேசன் தன்னை விடுவித்துக் கொள்ளத் திமிறினார். எனினும் அருளம்பலம் விடவில்லை.

“கதிரேசு, சிவனைப் பற்றிக் கூறுவதாக இருந்தால் கூறுபவன் சிவனின் தன்மைகளை முழுமையாக ஆராயக்கூடிய அறிவு, ஆற்றல், ஆண்மை முதலியன உடையனவாகவும், ஒழுக்கம், வாய்மை, தூய்மை, கல்வியறிவு, வேதஅறிவு உள்ளவனாகவும் சான்றோனாகவும் இருத்தல் வேண்டும். நாகராசா பாடசாலைக்கே செல்லாதவன். கொலை களவு போன்ற பஞ்சமா பாதகங்கள் பலவற்றை விருப்புடன் தினமும் செய்பவன். அவனது கதையைக் கேட்டுக் கோபம் கொள்ளும் நீ உண்மையில் சிவபக்தனா.? நீளம், அகலம், ஆழம், உயரம் முதலியவற்றின் எல்லைகள் தெரியாது, செம்பொற் சோதியாக எல்லா உலகங்களையும் கடந்துள்ளவனும், ஆருயிர்களின் உள்ளத் தாமரையில் வீற்றிருப்பவனுமாகிய சிவனின் பெருமைகளை யாரறிவார். சிவபக்தர்களாலும், மாலாலும், அயனாலும், ஏனைய தேவர்களாலும் அறிய முடியாத சிவனை, இந்தப் பாவியா அறிந்துள்ளான். எனவே கோபம் கொள்ளாதே. தீயவர்கள் தீமை செய்வதாலும் தீயநினைவுகளுடன் எந்நேரமும் இருப்பதாலும் அவர்களது எண்ணங்களிற் கூடச் சிவன் இருக்க மாட்டான். அதனால் அவன் சொன்னதைப் பற்றிச் சிந்திக்காதே. சிவனை நினை” என்றார் அருளம்பலம்.

எனினும் கதிரேசனது கோபம் தீரவில்லை.

சிவனின் பெருமை

**128. பாடவல் லார்நெறி பாட அறிகிலேன்**
**ஆடவல் லார்நெறி ஆட அறிகிலேன்**
**நாடவல் லார்நெறி நாட அறிகிலேன்**
**தேடவல் லார்நெறி தேடகில் லேனே.**

நாகராசா சென்றுவிட்டான். கதிரேசனும் அருளம்பலமும் சிவன் கோவிலுக்கு வந்தனர். மதியநேரப் பூசை முடிந்த பின் சுந்தரேஸ்வரக் குருக்கள் உரையாற்றிக் கொண்டிருந்தார். அவர் தினமும் பூசை முடிந்த பின்பு மக்களுக்கு அறிவு சார்ந்த வார்த்தைகள் சிலவற்றைக் கூறுவார். மிகமிகச் சுருக்கமாக அவர் கூறுவதால் மக்கள் எல்லோரும் அதைக் கேட்ட பின்பே மடத்துக்குச் சென்று உணவருந்துவர்.

‘‘சிவனடியார்களே, சிவனின் பெருமைகளை வாயால் கூறிமுடிக்க முடியாது. பாடல்களைப் பாடிப்பணிவது அடியார்களது வழக்கமாகும். அப்படிப் பாடிப்பணியும் அறிவு யாருக்கும் இல்லை. ஏனென்றால் வார்த்தைகளின் கூட்டம் தான் பாடல். ஆனால் சிவன் வார்த்தைகளால் வர்ணிக்கப்பட முடியாதவன். கடலலையைப் போல அவனை வர்ணிக்க வர்ணிக்க வார்த்தைகள் பெருகிக் கொண்டே போகும். அது போலச் சிவனை வழிபட வழிபட இன்பம் மனதுள் பெருக்கெடுக்கும். அதனால் அவன் வழிபடும் முறைகளுக்கு அப்பாற்பட்டவன். வழிபட்டபின் அச்சிவன் மனதுள்ப் புகுந்து விடுவான். ஆழம், அகலம், நீளம், உயரம் என்பவற்றிற்கு எல்லையில்லாச் சிவனை கைப்பிடியளவு இதயத்துள் இருத்தும் முறையையும் நானறியேன். அது போல எனது இதயத்துள்ளும், உலகெங்கும் வியாபித்தும் இருக்கும் சிவனைத் தேடிக்காணும் முறைகளையும் நான் அறியேன். அதனால் தான் பாடுகிறேன், ஆடுகிறேன், பரவசமடைகிறேன், தொண்டுகள் செய்கிறேன். சிவனின் பெருமைகளை உணராது சிலர் அவனை நிந்திக்கின்றனர். வாழ்த்த முடியாத, வணங்க முடியாத, சிந்திக்க முடியாத அவனை எப்படி நிந்திக்க முடியும?. எனவே புகழ்ந்து பாடுபவர்களைக் காண்பது போல நிந்திப்பவர்களைக் காணாமல் விடுங்கள். சிவன் அவற்றைக் கவனிப்பான்’’ என்றார் குருக்கள்.

“நான் சொல்லக் கேட்க மறுத்தாய். இப்போ குருக்கள் சொல்கிறார் கேட்டுத் திருந்து” என்றார் அருளம்பலம். கதிரேசன் உதடுபிரியச் சிரித்தார்.

# 1. தற்சிறப்பாயிரம்

## 1. குருபரம்பரை

நந்தியெம்பெருமானிடம் மெய்ப்பொருள் கேட்டுத்தெளிந்த மெய்கண்டர் நால்வராவர். மெய்கண்டரிடம் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர், சிவயோகமுனிவர், பதஞ்சலியார், வியாக்கியபாதர் ஆகியோருடன் என்னையும் சேர்த்து எட்டுப்பேர் மெய்கண்டரின் மாணவர்களாவர்.

நந்தியெம் பெருமானின் அருளாலே மாடு மேய்க்கும் மூலனின் உடலில் புகுந்தேன். அந்த நால்வரும் பல்வேறு வகையான திருவருட்பொருட்களைக் கொண்டு தாம் பெற்றதெல்லாம் இவ்வையகத்தில் உள்ளோரும் பெறவேண்டுமென்று சிவபெருமானை வேண்டினார்.

திருமூலருடன் இத்திருமந்திர நூலை மலாங்கமுனிவர், இந்திர முனிவர், சோமமுனிவர், பிரமமுனிவர், உருத்திரமுனிவர், காலாக்கினி முனிவர், கஞ்சமலைய முனிவர் ஆகிய ஏழு முனிவர்கள் கற்றனர். இந்த ஏழு முனிவர்களுக்கும் சிவன் என்னுள் இருந்து இந்நூலை மொழிந்தருளினான். இதைவிடத் திருவெள்ளிமலையில் தனித்தும் சேர்ந்தும் வழிபட்டுக் கொண்டிருந்த முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் முப்பொருள் உண்மையைத் தெளிவாக விளக்கும் இந்நூலினைச் சிவனே உரைத்தருளினார்.

## 2. திருமூலர் தம் வரலாறு கூறுதல்

நந்தியெம் பெருமானின் திருவடியை நினைத்து, மதியினைத் தலையில் சூடிய சிவபெருமானை மனத்தில் இருத்தி இச்சிவாகம நூலை மொழிகின்றேன். உயிர்களிடம் சிவப்பண்பு நிறைவதற்கு வழிவகை செய்யும் கருவி நூல் சிவாகமம்.

இந்திரனே, என்னைச் சிவபெருமான் தென்நாட்டில் ஏன் படைத்தான் என்று கூறுகிறேன் கேள், "எல்லா உலகங்களுக்கும் முதல்வி அருந்தவச் செல்வி எனப்படுவாள். அவள் உலகஉயிர்கள் அனைத்தும் தமது உய்விற்காகச் சிவவழிபாட்டினை மேற்கொண்டு உய்யும் வழியை உணர்த்தினாள். அவளைத் தொழவே நான் தென்நாட்டில் பிறந்தேன்."

"மாலங்கரே, சிவபெருமான் திருமலையிலே அம்மையாருடன் சேர்ந்து திருவைந்தெழுத்தைத் திருவுருவாகக் கொண்டு திருக்கூத்தின் அடிப்படை உண்மைக் காரணங்களை மொழிந்தருளினான். இதைச் சொல்வதற்காகவே நான் தென்நாட்டில் உதித்தேன்"

"திருவாவடுதுறையில் இருந்து அருள்பாலிக்கும் திருவருளம்மையே அடியேனது பிறப்பை அறுத்தவள். அவள் சிவத்துடன் சேர்ந்திருக்க நான் அவளின் திருவடியில் சேர்ந்திருந்தேன்"

"சிவமங்கை பங்கனாகிய சிவனுடன் கூடியிருந்தேன். சிவனின் உறைவிடத்திலொன்றான திருவாவடுதுறையில் கூடிநின்றேன். அங்குள்ள அரசமரநிழலில் கூடியிருந்தேன். பேரின்பத்தைத் திகட்டத்திகட்டத் தரும் சிவனது பாதங்களை நினைத்துத் தினமும் பேரின்பமயக்கத்திலிருந்ததால் ஆணவ இருளில் இருந்து நீங்கியிருந்தேன்."

“சிவனின் அருளால் தரப்பெற்ற நடமாடும் கோவிலாகிய என்னுடம்புள் சிவனுடன் கூட இருந்தேன். இராப்பகலாகச் சிவநினைவுடன் இருந்தேன். சிவனது திருவடியைப் புகலிடமாக நினைத்திருந்தேன். திருவாவடுதுறையில் ஒன்பது கோடி ஊழிகள் தவமிருந்தேன். திருமுறைகளாகிய ஞானப்பாலை ஓதியபடி போதிமரமான அரசமரநிழலில் இருந்தேன். அப்படியிருக்கும் வேளையில் சிவபெருமானின் திருவடி நினைவு மேலீட்டால் அவன் சிவாகமங்களை என்னிடம் ஒப்புவித்தான். ஒப்புவமையற்ற இவ்வின்பத்தை நான் பெற்றேன். அதை இவ்வுலக மாந்தர்கள் அனைவரும் பெற்று இன்புறுக. நற்றவத்தால் ஓதியின்புறுவது சிவசிவ என்னும் செந்தமிழ் நான்மறையே. இதை ஆருயிர்கள் இடையறாது ஓதப் பேரின்பம் கிட்டும்”

“பிறப்பில்லாத சிவனை நந்தியென்று அழைப்பர். அவனைத் திருமுறையோதி வழிபடுவர். சதாசிவக்கடவுள் அருளிய மெய்மை மறையான முப்பொருள் போற்றும் தமிழ் மறையை உயிர் உள்ளம் உடல் என உலகியலிற் கொள்ளலாம். இதனை இறை உயிர் தளை என வீட்டியலில் கொள்ளலாம். இவ்வளவு நாளும் அளவாக உண்ணும் இயல்புடையவனாக இருந்தேன். பின் முத்தமிழ் வேதத்திற்கு உறைவிடமாக என்னுள்ளத்தை அமைத்தேன்.”

“உணவைச் சமிக்கச் செய்யவும், உலகினை ஆக்கவும் இருவகையான தீக்களைப் படைத்து அதை அளவுக்குமேல் செல்லாமல் வைத்திருப்பவன் சிவன். அதனால் ஏழு உலகங்களும் கேடின்றி இயங்குகின்றன. அது போல உலகஉயிர்களை ஆணவவல்லிருள் அறிவிலிகளாக்கிப் பிறப்புக்களைக் கொடுப்பதைத் தடுக்கத் திருமுறையையும் படைத்தருளினன். திருவருளால்

கற்கவேண்டியவற்றையெல்லாம் கற்றுணர்ந்தவர்கள் புலவர்களாவர். இவர்களைப் பண்டிதர் என்றும் கூறுவர்.''

''சிவபெருமான் பேதைமை இன்றி என்னை நன்றாகப் படைத்தருளினான். ஏனையோர் தன்னைப் பிழையின்றி உள்ளவாறு உணர்ந்து உய்விப்பதற்காகச் செந்தமிழ்த் திருமுறையை என்னைக் கொண்டு பாடுவிக்க எண்ணினான். அதனால் என்னை, 'தன்னை நன்றாகத் தமிழில்பாடுமாறு பணித்தான்.' இது சிவபெருமானின் திருவாணையாகும். அதற்காக அடியேனின் தலையில் தன் திருவடியை வைத்து ஆசீர்வதித்தான் நந்திக் கடவுளாகிய சிவபெருமான்''

''அறியப்படும் பொருளையும், அறிவையும், அறிவோனையும், தூவாமாயையையும், மாயத்தையும், மா மாயையையும், பரைத்தொகுதிகளையும் கடந்த சிவனை, அவனருளாலேயே விளக்கி விட்டேன். இவற்றை விளக்கியவன் நந்தி. அவன் அறிவுறுத்திய திருவைந்தெழுத்தினைச் சிறப்புற உணர்வில் பதித்து, அவனது திருவாணைப்படி திருக்கைலாய மலையில் வீற்றிருக்கும் நந்தியின் மரபில் நான் பூமிக்கு வந்தேன். வந்து சிவபெருமானின் திருவருளால் மூலனின் உடம்பில் புகுந்தேன். பின் அந்த நந்தியின் அருளாலே சதாசிவதத்துவத்தைத் தமிழ் ஆகமமாக ஓதினேன். நந்தியின் அருளாலே தான் நான் பூமியில் வாழ்ந்தேன்.''

## முதல் தந்திரம்

(காரணாகமம்)

## 1. உபதேசம்

ஆருயிர்களை ஆட்கொள்வதற்காகச் சிவவுலகத்திலிருந்து நிலஉலகத்திற்குச் சிவகுருவாக வந்து உள்நின்று நெகிழச் செய்து பேரின்பத்தைத் தரும் அகக்கண்ணைக் காட்டியருளி பழைமையான களிம்பு போன்ற மலமான ஆணவமலத்தைப் போக்கியருளினான்.

நெற்றிக் கண்ணுடைய சிவபெருமான் களிம்பான ஆணவத்தையகற்றி அகக்கண்ணான அருட்கண்ணைத் திறப்பித்தருளினான். தொன்மையான இறைவன், உயிர், பாசம் என்னும் மூன்றில் இறைவனின் தொன்மையை எல்லா உயிர்களும் சொல்லாலும் பொருளாலும் மெய்க்காட்சியாலும் உணரப்படுகின்றனர். இறைவனைப் போலப் பசுவும் பாசமும் தொன்மையானவை. இறைவனைச் சென்று அனுகுந்தன்மையில்லாத உயிரும் பாசமும் இறைவனின் அருளால் எழுந்தருளிவரின் பசுத்தன்மையான முனைப்பும் செயலும் அருளலும் இவற்றின் வாயில்களான ஆணவம் கன்மை மாயை என்னும் பாசமும் தம்முனைப்புக் கெடும்.

மூங்கிலினுள் தீ மறைந்திருப்பதைப் போல உயிருள்ள உடலுள் நந்தியெம் பெருமான் மறைந்திருக்கிறார். அவர் தாயைவிட ஆருயிர்களிடத்து அன்பு கொண்டுள்ளமையால் மும்மலங்களையும் அழித்தருளுபவர். அவரது அன்பு திருவருள் வெள்ளமாக எழும். அத்திருவருளுடைய நந்தி சிவசூரியன் எனப்படுவான்.

சூரியனின் கதிர்கள் சூரியகாந்தக் கல்லில் பட்டவுடன் தீயுண்டாகிப் பஞ்சை எரிப்பது போல, சிவன் சிவகுருவாக வந்து பஞ்சாட்சர மந்திரத்தை முறைப்படி ஓத மலங்கள் யாவும் நீங்கும்.

சிவனே சிவகுருவாக வந்து மலங்களைப் போக்கிப் பூவுல வாழ்வைச் சிவவுலக வாழ்வாக்குவான். ஆருயிர்களின் அறிவு ஐம்புலன்களோடு கூடுவதால் ஆழம் மிகுந்த நீரில் விழுந்து தடுமாறுதலைப் போல ஆருயிர்கள் அல்லற்படும். இவ்வல்லலைத் தீர்த்து வைப்பவன் சிவகுருவான சிவன். பசுவின் பாலில் கலக்கப்பட்ட நீரைத் தவிர்த்துப் பாலை உண்ணும் அன்னத்தைப் போல அனுபவிக்காத வினையான சஞ்சிதத்தைச் சிவகுருவான சிவன் பிரித்தறிய, ஏழு பிறப்புக்களும் அவரது கடைக்கண் பார்வையால் எரியுண்ட வித்துப் போலப் பயனற்றுப் போகும்.

பிறவிக்கு வித்தான ஆணவத்தையடக்கித் திருவைந்தெழுத்தை முறைப்படி உபதேசிக்க பேருறக்கமாகிய சுத்தத்துரிய நிலை ஏற்படும். அந்நிலையில் உயிர்களுக்குச் சிவநினைவைத் தவிர வேறெந்த நினைவும் இராது. இந்நிலை சிவயோக நிலை எனப்படும். சிவயோகநிலைக்குட்பட்டவர்கள் சிற்றறிவு நீங்கப் பெற்றுச் சிவஅறிவான பேரறிவு பெற்றுச் சிவத்துடன் கலந்திருப்பர். இந்நிலையைச் சிவகுருவான நந்தியெம் பெருமான் அவர்களுக்குக் கொடுப்பார்.

சிவன் உலகெங்கும் தானாக விளங்குகின்றமையால் தன்ன வணங்கும் சிவயோகியர்க்குத் தேவர்களாலும் அறிந்து கொள்ள முடியாத சிவவுலக வாழ்வை அளித்தருளினான். திருவருள் மூலம் சிவபெருமானைச் சென்றடைந்த ஆருயிர்கள் மேல் சிவபெருமான் வைக்கும் அருளொளியாகிய பேரொளியில் கலந்தவர்கள் சிவஞானத்தால் தெளிவடைந்தவர்களே. இவர்கள் சிவசித்தராவர்.

இவர்கள் இம்மையில் இருக்கும் போதே சிவத்தைக் கண்ட மாண்பினர். சிவத்துடன் கூடியமையால் பிறப்பிறப்பற்று என்றும் பேரின்ப நிலையில் கலந்திருப்பர். சிவயோகிகள், மண்முதல் சிவம் ஈறகச் சொல்லப்படும் முப்பத்தாறு மெய்களையும் படிப்படியாகக் கடந்து சிவபெருமானைக் கண்டு திருவடியுணர்வால் தெளிவடைந்து பதமுத்தியை அடைந்தது சிவனுடன் இரண்டறக் கலந்திருப்பர்.

சிவயோகிகள் சிவத்துடன் கலந்ததால் எங்கும் தாமாகி நிற்பர். இவர்கள் தற்செயலற்று சிவச்செயலாக இருப்பதால் இவர்களைச் சோம்பர் என அழைப்பர். இவர்கள் என்றும் சிவவெளியில் தங்கியிருப்பர்.

தூங்காமல் தூங்கி அறிதுயிலாய் நிற்கும் மெய்யன்பர்கள் சிவனையும், சிவவுலகையும், அவனது படைப்பான உலகையும் தம்முட்காண்பர். உலகைத் துன்பப்படுத்தும் மாயையை மாயை என்று கருதாமல் அதைப் படைத்தருளிய வினை முதற்காரணமென உணர்வர். சிவபெருமானின் திருவருட் பண்புகளையும் தம்முட் காண்பர். அத்துடன் சிவயோகத்தையும், சிவயோகமாகிய திருவடி நுகர்வினையும் தம்முட் காண்பர். அதனால் நிலையில்லாத உலகை மறந்து நிலைத்து நிற்கும் சிவனை மனதில் காண்பர்.

ஒப்பில்லாத ஐவகை மன்றத்துள் ஆருயிர்கள் உய்வதற்காகவும் சிவகாமி அம்மையார் கண்டு களிக்கவும் செஞ்சுடர் மாணிக்கமான சிவன் எப்போதும் திருக்கூத்தாடுகிறான். மாணிக்கத்தினுள்ளே மரகதச் சோதியாய் விளங்கும் சிவபெருமானைத் திருமுறைகளைத் தவறாது ஓதியவர்கள் கண்டுகளிக்கும் பெரும் பேற்றை எடுத்துக்கூற

முடியாது. என்றும் திருவருள் கைவந்தோர் இந்நிலையைப் பெறுவர். அத்துடன் செந்நெறி, நன்நெறி, திருநெறி, ஒளி நெறி, வீட்டு நெறி, பொது நெறி ஆகிய சிவநெறிகளையும் திருவடியுணர்வால் அடைவர். அதனால் அவர்கள் உலகவத்தவரால் பேசமுடியாத பெருமையைப் பெற்றவராவர்.

ஆமையைப் போன்று தமக்குத் துன்பம் வரும் செயல்களில் ஈடுபடாது தமது ஐம்புலன்களையும் அடக்கியவர்கள் பிறப்பை அறுப்பர். அடக்காதவர்கள் பிறப்பு இறப்புக்கு உட்படுவர். மோராகிய புரை கலவாத பாலில் நெய் மறைந்திருப்பதைப் போல அலையும் மனத்தைக் கட்டுப்படுத்தியவர்களின் உள்ளத்தில் தயிரில் நெய் போலச் சிவன் வெளிப்பட்டு அருளுவான். சிவகுருவின் மூலம் திருவைந்தெழுத்தை ஓதக்கேட்டோரின் உடல் அருளால் நீங்கும். நீங்கியவுடன் உயிர் எல்லையில்லாப் பெருஞ்சோதியில் கலக்கும். தன்மாத்திரைகள் ஐந்தும் ஒடுங்கும் முறையில் ஒன்றினுள் ஒன்றாய் முப்பத்தாறு மெய்யும் ஒடுங்கும். இவற்றால் ஆகிய உடம்பும் உடல்களில் வாழ்ந்த உயிரும் அறிவுடைய உள்பொருளாகும். அவ்வுள்பொருளுக்கு உடற்சார்பு நீங்கினால் உயிர்பேரறிவுடைய சிவத்தைச் சாரும். விளக்க விளங்கும் அறிவுடைய உயிரும் தானே விளங்கும் பேரொளியாகிய சிவமும் ஓரினச் சுடராக ஒன்று சேரும்.

நீரில் கரைந்து நுண்ணியதாகி அடங்கி நிற்கும் உப்பு கூர்மை எனப்படும். அக்கூர்மை சூரியஒளியால் பிரிந்து உப்பு எனப் பெயர் பெறும். அவ்வுப்பினால் ஓர் உருச்செய்து அதை நீரில்

கரையவிட்டால் உருத்தெரியாது நீரில் கரைந்து அடங்கி நிற்கும். இது போல உயிரும் சிவத்துள் கலந்து அடங்கி நிற்கும்.

திருவைந்தெழுத்தே தஞ்சமென உணர்ந்தார்க்கு திருவடியே சிவமாகும். அவர்களின் அகத்துள் திருவடியே சிவவுலகாகும். உணர்ந்து உரைக்கின் திருவடியே செல்லும் இடமாகும். குருவின் திருமேனியைப் பார்ப்பது தெளிவில் சிறப்பாகும். அவரது திருப்பெயரைத் தினமும் உச்சரித்தல் நோன்பாகும். அவர் அருளிய ஐந்தெழுத்தை உள்ளம் நிறையக் கேட்டல் தெளிவினில் செறிவாகும். அக்குருவை நினைத்தல் தெளிவில் அறிவாகும்.

சிவபெருமானின் திருவருளால் ஐம்புலன்களும் தன்வசமாகிவிடும். முன்பு இவை உயிர்களைத் தம்வசமாக்கி ஆட்டிப்படைத்தன. இப்போது செயலிழந்து, வலுவிழந்து அழிந்துவிடும். முன்பு இருள்வழி நின்று பிறப்புக்குட்படுத்தியவை இப்போது அருள்வழி நின்று சிவவுலகைச் சென்றடைய வழிவகுக்கும்.

தினமும் ஆருயிர்களுக்கு உதவுவது திருவருளே. திருவருளின் துணையால் உள்ளம் நாடுவது திருவைந்தெழுத்தே. இத்திருவைந்தெழுத்தின் தெளிவாகிய சிவஞானபோதமே நந்தியின் பொற்போதமாகும். இப்போதமே உணர்வுக்குள் உணர்வாய் நம்அறிவினுள் நிலை பெறுவதாகும். சிவஞான போதத்தை நமக்களித்தவன் நந்தி. அவனருள் பெற்றோர் புண்ணியராவர். அவர்கள் நாதன் என்றும் திருப்பெயர் பெற்றுச் சிவஉலகை அடைவர்.

## 2. யாக்கை நிலையாமை

பசுமட்கலம்

**187. மண்ணொன்று கண்டீர் இருவகைப் பாத்திரந்**

**திண்ணென் றிருந்தது தீவினை சேர்ந்தது**

**விண்ணின்று நீர்விழின் மீண்டுமண் ணானாற்**

**போல்**

**எண்ணின்றி மாந்தர் இறக்கின்ற வாறே.**

சிவநாதனைக் கண்டால் யாருக்கும் பிடிக்காது. அவன் குடித்து விட்டு வந்து கோவில் வாசலில் நின்று தனக்கு வேண்டாதவர்களை வாயில் வந்தபடி ஏசுவான். அவன் கோவிலில் பூசை நடைபெறும் போது தான் ஏசுவான். பூசை நேரத்தில் அங்கு பலர் வருவதால் அப்படி நடப்பான்.

அருளம்பலம் வந்து அவனைச் சமாதானம் செய்து அனுப்புவார். அருளம்பலம் பெரும் சிவபக்தர். அதனால் அவரது சொல்லைக் கேட்டு ஊரவர் நடப்பர். அன்று சிவநாதனது நண்பனான கணேசனுக்கும் சிவநாதனுக்கும் ஏதோ தகராறு வந்துவிட்டது. அதனால் இருவரும் பெருஞ்சண்டையிட்டனர். கோவிலடியில் அவர்கள் சண்டையிட்டதால் மக்கள் அவர்களைப் பிடித்துக் காவல் துறையில் ஒப்படைத்தனர். அன்று இரவு சிவநாதன் குடித்துவிட்டு வீதியால் கண்டபடி பேசிக் கொண்டு வரும் போது அவனை யாரோ பலமாகத் தாக்கிவிட்டனர். விடிந்தபின்பு வீதியால் சென்றவர்கள் குற்றுயிராய்க் கிடந்த சிவநாதனை வைத்தியசாலையில் சேர்த்தனர். மறுநாள் அவன் இறந்துவிட்டான்.

அதனால் காவல்துறையினர் கணேசனைக் கைது செய்தனர். கணேசனின் மனைவியும் பெற்றோரும் பிள்ளைகளும் சிவபக்தர்கள். அவர்கள் அருளம்பலத்திடம் வந்தனர். “என்னால் எதுவும் செய்ய முடியாது. ஒவ்வொருவரும் ஆணவத்தால் தாம் தாம் பெரியவர்கள் என்று நினைத்துச் சிவநினைவில்லாமல் தீமைகளைச் செய்கிறார்கள். அதை அவர்கள் தீமையென்றும் உணர்வதில்லை. வனையப்பட்ட மண்ணைச் சுடாவிட்டால் அது அழிந்துவிடும். அதைக் குயவன் மறுபடியும் வனைவான். ஏதாவதொரு காரணத்திற்காகக் குயவன் தீயில் சுடாது அப்பாத்திரத்தை வைத்திருந்தால் மீண்டும் அது அழியும். அதன் பின் குயவன் பாத்திரமாக வனைவான். இது போன்றது தான் வாழ்வு. சிவநினைவில்லாதவர்கள் பச்சை மண்பாத்திருத்தைப் போல அழிந்தழிந்து பிறப்பர். திருவருளுடையோர் வன்மையாகிப் பலம் பெற்றுப் பலருக்கும் உதவி செய்வர். கணேசனும் சிவநாதனும் சிவநினைவே இல்லாதவர்கள். அதனால் தான் துன்பப்படுகின்றனர். கணேசனுக்குச் சிவநினைவு வரும் வரை அவன் திருந்தமாட்டான். அதனால் துன்பம் தான்மிகும்” என்றார் அருளம்பலம்.

கூடச்செல்பவை

**188. பண்டம்பெய் கூரை பழகி விழுந்தக்கால்**
**உண்டஅப் பெண்டிரும் மக்களும் பின்செலார்**
**கொண்ட விரதமும் ஞானமும் அல்லது**
**மண்டி அவருடன் வழிநட வாதே.**

அன்று அருளம்பலத்தின் தந்தை அருணாசலம் இறந்து போனார். அருணாசலம் பெரும் சிவபக்தர். சிவன் கோவில் மடத்தை அவர் தான் கட்டிக் கொடுத்தார். அத்துடன் இல்லை என்று வந்திருப்பவர்களுக்கு அவர்கள் கேட்பதைக் கொடுப்பார். ஊர் மக்களிடம் வேற்றுமை காட்டாது பழகுவார். அதனால் அருளம்பலத்தின் வீட்டில் ஊரே கூடிவிட்டது.

“அருணாசலம் பெரும் பலசாலி. ஐந்து பேர் செய்யும் வேலையைத் தனியே செய்வார். தேர் வேலை செய்யும் போது பெரும் பெரும் மரக்குற்றிகளைத் தானே தூக்கி வாகனத்தில் ஏற்றுவார். அதை இறக்க மூன்று பேர் வேண்டும்” என்றார் கோவில் தலைவர்.

“அவர் பலசாலி மட்டுமல்ல பேரழகனுங்கூட. அவரைத் திருமணம் செய்ய எவ்வளவு பெண்கள் போட்டி போட்டனர். அவர் பெரும் சிவபக்தரான கணேசலிங்கத்தின் மகளை விரும்பித் திருமணம் செய்தார். அவள் பெரும் அழகியல்ல. அவள் பெரும் சிவபக்தை. எவ்வேளையிலும் நெற்றியிலும் உடலிலும் நீறணிந்திருப்பாள். அதனால் தான் அவளை அவர் திருமணம் செய்தார். இப்போ இருவரும் உருக்குலைந்து போனார்கள். கடைசிக் காலத்தில் அருணாசலம் நடக்க முடியாது படுத்தபடுக்கையாகிவிட்டார்” என்றார் ஒரு முதியவர்.

“எல்லாம் இறைவன் விட்டவழி. காலம் செல்லச் செல்ல மூப்பு வரும், நோய்கள் வரும், பின் இயலாமை வரும், அதன் பின் இறப்பு வரும். இறந்த பின் தேடிய சொத்துக்களோ, பிள்ளை குட்டிகளோ அவருடன் கூடச்செல்லா. சுடுகாடு வரையே செல்வார்கள். ஆனால் அவர் செய்த தானதர்மங்கள் சிவனருளால் திருவருளாக மாறி அவருடன் கூடச்செல்லும். அது எஞ்சிய சஞ்சித வினைக்கேற்பப் பிறவியைக்

கொடுக்கும். அருணாசலம் பெரும் சிவபக்தர். கொடை வள்ளல். அதனால் அவர் நல்ல பிறப்பெடுப்பார். இல்லாவிட்டால் சிவனடிக்குச் செல்வார்” என்றார் பண்டிதர் நடராசா. நடராசா வேதஉபநிடதங்களைக் கற்றவர். கற்றபடி வாழ்பவர். அதனால் அங்கிருந்தவர்கள், “பண்டிதர் சொல்வது உண்மை” என்றனர்.

பிணமென்று பெயர்

**189. ஊரெல்லாம் கூடி ஒலிக்க அடுதிட்டுப்**
**பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்**
**சூரையன் காட்டிடைக் கொண்டு போய்ச்**
**சுட்டிட்டு**
**நீரினில் மூழ்கி நினைப்பொழிந்தார்களே.**

நாவலூரில் பரமானந்தம் என்றொரு பெரியவர் வாழ்ந்தார். அவர் கற்க வேண்டிய நூல்களையெல்லாம் கற்றவர். அதனால் தனது பெயருக்கு பின்னால் பரமானந்த தேசிகர் எனத் தனக்குத் தானே பெயர் சூடிக்கொண்டார்.

அவ்வூர் அரசன் அவரின் புலமையை உணர்ந்து அவருக்கு அறிஞன் என்ற பட்டத்தைச் சூடினான். அவர் சொற்பொழிவாற்றுவதில் வல்லவர். ஊள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அவரின் சொற்பொழிவை மக்கள் விரும்பிக் கேட்பார்கள். அவர் சொற்பொழிவாற்றவிருக்கிறாரென்றால் மக்கள் கூட்டம் அலைமோதும். வெளிநாட்டவர்கள் செஞ்சொற் செல்வர், செஞ்சொல் வாணர் என்று பெயர் சூட்டி அழைத்தனர். உள்நாட்டவர்கள் கலைஞர், பாவேந்தர்,

கவியரசர், செஞ்சொல்வேந்தர் என்னும் பெயர்களை அவருக்குச் சூடி மகிழ்ந்தனர்.

திடீரென்று பரமானந்த தேசிகர் நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டார். அவரது மனைவி நெஞ்சில் அடித்து அலறினாள். பிள்ளைகள் மயங்கிவிழுந்தனர். ஊரவர் கூடி அழுதுபுலம்பினர். அவரது மூத்த மகன் அன்று மாலை ஐந்து மணிக்குப் பிரேதம் எடுப்பதாக அறிவித்தான். ஐந்து மணியாகியும் பிரேதம் எடுக்காததால் ஊர்ப்பிரமுகர் ஒருவர் சொன்னார்,"ஐந்து மணிக்குச் சவம் எடுப்பதாகச் சொன்னார்கள். எனக்கு முக்கியமானதொரு வேலை இருக்கு நான் போகப்போகிறேன்" என்றார்.

"செத்த வீடென்றால் அப்படி இப்படித்தான். குறித்த நேரத்திற்குச் சவமெடுக்க முடியுமே?. இப்பத்தான் வெளியூரிலிருந்து மருமகள் வந்திருக்கிறாள். எப்படியும் சவம் எடுக்க ஒரு மணித்தியாலம் செல்லும்" என்றான் ஒருவன்.

அதைக் கேட்டுக் கொண்டிருந்த ஒரு பெரியவர் சொன்னார், "பரமானந்தம் எந்தப் பெரிய அறிவாளி. அவர் கற்காத நூல்கள் இல்லை என்றே சொல்லலாம். அவர் வாழும் போது அவருக்குப் பெரியவர்கள் எத்தனை பெயர்களைச் சூடிக் கௌரவித்தனர். இப்போ அவையெல்லாம் மறைந்து பிரேதம், சவம் என்றாகிவிட்டது. ஐயா, கலைஞர் செஞ்சொற்செல்வர் என்று அழைத்தவர்கள் சவம் என்கிறார்கள்" என்று கவலைப்பட்டார்.

சிறிது நேரத்தில் பிரேதத்தைச் சுடலைக்குக் கொண்டு சென்று எரித்தார்கள். பின் அவர்கள் எல்லோரும் பரமானந்தனின் வீட்டிற்கு வந்தனர். அதன் பின் உறவினர்களும் ஊரவர்களும் சென்றுவிட்டனர். வீட்டார் நீரில் முழுகினார்கள். பின் தமது வேலைகளைக்

கவனித்தார்கள். செத்த வீட்டிற்கென வந்த பரமானந்தனின் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் தாம் வாழும் நாடுகளுக்குச் சென்றுவிட்டனர். வீட்டில் அவரது மனைவியும் மகளும் கணவனும் பிள்ளைகளும் இருந்தனர். புத்துத் தினங்களின் பின் மரணம் நிகழ்ந்த வீடாக அது காட்சி தரவில்லை. தொலைக்காட்சியில் படம் ஓடியது. வானொலி பாடியது. பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்றனர். மகளின் கணவன் வேலைக்குப் புறப்பட்டான். வீட்டாரும் ஊரவரும் அவரை மறந்து விட்டனர்.

“இது தான் வாழ்க்கை. இறைவனால் படைக்கப்பட்ட எல்லாவற்றிற்கும் இக்கதியே நேரும். அதனால் நிலையான இன்பத்தை அடைய சிவனைத்தொழுங்கள்” என்றார் ஒரு பெரியவர்.

அறியாத உயிர்

**190. காலும் இரண்டு முகட்டலக் கொன்றுள**
**பாலுள் பருங்கழி முப்பத் திரண்டுள**
**மேலுள கூரை பிரியும் பிரிந்தால்முன்**
**போலுயிர் மீளப் புகஅறி யாதே.**

“நம்கால்கள் இரண்டும் முகட்டுச் சட்டம் அமைக்கும் இரண்டு கால்களை ஒக்கும். முதுகெலும்பு முகட்டுச் சட்டத்தினை ஒக்கும். இருபக்கத்திலும் இருக்கும் முப்பத்திரண்டு எலும்புகள் இருபக்கங்களிலும் முதுகெலும்புடன் பொருந்தி இணைக்கப்பட்ட முப்பத்திரண்டு சலாகைகளை ஒக்கும். மேலுள்ள கூரை தலை மயிரை ஒக்கும். இப்படி ஒரு வீடு அமைக்கப்பட்டதைப் போலச் சிவன் உடலைப் படைத்துள்ளார். அதில் வாழும் அறிவு மயமான உயிர் உச்சித்துளையால்

வெளியேறியவுடன் வெளியே வீசும் காற்றோடு கலந்து காற்றாகிச் சிவவுலகையடையும். அறிவுள்ள உயிருக்கு உடலில் இருந்து வெளியேரத் தெரியுமே தவிரப்பின் உள்ளே செல்லத் தெரியாது. பரமானந்தம் ஐயா எவ்வளவு அறிவானவர். எவ்வளவு நூல்களைப் படித்தவர். இருந்தும் அறியாமை காரணமாகப் பிரிந்த உயிர் உள்ளே செல்லத் தெரியாது காற்றோடு கலந்துவிட்டது" என்றார் அங்கிருந்த ஒரு பெரியவர்.

மூக்கில் விரல் வைப்பர்

**191. சீக்கை விளைந்தது செய்வினை மூட்டிற்ற**
**ஆக்கை பிரித்ததலகு பழுத்தது**
**மூக்கினிற் கைவைத்து மூடிட்டுக் கொண்டு**
**போய்க்**
**காக்கைக்குப்பலி காட்டியவாறே**

நாரை ஊரில் சிவசிதம்பரம் என்றொரு தனவந்தன் வாழ்ந்தான். அவனது ஆண்பிள்ளைகள் எட்டுப்பேரும் வணிகர்கள். அவர்கள் வாணிபத்திற்காகச் செல்லும் நாடுகளிலுள்ள அரிய பொருட்களையெல்லாம் வாங்கிவந்து தகப்பனுக்குக் கொடுப்பார்கள். சிவசிதம்பரம் பிள்ளைகள் கொடுக்கும் தங்கஆபரணங்களையும், மாணிக்கங்கள், வைரங்கள் மரகதங்கள் பதித்த ஆபரணங்களையும் அணிந்து ஊரில் நடைபெறும் வைபவங்களுக்குச் செல்வார். அவரையும் அவர் அணிந்திருக்கும் பெறுமதியான காணற்கரிய ஆபரணங்களையும் காண்பதற்காக ஊர் மக்கள் வைபவங்களுக்கு வருவார்கள். வைபவங்களுக்கு வரும் அனைவரும் சிவசிதம்பரத்திற்கு அருகில் இருந்து அவர் அணிந்திருக்கும் ஆபரணங்களைப் பார்த்து இரசிப்பார்கள்.

சிவசிதம்பரம் அவ்வாபரணங்கள் வாங்கிய நாட்டைப் பற்றியும், அந்த ஆபரணத்தின் பெருமைகளைப் பற்றியும் கூறுவார். அதைக் கேட்போர்அதிசயிப்பார்கள்.

நல்ல நிலையில் ஊருக்குள் உலாவி வந்த சிவசிதம்பரத்தைப் பாரிசவாத நோய் தாக்கியது. அதனால் அவரது இடதுகையும் இடதுகாலும் செயலிழந்தன. இரவுபடுக்கும் போதும் தன்னிடமுள்ள பெறுமதியான ஆபரணங்களை அணிந்தபடிபடுக்கும் சிவசிதம்பரத்திற்கு இப்போது ஆபரணங்கள் துன்பத்தைக் கொடுத்தன. உடலை உறுத்தின. ஆகையால் அவற்றைக் கழற்றும்படி பிள்ளைகளுக்குக் கூறினார்.

அவரால் எழுந்து நடமாடமுடியவில்லை. பிள்ளைகள் பல்வேறு நாடுகளுக்கும் சென்று வியாபாரம் செய்வதால் அவரைப் பல மாதங்களுக்கு ஓரிரு தடவைகள் மட்டுமே சந்தித்தனர்.இப்போது அவருக்குப் பிள்ளைகளை எப்போதும் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் போல இருந்தது. பேரப்பிள்ளைகளைத் தூக்கி விளையாடவேண்டும் என்ற ஆசைமிகுந்தது. அதைத் தனது மனைவியிடம் சொன்னார். மனைவி பிள்ளைகளுக்குச் சொன்னாள்.

“அம்மா எமக்கு வேலைகள் அதிகம். வீட்டில் ஒரு நாள்க்கூட நிற்க முடியாது. எமது பிள்ளைகள் பட்டிணத்தில் படிக்கிறார்கள். சனி, ஞாயிறு தினங்களில் அவர்களுக்கு மேலதிக வகுப்புக்கள் உண்டு. முன்பு அப்பா இப்படிக் கேட்பதில்லை. இப்போ ஏன் இப்படிக் கேட்கிறார்?. நீங்கள் ஒரு மாதிரி அவரைச் சமாளியுங்கள்” என்றனர்.

சிலகாலஞ் செல்ல அவருக்கு உணர்வு இல்லாமற் போய்விட்டது. தாயார் பயத்துடன் அதை மக்களுக்குச் சொன்னார். பிள்ளைகள் வந்து ஓரிரு நாட்கள் வீட்டில் தங்கினர். பின் தமது விரலை அவரின் மூக்கில்

வைத்துப் பார்த்துவிட்டு, “அவர் உயிருடன் இருக்கிறார். இறந்தபின் கூறுங்கள்” என்று கூறிவிட்டுச் சென்று விட்டனர்.

தாயார் தினமும் பல முறை அவரின் மூக்கில் விரலை வைத்துப் பார்ப்பார். ஒரு நாள் மூச்சுவரவில்லை. அதனால் அவர் இறந்துவிட்டாரெனத் தனது பிள்ளைகளுக்கு அறிவித்தாள்.

பிள்ளைகள் வந்து கிரியைகளைச் செய்து விட்டு அவரது உடலில் இருந்த அரைஞாண்கயிற்றையும் அறுத்தெடுத்துவிட்டு அவரது உயிரற்ற உடலை வெள்ளைச் சேலையால் சுற்றித் தூக்கிச் சென்றனர்.

அன்று மாலை பிள்ளைகள் எல்லோரும் ஒன்று கூடித் தீர்மானித்து விட்டுத் தாயாரை அழைத்துச் சென்றனர். அதன் பின் அவர்கள் அவ்வீட்டை இன்னொருவருக்கு விற்றுவிட்டனர். இப்போ, சிவசிதம்பரம் வாழ்ந்த ஊருக்கு அவரின் பிள்ளைகள் வருவதில்லை.

கிடக்கப்படுத்தார்

**192. அடப்பண்ணி வைத்தார் அடிசிலைஉண்டார்**
**மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டார்**
**இடப்பக்கமே இறைநொந்தது என்றார்**
**கிடக்கப்படுத்தார் கிடந்தொழிந்தாரே**

கருணாகரன் நாவலூரில் வாழும் பெரும் வணிகன். அவனிடம் நூற்றுக்கு மேற்பட்ட கப்பல்கள் நின்றன. ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்தனர். அவன் தனது தாய் மாமனின் மகளைத் திருமணம் செய்தான். அவள் நல்ல அழகி. பெண்மைக்குரிய அத்தனை பண்புகளும் அவளிடம் இருந்தன. அவள் தனது கணவனைத் தெய்வமாகப் பூசித்தாள்.

கருணாகரன் தனது மனைவி மீது அளவுக்கதிகமான அன்பு வைத்திருந்தான். அதனால் அவன் பிறநாடுகளில் உள்ள சிறந்த பொருட்களையெல்லாம் வாங்கி வந்து மனைவிக்குக் கொடுப்பான். விலையுயர்ந்த ஆபரணங்களை அணிவித்து அழகு பார்ப்பான். அவள் தனது கணவனின் விருப்பத்திற்கேற்றவாறு உணவுவகைகளைத் தானே சமைத்துக் கொடுப்பாள். கருணாகரன் உணவுப்பிரியன். அதனால் விதம் விதமான உணவுவகைகளை அவள் தயாரிப்பாள். அவள் சமைக்கும் உணவின் சுவையால் அவன் வேறு இடங்களில் உண்ண மாட்டான். நேரஞ்சென்றாலும் வீடுதேடி வந்துவிடுவான். பிறவூருக்குச் செல்வதானால் பல நாட்களுக்குப் பழுதடையாத உணவுவகைகளை அவள் செய்து கொடுப்பாள்.

அவள் தினமும் காலையில் அன்று என்னென்ன உணவு வகைகளைத் தயாரிக்க வேண்டும்மெனக் கேட்பாள். கருணாகரன் நன்கு யோசித்துவிட்டுச் சொல்வான். சில வேளைகளில் அவன் தனது பிறவூர்களில் வாழும் பெரும் தனவந்தர்களைத் தனது வீட்டுக்கு அழைத்து வந்து உணவளிப்பான். அன்று அவர்களதுவீடு திருவிழா போலக் களைகட்டியிருக்கும். பிறவூரவர் ஒவ்வொரு முறையும் உணவைத் தமது வாய்க்குள் வைக்கும் போது அதன் சுவையை மெச்சுவார்கள். சிலர் இப்படித் தமது மனைவிமார்களுக்குச் சமைக்கத் தெரியவில்லை என்று கூறிக் கவலைப்படுவார்கள். ஒரு முறை கருணாகரனது வீட்டிற்கு வந்து உணவு உண்ட ஒரு தனவந்தன் சொன்னான், "நண்பா, வாழ்க்கையில் உயிர்கள் உணவுக்காகப் போராடுகின்றன. உணவு கிடைப்பது இன்பம். அதைவிடச் சுவையான உணவுகிடைப்பது பேரின்பம். நீ தினமும் அமுதை உண்கிறாய். சுவையான உணவு வகைகளைத் தினமும் உண்பவன் தருமவான்"

என்று கூறிவிட்டுச் சென்றான். அது கருணாகரனுக்கு மிக்க மகிழ்ச்சியைக் கொடுத்தது.

சில தினங்கள் கழிந்தன. கருணாகரன் துறைமுகத்திற்குச் சென்று அன்று வந்திருந்த கப்பல்களில் கொண்டு வந்த பொருட்களைக் கணக்கெடுத்துக் கொண்டிருந்தான். அப்பொழுது அவனது இடப்பக்க நெஞ்சில் சிறு வலி தோன்றியது. அது சில நிமிடங்களில் பெருத்துத் தாங்க முடியாத வேதனையைக் கொடுத்தது. கருணாகரன் பெருங்குரலெடுத்துக் கதறியபடி ஆசனத்தில் அமர்ந்தான். அவது உடல் வியர்த்தது.

சில நிமிடங்களில் அவனது உயிர் உடலைவிட்டுப் பிரிந்தது. குடும்பத்தினர் ஊரவர் நண்பர்கள் எல்லோரும் கூடி அழுது குழறிவிட்டுப் பிரேதத்தைச் சுடலைக்குக் கொண்டு சென்றனர். உடல் நிலையில்லாதது. அதற்குஅழிவு எந்நேரத்திலும் வரலாம். மிகுந்த தேகாரோக்கியத்துடன் வாழ்பவன் திடீரென்று விபத்து மூலம் மரணமடையலாம். உயிருள்ள வரை தம்மை அலங்கரிப்பதிலும், சுவையான உணவு வகைகளை உண்பதிலும், ஆடம்பரமாக வாழ்வதிலும் அக்கறை கொள்ளும் மனிதர்கள், தாம் பூசித்துப் பேணும் உடல் நிலையில்லாதது என்று உணர்ந்து நிலையான பொருளும் என்றும் இன்பத்தை அள்ளி வளங்கும் தன்மையும் கொண்ட சிவனை வணங்கி நிலையான இன்பத்தைப் பெறல் வேண்டும்.

சொல்லாமல் வரும்

**193. மன்றத்தே நம்பி மாடம் எடுத்தது**

**மன்றத்தே நம்பி சிவிகை பெற்றேறினான்**

**மன்றத்தே நம்பி முக்கோடி வழங்கினான்**

## சென்றத்தா வென்னத் திரிந்திலன் தானே

அவன் பெருந்தனவந்தன். ஊரிலுள்ள ஏழை எளியவர்களுக்குத் தன்னாலான உதவிகளைச் செய்வான். பாடசாலைக்குச் செல்லாத ஏழைப் பிள்ளைகளைத் தானே பாடசாலைக்குக் கூட்டிச் சென்று அவர்களுக்குத் தேவையான கற்றல் உபகரணங்களை வாங்கிக் கொடுத்து உடையும் உணவும் கொடுத்துக் கற்ப்பிப்பான். ஏழைப் பெண்களுக்குச் சீர்வரிசை கொடுத்துத் திருமணம் செய்து வைப்பான். பிள்ளைகளால் கவனிக்கப்படாதபெற்றோருக்குஉடையும் உணவும் கொடுப்பான். அவர்கள் மகிழ்வுடன் தங்கியிருக்கச் சகல வசதிகளும் கொண்ட காப்பகம் அமைத்துக் கொடுத்துள்ளான்.

ஒரு நாள் அவன் கோவிலுக்குச் சென்ற போது ஓர் அழகான பெண்ணைக் கண்டு காதலித்தான். அவள் பரம ஏழை. அன்று கோவிலுக்கு வந்த போது பழைய ஒரு சேலையையே அணிந்திருந்தாள். அந்தப் பழைய சேலையை மீறிய ஒரு அழகு அவளது முகத்தில் பிரகாசித்தது. தெய்வீகத் தன்மை வாய்ந்த அந்த ஒளி பொருந்திய முகத்தை அவனால் மறக்க முடியவில்லை. தனது இனத்தவரை அழைத்து அவள் யாரென்று அறிந்து வரும்படி கூறினான்.

அவள் மிகவும் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவள். தகப்பன் பெரும் குடிகாரன். அவள் உள்ளூரில் உள்ள வயல்களில் கூலி வேலை செய்து வந்தாள். இருப்பினும் அவளை மறக்க அவனால் முடியவில்லை. பெற்றோரை அவளின் வீட்டுக்கு அனுப்பி பெண் கேட்டான்.

ஒரு சில நாட்களில் திருமணம் நடைபெற்றது. திருமணநாளன்று ஊர் தேவலோகம் போல அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஊர்க்கோவில்களிலெல்லாம் பூசைகள் நடைபெற்றன. பாடசாலை மாணவர்களுக்கு உணவும் உடையும் கற்றல் உபகரணங்களும்

வழங்கப்பட்டன. ஊர்ப்பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் அந்த ஊர்மக்கள் அனைவரும் சகல வசதிகளுடனும் தங்கியிருந்து திருமணத்தைப் பார்க்கக் கூடிய வசதி செய்யபட்டது. ஊரவர்களும் அயலூரவர்களும் அங்கு திரண்டிருந்தனர். திருமணம் முடிய எல்லோருக்கும் அறு சுவை உணவு வழங்கப்பட்டது. ஏழைகளுக்கு உடுப்பிடைவைகள் வழங்கப்பட்டன.

அவனது குணத்தைத் திருமணத்திற்கு வந்தவர்களெல்லாம் பாராட்டினர். அவன் திருமணம் செய்த பெண் பெரும் அதிஷ்டம் செய்தவள் என்றும் தர்மம் செய்தவள் என்றும் ஒவ்வொருவரும் பேசிக் கொண்டனர்.

திருமணம் முடிந்தபின் ஒரு மாதம் அத்திருமண நிகழ்வு கொண்டாடப்பட்டது. கொண்டாடப்பட்ட முப்பது நாட்களும் ஏழைகளுக்கு உணவு வழங்கப்பட்டது.

முப்பத்தோராவது நாள் திடீரென்று அவன் மரணமானான். அவன் ஏன் இறந்தானென்று வைத்தியர்களால் கூறமுடியவில்லை. அன்று ஊர் சோர்ந்து விட்டது. ஊரவர்கள் பெருங்குரலெடுத்து அழுதார்கள். பலர் மயக்கமடைந்தனர்.

“ஐயோ, அந்தப் புண்ணியவானைக் கவர்ந்து செல்ல எப்படிக் கண் கெட்ட யமனுக்கு மனம் வந்தது. ஊரவர்கள் அனைவருக்கும் தந்தையாக இருந்து அனைவரினதும் தேவைகளை அவர்கள் கூறாமலே அறிந்து உதவிகள் பலவும் செய்யும் அந்த உத்தமனை விட்டுவிட்டு என்னைக் கொண்டு சென்றிருக்கலாம்” என்று ஒரு பெரியவர் பெருங்குரலெடுத்து அழுதழுது சொல்லிக் கொண்டிருந்தார்.

அந்த இழப்பை ஊரவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதனால் அவனது உடலைப் பதப்படுத்திச் சில நாட்கள் வைத்திருந்தனர். பின் பாடைக் கட்டி அதிலே அவனது உடலைத் தூக்கி வைத்து ஊரவர்கள் சுமந்து கொண்டு சுடலைக்குச் சென்றார்கள்.

பெரும் தனவந்தனாக இருந்தாலென்ன, தர்மவானாக இருந்தாலென்ன மரணம் என்பது சொல்லாமற் கொள்ளாமல் வரும். அதனால் மரணம் வருமுன் மக்கள் தம்மாலான நற்செயல்களைச் செய்வதோடு மரணத்தை வென்ற சிவனைத் தொழுது மரணபயத்தை அகற்ற வேண்டும்.

கனவுகள் கற்பனைகள்

**194. வாசந்திபேசி மணம்புணர்ந் தப்பதி**

**நேசந்தெவிட்டி நினைப்பொழிவார் பின்னை**

**ஆசந்தி மேல்வைத் தமைய அழுதிட்டுப்**

**பாசந்தீச் சுட்டுப் பலியட்டினர்களே**

அவன் பெருந் தனவந்தன். அவனிடம் பல சொகுசு வாகனங்கள் நின்றன. பல வீடுகள் இருந்தன. பல்லாயிரம் ஏக்கர் நிலத்தில் நெல் விதைப்பான், பல்லாயிரம் ஏக்கர் நிலத்தில் கரும்பும் தென்னைகளும் உண்டு.

அவனுக்குப் பெண் கொடுக்கப் பல தனவந்தர்கள் போட்டியிட்டனர். ஊரிலுள்ள தன்னைப் போன்றதொரு பெரும் தனவந்தனின் மகளை அவன் திருமணஞ் செய்தான். திருமணம் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

திருமணம் முடிந்து பத்தாவது மாதம் அவனுக்கு ஒரு அழகான பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தை பிறந்தவுடன் அவன் பெரியதொரு தென்னந்தோப்பை விலைக்கு வாங்கினான். பெண் குழந்தைக்கெனப் பல இலட்ச ரூபாவுக்குத் தங்க நகைகள் வாங்கித் தன் குழந்தைக்கு அணிவித்து அழகு பார்த்தான்.

‘‘எனது மகளை என்னைப் போன்ற பணக்காரனுக்குத் திருமணம் செய்து கொடுக்க மாட்டேன். ஒரு வைத்தியருக்குத் தான் திருமணம் செய்து கொடுப்பேன். பணக்காரர்கள் தமக்கு நோய் வந்தால் வைத்தியரைத் தேடிச் செல்கின்றனர். எனது மகளுக்குப் பெரும் வைத்தியனொருவனைத் திருமணம் செய்து கொடுத்தால், அவன் எமக்கு வரும் நோய்களுக்கு வைத்தியம் செய்வான். ஏம்மிடம் போதிய சொத்திருக்கு. எனது ஐந்து தலை முறைகள் எந்த வேலையும் செய்யாதிருந்து சாப்பிடலாம்’’ என்று மனைவிக்குக் கூறுவான்.

அவள் சொல்வாள், ‘‘வைத்தியருக்கு எமது மகளைத் திருமணம் செய்து கொடுக்கப் போதியளவு பணம் எம்மிடம் உண்டு. வைத்தியர்கள் பணத்தை எதிர்பார்க்க மாட்டார்கள். பெண் படித்திருக்க வேண்டுமென்று நினைப்பார்கள்.’’

‘‘அப்படியா..?, அப்படியானால் எமது மகளையும் வைத்தியருக்குப் படிப்பிப்போம். இரண்டு பேரும் வைத்தியரானால் நல்லது தானே. மகளைக் கண்ணுக்குச் சிகிட்சை செய்யும் வைத்தியராக்குவோம். எனது தந்தையாருக்குக் கண்கள் தெரியாதிருந்தது. கண் வைத்திய நிபுணர் ஒருவர் சத்திர சிகிட்சை செய்து கண்களைக் குணப்படுத்தினார். அதனால் எனது மகளைக் கண் வைத்தியராக்குவது தான் நல்லது.’’

அவள் பூரிப்புடன் சிரித்தாள். தனது மகள் கண் வைத்தியராகி விட்டதைப் போன்றதொரு பிரமை அவளது மனதில் உண்டானது,''பட்டணத்தில் ஒரு பெரிய கண் வைத்தியசாலை கட்ட வேண்டும். அங்கு கண் சம்பந்தமான சகல நோய்களுக்கும் வைத்தியம் செய்தல் வேண்டும். இந்த ஊரில் உள்ளவர்கள் மட்டுமன்றிப் பிற ஊரவர்களும் வந்து சிகிட்சை பெறவேண்டும்'' என்றான் அவன். அப்படிக் கூறும் போதுஅவனது மனதில் தான் கட்டப்போகும் வைத்தியசாலையின் கட்டிடம் தெரிந்தது.

அவன் அன்று மாலை வாகனத்தில் செல்லும் போது எதிரே வந்த வாகனமொன்று அவனது வாகனத்தில் மோத, அவன் அந்த இடத்திலையே பலியானான். அதைக் கேள்விப்பட்டு அவனது வீட்டுக்கு வந்த ஊரவர்கள் கூடியிருந்து கதைத்தனர். பெண்கள் கட்டிப்பிடித்து அழுதனர். அவனது கால்கள் விரிந்து கிடந்தன. ஊரவர் ஒருவர் அவற்றைச் சேர்த்துத் துண்டொன்றினால் கட்டினார்.

மனைவியும் பெற்றோரும் பெருங்குரலெடுத்து அழுதனர். ஊரவர்களும் நண்பர்களும் சேர்ந்து அழுதனர்.

ஊர் மக்கள் மரங்களின் கீழ்க் குழுமியிருந்து இறந்தவனைப் பற்றியும் வாழ்க்கை நிலையாமை பற்றியும் பேசினர். சிலர் சுடலை மடத்தைத் திருத்த வேண்டும் என்றனர்.

மாலையானதும் பிரேதத்தைத் தூக்கி பாடையில் வைத்துத் தூக்கிக் கொண்டு சுடலையை நோக்கிச் சென்றனர். பறை மேளம் ஒலிக்க வெடிகள் வெடிக்கப் பிரேதம் சுடலையை நோக்கிச் சென்றது.

## வரும் நேரம் வரும்

**195. கைவிட்டு நாடிக் கருத்தழிந் தச்சற்**

**நெய்யட்டிச் சோறுண்ணும் ஐவரும் போயினார்**

**மையிட்ட கண்ணாளும் மாடும் இருக்கவே**

**மெய்விட்டுப் போக விடைகொள்ளு மாறே.**

நல்லை நகரில் சிவபாலன் என்றொரு தனவந்தன் இருந்தான். அவனிடம் நெல்வயல்கள், தென்னந்தோப்புக்கள், வாழைத்தோப்புக்கள், கரும்புத்தோட்டங்கள் என்பன இருந்தன. அதிலிருந்து வரும் வருமானம் நூறு குடும்பங்கள் எந்த வேலையும் செய்யாதிருந்து உண்ணப் போதுமானதாகும். இதைவிட ஆயிரக்கணக்கான பசுக்களும் ஆடுகளும் எருமைகளும் நின்றன.

சிவபாலனின் மனைவி அழகானவள். கண்கள் மிகவும் அழகானவை, கவர்ச்சியானவை. வளைந்துள்ள புருவங்களுக்கு அவள் மைதீட்டுவாள். அதன் அழகு சிவபாலனைத் திகைக்க வைக்கும். அதனால் சிவபாலன் அவளைத் தினமும் மைதீட்டும்படி கூறுவான். அவள் கண்களுக்கு மையிட்ட பின் அவளையே பார்த்துக் கொண்டிருப்பான்.

சிவபாலனின் வீட்டிற்கு ஒரு நாள் வந்த சுவாமியார் ஒருவர் அவனின் அன்பான உபசரிப்பைக் கண்டு மகிழ்ந்து அவன் நெடுங்காலம் வாழும் வழிகளைக் கூறிச் சென்றான். உணவு விடயத்தில் மிகவும் கவனமாக இருக்கும் படியும், தினமும் சுத்தமான பசு நெய் கலந்த சோறு உண்டால் மரமணம் நெருங்காது. என்றும் கூறிச் சென்றார். அவர் சென்ற பின் சிவபாலன் தினமும் சுத்தமான நெய்யுடன் உணவு உண்டு வந்தான்.

அவனிடம் ஏராளமான பசுக்கள் இருந்தமையால் வேலையாட்கள் மிகவும் அவதானத்துடன் தினமும் பசு நெய்யை எடுத்துச்

சிவபாலனுக்குக் கொடுத்தனர். பசு நெய்யுடன் சோறு உண்ணத் தொடங்கிய பின் சிவபாலனின் உடலில் மாறுபாடுகள் தெரிய ஆரம்பித்தன. அவனது உடல் பொன்னைப் போலப் பளபளத்தது. அழகானது. கவர்ச்சியானது. தைரியம் அதிகரித்தது. உற்சாகம் கரைபுரண்டது. வீட்டாரும், ஊரவரும், அவனில் ஏற்பட்ட மாற்றங்களைக் கண்டு வியந்து தாமும் பசு நெய் சாப்பிடத் தொடங்கினர்.

தனது உடலில் ஏற்பட்ட மாற்றங்களைக் காணச் சிவபாலனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அதனால் தனக்கு ஆலோசனை கூறிய சுவாமியாரைக் காண விரும்பினான். ஆனால் அதன் பின் அவர் வரவில்லை. திடீரென்று சிவபாலனுக்குத் தலை சுற்றியது. உடல் தள்ளாடியது. அவனால் எழுந்து நடமாட முடியவில்லை. அதனால் அவன் படுத்த படுக்கையானான். பல வைத்தியர் வந்து பார்த்து அவனது உடலினைப் பரிசோதனை செய்து மருந்து கொடுத்தனர். இருப்பினும் அவனது நோய் அதிகரித்ததே தவிரக் குறையவில்லை. அவனது உடல் மரக்கட்டை போலக் கிடந்தது. வைத்தியர் வந்து நாடி பிடித்துப் பார்த்தார். ‘‘வாதநாடியும் பித்தநாடியும் மெல்ல மெல்ல அடங்கிக் கொண்டிருந்தன. சிலேத்தும நாடி மட்டும் சிறிது துடித்துக் கொண்டிருந்தது. அதுவும் இன்னும் சில நொடிக்குள் அடங்கிவிடும் என்று வைத்தியருக்கு தெரிந்தது. மூன்று நாடிகளும் அடங்கி அழிந்தால் ஐம்புலன்களும் அழிந்துவிடும்’’என உணர்ந்த வைத்தியர், ‘‘தூரத்தில் உள்ள உறவினர்கள், நண்பர்களுக்கு அறிவியுங்கள்’’ என்றார்.

அவனது மனைவி பெருங்குரலெடுத்துக் கத்தினாள். ‘‘ஐயோ பாடுபட்டுத்தேடிய சொத்துக்களையும், மனைவி பிள்ளைகளையும், பெற்றோரையும், உற்றார் உறவினர்களையும் விட்டு விட்டுத் தனியே போக உனக்கு எப்படி மனம் வந்தது?. பசு நெய்யுடன் சோறுண்டால்

பலகாலம் நோய் நொடியின்றி வாழலாம் என்று ஒரு சுவாமியார் கூறினாரே. அது பொய்யாகிவிட்டதே. சிவனே எனது மகனின் உயிரைத் திருப்பித்தா…'' என்று கதறினார் சிவபாலனின் தந்தை.

''எல்லாம் கர்மவினை. அதன்படி தான் யாவும் நடக்கும். அதைப் புரியாதவர்கள் தான் சாகாமைக்கு மருந்து கூறுவார்கள். அதை நம்புபவர்கள்ஏமாற வேண்டியதுதான்'' என்று யாரோ சொல்லிக் கொண்டிருந்தார்.

மனித சுபாவம்

**196. பந்தல் பிரிந்தது பண்டாரங் கட்டற்ற**
**ஒன்பது வாசலும் ஒக்க அடைந்தன**
**துன்புறு காலந் துரிசுவர மேன்மேல்**
**அன்புடை யார்கள் அழுதகன் றார்களே.**

அவ்வூரின் தலைவன் தனபாலன். அவனில்லாமல் அவ்வூரில் எந்தக் கருமங்களும் நடைபெறாது. அவன் வராத சபை சோபிக்காது என்பதால் சுபகாரியங்கள்கூடச் சுபநேரம் தவறி அவன் வந்த பின்பே நடைபெறும். அதனால் சுப நிகழ்வுகள் தன்னால் தடைப்படக்கூடாதென்பதற்காக அவன் குறித்த நேரத்திற்கு வந்து விடுவான். அவன் வெளியூர்களில் இருந்தால், அவன் வெளியூர்களில் இருக்கும் நாட்களில் அவ்வூரில் சுப நிகழ்வுகள் எதுவும் நடைபெறாது.

ஊரவர்கள் தனபாலன் மீதும், தனபாலன் ஊரவர்கள் மீதும் அன்பு பூண்டிருந்தனர். தனபாலன் பெரும் தனவந்தன், தர்மவான், இரக்க சிந்தனை உடையவன். தன்னை நேசிப்பதைப் போல அவன் ஊர் மக்களையும் நேசித்தான். அவர்களுக்கு ஏற்படும் துன்பங்களைத் தன்னால் இயன்றளவு நீக்கினான். வீடுகளில் நடைபெறும் மங்கள

காரியங்களுக்குப் பொருள் கொடுப்பான். அதனால் அவ்வூரவர்கள் அவனை அவ்வூரில் கோவில் கொண்டருளியிருக்கும் சிவனாகவே கருதினர். ஊர்மக்கள் சிவனிடம் தமது குறைகளை முறையிட்டுவிட்டுத் தனபாலனுக்குச் சொல்வார்கள். அவன் அதைத் தீர்த்து வைப்பான்.

திடீரென்று இன்னதென்று கண்டுபிடிக்கமுடியாத ஒரு நோய் தனபாலனைத் தாக்கியது. அதனால் அவன் மெலிந்து நடக்கக்கூட முடியாதவனாகப் பாயில் படுத்திருந்தான். ஊர் வைத்தியர்களும் பட்டணத்திலுள்ள வைத்தியர்களும் அவனைப் பரிசோதித்த போதும் அவனைப் பீடித்திருந்த நோயை அவர்களால் கண்டுபிடிக்கமுடியவில்லை. ஊரவர்கள் தமக்கு தெரிந்த வைத்தியர்களை எல்லாம் அழைத்து வந்து காட்டினர். ஊர்க் கோவில்களில் அவன் சுகம் பெறவேண்டும் எனப் பூசைகள் நடைபெற்றன. கோவிலுக்குச் செல்வோரும் அவன் சுகமடைந்து மீண்டும் எழுந்து நடமாட வேண்டுமெனப் பிராத்தித்தனர்.

எழுந்து நடக்க முடியாது பாயில் படுத்திருந்த தனபாலனை ஊரவர்கள் மிகவும் அக்கறையுடன் பராமரித்தனர். தமது குடும்ப உறுப்பினன் ஒருவனைப் பராமரிப்பதுபோல ஒவ்வொருவரும் தனபாலனை அன்புடனும் அக்கறையுடனும் கவனித்தனர். நாட்கள் நகர்ந்தன. ஆரம்பத்தில் ஒரு நாளைக்கு மூன்று முறை வந்துபார்த்துச் சுகம் விசாரித்தோர் பின் இரண்டு மூன்று நாட்களுக்கொரு முறை வந்து பார்த்தனர். அதன் பின் அது வாரமாகியது. பின் மாதமானது.

தகப்பன் இறந்து விடுவதற்கு முன் அவரைப் பார்த்துச் சேவை செய்யவேண்டுமெனப் பிற நாடுகளில் இருந்து வந்த அவரது பிள்ளைகள் தமது நாடுகளிற்குத் திரும்பினர். மிகவும் மோசமான நிலையில் உணர்வுகளில்லாது மலம் சலம் முதலியவற்றைப் படுத்த படுக்கையில் கழித்துக் கொண்டிருந்த தனபாலனைப் பார்க்கவோ பராமரிக்கவோ இப்போ ஊரவர்கள் வருவது குறைவு. வந்தாலும் தூரநின்று விசாரித்து

விட்டு பெரும் துன்பம் கொண்டவர்பளைப் போலப் பேசிவிட்டுச் சென்றனர். ஊணர்வுகளின்றி மரம் போல் கிடந்த தனபாலனின் ஒன்பது வாசல்களும் அடைபட உயிர் பிரிந்தது. ஊரவர்கள் கூடினர். பெரும் திருவிழாப் போல ஊர் அலங்கரிக்கப்பட்டது. ஒலிபெருக்கி தனபாலனைப் பற்றி இல்லாதது பொல்லாதவற்றையெல்லாம் கூறிக் கொண்டிருந்தது. பிள்ளைகள் வெளிநாடுகளில் இருந்து புறப்பட்டு விட்டதாகத் தகவல் வந்தது. மரணவீட்டிற்கு வந்தவர்கள் அழுதுவிட்டுச் சென்றனர்.

பிள்ளைகள் வந்ததும் ஊரவர்கள் மீண்டும் கூடினார்கள். தனபாலனைப் பற்றிப் பேசினார்கள். அவனது இழப்புப் பெரும் இழப்பென்றனர். இதை ஈடுசெய்ய முடியாது என்றனர். பின் பிரேதத்தைத் தூக்கிப் பாடையில் வைத்துச் சுமந்து கொண்டு சுடலையை அடைந்தனர். அதைத் தீயிட்டுக் கொழுத்திவிட்டு நீராடினர். சில தினங்கள் ஊரில் தனபாலனைப் பற்றிப் பேச்சிருந்தது. பின் அது மெல்ல மெல்ல மறைந்து விட்டது. இப்போ தனபாலனில்லாது ஊரில் பெரும் பெரும் வைபவங்கள் நடைபெறுகின்றன.

முன்னும் பின்னும்

**197. நாட்டுக்கு நாயகன் நம்மூர்த் தலைமகன்**
**காட்டுச் சிவிகை யொன் றேறிக் கடைமுறை**
**நாட்டார்கள் பின்செல்ல முன்னே பறைகொட்ட**
**நாட்டுக்கு நம்பி நடக்கின்ற வாறே.**

கரிகாலன் பலமுள்ள அரசர்களைக் கூடப் பயப்படுத்தும் அரசன். அவனது பெயரினைக் கேட்டால் சிற்றரசர்களும் பேரரசர்களும் தீயவர்களும் நடுநடுங்குவார்கள். அவனுடன் பகை ஏற்படாது நடந்துகொள்வார்கள். அவன் தனது பலத்தை வெளிப்படுத்த அடிக்கடி பெரும் விழாக்கள் கொண்டாடுவான். அவ்விழாக்களில் அயல் நாட்டு

அரசர்களும் கலந்து கொள்வார்கள். அவனுக்குப் பெறுமதிமிக்க பரிசில்கள் பலவற்றைக் கொண்டுவந்து கொடுப்பார்கள். யார் அவனுக்குப் பெறுமதி மிக்க பரிசு கொடுத்ததென்று பின் விமர்சிப்பார்கள்.

அவனுக்கு ஒரே ஒரு மகள். அவளைத் திருமணம் செய்யப் பல நாட்டினது அரசர்கள் போட்டி போட்டனர். அதனால் அவர்களுக்கிடையில் பெரும் போர் கூட ஏற்பட்டது. பல அரசர்கள் புலவர்களையும் அறிஞர்களையும் தூதாக அனுப்பிப் பெண்கேட்டனர். அவன் பெரும் மன்னனான வளவை நாட்டரசனுக்குத் தனது மகளைத் திருமணம் செய்து வைத்தான். வளவை நாடு பெரும் தேசம். கரிகாலன் வளவை நாட்டரசனுக்குப் பெண் கொடுத்ததால் அவனது பலம் இரண்டு மடங்காக அதிகரித்தது.

ஒரு முறை அவன் தனது பலத்தை வெளிப்படுத்த பெரியதொரு படை அணிவகுப்பு நடாத்தினான். அயல் நாட்டரசர்கள் எல்லோரும் வந்தனர். புரோகிதர் மாலை நான்கு மணிக்குத்தான் சுப நேரமுள்ளது. அந்நேரம் அணிவகுப்பதைத் தொடங்குவது தான் நல்லது என்றார்.

ஆனால் கரிகாலன் புரோகிதரின் சொல்லைக் கேட்காமல் காலை எட்டு மணிக்கே விழாவைத் தொடங்கினான். புரோகிதர் வந்து காலையில் தொடக்கினால் துன்பங்கள் உண்டாகும் என்றார். அதைக் கரிகாலன் கேட்கவில்லை, “புரோகிதரே, போர் செய்வதானால் தான் நல்ல நேரம் பார்க்க வேண்டும். சுப நேரத்தில் போர் ஆரம்பிப்பது வெற்றிக்காக அல்ல. வீர மரணம் அடையும் போர் வீரர்கள் சொர்க்கத்தை அடைவதற்காக. இது கண்காட்சிபயிற்சி. எனது பலத்தைக் காட்சிப்படுத்துகிறேன். இதற்குச் சுபநேரம் தேவையில்லை” என்றான் கரிகாலன்.

கரிகாலன் பெரும்பாலும் மற்றவர்களிடம் ஆலோசனை கேட்டு நடப்பதில்லை. அன்று அவன் திடீரென்று இறந்து விட்டான். முதலமைச்சரும் புரோகிதரும் அவனது ஈமைக் கிரியைகள் செய்யவதற்கான நேரத்தைக் குறிப்பிட்டனர். அவர்களது யோசனைகளை ஆட்சேபிக்க யாரும் இருக்கவில்லை. அதனால் புரோகிதர் தனது செயல்களின் மகிமையைக் காட்டச் சாத்திரத்தில் இல்லாத பல நிகழ்வுகளைக் குறிப்பிட்டார்.

பிரேத ஊர்வலம் ஆரம்பமானது. பாடையில் கரிகாலனது உடலைத்தூக்கி வைத்தார்கள். நான்கு பேர் பாடையைத் தூக்கினார்கள். மங்கள வாத்தியங்கள் இசைக்கப்பட்டன. நெய்தற் பறை கொடூரமாக ஒலித்தது. பாடையின் பின்னே மக்கள் சென்றனர். முன்பு அவன் அப்பாதையால் வீதியுலாச் சென்றால் நூற்றுக்கனக்கான யானைகளும் குதிரைகளும் முன்னே செல்லும். மங்கள வாத்தியங்கள் முழங்கும். ஆடல் மகளிர்கள் விதம் விதமாகத் தம்மை அலங்கரித்து அரசனுக்கு முன் நடனமாடிச் செல்வார்கள். வீதிகள் மாலை, தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். சந்திகள் தோறும் மேடைகள் அமைத்துக் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். கலைஞர்கள், தம் திறமைகளை வெளிப்படுத்தி அரசனது நன் மதிப்பையும் பரிசில்களையும் பெறுவார்கள். நகர் இந்திர லோகம் போல அலங்கரிக்கப்பட்டிருக்கும். கோவில்களில் பூசைகள் நடைபெறும். மடங்களில் உணவு வழங்கப்படும். அரசன் அடிக்கடி நகர் வலம் வரவேண்டுமென்று மக்கள் விரும்புவர். வீதிக்கு வீதி அரசனை வரவேற்பதில் போட்டியிருக்கும். எந்த வீதி அலங்கரிக்கப்பட்டது, எந்த வீதியில் தரமான கலை நிகழ்வுகள் நடைபெற்றது என அரச ஊழியர்கள் ஆய்வு செய்வார்கள்.

ஆனால் அரசன் அன்று பாடையில் ஊர்வலமாகச் சென்ற போது இவை எவையும் நடைபெறவில்லை.

“இதுதான் நிஜமானது. சமரசமான இடம் சுடுகாடு . அதில் அரசனும் ஆண்டியும் சமம்” என்றார் புரோகிதர்.

அரசன் ஊரில் தங்கினால் படைவீரரும் ஊர்ப் பிரமுகர்களும் மக்களும் அவனோடு கூட இருப்பர். ஆனால் அன்று எவரும் இருக்கவில்லை.

சிதைந்த கோவில்

**198. முப்பதும் முப்பதும் முப்பத் தறுவருஞ்**

**செப்ப மதிளுடைக் கோயிலுள் வாழ்பவர்**

**செப்ப மதிளுடைக் கோயில் சிதைந்தபின்**

**ஒப்ப அனைவரும் ஓட்டெடுத் தார்களே.**

அருணாசலத்தின் உடலை உரிய முறைப்படி தகனஞ் செய்து விட்டுச் சாம்பலை அள்ளிச் சென்று கங்கையில் கரைத்து விட்டு, கங்கையில் முழுகிவிட்டு வீட்டுக்கு வந்தார் அருளம்பலம். அவரது மனதில் நிம்மதியிருந்தது. தன்னை வளர்த்து ஆளாக்கிய தந்தை இறுதிக்காலத்தில் பட்டதுன்பங்களை நினைக்க அவருக்கு வேதனையாக இருந்தது. எவ்வளவு வசதியாக வாழ்ந்தவர். எவ்வளவு பலத்துடன் வாழ்ந்தவர். அப்படியிருந்தும் உடலின் ஒவ்வொரு உறுப்பும் படிப்படியாகச் செயலிழந்து கொண்டு வந்து இறுதியில் அவரின் உயிர் உடல் சிதைந்தமையாற் சென்றுவிட்டது. தொண்ணூற்றாறு மெய்களால் கட்டிய பலம்வாய்ந்த கோட்டையாகத் திகழ்ந்த கோவிலான உடல் படிப்படியாகச் செயலிழந்து பழுதடையும் என்று கற்றுணர்ந்த அவருக்குத் தெரியும். அதனால் அவர் ஆறுதலடைந்தார். அவர் வாழ்ந்த

வாழ்க்கையின் பயனாக நற்பேறு கிடைக்கும் என்று நம்பினார். அதனால் அவரது மனம் ஆறுதலடைந்தது.

இறுதி நிகழ்வு

**199. மதுவூர் குழலியும் மாடும் மனையும்**
**இதுவூர் ஒழிய இதணம தேறிப்**
**பொதுவூர் புறஞ்சுடு காடது நோக்கி**
**மதுவூர வாங்கியே வைத்தகன் றார்களே.**

அருளம்பலம் நினைத்துப் பார்த்தார். அவர் தன் பிள்ளைகளில் உயிரையே வைத்திருந்தார். மனைவி ஒரு போதும் அவரது மனம் நோகும்படி நடந்ததில்லை. ஊரவர்களும் அவர் மீது அளவில்லாத பாசத்தை வைத்திருந்தனர். அவர் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் தேவையான அத்தனை உதவிகளையும் செய்வார். மிகவும் கடுமையாக உழைத்துப் பொருள் தேடினார். அப்பொருளைத் தானதர்மம் செய்தார். ஊரவர்கள் எல்லோரும் அவரிடமே ஆலோசனை பெற்றனர். கோவிலுக்கு மடங்கட்டிக் கொடுத்தார். அவர் இறக்கும் போது தான் வாரத்தில் ஒரு நாள் கொடுத்த உணவைத் தொடர்ந்து கொடுக்கும்படி சொன்னார். அவர் யாருக்கும் தீமை செய்ததில்லை. ஊர்மக்கள் எல்லோரும் திரண்டு வந்து விம்மி விம்மி அழுதனர். பிள்ளைகளும் சகோதரர்களும் மனைவியும் துயரத்தைத் தாங்க முடியாது மயக்கமடைந்தனர். கிரியைகள் முடிய அவரது உடலைப் பாடையில் வைத்துப் பொது மயானத்திற்குத் தூக்கிச் சென்றனர். உடல் தகனமடைந்ததும் எல்லோரும் வீட்டுக்குத் திரும்பினர்.

“இது தான் மனித வாழ்வு. வாழும் போது செய்த தானதர்மங்கள் தான் இறந்தபின்பும் பேசப்படும். வேறு எவையும் பேசப்படாது. யார் அழுதாலும் சென்ற உயிர் திரும்பி வராது” என்று நினைத்தார் அருளம்பலம்.

புரியாத மனிதர்

**200. வைச்சகல் வுற்றது கண்டு மனிதர்கள்**
**அச்சக லாதென நாடும் அரும்பொருள்**
**பிச்சது வாய்ப்பின் தொடர்வுறு மற்றவர்**
**எச்சக லாநின் றிளைக்கின்ற வாறே.**

அன்று நாகநாதனின் மகன் பகீரதன் வயலில் உள்ள கிணற்றில் தவறுதலாக விழுந்து இறந்து போனான். அவனுக்கு வயது இருபத்தைந்து. நாகநாதன் பெரும் விவசாயி. அவனிடம் ஆயிரக்கணக்கில் மந்தைகள் நிற்கின்றன. பல ஆயிறம் ஏக்கர் வயல் நிலம் இருந்தது. கரும்புத் தொழிற்சாலை இருந்தது. இருந்தும் அவனது ஒரே ஒரு மகன் பகீரதன் இறந்ததை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

ஊர்ச் சிவன் கோவிலின் தலைவன் நாகநாதன் தான். அவ்வூர் பெரும் பணக்காரர்கள் வாழும் ஊர் அல்ல. நாகநாதனை நம்பித்தான் அவ்வூரவர்கள் வாழ்ந்து வந்தனர். சிவன் கோவிலுக்கு நாகநாதன் தலைமையில் ஒரு நிர்வாகசபை இருந்தது. அச்சபையின் அங்கத்தவர்கள் கூட்டங்களுக்கு மட்டும் வந்து செல்வார்கள். மற்றும்படி நிதியுதவி செய்ய மாட்டார்கள். நிதி கொடுக்குமளவிற்கு அவர்களிடம் பொருளில்லை. அதனால் நாகநாதன் தான் சிவன் கோவிலின் சகல தேவைகளையும் கவனித்து வந்தான். அவனுக்குத் திருமணமாகிப் பத்து

வருடங்கள் சென்றும் குழந்தை பிறக்கவில்லை. அதனால் அவன் சிவன் கோவிலில் விரதமிருந்தான். வாயிற்கோபுரத்தைக் கட்டினான். அதன் பின்பு தான் பகீரதன் பிறந்தான்.

பகீரதனைஅவன் மிகுந்த செல்லமாக வளர்த்தான். அவன் கேட்டதெல்லாவற்றையும் வாங்கிக் கொடுத்தான். அதனால் அவன் உலகம் புரியாது வாழ்ந்து வந்தான். அன்று அவனது நண்பர்கள்வயலில் உள்ள கிணற்றில் இறங்கிக் குளிக்க விரும்பினர். அவர்களுடன் கிணற்றில் இறங்கிக் குளிக்கச் சென்ற பகீரதன் திடீரென்று நீரில் மூழ்கிப் பலியானான்.

அதை நாகநாதனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஊரவர்கள் எல்லோரும் நாகநாதனின் வீட்டில் குழுமியிருந்தனர். நாகநாதன் அழுதழுது மயக்கமடைந்தான். நாகநாதனின் பெற்றோரும் அவனது மனைவியின் பெற்றோரும் உறவினர்களும் துக்கத்தைத் தாங்கமுடியாது அடிக்கடி மயங்கிவிழுந்தனர். பகீரதனின் மாமன் மகள் ஆரணி. அவளைப் பகீரதனுக்த் திருமணம் செய்ய நிட்சயித்திருந்தனர். அவள் மயங்கிப் பலமணி நேரம் சுயநினைவில்லாதிருந்தாள்.

நாகநாதனின் தந்தை சிவகுநாதனுக்கு எண்பது வயது. அவரது உடலெங்கும் சுருக்கங்கள் இருந்தன. நடக்க முடியாத அவரை இருவர்கள் கைத் தாங்கலாக அழைத்து வந்தனர். அவரால் நடந்ததை உணர்ந்து கொள்ள முடியவில்லை. பிரேதத்தின் அருகே வந்து நின்று எதையோ முணுமுணுத்தார். சொற்கள் வெளியே வரவில்லை ஆனால் எதையோ சொல்கிறார். என ஊகிக்க முடிந்தது.

அன்று நடைபெற்ற மரண வீட்டிற்கு அயலூரிலுள்ள வர்த்தகர்கள் இரண்டு பேர் வந்திருந்தனர். அவர்கள் வந்ததும் நாகநாதனுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறிவிட்டுத் தூரத்திலிருந்த வேப்பமர நிழலில்

வந்தமர்ந்தனர். அவர்களைத் தெரிந்த வேறு சிலரும் அவர்களின் அருகே வந்தமர்ந்தனர்.

“எனது மகளுக்குத் திங்கட்கிழமை திருமணம். மாப்பிள்ளை வெளிநாட்டில் வைத்தியராகப் பணி புரிகிறார். ஒரு கோடி ரூபா சீதனம் கொடுத்துள்ளேன். அவர்கள் சகல வசதியுடனும் சந்தோசமாக வாழவேண்டும். உங்களுக்கெல்லாம் திருமண அழைப்பிதல் கொண்டு வந்துள்ளேன்” என்றார் அடுத்த ஊரின் பெரும் வர்த்தகரான தில்லையம்பலம்.

“உங்களுக்கென்ன பெரிய கோடீஸ்வரர். பெரியதொரு ஆடம்பர மண்டபத்தை அமைத்துத் திருமணத்தை நடத்துவீர்கள்” என்றார் அவரது நண்பன் ஏகாம்பரம்.

“ஓம் ஓம்” பெரிதாக மகிழ்வுடன் சிரித்த தில்லையம்பலம். சொன்னார், “இதுவரை எனது ஊரிலோ அல்லது அயல் ஊர்களிலோ நடக்காததை நடத்திக் காட்டுகிறேன். பத்துக் கூட்டம் மேளத்திற்கு ஒழுங்கு செய்துள்ளேன். ஒரு வாரத்திற்கு ஊரவர் எல்லோருக்கம் உணவு கொடுக்கப் போகிறேன். பெண்ணை அலங்கரிக்கவென அலங்கரிப்பு நிபுணர்களை மாப்பிளை வெளிநாட்டிலிருந்து அழைத்து வருகிறார்” அவர் கூறிக்கொண்டிருக்கும் போது ஏகாம்பரம் குறுக்கிட்டுச் சொன்னார், “அதற்குச் செலவு அதிகமாகுமே…”

“செலவு என்ன செலவு. மனிதனை மிஞ்சியதா…எனது மகள் சகல சௌபாக்கியங்களுடனும் நெடுங்காலம் வாழ வேண்டும். இதுதான் எனது ஆசை..” அட்டகாசமாகச் சிரித்தார் தில்லையம்பலம்.

வாரம் ஒன்று கழிந்தது. ஏகாம்பரம் தான் கேள்விப்பட்ட செய்தியை உறுதி செய்யத் தில்லையம்பலத்தின் வீட்டிற்குச் சென்றார். தில்லையம்பலம் கட்டில் ஒன்றில் நீட்டிநிமிர்ந்து படுத்திருந்தார். அவரைச் சுற்றிப் பலர் அழுது கொண்டு நின்றனர், ''வாழும் வாழ்க்கை நிலையானது என்று நினைத்துத் திமிருடன் தனது மகளின் திருமண ஏற்பாடுகளைச் செய்தார். மாப்பிள்ளை ஏற்கனவே திருமணமானவராம். தரகர் கொண்டு வந்த திருமணத்தை ஆராயாது ஒப்புக் கொண்டு தடல் புடலாகச் செலவு செய்தார். அதை அறிந்ததும் மாரடைப்பு வந்துவிட்டது'' என்று ஏகாம்பரத்திற்குத் தில்லையம்பலத்தின் உறவினன் ஒருவன் சொல்லிக் கொண்டிருந்தான்.

''சென்ற வாரம் பகீரதன் இறந்ததைக் கண்டும் தில்லையம்பலம் திருந்தவில்லை. வாழ்வு நிலையானதென்று நினைத்துச் செயற்பட்டார். இன்று அவரே இறந்துவிட்டார். மனிதர்கள் ஒரு போதும் திருந்தமாட்டார்கள். மற்றவர்களுக்கு வரும் துன்பங்கள் தமக்கு வராதென்று பலரும் நினைக்கிறார்கள்'' என்று நினைத்தான் ஏகாம்பரம்.

மாந்தர் நிலை

**201. ஆர்த்தெழு சுற்றமும் பெண்டிரும் மக்களும்**
**ஊர்த்துறைக் காலே ஒழிவர் ஒழிந்தபின்**
**வேர்த்தலை போக்கி விறகிட் டெரிமூட்டி**
**நீர்த்தலை மூழ்குவர் நீதியி லோரே.**

சிறுத்தொண்டன் நாவலூரில் வாழ்ந்து வரும் பெரியவர். அவர் கற்க வேண்டிய நூல்கள் எல்லாவற்றையும் கற்றுத் தேர்ந்தவர், தர்மவான். ஊர்மக்களின் அன்பிற்குப் பாத்திரமானவர். அவர் ஒரு சிறிய வியாபார நிலையத்தை அமைத்து நீதியான முறையில் வியாபாரம் செய்து வந்தார். அவரது மனைவி காயத்திரி. கணவன் மீது அளவில்லாத பாசம் கொண்டவள். கணவனைத் தெய்வமாகப் போற்றுபவள். கணவனது தேவைகள் அனைத்தையும் அக்கறையுடன் கவனிப்பவள். அது போலச் சிறுதொண்டனும் காயத்திரி மீது அளவில்லாத பாசத்தை வைத்திருந்தார். அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள். இருவரும் ஐந்து வயது கூட ஆகாத பாலர்கள். காயத்திரி மூன்றாவது மகவைப் பிரசவிக்கவுள்ளாள்.

திடீரென்று காயத்திரிக்கு வயிற்று வலி உண்டானது. சிறுத்தொண்டனும் அவரது உறவினர்களும் பட்டணத்திலுள்ள வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர். காயத்திரி அழகானதோர் ஆண் மகவைப் பெற்று விட்டு இறந்து போனாள்.

சிறுத்தொண்டன் துடிதுடித்துப்போனார். அவரால் காயத்திரியின் இழப்பைத் தாங்கிக் கொள்ளமுடியவில்லை. பிள்ளைகளைத் தனது சகோதரர்களிடம் ஒப்படைத்து விட்டுத் துறவறம் மேற்கொள்ள விரும்பினார்.

மரணமடைந்த காயத்திரியின் உடலைப் புனித நீர் கொண்டுவந்து நீராட்டினர். பின்பு பாடையில் வைத்துச் சுடலைக்குக் கொண்டு சென்றனர். சுடலைக்கு அருகே புனித கங்கை ஒன்று பாய்ந்து செல்கிறது. சுடலையில் காயத்திரியின் உடலைச் சுட்டு அஸ்தியை அள்ளிப் புனித கங்கையில் கரைத்தனர்.

அதன் பின் செய்ய வேண்டிய சமயச் சடங்குகளை எல்லாம் விதிமுறை தவறாது செய்தனர். புனித கங்கையின் நீரால் வீட்டைச் சுத்தம் செய்தனர். நாட்கள் கழிந்தன. காயத்திரி இறந்து ஒருமாதம் கழிந்து விட்டது. மாத இறுதியில் செய்யும் சடங்குகள் யாவும் முறைப்படி செய்யப்பட்டன. சிறுத் தொண்டான் நடைப் பிணமானார். அவரால் இயங்கமுடியவில்லை. காயத்திரி அவரைப் பராமரித்த விதம் கண்முன் தோன்றிச் சித்திரவதை செய்தது. அதனால் அவர் துறவறம் செல்ல விரும்பினார். பெற்றோரும் உறவினர்களும் அதைத் தடுத்தனர்.

சிறுதொண்டனால் வியாபார நிலையத்திற்குச் செல்ல முடியவில்லை. அவர் வீட்டில் தங்கியிருந்தார். அவரது குழந்தைகளைப் பராமரிக்கக் காயத்திரியின் பெற்றோர் காயத்திரியின் தங்கையைச் சிறுத்தொண்டனின் வீட்டிற்கு அனுப்பி வைத்தனர்.

நாட்கள் நகர்ந்தன. சிறுத்தொண்டன் முன்பு போல நடக்கத் தொடங்கினார். அவர் ஒழுங்காகத் தனது வியாபார நிலையத்திற்குச் சென்றார். வியாபாரத்தை அக்கறையுடன் கவனித்தார். அவருக்குக் காயத்திரியின் நினைவு அற்றுப் போனது. இப்பொழுது அவர் காயத்திரியின் தங்கையின் சொற்படி நடக்கத் தொடங்கினார்.

காயத்திரியின் தங்கைக்குப் பெற்றோர் திருமணம் பேசி முற்றாக்கிவிட்டுச் சிறுத்தொண்டனுக்கு அதைக் கூறி அவளை அழைத்துச் செல்ல வந்தனர். சிறுத்தொண்டன் அவளைப் பெற்றோருடன் செல்ல அனுமதிக்கவில்லை. அவளைத் தான் திருமணம் செய்துகொள்ளப் போவதாகக் கூறினார். அவளும் சிறுத்தொண்டனைத் திருமணம் செய்யப்போவதாகக் கூறினாள். அவளின் பெற்றோர் அவளையும் சிறுத்தொண்டனையும் வாய்க்குவந்தபடி ஏசிவிட்டுத் தமது வீட்டிற்குச் சென்றனர்.

“சிறுத்தொண்டன் காயத்திரியின் பிரிவைத் தாங்கிக் கொள்ள முடியாது துறவறம் செல்லப்போவதாகச் சொன்னமையால், அதை நம்பி எனது மகளை அவனின் வீட்டிற்கு அனுப்பினேன். அவன் காயத்திரி இறந்து இருமாதங்கள் கூட முடியாத நிலையில் அவளை மறந்து எனது இளையமகளைத் திருமணம் செய்து விட்டான். இவன் உண்மையானவனா..? நேர்மையானவனா..? நீதியுள்ளவனா..? நடிப்பை நம்பி ஏமாந்து விடடேன்”என்று காயத்திரியின் தகப்பனார் சிறுத்தொண்டனின் பெற்றோருக்குக் கவலையுடன் சொன்னார்.

அறியாதவர்கள்

**202. வளத்திடை முற்றத்தோர் மாநிலம் முற்றுங்**
**குளத்தின் மண்கொண்டு குயவன் வனைந்தான்**
**குடமுடைந் தால்அவை ஓடென்று வைப்பர்**
**உடலுடைந் தால்இறைப் போதும்வை யாரே.**

நடராசன் அவ்வூரில் வாழும் பெரும் தனவந்தன். அவருக்கு ஐந்து ஆண்பிள்ளைகள். அந்த ஐந்து ஆண்பிள்ளைகளும் வெவ்வேறு நாடுகளில் வாழ்ந்து வந்தனர். நடராசனின் சொத்தே நாலைந்து தலைமுறைகளுக்குக் காணும். இருப்பினும் அவர் மதிப்பிற்காகத் தமது மக்களைப் பிற நாடுகளுக்கு அனுப்பியிருந்தார்.

அவரின் உடம்பில் வலு இருந்தது. அவர் ஓடிஆடித் திரியுங்காலங்களில் அவருக்குத் துணை தேவைப்படவில்லை. அத்துடன் அவர் பணம் கொடுத்துத் தனது வேலையை உடனுக்குடன் செய்வித்துக் கொண்டிருந்தார். அவரது மனைவி சகுந்தலை. அவரின் மீது உயிரையே வைத்திருந்தாள். அவள் தனது பிள்ளைகள் தன்னோடு இருக்க வேண்டும் என்று நினைத்துத் தனது கணவனுக்குப்

பிள்ளைகளை ஊருக்குத் திரும்பி வரும்படி பிள்ளைகளுக்கு கூறுமாறு சொல்வாள். அவர் அதைப் பிள்ளைகளுக்குச் சொல்வதில்லை. தனது ஒரு மகன் இங்கிலாந்தில் இருக்கிறான். அடுத்தவன் அவுஸ்ரேலியாவில் இருககிறான். அடுத்தவன் பிரான்சில் இருக்கிறான் என்று தனது பிள்ளைகள் இருக்கும் நாடுகளைப் பற்றிச் சொல்வதில் அவருக்கு இனம் புரியாத மகிழ்ச்சி. அதனால் அவர் தனது பிள்ளைகளை ஊருக்கு வரும்படி கூறுவதில்லை. மனைவி கேட்டால்சொல்லி உள்ளேன் என்பார்.

நாளடைவில் வயது போகப் போக அவருக்கும் தனது பிள்ளைகளைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை வந்தது. அதனால் அவர் பிள்ளைகளை வந்து ஊரில் இருக்குமாறு வற்புறுத்தினார். அவர்கள் பிள்ளைகள் படிக்கிறார்கள் படிப்பு முடியட்டும் என்பார்கள்.

திடீரென்று சகுந்தலையின் இடதுகையும் இடதுகாலும் செயலிழந்தன. அதனால் அவள் படுத்த படுக்கையானாள். ஆரம்பத்தில் இனத்தவர்கள் வந்து அக்கறையுடன் உதவி செய்தனர். காலப்போக்கில் அவர்கள்,“உங்களது பிள்ளைகளில் ஒன்றைக் கூப்பிட்டுக் கவனியுங்கள்” என்று கூறினர். அதனால் அவர் சம்பளத்திற்கு ஆள் வைத்து அவளைப் பராமரித்தார். சம்பளத்திற்கு வேலை செய்வோர் ஒழுங்காக வேலை செய்வதில்லை. சம்பளம் போதாது என்று சொல்வார்கள். அவர் எவ்வளவு பணத்தைக் கொடுத்தாலும் கூலிக்கு வேலை செய்வோர் ஒழுங்காக வேலை செய்வதில்லை. அதனால் பெரும்பாலான வேலைகளை நடராசாவே செய்வார்.

திடீரென்று ஒரு நாள் சகுந்தலை காலமானாள். நடராசா பிள்ளைகள் அணைவருக்கும் சகுந்தலை கடுமையாக இருந்தபோதே அறிவித்தமையால் பிள்ளைகள் எல்லோரும் வந்திருந்தனர். சகுந்தலை அன்று காலை தான் காலமானவள். பிள்ளைகள் உடனே பிரேதத்தை

எடுத்துவிடும்படி கூறினர், 'படுக்கையில் கிடந்த உடலில் கிருமிகள் அதிகம் இருக்கும். அது மற்றவர்களுக்குத் தொற்றிவிடும்' என்றனர்.

கிரியைகள் முடிவடைந்தன. சகுந்தலையின் சகோதரன் தூர இடத்தில் இருந்தமையால் வரவில்லை. கிரியைகள் முடிவுற்றால் பிரேதத்தை வீட்டில் வைத்திருக்கக் கூடாது. சுடலைக்கு கொண்டு சென்று வைத்திருப்போம். அவர் அங்கு வந்து பார்க்கட்டும் என்று கூறிப் பிரேதத்தைத் தூக்கினர்.

மரணவீட்டிற்கு வந்த நடராசாவின் பிள்ளைகள் மரணச் சடங்கு முடிந்த மூன்றாம் நாள் புறப்பட்டனர். நடராசா எதுவும் சொல்லவில்லை. அவர் மனதுள் அழுதவாறு இருந்தார். அவரின் நண்பரான ஏரம்பமூர்த்தி அவருக்கு அருகில் வந்து அமர்ந்தார். அப்போது நடராசா சொன்னார், "இறைவன் என்ற குயவன் செய்த கலம் தான் இந்த உடம்பு. அதை எப்படியெல்லாம் பராமரித்தோம். நோய் வந்து படுத்த படுக்கையானால் 'சீ' என்று விலகிச் செல்கிறோம். பின் உயிர் போனால் பிரேதத்தை உடன் சுடலைக்குக் கொண்டு சென்று சுடுகிறோம். ஆனால் குயவன் செய்த மட்கலம் உடைந்தாலும் அது தேவைப்படும் என்று எடுத்து வைக்கிறோம். இது தான் வாழ்வு. இது தான் உண்மை. மட்கலத்திற்கு இருக்கும் மதிப்பும் மரியாதையும் இறைவன் செய்த கலத்திற்கு இல்லையே" என்று அழுதார்.

நீறாவது திண்ணம்

**203. ஐந்து தலைப்பறி யாறு சடையுள**

**சந்தவை முப்பது சார்வு பதினெட்டுப்**

**பந்தலும் ஒன்பது பந்தி பதினைந்து**

## வெந்து கிடந்தது மேலறி யோமே.

கணேசபுரத்தில் குணரத்தினம் என்றொருவர் வாழ்ந்து வந்தர். அவரின் மனைவி நிர்மலா. அவருக்கு மூன்று ஆண்பிள்ளைகள். அதனால் குணரத்தினம் சற்று ஆணவத்துடனேயே பிறருடன் பழகுவார். அவருக்குப் போதியளவு வருமானம் வந்து கொண்டிருந்தது. அத்துடன் மூன்று ஆண்பிள்ளைகளும் கைநிறையச் சம்பாதித்தனர். அவர்களுக்குப் பொறுப்பு இல்லாததால் அவர்கள் மிகவும் உல்லாசமாக வாழ்ந்தனர்.

குணரத்தினத்தின் பத்து விரல்களிலும் மோதிரம் இருக்கும். கைக்சுகுச் சங்கிலி, கைக்கடிகாரத்திற்குத் தங்கப்பட்டி, கழுத்தில் வடம்போலப் பெறுமதிமிக்க தங்கச் சங்கிலி என்பவற்றை அணிந்திருப்பார். எந்நாளும் சுவைமிகுந்த உணவு வகைகளை உண்பார். விலை உயர்ந்த ஆடைகளையே அணிவார். மற்றவர்கள் வைபவங்களுக்கு அணியும் விலை உர்ந்த ஆடைகளையே அவர் வீட்டிற்கு அணிந்திருப்பர். நண்பர்களுடன் சேர்ந்து நன்றாகக் குடிப்பார்.

குணரத்தினம் தனது ஆண்பிள்ளைகள் மூவருக்கும் பெரும் தனவந்தர்களின் வீட்டிலேயே திருமணம் செய்து வைத்தார். அவரைப் போலப் பிள்ளைகளும் பெரும் ஆடம்பரமாக வாழ்ந்தனர். ஓடிஆடி மிகவும் உற்சாகமாகவும் மகிழ்ச்சியாகவும் திரிந்த குணரத்தினத்திற்கு நோய் வந்தது. நோய் வந்த ஓரிரு மாதங்களில் குணரத்தினம் காலமானார்.

அவர் இறந்ததும் கிரியைகள் பெரிதாகச் செய்யப்பட்டன. அதைவிட ஒரு திருமணவீடு போல அவரது மரணவீடு நடைபெற்றது. அவர் உயிரோடு இருக்கும் போதுஅவர் அணிந்த ஆபரணங்கள் அனைத்தும் அவரின் உயிறற்ற உடலுக்குப் போடப்பட்டிருந்தன.

கிரியைகள் முடிவடைந்ததும் அவரது உயிரற்ற உடலைப் பாடையில் தூக்கி வைத்துச் சுடலைக்குக் கொண்டு சென்றனர். சுடலையில் ஊரே கூடி நின்றது. விறகை அடுக்கிக் குணரத்தினத்தின் உடலைத் தூக்கி விறகின் மேல் வைத்துவிட்டு அவர் அணிந்திருந்த ஆபரணங்கள் அணைத்தையும் கழற்றினர். பின்பு கொள்ளி வைத்தனர். அன்று அந்த ஊரில் பிச்சை எடுத்து வாழ்ந்த தர்மன் என்பவனும் இறந்தான். அவனுக்கு உறவினர்கள் இல்லாததால் ஊரவர்கள் பாடைகட்டித் தருமனின் உடலைச் சுடலைக்குக் கொண்டுவந்தனர். குணரத்தினத்தினை வைத்து எரித்த இடத்திற்குச் சிறிது தூரத்தில் எரித்தனர். குணரத்தினத்தின் பிரேத ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் தருமனின் உடல் எரிக்கப்படும் இடத்திற்கும் வந்தனர்.

மறுநாள் காடாற்றுவதற்காக குணரத்தினத்தின் பிள்ளைகளும் உறவினர்களும் ஊரவர்களும் சுடலைக்கு வந்தனர். குணரத்தினத்தின் உடல் நீறாக இருந்தது அது போலவே தருமனின் உடலும் நீறாக இருந்தது.

“எதை உண்டாலென்ன…? எப்படி வாழ்ந்தாலென்ன…? எதை எதை அணிந்தாலென்ன உடல் இறுதியில் நீறாவது தான் உண்மை. இங்கே எது குணரத்தினத்தின் நீறு, எது தருமனின் நீறு என இன்று வந்தவர்களால் கூறமுடியாது..?” என்றார் ஒரு பெரியவர்.

“ஐம்பொறிகளில் எவ்வளவு கவனத்தைக் குணரத்தினம் செலுத்தினார். எப்படியெல்லாம் போற்றினார். இன்று எல்லாம் நீறாகிவிட்டது” என்றார் இன்னுமொருவர். சுடலை ஞானம் பிறந்ததால் எல்லோரும் நிலையாமை பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர்.

**204. அத்திப் பழமும் அறைக்கீரை நல்வித்துங்**

**கொத்தி உலைப்பெய்து கூழட்டு வைத்தனர்**

**அத்திப் பழத்தை அறைக்கீரை வித்துண்ணக்**

**கத்தி எடுத்தவர் காடுபுக் காரே.**

கதிரவேலு படுத்தபடுக்கையாகிப் பல வருடங்களாகி விட்டன. அவர் பெரும் வர்த்தகர். அவரிடம் நூற்றுக்கு மேற்பட்ட தொழிலார்கள் வேலைசெய்து வந்தனர். அவர் மிகவும் இளகிய மனம் படைத்தவர். ஏழை எளியவர்களுக்குக் கொடுத்து உதவுபவர். தொழில் செய்யப் பணம் கொடுப்பார். தொழில் செய்யவெனப் பணம் பெற்றவர்கள் தொழில் செய்யாது அப்பணத்தை அழித்தும் விடுவார்கள். சிலர் அவர்கொடுத்த பணத்தில் தொழில் செய்து நன்றாக வாழ்கின்றனர்.

அவருக்கு மூன்று பிள்ளைகள். இருவர் ஆண்கள். அவருடன் சேர்ந்து வர்த்தகம் செய்தனர். பெண்பிள்ளைக்குப் பணக்காரனொருவனைத் திருமணம் செய்து கொடுத்துவிட்டார். அவரது மூத்தமகன் தயாளன் தகப்பன் ஏழைகளென்று குடிகாரர்களையும் தீயவர்களையும் அழைத்துவந்து உதவிசெய்வதை விரும்பாதவன்.

“அப்பா உங்களின் தாராளகுணத்தைப் பயன்படுத்தி உங்களிடம் பணத்தை வாங்கித் தவறான வழிகளில் சிலர் நடக்கின்றனர். உங்களைக் கொடுக்க வேண்டாம் என்று நான் கூறவில்லை. உண்மையான ஏழைகளுக்குக் கொடுங்கள்” என்பான்.

“மகனே, ஒவ்வொருவரும் செய்யும் நன்மை, தீமைகள் தான் வினை என்ற பெயரில் வந்து இன்பங்களையும் துன்பங்களையும் தருகின்றன. சென்ற வருடம் நான் வியாபாரத்தில் பல லட்ச ரூபாவை இழந்தேன். இந்தவருடம் இழந்ததைவிடக் கூடுதலாகச் சம்பாதித்தேன். இவை யாவும்

எனது ஊழ்வினைப் பயன். நாம் வாழ்க்கையில் செய்யும் நன்மைகள் நல்லவையாக எமக்கு வருகின்றன. தீமைகள் தீயவையாக எம்மை வந்தடைந்து வருத்துகின்றன. நான் அவர்களிடம் கடன் பட்டுள்ளேன் போலத் தெரிகிறது. அதனால் தான் கொடுக்கிறேன். அதைப்பற்றி நீ கவலைப்படாதே'' என்றார். அதன் பின் தயாளன் அதைப் பற்றி அவருடன் கதைப்பதில்லை.

அன்று கதிரவேலுவிடம் தனது வறுமை நிலையைப் பற்றிக் கூறி உதவி பெறக் காண்டீபன் என்றொருவன் வந்திருந்தான். கதிரவேலு பல வருடங்கள் படுக்கையில் இருந்தமையால் அவரது உடலெங்கும் புண்கள் இருந்தன. காண்டீபன் அப்புண்களைப் பார்த்தான். அதற்குள் ஏதோ அசைவதைப் போல இருந்தது.

''படுக்கையில் பல காலம் இருந்ததால் புண்கள் வரும். புண்களுக்குள்ப் புழுக்கள் இருக்கும். மனிதனின் உடல் அத்திப் பழத்தைப் போன்றது. அத்திப் பழங்கள் எல்லாவற்றுக்குள்ளும் புழுக்கள் இருக்கும். சுகதேகியாக இருக்கின்ற மனிதனின் வயிற்றிலும் புழுக்கள் உண்டு. நாம் புழுக்களுடன் தான் வாழ்கின்றோம்'' என்று கூறிக்கொண்டு உதவி செய்தார் கதிரவேலு.

அன்று மாலை கதிரவேலுவிற்கு நோய் அதிகரித்தது. விடியற்காலை அவர் மரணமானர். அவர் மரணமானதும் புழுக்கள் அவரின் உடலைவிட்டு வெளியேறின. அன்று மாலை கதிர்வேலனின் உடலைச் சுமந்து கொண்டு சுடலைக்குக் கொண்டு சென்றனர். மனைவி மக்கள் உற்றார் உறவினர் கதறி அழப் பிரேதம் சுடலையை அடைந்தது.

“அறக்கீரை அற்ப ஆயுளை உடையது. மெஞ்ஞானிகள் அறக் கீரை விதை என்று உயிரைச் சொல்வார்கள். கதிரவேலு தான் வாழும் வரைமற்றவர்களுக்கு உதவி செய்த மகான். என்று ஊர்ப் பெரியவர் ஒருவர் கூறிக்கொண்டிருந்தார்.

சிவனின் செயல்

**205. மேலும் முகடில்லை கீழும் வடிம்பில்லை**
**காலும் இரண்டு முகட்டலக் கொன்றுண்டு**
**ஓலையான் மேய்ந்த ரூடு வரியாமை**
**வேலையான் மேய்ந்ததோர் வெள்ளித்**
**தளிகையே.**

காண்டீபனுக்குப் பாவமாக இருந்தது. இக்கிராமத்தவர்களுக்கு அவர் எவ்வளவு உதவிகளைச் செய்திருப்பார். சிவனை எவ்வேளையிலும் தொழுவதுடன் மற்றவர்களுக்கும் சிவனைப் பற்றிக் கூறி அவர்களைச் சிவபக்தராக்கியவர். அப்படிப்பட்ட ஒருவர் பல காலமாகப் படுக்கையில் கிடந்து பெருந் துன்பங்களை அனுபவித்ததை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவரைப் போன்ற சிவபக்தர் கதிரேசன். கதிரேசனுடன் கதைத்தால் மனம் ஆறுதலடையுமென்றெண்ணி அவன் சிவன் கோவிலுக்கு வந்தான்.

கதிரேசன் கோவிலினுள்ளே வணங்கிக் கொண்டிருந்தார். அவர் வணங்கி விட்டு வரும் வரை பொறுத்திருந்த காண்டீபன் அவர் வந்ததும் கூறினான், “ஐயா, கதிரவேலு ஐயா பெரியவர் ஊருக்குதவுபவர். தினமும் சிவனைத் தொழுபவர். அவரின் மனதில் பொறாமை இல்லை, வஞ்சகமில்லை, சூதில்லை. இரக்கப்போபவரின் மனதில் உள்ளவற்றை

அறிந்து உதவி செய்யும் மகான். நான் பல முறை உதவி பெற்றுள்ளேன். அவர் கொடுத்ததைத் திருப்பிப் பெறுவதில்லை. அப்படிப்பட்ட அவருக்கு ஏன் இவ்வளவு கொடுமை பிற்காலத்தில் வந்தது? சென்ற வாரம் நான் அவரைப் பார்க்கச் சென்ற போது அவரின் உடல் புழுப்பிடித்திருந்தது. வேதனையால் அவர் துடிதுடித்தார். அப்படியிருந்தும் என்னுடன் மகிழ்வுடன் உரையாடினார். அத்துடன் ஏதாவது உதவி தேவையானால் கேள் என்று சொன்னார். எனக்கு அழுகை வந்து விட்டது. மனிதன் தானதர்மம் செய்தாலும் இந்த நிலை தானா என்ற வெறுப்பும் ஏற்பட்டது. என்னால் அவர் படும் துன்பத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இது ஏன்?.''

''மகனே, உடல் அழிவடைவது. ஆத்மா அழியாதது. முன் வினைப்படி உடலெடுக்கும் ஆன்மா, எடுத்த பிறப்பில் இறைவனை அடைய வேண்டிய முயற்சிகளை எடுத்தல் வேண்டும். அதைக் கதிரவேலு எடுத்தார். அவர் அடிக்கடி சொல்வார், ''முற்பிறப்பில் நான் அளவுக்கதிகமான பாவங்களைச் செய்து விட்டேன் போலத் தெரிகிறது. அதனால் தான் இந்தக் கொடிய நோய் வந்து வருத்துகிறது. நோய்கள் என்னை நன்றாக வருத்தட்டும். வருத்த வருத்த எனக்குச் சிவனின் பால் அன்பு கூடுகிறது. தொடர்ந்து வரும் கொடிய பிறப்புக்களில் இருந்து விடுதலை பெறவேண்டும். அதற்கான வழிவகைகளை நான் செய்து வருகிறேன். அதனால் தான் என்னை நாடிவருவோர்க்கு உதவிகள் பலவும் செய்கிறேன்'' என்பார். நிட்சயமாக அவருக்கு இனிப் பிறப்புக்கள் இராது என்று கூறி விட்டு நிறுத்தியவர் சில நிமிடங்கள் கழித்துச் சொன்னார்,

''மகனே, பலர் துன்பப்படும் போது சிவநிந்தனை செய்பவர். ஆனால் கதிரவேலு உண்மை நிலையை உணர்ந்துள்ளமையால் இன்பமாக

இருக்கிறார். நாம் குடியிருக்கும் வீட்டைப் போன்ற வடிவமைப்பில் உள்ள உடம்பில் தங்கியிருக்கும் உயிர் மண்டையோட்டைப் பிளந்து கொண்டு செல்லும். அப்போது மேலே மூடப்படும் முகடு இல்லாதிருக்கும். கீழுள்ள விளிம்பாகிய கரையும் அப்போது இல்லாது போகும். ஆவி செல்லும் வேளைகளில் உடல் உறுப்புக்கள் யாவும் செயலிழந்து விடுவதால் உயிர் சென்று விடும். ஓலையால் வீட்டை வேய்ந்தவர் ஊடு வரியாமை விட்டனர். எமது உடல் படைப்போனால் செய்யப்பட்ட வெள்ளிக் கோவில் போன்றது. அதனால் மனதைக் குழப்பாதே. எல்லாம் சிவனின் கட்டளைப்படி நடக்கும்'' என்றார் கதிரேசன்.

காண்டீபன் எதுவும் பேசவில்லை. அவனது குழப்பமும் தீரவில்லை.

புரிந்தும் புரியாதவர்கள்

**206. கூடந் கிடந்தது கோலங்கள் இங்கில்லை**

**ஆடும் இலையமும் அற்ற தறுதலும்**

**பாடுகின் றார்சிலர் பண்ணில் அழுதிட்டுத்**

**தேடிய தீயினில் தீயவைத் தார்களே.**

அவள் கண்டவர்களை மயக்கும் அழகி. அவளது கூந்தல் இடையைக் கடந்து நிற்கும். முற்றி விளைந்த கருநாகம் போன்ற அவளது கூந்தல் அவள் நடக்கும் போது நாட்டியமாடும். அவளின் கூந்தலில் எப்போதும் நன்றாக மலர்ந்த வாசனையடைய மலர்கள் இருக்கும். அதனால் அவள் வீதியால் நடந்து செல்லும் போது நறுமணம் வீசும். அவளது அழகான இரு விழிகளிலும் ஒரு மயக்கத்தைத் தரும் கவர்ச்சியிருக்கும். அழகாகப் பளபளக்கும் முகம். எடுப்பான மூக்கு. இத்தனையும் அந்த ஊர் இளைஞர்களைப் பித்தர்களாக்கும். அவள் கோவிலுக்கு வந்தாளானால் திருமணமான பெரியவர்கள் கூடஒருகணம்

அவளைப் பார்ப்பார்கள். அவளின் உருவில் அம்பாள் தான் நடமாடுவதாக அவர்கள் நினைப்பார்கள். அவள் வீட்டை விட்டுச் செல்வதானால் தன்னை முழுமையாக அலங்கரித்த பின்னே செல்வாள். இயற்கையாகச் சிவந்த அவளின் உடலுக்குச் சாந்துப் பூச்சுக்கள் மேலும் கவர்ச்சியைக் கொடுக்கும். அவளுடன் அவளது தோழியர் பலரும் கூடிச் செல்வார்கள். தேவ அணங்குகளின் கூட்டம் போல அவர்கள் செல்வதைப் பார்க்கப் பலர் கூடி நிற்பார்கள். அவளது தோழிகளின் சகோதரர்கள் அவர்கள் மூலமாகக் காதல் தூது அனுப்புவார்கள்.

அவள்இளைஞர்களை ஏறெடுத்துக்கூடப் பார்ப்பதில்லை. இப்படியிருக்கும் நாளில் அவளுக்கு இன்னதென்று கண்டுபிடிகக முடியாத ஒரு நோய் அவளது உடலைப் பற்றிப் பிடித்தது. அவளின் தகப்பன் ஊரிலுள்ள வைத்தியர்களிடமெல்லாம் அவளை அழைத்துச் சென்றார். பட்டணத்திலுள்ள வைத்தியர்கள் அவளின் உடலைப் பரிசோதித்தனர். இருப்பினும் அவளது நோயைக் குணப்படுத்த முடியவில்லை.

கருநாகம்போல நீண்டிருந்த அவளது முடி உதிர ஆரம்பித்தது. இறுதியில் அவளது தலை மொட்டையானது. முகம் விகாரமடைந்தது. உதடுகள் பிளவுபட்டன. கண்கள் ஒளிமங்கின. ஆரம்பத்தில் அவளது நோய் பற்றிவிசாரித்தால் அவளது அன்பு கிடைக்கும் என்று அன்பளிப்புப் பொருட்களுடன் வந்து பார்த்த இளைஞர்கள் பின்பு அவளது கோர உருவத்தைக் காணச் சகிக்காது நின்று விட்டனர். உற்றார் உறவினர்களும் கவனிக்காது விட்டு விட்டனர்.

திடீரென்று ஒருநாள் அவள் இறந்துவிட்டாள். முற்றத்தில் பந்தல் போட்டு அவளது உடலை வைத்திருந்தனர். அவளை உயிருக்குயிராக நேசித்த ஆரூரன் என்பவன் வந்து அவளது உடலைப் பார்த்துப்

பயந்துவிட்டான். அவள் உருத்தெரியாது இருந்தாள். அவளது அழகிய முகம் வீங்கிக் கறுத்திருந்தது. அந்த அழகிய முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாலே பசி எடுக்காது என்று அவன் தனது நண்பர்களுக்குக் கூறுவான். அப்படியான அந்தக் கவர்ச்சியான முகத்தை இப்போது பார்க்க அவனுக்கு அருவருப்பாக இருந்தது. பந்தலில் அவளது உடல் வைக்கப்பட்டிருந்த இடத்தில் இருந்த சிலர் தேவாரதிருவாசகங்களைப் பாடிக் கொண்டிருந்தனர். பெண்கள் கட்டி அணைத்து ஒப்பாரி வைத்துக்கொண்டிருந்தனர். அந்த ஒப்பாரி இசையோடு பொருந்தாததால் கேட்கமுடியாதிருந்தது.

கிரியைகள் முற்றுப் பெற்றதும் பிரேத ஊர்வலம் ஆரம்பமானது. ஊறவினர்கள் நண்பர்கள் ஊரவர்கள் பிரேதத்தைத் துக்கிக் கொண்டு சுடலைக்குச் சென்றனர். பின் அதைத் தீக்கிரையாக்கிவிட்டு வீடு திரும்பினர்.

பாவப்பட்ட மனிதர்

**207. முட்டை பிறந்தது முந்நூறு நாளினில்**
**இட்டது தானிலை ஏதேனும் ஏழைகாள்**
**பட்டது பார்மணம் பன்னிரண் டாண்டினிற்**
**கெட்ட தெழுபதிற் கேடறி யாரே.**

காமாட்சிக்குத் திருமணமாகி ஒரு மாதம் கூட ஆகவில்லை. தலை சுற்றியது, மயக்கம் வருவது போல இருந்தது, உடல் சோர்ந்து உணவில் வெறுப்பு வந்தது. அதனால் அவள் பயந்து போனாள். தனது உடல் நிலைபற்றித் தனது பெற்றோருக்குச் சொன்னாள். அவர்கள்

அவளை வைத்தியரிடம் அழைத்துச்சென்றனர். அவர் அவளின் நாடித்துடிப்பைப் பிடித்துப் பார்த்துவிட்டு அவள் கர்ப்பமாக இருப்பதாகச் சொன்னார்.

“வயிற்றில் கரு மீன் சினையளவாகத் தோன்றும். அது தோன்றும் போது தாய்க்கு இப்படியான நிலை தோன்றும். அது வளர்ந்து முன்நூறு நாட்களின் பின் வெளியே வரும். அதுவரை தாயின் உடல் நிலை பாதிக்கப்பட்டதாகவே இருக்கும். பிள்ளை நிர்வாணமாகப் பிறப்பதாலும், அதற்கு எதுவும் தொரியாததாலும் அதை ஏழை என்று அழைப்பர். பிள்ளை பிறந்தபின் தாய்மூலமும் பிறர் மூலமும் இயற்கையைப் பார்த்தும் கற்றுக் கொள்ளும். பன்னிரெண்டு வயதில் அது முழுமையான உலக அறிவைப் பெறும். அதுவரை தாய்க்குச் சிரமம் தான்” என்றார் வைத்தியர்.

காமாட்சி வீட்டிற்கு வந்தாள். கணவரும் பெற்றோரும் அவளைக் கவனமாகப் பார்த்து வந்தனர். கருக்கட்டி முன்நூறாவது நாள் அழகான ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. அதற்குக் கணேசன் என்று நாமமிட்டு அன்புடன் வளர்த்து வந்தனர்.

கணேசன் சிறு வயதிலேயே சுயநலன் கொண்டவனாக வளர்ந்தான். தனது பொருட்களைத் தனது சகோதரர்களுக்குக் கூடக் கொடுக்க மாட்டான். அவன் தனது கல்வியை முடித்து இளைஞனான போது அவனுக்குப் பெரும் தனவந்தன் ஒருவரின் மகளைப் பெற்றோர் திருமணம் செய்துவைத்தனர்.

திருமணமானபின் அவன் கடுமையாக உழைத்து முன்னேறினான். அவனது மாமனார் தங்க ஆபரண வியாபாரம் செய்து வந்தார். அதனால் கணேசனும் தங்க ஆபரணங்களையும், மாணிக்கம், முத்து, மரகதம்

முதலிய பெறுமதி மிக்க கற்களையும் வியாபாரம் செய்துவந்தான். அவன் தானதர்மம் செய்வது குறைவு. பொருள் தேடுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தான். வெளிநாடுகளுக்குச் சென்று பெறுமதியான மாணிக்கக் கற்களை வாங்கி வந்து வியாபாரம் செய்தான். அவன் கோவில் கட்டிட நிதிக்குக் கூடப் பணம் கொடுக்கமாட்டான்.

அவனுக்கு எழுபது வயதானபோது அவனுக்கு ஒரு மாறாட்டக் குணம் வந்தது. அவனுக்குப் பிள்ளைகள் இல்லாததால் உறவினர்களும் கூலியாட்களுமே உதவிகள் செய்து வந்தனர். அவனுக்கு மாறாட்டம் ஏற்பட்டதால் தொழிலைக் கவனிக்காது விட்டுவிட்டான். அவனது வியாபார நிலையங்களில் பணிபுரிவோர் தாம் நினைத்தபடி வியாபாரம் செய்து தாமே வருவாயை எடுத்துக் கொண்டனர்.

வயது செல்லச் செல்ல அவனுக்கு மாறாட்டம் அதிகரித்தது. அதனால் பெறுமதியான பொருட்களை வருவோர் போவோரிடமெல்லாம் தூக்கிக் கொடுத்து விலை பேசுவான். பின் பணத்தைக் கொண்டுவந்து தரும்படி கூறுவான். பின் அதை மறந்துவிடுவான். பொருட்கள் வாங்கிய பலர் பணம் கொடுப்பதில்லை. அவனது மனைவியால் அவனது செயல்களைத் தடுக்கமுடியவில்லை. எண்பத்திரண்டாவது வயதில் அவன் மரணமானான். அவன் மரணமாகும் போதுஅவன் ஒரு பைத்தியக்காரனைப் போலவே இருந்தான்.

“மனிதனுக்கு வாழ்வில் ஒரு வயதில் மாறாட்டம் வந்துவிடும். அதன் பின் செய்வது நல்லதா கெட்டதா என்று தெரியாது” என்று ஒருவர் சொன்னார்.

யாரறிவார்

**208. இடிஞ்சில் இருக்க விளக்கெரி கொண்டான்**

**முடிஞ்ச தறியார் முழங்குவர் மூடர்**

**விடிஞ்சிரு ளாவ தறியா உலகம்**

**படிஞ்சு கிடந்து பதைக்கின்ற வாறே.**

கோகுலன், கோவிந்தசாமியின் ஒரே மகன். அவன் படிப்பில் கெட்டிக்காரன். ஊர்ப் பாடசாலை அதிபர் அவனது திறமையைக் கண்டு வியந்து அவனது தகப்பனாரிடம் அவனது அறிவின் தன்மையைப் பற்றிக் கூறிப் பட்டணத்திலுள்ள பெரியதொரு பாடசாலையில் சேர்ப்பித்தார்.

பட்டணப் பாடசாலையில் அனுமதி எடுப்பது மிகவும் கடினம். அத்துடன் அனுமதிப்பதற்கு ஏராளமான பணம் பெறுவார்கள். கோகிலனது பாடசாலை அதிபரின் பிள்ளைகள் அப்பாடசாலையில்தான் கல்வி கற்றுகொண்டிருந்தனர். கோகுலனைச் சேர்ப்பதற்காக அப்பிரபல பாடசாலையின் அதிபர் ஒரு பரீட்சை வைத்தார். பரீட்சையில் கோகுலன் நூறு புள்ளிகளைப் பெற்றான். அத்துடன் வாய்மூலம் கேட்கப்பட்ட அத்தனை கேள்விகளுக்கும் பதில் சொன்னான். அதனால் அந்தப் பிரபல பாடசாலையின் அதிபர் எந்தக் கட்டணமும் பெறாமல் கோகிலனை அப்பாடசாலையில் சேர்த்தார். அது அப் பாடசாலை வரலாற்றில் சரித்திரமானது.

கோகிலன் அப்பாடசாலையில் கல்விகற்றுப் பல்கலைக் கழகத்திற்குதெரிவானான். பல்கலைக்கழகத்திலும் கோகிலன் முதன்மையானவனாகத் திகழ்ந்தான். அதனால் அவனது படிப்பு முடிந்ததும் அப் பல்கலைக்கழகத்திலேயே விரிவுரையாளராகப் பணியாற்றிய கோகிலன் தொடர்ந்தும் படித்தான்.

அவனுக்குப் பெண் கொடுக்கப் பல தனவந்தர்கள் போட்டிபோட்டனர். அவன் தன்னையும் தனது அறிவையும் மதித்துத் தன்னைப் பட்டனத்திலுள்ள கல்லூரில் சேர்த்துவிட்ட பழைய பாடசாலையின் அதிபரின் மகளைத் திருமணம் செய்ய விரும்பினான். அதிபரும் சம்மதித்தார். அன்று அவனும் அவனது தந்தையும் கல்யாண நாளைக் குறிப்பதற்காக அதிபரின் வீட்டுக்குச் சென்றனர்.

கல்யாண நாளைக் குறித்தபின்பு கோகிலனின் தகப்பன் வேறு விடயமாகப் பட்டனத்திற்குச் சென்றுவிட்டர். கோகிலன் மோட்டார் வண்டியில் தனது வீட்டிற்குத் திரும்பினான். அப்பொழுது மழை பெய்து கொண்டிருந்தது. மின்னல் மின்னி இடிஇடித்தது. வாகனத்தைக் கோகுலனால் நிதானமாகச் செலுத்த முடியவில்லை. அதனால். அவன் வீதியோரமாகத் தனது வாகனத்தை நிறுத்திவிட்டு வாகனத்துள் இருந்தான்.

மின்னல் கண்ணைப் பறித்தது, இடியோசை காதைச் செவிடுபடுத்தியது. திடீரெண்டு வானம் பிளபடுவது போல இடிஇடித்தது. மின்னல் கோகுலனது வாகனத்தைத் தாக்கியது. கண்ணிமைக்கும் நேரத்தில் கோகுலனது வாகனம் தீப்பற்றிக் கொண்டது.

கோகுலனது பெற்றோரும் ஊரவர்களும் கேள்விப்பட்டு ஓடோடி வந்தனர். கோகுலனது உயிறற்ற உடல் வாகனத்திற்குச் சிறிது தூரத்தில் கிடந்தது. பெற்றோரும், அதிபரும்,ஊரவரும், கதறி அழுதனர்.

‘‘இறப்பென்பது எல்லோருக்கும் ஒரு நாள் வரும். ஆனால் எப்போ எந்நேரத்தில் எப்படி வரும் என்ற யாரும் அறியமாட்டார்கள். அறிந்திருந்தால் மழை பெய்யும் போது நான் கோகிலனைச் செல்ல விட்டிருக்க மாட்டேன்’’ என்று புலம்பினார் அதிபர்.

“எண்ணெய் உள்ள விளக்குக் காரணமின்றி அணைவது போல, எமது உடலில் உள்ள உயிர் காரணமின்றிப் பிரியும். பிறப்பும் இறப்பும் வியப்புக்குரியன. அவை எப்போது எங்கே நிகழும் என்று யாராலும் கூறமுடியாது. எல்லோரும் வாழ்வு நிலையானதென்று நினைத்துத் தம் மனம் போன போக்கில் வாழ்கின்றனர்” என்றார் அதிபரின் சகோதரர்.

தர்மவழி

**209. மடல்விரி கொன்றையன் மாயன் படைத்த**

**உடலும் உயிரும் உருவந் தொழாமல்**

**இடர்படந் தேழா நரகிற் கிடப்பர்**

**குடர்பட வெந்தமர் கூப்பிடு மாறே.**

கைலாயபிள்ளை ஊரில் பெரிய மனிதன், தனவந்தன். அதனால் ஊரவர்களில் பெரும்பான்மையானோர் அவரை மதித்தனர். கைலாயப்பிள்ளையை ஊரில் உள்ள தீயவர்களும் மதித்தனர். அவர் தீயவர்களைத் தனது கையாட்களாக வைத்திருந்தார். அதனால் அவருக்குப் பலர் பயப்பட்டனர். ஊரிலுள்ள எல்லாப் பொது நிறுவனங்களுக்கும் அவர் தான் தலைவர். அதனால் உதவி செய்யும் நிறுவனங்கள் பொருட்களை மக்களுக்குக் கொடுக்கச் சொல்லி அவரிடம் கொடுக்க அவர் அதைத் தனது கையாட்களுக்குக் கொடுப்பார். அதனால் ஊரில் பல்வேறு பிரச்சனைகள் தோன்றும்.

அவ்வூரில் கெங்காதரன் என்றொரு தருமவான் வாழ்ந்து வந்தார். ஊரவர்கள் அவரிடம் சென்று தமக்குக் கைலாயபிள்ளை செய்யும் துரோகத்தைக் கூறுவார்கள். அவற்றைக் கெங்காதரன் கோவிலின் விசேட தினங்களில் சொற்பொழிவு ஆற்றும்போது குறிப்பிடுவார். அன்று

சிவராத்திரி தினம். கைலாயபிள்ளையின் தலைமையில் சிவன் கோவிலில் சிவராத்திரி கொண்டாடப்பட்டது. ஊரவர் அனைவரும் சிவன் கோவிலில் கூடியிருந்தனர்.

கெங்காதரன் அன்று உரையாற்றினார், “அன்பான சிவனடியார்களே, இன்று நன்றாக விரிந்த கொன்றைப் பூக்களை மாலையாக அணிந்த சிவபெருமான் சோதிப்பிழம்பாக தோன்றிய நாள். சிவன் தாண்டவத்தின் முதல்வன். அவனுள் உலகிலுள்ள அனைத்தும் ஒடுங்கியுள்ளன. மாயையின் துணையுடன் அவன் உலகையும் உயிர்களையும் படைத்திருக்கிறான். இந்த உயிர்கள் பின் சோடிகளாகித் தனித்தனி புணர்ந்து உடல்களை உற்பத்தி செய்கின்றன. இதுவே படைப்பாகும். உயிர்களுக்கு எதுஎது தேவையோ அவற்றை எல்லாம் உயிர்களின் இன்பத்திற்காகச் சிவன் படைக்கின்றான். உயிர்கள் தர்மமான முறையில் வாழ்ந்து சிவனை வணங்கி சிவனடியில் சேரல் வேண்டும். ஆனால் உயிர்கள் அவாவுற்று எல்லாம் தமக்குத் தேவை என்று நினைத்துக் கொடுமைகளைச் செய்வதால் மீண்டும் மீண்டும் பல்வேறு வகைப்பட்ட கர்ப்பப்பைகளை அடைகின்றன. துன்பத்திற்கு காரணம் என்ன? ஆசை. ஆசை அதிகரித்தால் அது அவாவாகிவிடும். ஆவாப்பட்ட உயிர்கள் தர்மத்தை மீறித் தாம் அவாப்பட்டதை அடைய முயற்சிக்கின்றன. ஒருவர் இறக்கும் போது எதை நினைத்துக் கொண்டு இறக்கிறாறோ அவர் நினைத்தபடியே பிறப்பெடுக்கிறார்கள். சிவசிந்தனையோடு இறப்பவன் சிவனை அடைவான். அது போல உலக நினைப்புக்களோடு இறப்பவன் தீய பிறப்பை அடைவான். நினைவுகள் செயலாகும் போது பாவமும் அதிகரிக்கும்.

நரகம் ஏழுவகையானது என்று ஞானிகள் கூறியுள்ளனர். இவ் ஏழு நரகங்களும் மிகவும் கொடுமையானவை. இவ் ஏழுவகை

நரகங்களையும் ஓர் உயிர் எடுக்கும் ஏழு பிறப்புக்களிலும் அனுபவிக்கும். ஊர்வனவாகவும், நீர்வாழ்வனவாகவும், நான்கு கால்களை உடையனவாகவும், நிலத்திணையனவாகவும், மக்களாகவும், தேவர்களாகவும் மாறிமாறிப் பிறந்து இன்பதுன்பங்களை உயிர்கள் அனுபவிக்கின்றன. இவற்றை அனுபவிக்காமல் இருக்க வேண்டுமானால் மனதாற்கூடத் தீயவற்றை நினைக்கக் கூடாது. நினைவுதான் செயலாகின்றது. சென்ற வாரம் வயலில் மேய்ந்த கர்ப்பமான பசுவொன்றைத் தீயவர்கள் களவாடிச் சென்று அதைக் கொன்று இறைச்சியை விற்பனை செய்திருக்கிறார்கள். இறைச்சியை மலிவான விலையில் வாங்கியவர்கள் ஊரில் வாழும் தர்மவான்கள். இவர்கள் பசுவாகப் பிறந்து கொல்லப்படுவார்கள். செயல்களுக்கான பயன் கிடைத்தேதீரும். கடுமையாகச் செயலாற்றுபவன் அதிக இலாபத்தைப் பெறுவான். சோம்பேறிக்கு வருமானமே இல்லை. அவனுக்கு நல்ல உணவு கூடக் கிடையாது. அதனால் தர்மமான முறையில் செயற்பட்டு எதிர்கால வாழ்வைச் சீராக்குங்கள். ஏழுவகை நரகமும், அரியசொர்க்கமும் இந்தப் பூமியில் தான் உண்டு. இந்தப் பூமியில் காரணமின்றித் துன்பப்படுவோர் பாவம் செய்தவர்களே. பாவத்தை நீக்கக் கொன்றைமலர் மாலையை அணிந்த சிவனைத் தொழுங்கள்" என்றார் கெங்காதரன்.

இடம் வலமாகும்

**210. குடையும் குதிரையுங் கொற்றவாளுங் கொண்டு**
**இடையுமக் காலம் இருந்து நடுவே**
**புடையு மனிதனார் போகும் அப்போதே**
**அடையும் இடம் வலம் ஆருயிராமே.**

கருவூர் அரசன் மேகவண்ணன் பெரும் வீரன். அயல்நாடுகள் அனைத்தையும் கைப்பற்றி நீதியாக ஆண்டு கொண்டிருந்தான். சிற்றரசர்களுக்குக் கூட அவன் துன்பம் செய்ததில்லை. அதனால் அவனின் ஆட்சிக்குட்பட்ட நாட்டு மக்கள் அனைவரும் இன்பமாக வாழ்ந்தனர். முன்பு ஆண்ட சிற்றரசர்களிற் சிலர் மக்களை வருத்தி வரி வசூலித்தனர். கருவூருக்கு அருகே இருந்த நாகையூர் மன்னன் மக்களைத் துன்புறுத்தினான். வரிகளை அதிகரித்தான். அத்துடன் அயல்நாடுகளின் எல்லைப்புறக் கிராமங்களில் கொள்ளையடித்தான். அதனால் நாகையூர் மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்து கருவூருக்குள் வந்தனர். அதனால் மேகவண்ணன் நாகையூருக்குத் தூதுவர்களை அனுப்பித் தனது நாட்டிற்கு வந்த மக்களைத் திரும்பி வருமாறு கூறும்படியும் , நாட்டை நீதியாக ஆளும்படியும் கூறுவித்தான். நாகையூர் மன்னன் கருவூர் மன்னனின் தூதுவர்களை அவமதித்து அனுப்பினான். அப்போதும் கோபப்படாத மேகவண்ணன் தனது முதலமைச்சரை அனுப்பி நாகையூர் மன்னனுக்குப் புத்திமதி கூறுவித்தான். அவை எதையும் நாகையூர் மன்னன் கேட்கவில்லை. அவன் மிகமிக ஆடம்பரமாக வாழ்வதில் விருப்பங் கொண்டான். அவன் வீதியுலாச் செல்லும் போது முன்னே பேரிகைகள் முழங்கும். அதன் பின்னே நாற்படைகளும் அணிவகுத்துச் செல்லும். வெற்றி வாள் அதன் பின்னே தேரில் செல்லும். அதன் பின் மன்னனும் பட்டத்தரசியும் செல்வார்கள். அந்நாட்டில் உள்ள அனைத்து மக்களும் வீதிகளை அலங்கரித்துப் பூரணகும்பம் வைத்து அவனை வரவேற்க வேண்டும்.

நாளுக்கு நாள் அகதிகளின் வருகை அதிகரித்தமையால் மேகவண்ணன் தனது படைகளை நாகையூருக்கு அனுப்பினான். இரண்டு தினங்களில் நாகையூர் மன்னன் கொல்லப்பட்டான். அவனது பிரேதத்தை மக்களின் அஞ்சலிக்காக அரண்மனையில் வைத்தான் மேகவண்ணன், மக்கள் எவரும் அஞ்சலி செலுத்த வரவில்லை. மறுநாள் பிரேத

ஊர்வலம் ஆரம்பமான போது நான்கு படைத்தளபதிகளையும் அழைத்து அணி வகுப்பு மரியாதை செலுத்தும்படி மேகவண்ணன் கூறினான். நான்கு படைத்தளபதிகளும் மௌனமாக நின்றனர். முதலமைச்சர் சொன்னார், ‘‘மன்னா, இம்மன்னனின் ஆட்சிக் காலத்தில் மக்கள் எவரும் நிம்மதியாக ஓரிரு நிமிடங்கள் கூட வாழ்ந்ததில்லை. படைவீரர்களையும் மன்னன் மதிப்பதில்லை. அதனால் அவர்களுக்கு இறந்த மன்னனுக்கு அணிவகுப்பு மரியாதை செய்ய விருப்பமில்லை. எமது நாட்டு மக்களிற் பெருந்தொகையானோர் தங்கள் நாட்டிற்கு அகதிகளாக வந்தபோது தாங்களும் அமைச்சர்களும் தளபதிகளும் மக்களும் எமக்கு எவ்வளவோ உதவிகளைச் செய்தனர். அதில் நூறில் ஒரு பங்கு கூட எமது அரசன் செய்ததில்லை. அப்படி இருக்க அவனுக்கு மரியாதை செய்ய எப்படி மனம் வரும்’’ என்றார். மேகவண்ணன் எதுவும் பேசவில்லை. அன்று அரச செலவில் அனாதைப் பிணங்களைத் தகனஞ் செய்வோர் அரசனது உடலைச் சுடலைக்குக் கொண்டு சென்று தகனஞ் செய்தனர்.

இரண்டு தினங்கள் கழிய மேகவண்ணனது பிரதிநிதியான கருவூர்க் குதிரைத் தளபதி அந்நாட்டின் சிற்றரசனானான். அதைக் கொண்டாடக் கருவூர்ப் படைகளும் நாகையூர்ப் படைகளும் திரண்டிருந்தன. மேகவண்ணன் தேரில் கம்பீரமாக வீற்றிருந்தான். அவனுக்கருகில் சிற்றரசன் வீற்றிருந்தான். முன்னே வெற்றி வாள் யானையின் மீது வைக்கப்பட்டிருந்தது. நாற்படைகளும் அணிவகுத்துச் சென்றன. பேரிகைகள் முழங்கின. மக்கள் மகிழ்ச்சி ஆரவாரஞ் செய்தனர். தெருக்களெல்லாம் அலங்கரிக்கப்பட்டிருந்தன. மங்கள விளக்குகளும் பூரணகும்பங்களும் வைத்து மக்கள் அரசனை வணங்கி வழிபட்டனர்.

வருடம் ஒன்று கழிந்தது. மேகவண்ணன் வயது சென்றமையினால் தனது மகனுக்கு முடிசூட்டி மகிழ்ந்தான். அதன் பின் சில நாட்களில் நோய் வாய்ப்பட்ட மன்னன் இறந்து போனான்.

பிரேத ஊர்வலத்தின் போது அமங்கல வாத்தியங்கள் ஒலித்தன. வீரவாள் சரித்து வைக்கப்பட்டிருந்தது. படை வீரர்கள் உற்சாகமின்றி அழுதழுது படையை நடத்தினர். தேரில் மன்னன் சரிந்து படுத்திருந்தான். வீதியெங்கும் மக்கள் பெருங்குரலெடுத்து அழுதனர். கொற்றக் குடை பிடிக்கப்படவில்லை. இப்போ யாவும் இடம் வலமாக மாறி இருந்தது.

எச்சிலிலை

**211. காக்கை கவரிலென் கண்டார் பழிக்கிலென்**
**பால்துளி பெய்யிலென் பல்லோர் பழிச்சிலென்**
**தோற்பையுள் நின்று தொழிலச் செய்தூட்டுங்**
**கூத்தன் புறப்பட்டுப் போன இக்கூட்டையே**

காரையூரில் சரவணன் என்றொருவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு ஏழு ஆண்பிள்ளைகள். அவர்கள் சொத்து விடயமாகத் தினமும் பிரச்சினைப்படுவர். தகப்பனிடம் ஏராளமான காணிகள் இருந்தன. அதை அவர் சமபங்குகளாகப் பிரித்துத் தனது

பிள்ளைகளுக்குக் கொடுத்தார். இருப்பினும் அவர்கள் தத்தமது காணி மற்றவர்களது காணியைவிடப் பெறுமதி குறைந்தது என்று கூறித் தினமும் பிரச்சினைப்பட்டுக் கொண்டே இருந்தனர். அதனால் சரவணன் மிகுந்த கவலை கொண்டிருந்தார். சரவணனின் சகோதரன் கணபதி. அவருக்கு ஐந்து பெண் பிள்ளைகள். அவரிடம் காணி பூமி எதுவும் இல்லை. குத்தகை நிலத்தில் குடியிருந்தார். அவரது பெண் பிள்ளைகள் அழகானவர்கள். அதனால் ஊரிலுள்ள வாலிபர்கள் அவர்களை விரும்பிச் சீதனமில்லாது திருமணம் செய்து கொண்டனர்.

சரவணன் பிள்ளைகளின் சண்டை சச்சரவுகளைக் தாங்கிக் கொள்ள முடியாது தற்கொலை செய்து கொண்டார். அவர் ஊரின் எல்லையில் இருந்த ஒரு பொது மண்டபத்திலேயே வாழ்ந்து வந்தார். அங்கும் அவரது பிள்ளைகள் வந்து அவருடன் பிரச்சினைப்பட்டனர். அதனால் தான் அவர் வாழ்க்கை மீது வெறுப்படைந்து தற்கொலை செய்து கொண்டார். அதை அறிந்த அவரது பிள்ளைகள் எவரும் அவர் இறந்த இடத்திற்கு வரவில்லை. பிரேத பரிசோதனை செய்த வைத்தியர் அவரது உடலை அரச செலவில் அடக்கஞ் செய்யுமாறு பணித்தார். இதையறிந்த கணபதி மிகுந்த வருத்தமுற்றார். அவர் தனது மருமக்களை அழைத்துச் சொன்னார், “அன்பான எனது மருமக்களே, நீங்கள் உயர்ந்தவர்கள். என்னிடம் பொருள் எதுவும் இல்லை என்றறிந்தும் எனது பெண் பிள்ளைகளைத் திருமணஞ் செய்து நல்ல முறையில் வாழ்கிறீர்கள். எனது பெண்களுக்கு எந்த விதமான குறைகளும் இல்லை. அத்துடன் என்னையும் அன்பாக பராமரிக்கிறீர்கள். எனது சகோதரன் பெரும் பணக்காரன். ஆனால் ஒரு நிமிடமென்றாலும் அவன் நிம்மதியாக வாழவில்லை. நல்ல உணவுகளை உண்ணவில்லை. வாழ்க்கையில் வெறுப்படைந்து தற்கொலை செய்து கொண்டார். அவர் உயிருடன் இருக்கும் போது நிம்மதியாக இருக்கவில்லை. இறந்த பின்பும் அவரது உடல் கீறிக்கிழிக்கப்பட்டு அனாதாரமாக அடக்கஞ்

செய்யப்படவுள்ளது. ஒரு மனிதன் நிம்மதியாக வாழவேண்டும். இறந்த பின் அந்த உடலை மதித்து மரியாதை செய்து நல்ல முறையில் அடக்கம் செய்ய வேண்டும். அப்படி செய்தால் தான் அந்த உடலும் அதனுள் குடியிருந்த ஆன்மாவும் ஆறுதலடையும். அத்துடன் இறந்த உடலை மதித்தாலென்ன? மதிக்காவிட்டாலென்ன? ஊர்க்கோடியில் கொண்டு சென்று போட்டால் என்ன? உடலுக்கு ஒன்றும் ஆகாது. ஆனால் அந்த உடலுக்குச் செய்யும் மதிப்பும் மரியாதையும் அந்தக் குடும்பத்தின் மரியாதையை வெளிப்படுத்தும். அது போல அந்த உடலுக்கு உண்டாக்கப்படும் அவமானம் குடும்பத்தை வாழையடி வாழையாகத் தாக்கும். அதனால் எமது குடும்ப மானத்தைக் காப்பாற்ற எனது சகோதரனின் உடலைப் பெற்று நல்ல முறையில் அடக்கஞ் செய்யுங்கள். அது உங்களின் மதிப்பையும் எமது குடும்பத்திற்கு ஏற்படவிருக்கும் அவமானத்தையும் நீக்கும்'' என்றார்.

‘‘நாம் நினைத்தோம். நீங்கள் அதைச் சொல்லிவிட்டீர்கள். அனாதைப் பிணமானாலும் உரியகௌரவத்தைக் கொடுத்தல் வேண்டும். அது மனிதர்களின் கடமை. நாம் உங்கள் சகோதரனின் பிரேதத்தைப் பெற்று எமது வீட்டில் கொண்டு வந்து வைத்து உரிய சமயச் சடங்குகள் யாவும் செய்து நல்ல முறையில் அடக்கம் செய்கிறோம்'' என்றான் மூத்தமருமகன்.

அன்று மாலை சரவணனின் உடல் நன்கு அலங்கரிக்கப்பட்ட பாடையில் பறைமேளத்துடன் சுடலையை நோக்கிச் சென்றது.

## 3. செல்வம் நிலையாமை

அருந்தவம்

**212. அருளும் அரசனும் ஆனையுந் தேரும்**

**பொருளும் பிறர்கொள்ளப் போவதன் முன்னந்**

**தெருளும் உயிரொடுஞ் செல்வனைச் சேரின்**

**மருளும் பினையவன் மாதவ மன்றே.**

சேனாதிராஜர் பெரும் புலவர், அறிவாளி, கல்விமான், பெரும் சிவபக்தர். அதனால் அவ்வூர் அரசன் அவரைத் தனது முதல் அமைச்சராகத் தெரிவு செய்திருந்தான். அவர் ஒழுக்கசீலர் நடுவுநிலை நிற்பவர். பிறஉயிர்களுக்கு வரும் துன்பங்களைத் தனக்கு வரும் துன்பங்களாக நினைப்பவர்.

ஒரு நாள் அரசசபைக்கு மூவர் வந்தனர். ஒருவனின் கையில் ஒரு முடிச்சு இருந்தது. அதற்குள் ஏராளமான தங்கநாணயங்கள் இருந்தன. அவன் சொன்னான், ‘‘அரசே, நான் ஒரு வணிகன். பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக வந்தேன். இருவரும் என்னைச் சந்தித்துத் தாம் மிகவும் மலிவாகப் பொருட்களைக் கொள்வனவு செய்து தருவதாகக் கூறி அழைத்துச் சென்று ஒரு மறைவிடத்தில் வைத்து என்னைப் பயமுறுத்தி இது தம்முடைய பொருள் என்கின்றனர். ஊரவர்கள் கூறியவற்றை ஏற்கமறுக்கின்றனர். அதனால் தங்களிடம் வந்தேன். எனக்கு நியாயம் கூறுங்கள் என்று அழுதான் அந்த வணிகன்.

‘‘அரசே, நானும் வணிகன் தான். இவன் என்னிடம் தான் பொருட்களைக் கொள்வனவு செய்வது வழக்கம். இவன் எனது ஏவலாள். இவன் தான் பொருட்களை அளந்து கொடுப்பான். இன்று பொருட்களைக் கொள்வனவு செய்ய வந்த இவன் எனது தங்கநாணயங்களைத் திருடிவிட்டான்’’ என்றான் மற்றவன். கூடவந்தவன் அதை ஆமோதித்தான்.

சேனாதிராஜா் மூவரையும் மாறிமாறிப் பார்த்தார். பின் ஏவலாளை நோக்கி, “நீ சொன்னது உண்மையா?” என்று கேட்டார். “சிவன் மீது ஆணையாக நான் சொல்வது உண்மை” என்றான் அவன்.

“சரி, உள்ளே செல், அங்கே சிவலிங்கம் உள்ளது. அதைத் தொட்டுச் சத்தியம் செய்” என்றார். அப்போது அவனது கண்கள் மிரண்டன. முகம் மாறியது. எனினும் சத்தியம் செய்யாவிட்டால் அரச தண்டனைக்கு ஆளாவோமென அஞ்சியபடி உள்ளே சென்றான்.

சிவலிங்கம் பளபளத்தது. அருகே பலவிதமான பிரசாதங்கள் வைக்கப்பட்டிருந்தன. கற்பூரம் எரிந்து கொண்டிருந்தது. சாம்பிராணி புகைத்துக் கொண்டிருந்தது. சிவனின் அருகே பலவிதமான நறுமணத்திரவியங்களும் எண்ணைகளும் இருந்தன. அவன் திரும்பிப் பார்த்தான் யாரும் இல்லை. அதனால் சிவனின் அருகில் இருந்த எண்ணையைத் தொட்டுக் கையில் பூசிவிட்டுப் பலமாகச் சொன்னான், “சிவன் மீது சத்தியமாகச் சொல்கிறேன். இது எனது முதலாளியினுடைய தங்கநாணயம்.”

அரசனுக்கு முதலாவது வணிகனின் மீது கோபம் வந்தது. அவன் சேனாதிராஜரது இரத்த உறவினன். அதனால் தான் அவன் அப்படி நடந்திருக்கிறான் என எண்ணினான்.

இரண்டாவது வணிகனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அவன் சேனாதிராஜருடன் நட்புப் பூண்டவன். கோவிலில் தொண்டுகள் பலவும் செய்பவன். மாதமொரு முறை மக்களுக்கு உணவு கொடுப்பவன்.

சேனாதிராஜர் அந்த ஏவலனை அழைத்து அவனது கையை முகர்ந்து பார்த்தார். பின் சொன்னார், "அரசே, இவன் பொய் சொல்கிறான். சிவனுக்குப் பூசப்பட்டது சுத்தமான நல்லெண்ணெய். இவனது கையில் மணப்பது வாசனைத் தைலம். இவன் சிவனைத் தொட்டுச் சத்தியம் செய்யவில்லை. அதனால் தகுந்த தண்டனை கொடுங்கள்."

மன்னன் ஆச்சரியப்பட்டான், "மன்னனது பெரும் ஆதரவும், பொன்னும் பொருளும் சேனாதிராஜருக்குச் சொந்தமாக இருந்தும் அவர் சிவனடியார் போலவே வாழ்கிறார். நான் கொடுக்கும் திரவியங்களைக் கொண்டு சிவசேவை செய்கிறார். அதனால் அவர் உயிருள்ளபோதே சிவனை அடைந்துவிட்டார். அதனால் தான் நான் சிக்கல்களுக்களாகும் போது அச்சிக்கல்களைத் தீர்த்து வைக்கிறார்" என்றான் மன்னன்.

அழியாத செல்வம்

**213. இயக்குறு திங்கள் இருட்பிழம் பொக்குந்**
**துயக்குறு செல்வத்தைச் சொல்லவும் வேண்டா**
**மயக்கற நாடுமின் வானவர் கோனைப்**
**பெயற்கொண்டல் போலப் பெருஞ்செல்வ மாமே.**

இராமுப்பிள்ளைச் செட்டியார் பெரும் வர்த்தகர். அவரிடம் பல கப்பல்கள் நின்றன. அவர் பெரும் சிவபக்தர். அவர் பெரியதொரு மாளிகையைக் கடற்கரையில் கட்டியிருந்தார். அத்துடன் அவரிடம் பல மோட்டார் வாகனங்களும் நின்றன. அவர் வாழ்ந்த கிராம மக்கள் அனைவரும் ஏழைகள் அதனால் அவர்களுக்குத் தன்னாலான

உதவிகளைச் செய்து வந்தார். அவரை அவ்வூர் மக்கள் சிவனாக நினைத்து பூசித்து வந்தனர்.

பட்டணத்தில் உலகநாதன் என்றொரு பெரும் வணிகன் இருந்தான். அவன் இராமுப்பிள்ளைச் செட்டியாரைவிடத் தனவந்தன். ஆனால் தானதருமங்கள் எதையும் செய்யமாட்டான். கோவிலுக்கு வருவதேயில்லை.

அன்று பெரு மழை பெய்தது. இடியும் மின்னலும் சூறாவளியும் ஏற்பட்டது. இராமுப்பிள்ளைச் செட்டியார் சிவன் கோவிலுக்குக் குடும்பத்துடன் வந்தார். அங்கு மக்கள் எல்லோரும் கூடியிருந்தனர்.

இரண்டு தினங்கள் பெரு மழை பொழிந்தது. மழைவிட்டதும் சூறாவளி வீசியது. பின் பலத்த இடிமின்னல் ஏற்பட்டது. மாளிகை போன்ற வீடிருந்தும் உலகநாதனும் மனைவியும் பிள்ளைகளும் பயத்தால் சிவன் கோவிலுக்கு வந்திருந்தனர்.

இராமுப்பிள்ளைச் செட்டியார் மக்களுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறினார், "எல்லோரும் சிவனை நம்புங்கள். சிவனது செல்வமான திருவருளைப் பெற்றவர்கள் துன்பப்படமாட்டார்கள். சிவனது செல்வம் சந்திரனைப் போலத் தேய்ந்து மறையாது. சாதாரணமாகத் தேடும் செல்வம்தான் அழியும். அதோடு சிவநினைவோடு சேர்த்த செல்வம் சிவனடியாருக்கு உதவுவதற்காக அழியாது இருக்கும். எனது செல்வம் சிவத்தன்மை உள்ளதென்னால் அது அழியாது உங்களையே சேரும். பலர் வீடு வாசல்களை இழந்துவிட்டீர்கள், பொருட்களை இழந்துவிட்டீர்கள், கால்நடைகளை இழந்துவிட்டீர்கள், உங்களது

விவசாய நிலங்கள் அழிந்துவிட்டன. அதற்காகக் கவலைப்படாதீர்கள். என்னால் முடிந்தளவு உதவுவேன்'' என்றார்.

உலகநாதன் எதுவும் கூறவில்லை. அப்போது ஒருவன் வந்து உலகநாதனுக்குச் சொன்னான், ''ஐயா, உங்கள் வியாபார நிலையத்தை மின்னல் தாக்கியதால் உங்கள் வியாபார நிலையம் முழுவதும் எரிந்துவிட்டது. வாகனங்கள் அனைத்தும் உருக்குலைந்துவிட்டன'' என்றான். அதைக் கேட்ட உலகநாதன் மயக்கமடைந்தான்.

இராமுப்பிள்ளைச் செட்டியாரின் மாளிகைக்குச் மக்கள் சென்றனர். மாளிகையின் முன்னால் நின்ற மரங்கள் கூடப் பாதிக்கப்படவில்லை.

''எனது செல்வம் சிவனது அழியாத செல்வம். அது சிவபக்தர்களுக்கானது'' என்றார் இராமுப்பிள்ளைச் செட்டியார்.

சிவச் செல்வம்

**214. தன்னது சாயை தனக்குத வாதுகண்டு**
**என்னது மாடென் றிருப்பர்கள் ஏழைகள்**
**உன்னுயிர் போம்உடல் ஒக்கப் பிறந்தது**
**கண்ணது காணொளி கண்டுகொ ளீரே.**

இராமுப்பிள்ளைச் செட்டியார் கடற்கரைக்கு வந்தார். அவரின் பத்துக் கப்பல்களையும் சூறாவளிக் காற்று கடற்கரையில் ஒதுக்கி

விட்டிருந்தது. எனினும் எதுவும் சேதமடையவில்லை. பலரது கப்பல்களைக் காணவில்லை. அவை சூறாவளியால் இழுத்துச் செல்லப்பட்டுவிட்டன. நடந்ததைத் தனது அறிவால் நினைத்துப் பார்த்தார் செட்டியார். தனது செல்வமெல்லாம் சிவனது செல்வம் என்பதால் எதுவும் அழியவில்லை என்று நினைத்தார். அப்போது உலகநாதன் அங்கு வந்தார்.

“செட்டியாரே, உமது செல்வம் சிவனது செல்வம். அதனால் அவற்றை இயற்கையால் கூட அழிக்க முடியவில்லை. எனது செல்வம் நிழலைப் போன்றது. அதனால் இப்போ எனக்குத் துன்பங்கள்தான் வந்துள்ளன. வியாபாரம் செய்யப் பெருந்தொகைப் பணத்தைக் கடன்பட்டேன். இப்போ கடன்காரர் வந்து தொல்லை தருகிறார்கள். என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. நான் தர்மமில்லாது, சிவநினைவில்லாது தேடியமையால் தான் அவை அழிந்தன. இடியும் மின்னலும் எனது வியாபார நிலையத்தை மட்டும்தான் தாக்கி முற்றாக அழித்தது. பலரின் சொத்துக்கள் பாதுகாக்கப்பட்டன. அதற்குக் காரணம் சிவன்தான். அவர்கள் எல்லோரும் பெரும் சிவபக்தர்கள். அதனால் சிவன் அவர்களுடன் கூட இருந்திருக்கிறான். எனது நண்பன் சிவராசன் பெரும் சிவபக்தன். அவன் உணவுப் பொருட்களை விற்பனை செய்பவன். பத்து நாட்களாகத் தொடர்ந்து ஊர்மக்களுக்கு மூன்று வேளையும் உணவு கொடுக்கிறான். இதெல்லாம் முன்பு எனக்குத் தெரியவில்லை. இப்போதுதான் தெரிகிறது. இனித் தெரிந்து என்ன பயன்?. நான் நிலையானது என்று நினைத்ததெல்லாம் போய்விட்டது” பெருங்குரலெடுத்து அழுதான் உலகநாதன்.

“உலகநாதா, இப்பொழுதென்றாலும் உண்மையை உணர்ந்தாய். நான் உனக்கு உதவி செய்கிறேன். சிவனைத் தஞ்சமடைந்து அவனது நினைவுடன் ஒழுக்கமாகத் தொழிலைச் செய். சந்திரன் தேய்ந்தாலும் பின் வளர்ந்து முழுமையடைவான். அது போன்றது தான் செல்வம். அதனால் கவலைப்படாதே. சிவனின் செல்வத்தை அழிக்க முடியாதென்ற நினைவுடன் தொழிலைச் செய்” என்றார் இராமுப்பிள்ளைச் செட்டியார்.

## கொடுத்து வைத்தல்

**215. ஈட்டிய தேன்பூ மணங்கண் டிரதமும்**
**கூட்டிக் கொணர்ந்தொரு கொம்பிடை வைத்திடும்**
**ஓட்டித் துரந்திட் டதுவலி யார்கொளக்**
**காட்டிக் கொடுத்தது கைவிட்ட வாறே.**

உலகநாதனின் சகோதரன் நல்லைநாதன். அவனும் பெரிய வர்த்தகன். சூறாவளியாலும் பெருமழையாலும் ஊர்மக்களின் வயல்களும், கால்நடைகளும், வீடுகளும், வீடுகளிலிருந்த உணவுப்பொருட்களும் அழிந்துவிட்டன. அதனால் மக்கள் பெரும் துன்பத்திற்குள்ளானார்கள். அதைப் பயன்படுத்தித் தன்னிடமிருந்த உணவுப் பொருட்களை நல்லைநாதன் விற்பனை செய்யாது பதுக்கி வைத்தான். அவ்வூரில் வாழ்ந்த பெரும் வர்த்தகனான பேரம்பலம் தனது களஞ்சியத்திலுள்ள உணவுப் பொருட்கள் முழுவதையும் ஊர்மக்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து விட்டுச் சொன்னார், “அன்பான ஊரவர்களே, நான் சிவபக்தன். நீங்களும் சிவபக்தர்கள். சிவனின் அடியவர்கள் உணவின்றிப்

பட்டினிகிடப்பதைப் பார்த்துக் கொண்டிருப்பவன் பாவி. அதனால் என்னிடமுள்ள உணவுப் பொருட்களை உங்களுக்குத் தருகிறேன். இப்போது உங்களிடம் பணம் இல்லை என்பது எனக்குத் தெரியும். அதனால் பணமுள்ள போது தாருங்கள். தரமுடியாத ஏழைகள் தரவேண்டாம்'' என்றான். ஊரவர்களிற் பலர் தம்மிடமிருந்த பணத்தைக் கொடுத்து விட்டுப் பொருட்களை வாங்கிச் சென்றனர்.

நல்லைநாதன் பொருட்களைப் பதுக்கி வைத்து விட்டு இல்லை என்றான். அன்றிரவு திரண்ட மக்கள் அவனது வர்த்தக நிலையத்தை உடைத்துப் பொருட்களைச் சூறையாடினர்.

உலகநாதன் இராமுப்பிள்ளைச் செட்டியாரிடம் வந்து அழுதான், ''செட்டியாரே, நான் தேடிய செல்வம் அனைத்தும் ஓர் இரவில் என்னைவிட்டுப் போய்விட்டது. இனி நான் எப்படி வாழ்வது?.''

''மனிதன் இறைவன் மீது நம்பிக்கை வைத்தல் வேண்டும். ஒருவர் இன்னொருவர் மீது வைக்கும் அன்பும் சிவனைச் சென்றடைகிறதென்று உபநிடதங்கள் கூறுகின்றன. கிணற்றை எத்தனை முறை இறைத்தாலும் அது ஊறிப் பழைய நிலையை அடையும். அது போலத் தான் தர்மம் செய்யும் பொருளும் திரும்பவும் கொடுத்தவனை வந்தடையும். இது இறைநியதி. தேனீக்கள் ஈயாது சேமிக்கும் தேனைக் கொடியவர்கள் கவர்வது போல ஈயாதவனது செல்வமும் கொடியவரால் கவரப்படும். நாம் பிறருக்குக் கொடுக்காது பாதுகாக்கும் பொருளால் உடம்பை வளர்க்கிறோம். ஆடம்பரமாக வாழ்கிறோம். ஆனால் இறுதியில் உடம்பும் உதவாது, பாதுகாக்கும் பொருளும் உதவாது. உதவுவது சிவனது அன்பான திருவருள் தான். இதையுணர்த்த பேரம்பலம் மகிழ்வுடன்

வாழ்கிறான். இதையுணராத நீ துன்பப்படுகிறாய். இதை எவராலும் மாற்ற முடியாது. உன்னால் மட்டுமே மாற்ற முடியும்'' என்றார் செட்டியார்.

யமவருகை

**216. தேற்றத் தெளிமின் தெளிந்தீர் கலங்கன்மின்**
**ஆற்றுப் பெருக்கிற் கலக்கி மலக்காதே**
**மாற்றிக் களைவீர் மறுத்துங்கள் செல்வத்தைக்**
**கூற்றன் வருங்கால் குதிக்கலு மாமே.**

உலகநாதனுக்குச் சிவநினைவே இல்லை. சிவனடியார்கள் பிழைக்கத் தெரியாதவர்களென்றும், உழைத்துண்ண முடியாதவர்களென்றும் நினைப்பவன். அதனால் அவன் அவர்களை வெறுத்தான். அத்துடன் ஏழைகள் என்பவர்கள் தொழிலைச் செய்யச் சோம்பற்பட்டவர்களென்றும் எண்ணினான். இதனால் அவன் தானதர்மங்கள் எவையும் செய்வதில்லை. கடும் முயற்சி செய்து உழைத்துச் சம்பாதித்து மகிழ்வுடன் வாழ்ந்து கொண்டிருந்தான்.

"உலகநாதா, நீ பாடுபட்டு உழைத்துச் சேமித்த பணத்திற்கு இன்று என்ன நடந்தது? திருவடியுணர்வுள்ளவர்களுக்குச் செல்வத்தின் நிலையாமை பற்றித் தெரியும். அதனால் அவர்கள் எதற்கும் கலங்குவதில்லை. பெரும் செல்வம் வந்தபோது மகிழாதவன், அது சென்ற போதும் கலங்கமாட்டான். அத்துடன் தான் முழுமனதுடனும் ஒழுக்கத்துடனும் வழிபடும் கடவுள் ஒருபோதும் தன்னைக் கைவிடமாட்டார் என்றும் எண்ணுவான். எண்ணம் தான் நம்பிக்கை. நம்பிக்கை தான் வாழ்க்கை. சிவன் தான் முழுமுதற் கடவுள். அவன்

தன்னை நம்பும் மெய்யுணர்வுள்ளவர்களைக் கைவிடமாட்டான் என்று நான் நம்பினேன். அந்த நம்பிக்கை வீண்போகவில்லை. பாதுகாப்பற்ற கடற்கரையில் எனது வீடு உள்ளது. எனது கப்பல்கள் பத்தும் கடலில் நங்கூரமிடப்பட்டு நின்றன. ஆனால் அவை கொடிய சூறாவளியால் பாதிக்கப்படவில்லை. உனது வியாபார நிலையம் பாதுகாப்பான இடத்தில் இருந்த போதும் அது முற்றாக அழிந்தது. இதிலிருந்து என்ன தெரிகிறது?. திருவடியுணர்வுள்ள நல்லோர் பாதிக்கப்படமாட்டார்கள் என்பது தெரியவில்லையா?. அதனால் எனக்குப் பொருளின் மீது பற்றில்லை. சிவன் மீது தான் உண்டு. அதனால் எனது பொருட்கள் அனைத்தையும் சிவனின் பொருளாக நினைத்தேன். எல்லோரையும் நாடிவரும் யமன் என்னையும் நாடி வருவான். வந்தால் என்னையும் திருவருளையுமே கவர்ந்து செல்வான். ஏனென்றால் திருவருள் என்னைவிட்டு ஒரு போதும் நீங்காது. பிறப்புக்களோடு கூடவரும். அதை யமனால் இனங்காண முடியாது. அதனால் நீ உனது மனதில் திருவடியுணர்வையுண்டாக்கு. பொருட்களின் மீதுள்ள பற்றை நீக்கிவிட்டுச் சிவநினைவோடு தொழிலைச் செய். அப்படிச் செய்தால் எவ்வேளையிலும் இன்பமாக வாழலாம். திருவருளென்பது நாம் வாழும் போது செய்த நற்செயல்களும், தானதர்மங்களும்தான். வேறு எவையுமில்லை. அதனால் அது பிறப்புக்களோடு கூடவரும்'' என்றார் இராமுப்பிள்ளைச் செட்டியார்.

தோணி

**217. மகிழ்கின்ற செல்வமும் மாடும் உடனே**
**கவிழ்கின்ற நீர்மிசைச் செல்லுங் கலம்போல்**
**அவிழ்கின்ற ஆக்கைக்கோர் வீடுபே றாகச்**

**சிமிழொன்று வைத்தமை தேர்ந்தறி யாரே.**

உலகநாதன் மிகுந்த துயரத்துடன் கோவிலுக்கு வந்தான். அவனை யாரும் கண்டு கொள்ளவில்லை. எல்லோரும் ஐந்தெழுத்தை மெய்மறந்து ஓதியபடி இருந்தனர். அவனைக் கண்ட கதிரேசன் அவனின் அருகில் வந்தார். அவர் பெரும் சிவபக்தர். தன்னைப் போலப் பிறவுயிர்களையும் மதித்து உதவி செய்பவர். ஒரு முறை அவர் உலகநாதனிடம் சிவனுக்குத் தேர் செய்வதற்காக நீதியுதவி கேட்டு வந்தார்.

“கதிரேசு, கோவிலில் தொண்டு செய்வதாகக் கூறிப்பலர் தமது பிழைப்பை நடத்துகிறார்கள். பிள்ளையார் கோவில் தலைவர் பெரும் நிதிமோசடி செய்துள்ளதாக மக்கள் காவல்துறையில் முறைப்பாடு செய்துள்ளனர். அதோடு சிவனுக்கு ஏன் அலங்காரத்தேர்? உங்களை நான் மதிக்கிறேன். எல்லோரும் உங்களைப் போன்றவர்கள் அல்லர். பொன்னம்பலம் தீயவன்..” என்று உலகநாதன் கூறும் போது கதிரேசன் இடைமறித்துக் கூறினார், “உலகநாதா, எல்லோரும் ஒழுக்கமானவர்கள் என்று நான் கூறவரவில்லை. நான் நேர்மையானவன். எனது தலைமையில் தேர் செய்யப்படுகிறது. அதனால் ஊரவர் அனைவரினதும் வீடுகளுக்குச் செல்கிறேன். உங்களை விலக்கி வைக்க விரும்பவில்லை. விரும்பினால் கொடுங்கள் இல்லாவிட்டால் வேண்டாம்” என்று கூறிவிட்டு அவரின் பதிலை எதிர்பாராது சென்றுவிட்டார்.

அதன் பின் அவரைப் பலமுறை அவன் கண்டுள்ளான். கதிரேசன் பழையவற்றைப் பொருட்படுத்தாமல் சிரித்துக் கதைப்பார். கோவிலடியில் நின்ற எவரும் உலகநாதனைக் கண்டு கொள்ளாமற் செல்லக் கதிரேசனுக்கு அவ்வாறு செல்ல மனம் வரவில்லை. அதனால் உலகநாதனுக்கருகிற் சென்றார்.

“நீங்கள் பெரிய மனிதன் என்பதை நிரூபித்துவிட்டீர்கள். நான் உங்களைப் பற்றிக் கேவலமாகப் பேசியும் என்னை மதிக்கிறீர்கள்” கலங்கினான் உலகநாதன்.

“சிவபக்தர்களுக்குக் கோபம் வரக்கூடாது. மகிழ்வான அன்புதான் சிவம். மகிழ்வோடு சேவை செய்வதுதான் திருவருள். கோபித்தால் எம்மை வந்தடையும் திருவருள் எம்மைவிட்டு அகன்றுவிடும். செல்வமும் அதனால் வரும் பொருட்களும் அதனால் வரும் இன்பங்களும் கடலில் செல்லும் கலத்தைப் போல எவ்வேளையிலும் கவிழலாம். உடல் உணர்வுகளால் ஆனது. உயிர் பற்றுக்களால் ஆனது. காலன் வந்து உயிரைக் கவரும் போது உடலுக்கும் உயிருக்குமுள்ள கட்டு நீங்கிவிடும். ஆனால் உயிருக்கும் வினைக்குமுள்ள கட்டு நீங்காது. அது பிறப்புக்களோடு கூடச் சென்று வினைகளுக்கேற்ப இன்பதுன்பங்களைக் கொடுக்கும். அதனால் நீ சிவனை வணங்கு. ஒழுக்கமாகவாழ். இழந்தவை கிடைக்கலாம். அதற்கு மேலும் கிடைக்கலாம். மனம் வருந்துவதால் எதுவும் நடைபெறமாட்டாது. மனம் திருந்துவதால் தான் நடைபெறும்” என்றார் கதிரேசன்.

“உண்மை. உரிய நேரத்தில் உணர்ந்து கொள்ளத் தவறியதால் தான் எனக்கு இந்த நிலை ஏற்பட்டது” என்றான் உலகநாதன்.

வழித்துணை

**218. வாழ்வும் மனைவியும் மக்கள் உடன்பிறந்**

**தாரு மளவே தெமக்கென்பர் ஒண்பொருள்**

**மேவு மதனை விரிவுசெய் வார்கட்குக்**

**கூவுந் துணையொன்று கூடலு மாமே.**

அன்று வீரவாகிற்குக் கடுமையான நோயுண்டானது. வைத்தியர் அவரைக் காப்பாற்ற முடியாதென்று கூறிவிட்டார். அதனால் மனைவியும் மக்களும் உடன் பிறப்புக்களும் ஒன்று கூடினர். அவரிடம் ஏராளமான சொத்திருந்தது. அதை அவர் யாருக்கும் வெளிப்படுத்தவில்லை. அதனால் தோட்டநிலங்கள், வயல்கள், தோப்புக்கள் யாவும் எங்கே உள்ளனவென்றும் அவற்றை யார் யாருக்கு எழுதியுள்ளீர்களென்றும் கேட்டனர். வீரவாகு எச்சிற்கையாற் கூடக் காகம் கலைக்காதவர். கோயிலுக்குச் செல்லாதவர். அவையெல்லாம் வீண்செலவு என்று நினைப்பவர். அவர் தனது சொத்தைத் தனது ஐந்து பிள்ளைகளுக்கும் பங்கிட்டு எழுதி வைத்திருந்த பத்திரத்தைக் கொடுத்துவிட்டு இறந்து போனார்.

பிள்ளைகள் பத்திரங்களைப் படித்துப் பார்த்தனர். அவர்களுக்குத் திருப்தி ஏற்படவில்லை. ஒவ்வொருவரும் மற்றவர்களுக்குக் கொடுத்த சொத்துத்தான் பெறுமதி வாய்ந்தது என வாதிட்டுச் சண்டையிட்டனர். அது பெரும் சண்டையாகிக் காவல்துறை வரை சென்றது. காவல் துறையினரின் பாதுகாப்புடன் வீரவாகுவின் உடல் தகனஞ் செய்யப்பட்டது. தகனஞ் செய்யப்பட்டதும் காவல்துறையினர் பிள்ளைகளைக் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

மறுநாள் அவ்வூரில் வாழும் சிவபக்தரான இரத்தினத்தை வீதியால் சென்ற வாகனம் மோதியதால் அவர் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அவரது ஏழு பிள்ளைகளும் அவரது மனைவியும் உடன்பிறப்புக்களும் வைத்தியசாலையில் கூடிநின்றனர். இரு தினங்களின்பின் அவருக்கு உணர்வு திரும்பியது. “நான் இனிப்

பிழைக்கமாட்டேன். எனது சொத்துக்களில் பெரும்பகுதியைத் தான தர்மம் செய்துவிட்டேன். தோப்புக்களையும் வயல் நிலங்களையும் சரிசமமாகப் பிரித்து உங்கள் ஒவ்வொருவருக்கும் எழுதிவைத்துள்ளேன். அது உங்களுக்குத் தெரியும். நான் செய்த சிவசேவையை நீங்களும் தொடர்ந்து செய்தல் வேண்டும். அது தான் எம்மோடு எப்போதும் கூடவருவது..'' என்றார். அவரால் பேசமுடியவில்லை.

“அப்பா நீங்கள் தான் எமது பெருஞ்சொத்து. நீங்கள் செய்த தானதர்மங்கள் எங்களை நல்ல முறையில் வாழவைக்கும். கவலைப்படாதீர்கள். நீங்கள் செய்த சிவசேவையை நாங்கள் தொடர்ந்து செய்வோம். நீங்கள் கூறுவது போலச் சொத்துக்கள் எவையும் வழித்துணையாகாது. சிவசேவைதான் எம்முடன் வரும்'' என்றான் மூத்தமகன்.

மறுநாள் இரத்தினம் இறந்துவிட்டார். ஊரே அவரது வீட்டில் கூடியது. அமைதியாகவும் சிறப்பாகவும் மனைவி பிள்ளைகள் உற்றார் உறவினர் உடன்பிறப்புக்கள் ஊரவர்கள் கதறக்கதற அவரது உயிரற்ற உடல் மயானத்தை நோக்கிச் சென்றது.

வேட்கை

**219. வேட்கை மிகுந்தது மெய்கொள்வார் இங்கிலை**
**பூட்டுந் தறியொன்று போம்வழி ஒன்பது**
**நாட்டிய தாய்தமர் வந்து வணங்கிப்பின்**
**காட்டிக் கொடுத்தவர் கைவிட்ட வாறே.**

சம்பந்தனின் மகன் ஆரூரன். அவனுக்கு இருபது வயது. ஆழமான தோட்டக்கிணற்றில் நீர் எடுக்கும் போது தவறி விழுந்து இறந்து போனான். மறுநாள் தான் அவனைத் தேடியவர்கள் அவனது உடல் கிணற்றில் இருப்பதைக் கண்டு பிடித்தனர்.

தாய் தந்தையரும் சகோதரர்களும் உற்றார் உறவினர்களும் ஒன்று கூடிக்கதறி அழுதனர். அவனது தாயாரால் துயரத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை, “எனது அன்பு மகனே, நீயில்லாமல் என்னால் வாழமுடியாது. நீ விழுந்த கிணற்றில் நானும் விழுந்து இறப்பேன்” என்று அழுதாள்.

“அம்மா, உலகில் பிறந்த எல்லோரும் ஒரு நாள் இறந்தே தீரவேண்டும். இது நியதி. ஒருவரின் உயிர்ப்பான பிராணவாயு உடலில் உள்ள ஒன்பது வழிகளில் ஒன்றால் வெளியே சென்றுவிடும். அதைப்போகவிடாது தடுப்பது நடுநாடியாகிய கழுகுமுனை. உயிர்ப்பை அதன் வழியாகச் செலுத்தப் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். அப்பயிற்சியை எவரும் பெற்றிலர். அதனால் தான் உயிர்போகிறது. கவலைப்படாது அவனது ஆத்மா சாந்தியடையப் பிராத்தியுங்கள்” என்றார் அங்கிருந்த ஒரு பெரியவர்.

எல்லோரும் அழுதனர். உயிரற்ற உடலைப் பாடையில் ஏற்றும் போது தாயும் சகோதரர்களும் மயக்கமடைந்தனர்.

இரண்டு மாதங்கள் கடந்தன. சம்பந்தனின் வீடு களை கட்டியது, “ஆரூரன் எமது குடும்பத்திற்கு வந்துவிட்டான். எனது மனைவி கர்ப்பவதியாகி விட்டாள்” என்று சம்பந்தன் தனது நண்பனான சுந்தரராஜனுக்குச் சொன்னான்.

“உயிரிருக்கும் வரை தான் பந்தம், பாசம் என்று சொல்வார்கள். உயிர்போன பின்பு மறந்துவிடுவார்கள். இல்லாவிட்டால் கிணற்றில் குதித்துத் தற்கொலை செய்யப் போகிறேன் என்ற தாய் கர்ப்பமுறுவாளா?” என்று நினைத்தான் சுந்தரராஜன். அவனுக்குச் சிரிப்பு வந்தது.

சிவச் செயல்

**220. உடம்பொ டுயிரிடை விட்டோடும் போது**
**அடும்பரி சொன்றில்லை அண்ணலை எண்ணும்**
**விடும்பரி சாய்நின்ற மெய்ந்நமன் தூதர்**
**சுடும்பரி சத்தையுஞ் சூழகி லாரே.**

கதிரவேலு பெரும் சிவபக்தர். காலையிலும் மாலையிலும் சிவன் கோவிலில் இருந்து திருவைந்தெழுத்தை ஓதியபடி இருப்பார். அன்று காலை அவர் சிவன்கோவிலில் திருவைந்தெழுத்தை முறைப்படி ஓதிவிட்டு வயலுக்கு வந்தார். வயல் பச்சைப்பசேல் என்றிருந்தது. வழக்கத்தைவிடப் பயிர்கள் செழிப்பாக நின்றன. அறுவடை முடிவடைந்ததும் தனது மகளின் திருமணத்தை முடித்துவிட வேண்டும் என்று நினைத்தார். அவர் வேலை செய்யும் போதும் திருவைந்தெழுத்தை ஓதியபடியே வேலை செய்வார். மனதுள்ச் சிவனை இருத்தி ‘நமசிவாய’ என்ற திருவைந்தெழுத்தை ஓதியபடி வயல் வரம்பால் நடந்து சென்றார். அவரது நினைவு முழுவதும் சிவனைப் பற்றியதாகவே இருந்தது.

வயல் வரம்பில் எலி வேட்டைக்காகக் காத்திருந்த நாகம் ஒன்று அரவம் கேட்டதும் எழுந்து படத்தை விரித்துச் சீறியது. அதைக்

கவனிக்காத கதிரவேலு, ‘நமசிவாய, நமசிவாய, நமசிவாய’ என்று திருவைந்தெழுத்தை ஓதியபடி சென்றார். அவருக்குப் பின்னால் அவரது வேலையாளான வேலாயுதம் சென்றான்.

அவன் பாம்பைக் கண்டுவிட்டான். அதைக் கவனிக்காத கதிரவேலு பாம்பின் அருகே சென்றுவிட்டார், “ஐயா, காலுக்குள் நாகம் படமெடுத்தாடுகிறது” என்று கத்தினான். அப்போது தண்ணீருள் நீந்திய எலியொன்று வரம்பில் ஏறியது. அதைக் கண்ட நாகம் எலியைப் பிடிக்க எலி ‘கீக்கீக்’ என்று கத்தியது. அதையும் கவனிக்காத கதிரவேலு திருவைந்தெழுத்தை ஓதியபடி நடந்த போது பாம்பை மிதித்தார்.

எலியுடன் பாம்பு வரம்பால் ஓடியது, “நல்லகாலம் எலி வராவிட்டால் பாம்பு தீண்டியிருக்கும்” என்றான் வேலாயுதம்.

“எலியை அனுப்பியது சிவன்தான். சிவன் திருவைந்தெழுத்தை நமசிவாய, சிவயநம, சிவயசிவ, சிவசிவ என நான்காகப் பகுத்துள்ளான். படிமுறைப்படி அதை ஓதுபவர்களை எந்தத் துன்பமும் நெருங்காது. உயிரைக் கவரும் யமன் கூடத் திருவைந்தெழுத்து ஓதும் சுத்தமுள்ள இடத்திற்கு வரமாட்டான். அதற்காகத்தான் நான் திருவைந்தெழுத்தை ஓதியபடி செயலாற்றுகிறேன். அதனால் தான் இன்று யமனை விரட்ட முடிந்தது. நான் செய்த தானதருமத்திற்கோ தவத்திற்கோ யமன் பயப்படமாட்டான் என்று தெரிந்ததால் தான் நான் திருவைந்தெழுத்தை எந்நேரமும் ஓதி வருகிறேன்” என்றார் கதிரவேலு.

## 4. இளமை நிலையாமை

அகக்கண் இல்லாதவர்

**221. கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே**

**விழக்கண்டுந் தேறார் விழியிலா மாந்தர்**

**குழக்கன்று மூத்தெரு தாய்ச்சில நாளில்**

**விழக்கண்டுந் தேறார் வியனுல கோரே.**

சிவராமன் தனது செல்வமகளான மாலதிக்குப் பொறியியலாளர் ஒருவரைத் திருமணம் செய்து வைத்தார். சிவராமன் பெருந்தனவந்தர். அவரிடம் ஏராளமான பசுக்கள் நின்றன. அவர் முதுமையடைந்த கால்நடைகளை விற்பதில்லை. அவைக்கெனத் தனியாகப் பட்டியமைத்து அன்புடன் பேணி வளர்த்து வந்தார். இளமையில் வயலை உழுத காளைகள் பல முதுமையடைந்ததும் நடக்கக்கூட இயக்கமின்றி வாழ்ந்து இறந்து போவதை அவர் அடிக்கடி காண்பார். இருந்தும் அவர் அது பற்றி நினைத்துக் கூடப்பார்ப்பதில்லை. அவரது தந்தையான சின்னத்தம்பி பெரும் பலசாலி. ஐந்து பேர் தூக்கிச் சுமப்பதைத் தனியே தூக்கிச் சுமப்பார். பெரும் சிவபக்தரான சின்னத்தம்பி தான தர்மங்களைக் குறைவின்றிச் செய்வார். அன்னதானம் வழங்குவார். கோவிலுக்குக் கட்டிடங்கள் பலவும் கட்டிக் கொடுப்பார். நன்றாக இருந்த அவர் திடீரென்று மயங்கி விழுந்து இறந்துவிட்டார். அதைச் சிவராமனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. தான தர்மங்கள் பலவற்றைச் செய்தும், சிவனை நாள்தோறும் நினைத்தும், சிவபூசைகள் செய்தும் அவரைக் காப்பாற்ற முடியவில்லையே என்ற கவலை சினமாக மாறியது. அதனால் அவர் இனிமேல் கோவிலுக்குச் சென்று எதுவும் செய்ய மாட்டேன் என்று சபதமிட்டார். அதையறிந்த கோவிற் குருக்கள் வந்து சொன்னார், “சிவராமா, ஒவ்வொருவரும் சிவனை வணங்கித் தானதர்மங்கள் செய்வது தமது எதிர்கால நல்வாழ்வுக்கல்ல.

மறுமைவாழ்வுக்காகவே. அத்துடன் பிறப்புக்கள் இல்லாதொழிய வேண்டும் என்பதற்காகவும் செய்கின்றனர். ஒருவர் செய்யும் தானதர்மங்களையோ, தவத்தையோ, கிரியைகளையோ கூற்றுவன் கணக்கெடுக்கமாட்டான். அவன் உயிர்களைக் காலநேர அட்டவணைப்படி கவர்ந்து சென்றுவிடுவான். இயற்கை எமக்குப் பல பாடங்களைக் கற்பிக்கிறது. காலையில் உதிக்கும் சூரியன் மாலையில் மறைவான். உனது பட்டியில் நின்ற காளை மாடுகள் இரண்டு சவாரியில் பல முறை முதற் பரிசைப் பெற்றன. பின் நடக்கமுடியாமல் பலமிழந்து இறுதியில் இறந்தன. இவற்றைப் பார்த்தும் உனக்கு மெய்யுணர்வு வரவில்லையா?. சிவபக்தியுள்ளவர்கள் தமது அகக்கண்ணால் இயற்கையை உணர்ந்து இழப்புக்களைத் தாங்கிக் கொள்வார்களே தவிரச் சிவநிந்தனை செய்ய மாட்டார்களள். சிவநிந்தனை செய்வது பாவம்'' என்றார்.

‘‘நான் உங்களது சமாதானத்தை ஏற்கமாட்டேன். நீங்கள் உங்கள் வருமானத்திற்காகச் சொல்கிறீர்கள். நான் எனது முடிவை மாற்ற மாட்டேன். நீங்கள் போகலாம்'' என்று ஆத்திரத்துடன் சொன்னான்.

‘‘இயற்கையை அகக்கண்ணாற் கண்டு உணரமுடியாத மூடருடன் வாதிட்டுப் பயனில்லை'' என்று நினைத்தார் குருக்கள்.

தூண்டு விளக்கு

**222. ஆண்டு பலவுங் கழிந்தன அப்பனைப்**

**பூண்டுகொண் டாரும் புகுந்தறி வார்இல்லை**

**நீண்டன காலங்கள் நீண்டு கொடுக்கினுந்**

**தூண்டு விளக்கின் சுடரறி யாரே.**

குருக்கள் நின்றதைக் கண்ட சிவராமன் சொன்னான், “எனது தந்தையாருக்கு எண்பது வயது. பிள்ளையாக அவர் இருந்த நாள்த் தொடக்கம் சிவனைப் பூசித்து வருகிறார். தொண்டுகள் செய்கிறார். ஆனால் அவற்றால் எதுவும் நடக்கவில்லை. அவரது முயற்சியும் பணமும்தான் அவரது வாழ்வைச் சிறப்பித்தன. தானதர்மங்கள், கிரியைகள், தொண்டுகள் செய்தால் பயன் கிடைக்குமென்று சொல்வது வீண்வார்த்தையே. கோவிலுக்குச் செல்லாது கசாப்புக்கடை வைத்திருக்கும் சிவயோகனின் குடும்பம் ஓகோ என்றிருக்கு. அவனிடம் என்ன இல்லை..? சொல்லுங்கள் பார்ப்போம்.”

“சிவராமா, நாத்திகம் பேசாதே. உயிர்கள் தோன்றிப் பல்லாயிரம் வருடங்கள் கழிந்துவிட்டன. எல்லோரும் கிரியைகள் செய்வதும் வணங்குவதும் தான் ஆன்மீகம் என்று நினைக்கின்றனர். ஒரு பக்தனின் அறிவும், அன்பும், ஆற்றலும் சிவனின் அன்புடனும் ஆற்றலுடனும் அறிவுடனும் கலத்தல் வேண்டும். அப்படிக் கலப்பதற்காகத்தான் கிரியைகள் செய்யப்படுகின்றன. திருவருள் என்று சொல்லப்படும் இறைவனின் அன்பு, அறிவு, ஆற்றல் என்பன ஆருயிர்களின் அறிவையும் அன்பையும் ஆற்றலையும் தூண்டி மெய்யுணர்வை உண்டாக்கி இறைவனோடு இரண்டறக்கலக்கச் செய்யும் தூண்டியாகச் செயற்படும். ஆனால் இதை யாரும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. எல்லோரும் தமது தேவைகளை நிறைவேற்றவே இறைவனைத் துதிக்கின்றனர். கிரியைகளைச் செய்கின்றனர். செய்துவிட்டுத் தாம் நினைத்தது நடக்கவில்லை என்று துயரப்படுகின்றனர். வரலாற்றை எடுத்துப் பார்த்தால் பெரும்பெரும் முனிவர்கள் ஞானிகள்கூடச் சிவனின் முழுமையான பெருமையை அறியவில்லை. சிவன் ஆன்மாக்களின்

அறிவையும், அன்பையும், ஆற்றலையும் தூண்டிவிடும் விளக்காக இருக்கிறான். ஆனால் அவ்விளக்கின் ஒளியை இது வரை யாரும் அறியவில்லை. பேரறிவுள்ள முனிவர்களுக்கே இந்த நிலையென்றால் சிற்றறிவு படைத்த நாம் எம்மாத்திரம்'' என்று கூறிவிட்டுச் சென்றார் குருக்கள்.

இளமையில் செய்

**223. தேய்ந்தற் றொழிந்த இளமை கடைமுறை**
**ஆய்ந்தற்ற பின்னை அரிய கருமங்கள்**
**பாய்ந்தற்ற கங்கைப் படர்சடை நந்தியை**
**ஓர்ந்துற்றுக் கொள்ளும் உயிருள்ள போதே.**

சிவராமன் குருக்கள் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவர் சிறிது தூரம் சென்று திரும்பிப் பார்த்தார். அவரின் மனம் குழப்பமடைந்தது. சிவராமனின் தந்தை பெரும் சிவபக்தர். சிவனை நிந்தனை செய்யாதவர். அவருக்குப் பிறந்த சிவராமன் சிவனை இகழ்வதைக் கேட்டதும் அவருக்குச் சினம் வந்தது. திரும்பி வந்து சொன்னார், ‘‘சிவராமா, இளம் வயதினர் இரத்தத்துடிப்பால் பலரையும் நிந்தனை செய்வது போலச் சிவனையும் நிந்தனை செய்வர். அது பிழை. உடம்பில் உயிர் நல்ல நிலையில் உள்ள போது சிவனை வணங்கி அவனது திருவருளைப் பெற்றுத் திருவடியுணர்வால் அவனுடன் கலந்து கொள்ளல் வேண்டும். முதுமை வந்தபின் செய்யலாமென்று நினைத்தல் கூடாது. முதுமை வாழ்வின் வசந்தத்தைக் கெடுத்துவிடும். அத்துடன் முதுமை இயலாமையை உண்டுபண்ணும். கூற்றுவனின் அழைப்பு எந்நேரமும் வரலாம். உனது தந்தை பெரும் சிவபக்தர். தயவு செய்து

அவரின் பெயரைக் கெடுக்காதே. உனக்குச் சிவனை வணங்கப் பிடிக்காவிட்டால் பேசாமல் இரு. அதனால் பாவம் வராது'' என்றார் குருக்கள்.

இளமை

**224. விரும்புவர் முன்னென்னை மெல்லியன் மாதர்**
**கரும்பு தகர்த்துக் கடைக்கொண்ட நீர்போல்**
**அரும்பொத்த மென்முலை ஆயிழை யார்க்குக்**
**கரும்பொத்துக் காஞ்சிரங் காயும்ஒத் தேனே.**

கஜேந்திரன் பெரும் சிவபக்தன். உரமான உடற்கட்டுள்ளவன். பேரழகன். அவன் கோவிலுக்கு வந்தால் அவனது திரண்ட மார்பை அழகிய கன்னிப் பெண்கள் பார்த்து ரசிப்பார்கள். அவனுடன் ஏதாவது ஒரு காரணத்தைக் காட்டிக் கதைப்பார்கள். உதடு பிரியாமல் சிரிப்பார்கள். இனிய மொழி பேசுவார்கள்.

கஜேந்திரனுக்குத் திருமணம் செய்ய விருப்பமில்லை. அவன் பிரமச்சாரியாக வாழவே விரும்பினான். இருப்பினும் அழகிய பெண்கள் அவனை விரும்பித் தூது அனுப்பினர். அதில் அவ்வூர்த் தலைவனின் மகள் காவேரி முக்கியமானவள். பல முறை அவள் தனிமையில் சந்தித்துத் தன்னைத் திருமணம் செய்யும்படி வற்புறுத்தினாள். அதைக் கஜேந்திரன் ஏற்கவில்லை. அவனது தாயாரும் சகோதரர்களும் வற்புறுத்தியும் அவன் கேட்கவில்லை.

வருடங்கள் பல கழிந்தன. கஜேந்திரனுக்கு ஐம்பது வயதாகி விட்டது. தாய் இறந்து போனாள். அவனுக்கு உணவளித்த சகோதரி

கணவனுடன் வெளியூர் சென்றாள். அதனால் கஜேந்திரன் தனிமைப்பட்டான். அதனால் தான் திருமணம் செய்யாதது மாபெரும் தவறு என்று எண்ணினான்.

முன்பு கோவிலுக்கு அவன் சென்றால் இளம் பெண்கள் கூட்டம் அவனைச் சுற்றி நிற்கும். வைத்த கண் வாங்காமற் பார்க்கும். இளம் பெண்கள் ஆசையுடன் பார்த்துச் சிரிப்பார்கள். கதைக்க முற்படுவார்கள்.

இப்போது இளம் பெண்கள் அவனை அருவருப்புடன் பார்ப்பார்கள். விலகிச் செல்வார்கள். மாலதி நல்ல அழகி. தகப்பனை இழந்தவள். தாய் ஊரில் உள்ள வீடுகளில் கூலி வேலை செய்து வந்தாள். அவளுக்கு ஐந்து சகோதரிகள். அவர்களைக் காப்பாற்ற மாலதியும் கூலி வேலை செய்து வந்தாள்.

ஒரு நாள் அவள் கஜேந்திரனின் வீட்டுக்கு வேலைக்கு வந்தாள். கஜேந்திரன் பெரும் தனவந்தன். அவள் அன்று வந்த போது கஜேந்திரன் அவளின் அருகே வந்து சிரித்துப் பேசினான். தனது எண்ணத்தை வெளியிட்டான்.

“சாகிற வயதிலை உமக்குப் பெண் தேவையா..?” என்று கேட்டாள் மாலதி. மறுநாள் அவளது மாமன் வந்து கண்டபடி ஏசிவிட்டுச் சென்றான். அக்கதை ஊர் முழுவதும் பரவியதால் கஜேந்திரனால் வெளிய செல்ல முடியவில்லை. அவனைக் கண்டதும் பெண்கள் விலகிச் சென்றனர். ‘இளமையில் திருமணம் செய்திருந்தால் இந்த நிலை வந்திராது’ என்று கவலைப்பட்டான் கஜேந்திரன்.

பருவ மாற்றங்கள்

**225. பாலன் இளையன் விருத்தன் எனநின்ற**

**காலங் கழிவன கண்டும் அறிகிலார்**

**ஞாலங் கடந்தண்டம் ஊடறுந் தானடி**

**மேலுங் கிடந்து விரும்புவன் நானே.**

சிவசுந்தரத்திற்கு ஐந்து பிள்ளைகள். ஐவரும் திருமணம் செய்துவிட்டனர். ஐவருக்கும் பிள்ளைகள் உண்டு. சிவசுந்தரம் பெரும் தனவந்தர். தனது சொத்துக்கள் முழுவதையும் பிள்ளைகளுக்குப் பங்கீட்டுக் கொடுத்துவிட்டார். அவரது மனைவியும் காலமாகி விட்டாள். வயோதிபம் வந்துவிட்டது. அதனால் அவர் சிவன் கோவில் மடத்தில் வந்து தங்கி விட்டார். அங்கிருந்து தொண்டுகள் பலவும் செய்து கொண்டிருந்தார்.

சகல வசதிகளும் இருந்தும் ஓர் ஏழையைப் போல அவர் வாழ்வது அவரது பிள்ளைகளுக்குப் பெரும் வேதனையைக் கொடுத்தது. அன்று அவரது ஐந்து பிள்ளைகளும் அவர்களது குடும்பமும் மடத்திற்கு வந்தது. மூத்த மகன் சொன்னான், "அப்பா, எம்மிடம் எவ்வளவு சொத்துக்கள் உண்டு. அதைவிட நாமெல்லோரும் உயர்ந்த உத்தியோகங்களில் உள்ளோம். எமக்கிருக்கும் வசதிக்கு நீங்கள் இந்தக் கந்தல் வேட்டியையா அணிய வேண்டும்? அறுசுவையுடைய உணவிருக்க உப்புச்சப்பில்லாத மடத்துணவையா உண்ண வேண்டும்?" என்று அழுதான்.

"மகனே, உடல் எவ்வளவு மாற்றமடைகிறதென்று பார். குழந்தையாகப் பிறந்த நான் இன்று முதியவனாகி விட்டேன். இதனால்

எவ்வளவு துன்பம். இது போன்ற துன்பம் தொடர்ந்து பிறப்புக்கள் தோறும் வந்து கொண்டே இருக்கும். அதை யாரும் உணர்வதில்லை. அதை அறுக்க வேண்டுமானால் ஞாலம் கடந்து அண்டங்களெல்லாம் கடந்து வியாபித்திருக்கும் சிவபெருமானை வணங்கி அவனது திருவடியுணர்வுடன் சேவை செய்தல் வேண்டும். அதற்கு வீடு தடையாகவுள்ளது. வீட்டிலுள்ள எல்லையற்ற இன்பம் என்னைச் சிவனிடமிருந்து அன்னியப்படுத்துகிறது. சுவையான உணவும் அன்பான உறவும் அடுத்த பிறவிக்கு வழிசமைக்குமே தவிர விடுதலையைத் தராது. அதனால் தான் இங்கு வந்து சிவநினைவுடன் சிவனுக்குச் சேவை செய்கிறேன். தயவு செய்து என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள்" என்றார் சிவசுந்தரம்.

பிள்ளைகள் பேசிப்பயனில்லை என்றுணர்ந்து வீட்டிற்குச் சென்றனர்.

ஆதியாற்றல்

**226. காலை எழுந்தவர் நித்தலும் நித்தலும்**
**மாலை படுவதும் வாணாள் கழிவதுஞ்**
**சாலும்அவ் வீசன் சலவிய னாகிலும்**
**ஏல நினைப்பவர்க் கின்பஞ்செய் தானே.**

சிவசுந்தரம் கோவில் வீதியைத் துப்பரவு செய்து கொண்டிருந்தார். அவருடன் அவ்வூரவர்கள் பலர் சுத்தம் செய்து கொண்டிருந்தனர். அவ்வூரில் வாழும் பரமானந்தன் மக்களைக் கேலி செய்து இன்பங் காண்பவன். அவன் வந்து சொன்னான்.

“செய்த பாவம் தீரவேணுமென்று தள்ளாத வயதில் சேவை செய்கிறார். இதை முன்பே உணர்ந்து பாவம் செய்யாதிருந்திருக்கலாம். சகோதரம் பிச்சை எடுக்குது. அதைக் கவனித்து உதவி செய்தாலே புண்ணியமுண்டாகும். அதை விட்டு விட்டு ஏன் வீட்டை விட்டு வந்து மடத்தில் இருப்பான். பிள்ளைகள் கலைத்திருக்கும்” என்றான்.

சிவசுந்தரம் எதுவும் பேசவில்லை. அவரது சகோதரன் சிவநடராசா பெருங் குடிகாரன். அத்துடன் சூதாடுபவன். தனது பெரும் சொத்துக்களைச் சூதாடி அழித்தவன். அவர் ஏதாவது கொடுத்தால் அதை வைத்துச் சூதாடி விடுவான். அதனால் அவர் அவனின் குடும்பச் செலவுக்கு அவனது மனைவியிடம் மாதா மாதம் ஒரு தொகைப் பணத்தைக் கொடுப்பார். இது ஊருக்குத் தெரியும்.

“பரமானந்தன் பெருங் குடிகாரன். குடித்து விட்டுப் பிறரைக் கேலி செய்பவன். பலர் அவனுக்கு அடித்தும் திருந்தவில்லை. அவனை அடித்துக் கொலை செய்ய வேண்டும்” என்றான் மாதவன்.

“மகனே, வீணாகக் கோபங் கொள்ளாதே. காலையில் சூரியன் உதித்தது முதல் மறையும் வரை மக்களிற் பலர் வாழ்வு நிரந்தரமானது என்று நினைத்து மகிழ்கின்றனர். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான மகிழ்ச்சி. சிலருக்கு குடிப்பது மகிழ்ச்சி. சிலருக்கு மற்றவர்களைக் கேலி செய்வது மகிழ்ச்சி. ஆனால் மகிழ்ச்சியான ஒவ்வொரு பொழுதும் எம்வாழ்நாளைக் குறைக்கிறது என்று யாரும் உணர்வதில்லை. ஒவ்வொரு நாளும் கழியக் கழிய மரணம்தான் தேடிவரும். இது இறைவனது கட்டளை. இதை விதியென்பார்கள். இளமைத்துடிப்போடு நடப்பவன் நாளடைவில் தள்ளாடுவான். கோலூன்றி நடப்பான். இது தான்

மகிழ்வான நாட்களின் செயல். இதை விட்டு விட்டுச் சிவபெருமானின் மெய்யடிகளை நினைத்து வணங்கி அண்டங்கள் யாவற்றையும் கடந்த எம்பிரானை அடைதல் வேண்டும். அது தான் இயற்கையை வெல்வதற்கான செயல். நீ கவலைப்படாதே. திமிருள்ளவனின் திமிர் நாள்ச் செல்ல அடங்கும். அதைப் பிறர் அடக்கத் தேவையில்லை. சிவனின் ஆதியாற்றல் அவற்றை அடக்கும்'' என்றார் சிவசுந்தரம்.

அளவீடு

**227. கண்ணனுங் காய்கதி ரோனும் உலகினை**
**உண்ணின் றளக்கின்ற தொன்றும் அறிகிலார்**
**விண்ணுறு வாரையும் வினையுறு வாரையும்**
**எண்ணுறும் முப்பதில் ஈர்ந்தொழிந் தாரே.**

மாதவனுக்குச் சிவசுந்தரம் சிவதத்துவத்தை எடுத்துக் கூறியபின்பும் அவன் அமைதியடையவில்லை என்பதைத் தெரிந்து கொண்ட சிவசுந்தரம் சொன்னார், ‘‘மகனே, ஆத்திரங் கொள்ளாதே. உலகில் நடப்பவற்றை அறியச் சூரியனை உலகெங்கும் உலாவச் செய்து காலை மதியம் மாலை என்ற மூன்று வேளைகளிலும் உலகில் நடப்பவற்றைச் சிவன் அறிந்து கொள்கிறார். அது போலக் கண்ணனை ஒவ்வொருவரின் உள்ளத்தில் அமர்த்தி அவர்கள் செய்வதை அறிந்து கொள்கிறார். ஒருவர் பதினாறு ஆண்டுகள் பிரம்மச்சாரியாக இருந்து கல்வி கற்றல் வேண்டும். அதன்பின் குடும்பத்தனாகி நாற்பத்தாறு ஆண்டுவரை குடும்பத்தனாக வாழவேண்டும். ஒருவனது வாழ்நாள் நூற்றியிருபது வருடங்களாகும். அறுபத்திரண்டு ஆண்டுகளின்பின் அவன் சந்நியாசம் கொள்ளுதல் வேண்டும். அறுபது ஆண்டுகளுக்குப்பின்

பொருளிலும் இன்பங்களிலும் பற்றுக் கொள்ளக் கூடாது. இறைவன் உலகையும் விண்ணுலகையும் மண்ணுலகத்தில் உள்ளவர்களையும் அளப்பிப்பதால் தான் பிறவிகள் வினைக்கேற்றவாறு ஏற்படுகின்றன. உலகில் சிலரிடம் பணம் சேர்வதும், சிலர் வாழ்நாள் முழுவதும் துன்பப்படுவதும் இவ் அளவீட்டினால் தான். அதனால் அமைதியாக இரு. எல்லாவற்றையும் சிவன் கண்டு கொள்வான்'' என்றார்.

கண்டும் புரியாதார்

**228. எய்திய நாளில் இளமை கழியாமை**
**எய்திய நாளில் இசையினால் ஏத்துமின்**
**எய்திய நாளில் எறிவ தறியாமல்**
**எய்திய நாளில் இருந்துகண் டேனே.**

பரமானந்தன் பெருங்குடிகாரன். சிவனை நிந்தனை செய்பவன். கோவிலில் பூசை நடைபெறும் வேளைகளில் அவன் கோவிலடியில் நிற்பான். அவனுக்கு வேண்டாதவர்கள் யாரும் வந்தால் அவர்களைத் திட்டித் தீர்ப்பான். அதனால் அவனுக்கு வேண்டாதவர்கள் கோவிலுக்கு வரப்பயப்படுவார்கள். அவன் விபத்துக்குள்ளாகி நடக்க முடியாது வீட்டில் தங்கியிருந்தான். அவனது மனைவி தனவந்தர்களின் வீடுகளில் கூலிக்கு வேலை செய்பவள். பரமானந்தன் ஒரு மாதகாலமாக வேலைக்குச் செல்லாததால் அவனது குடும்பம் பெருந்துன்பப்பட்டது. அனேகமான நாட்களில் பரமானந்தனின் மனைவி வேலைக்குச் செல்லமாட்டாள்.

சிவசுந்தரம் இரக்க சிந்தனையுள்ளவர். பெரும் சிவபக்தர். அவரது மனைவியும் நல்லவள். அதனால் பரமானந்தத்தின் மனைவிக்கு அடிக்கடி உதவிகள் செய்வாள். அன்று சிவசுந்தரம் உணவுப்பொருட்கள் சிலவற்றைக் கொண்டு பரமானந்தத்தின் வீட்டுக்குச் சென்றார். அவரை எதிர்பாராத பரமானந்தம் அதிர்ச்சியுடன் எழுந்தான், “ஐயா, என்னோடு சேர்ந்து திரியும் நண்பர்கள் கூட என்னை வந்து பார்க்கவில்லை. மிகவும் உயர்ந்தவரான நீங்கள் எனது குடும்பத்தினருக்கு எவ்வளவோ உதவிகள் செய்கிறீர்கள். அது போலக் கதிரேசன் ஐயாவும் அருளம்பலம் ஐயாவும் வேறு சில பெரியவர்களும் எனக்கு உதவி செய்கிறார்கள். அதனால் தான் எனது குடும்பம் உணவு உண்கிறது. பிள்ளைகள் படிக்கிறார்கள்” என்று அழுதான்.

“பரமு, இளமையாக இருக்கும் போது பயனுள்ளவர்களாக வாழவேண்டும். அத்துடன் இறையுணர்வுள்ளவர்களாகவும் வாழவேண்டும். தீயவர்கள் எப்பொழுதும் தமது நலத்தையே கருத்திற் கொள்வார்கள். அதனால் தான் அவர்கள் உன்னைப் பார்க்க வரவில்லை. நல்லவர்கள் ஒரு போதும் துன்பப்படமாட்டார்கள். அவர்களைத் துன்பப்பட இறைவன் விடமாட்டான். சிவநினைவுடன் வாழ்பவனைத் துன்பம் தீண்டமாட்டாது. உனக்கு உதவி செய்த எல்லோரும் சிவநினைவுடன் வாழ்பவர்கள். அதனால் அவர்களுக்குத் தேவைக்கதிகமான பொருளை இறைவன் கொடுக்கிறான். இறைவன் கொடுத்ததை அவர்கள் துன்பப்படுவோர்க்குக் கொடுக்கிறார்கள். நீ ஒரு நாளென்றாலும் சிவனை வணங்கினாயா..? சிவனை வணங்க வருவோரைக் கேலி செய்து மகிழ்கிறாய். இது மகா பாவம். இறைநினைவில்லாது தம் மனம் விரும்பியபடி வாழும் மனிதர்களைப் பார். அவர்களில் ஒருவராவது மகிழ்ச்சியாக வாழ்கிறாரா..?

இளமைக் காலத்தில் சிவநினைவுடன் உழைத்தல் வேண்டும். உழைத்த பணத்தின் ஒரு பங்கைத் தானதர்மம் செய்தல் வேண்டும். அப்படிச் செய்து வாழ்ந்தால் மகிழ்வுடன் குறைகளின்றி வாழலாம். இதை நீ உன் கண்களாற் காண்கிறாய். பிறகேன் அப்படி வாழ முயற்சிக்காமல் துன்பப்படுகிறாய்?'' என்று கேட்டார் சிவசுந்தரம்.

அப்போது தான் பரமானந்தத்திற்குத் தெளிவு பிறந்தது. ஊரில் உள்ளவர்களை நினைத்துப் பார்த்தான். சிவசுந்தரம் சொல்வது உண்மை என்று புரிந்தது, ‘‘இனிமேல் நானும் உங்களைப் போல வாழ விரும்புகிறேன்'' என்றான் பரமானந்தம்.

‘‘நல்லது. வாழ்ந்து பார். அதன் இன்பம் உனக்குத் தெரியவரும்'' என்றார் சிவசுந்தரம்.

## 5. உயிர் நிலையாமை

பழுத்த இலை

**229. தழைக்கின்ற செந்தளிர்த் தண்மலர்க் கொம்பில்**

**இழைக்கின்ற தெல்லாம் இறக்கின்ற கண்டும்**

**பிழைப்பின்றி எம்பெரு மானடி ஏத்தார்**

**அழைக்கின்ற போதறி யாரவர் தாமே.**

சிவகுருநாதன் பெரும் சிவபக்தர். அவர் தொழில்களைச் செய்யும் போதும் சிவநினைவுடையவராகவே இருப்பர். கண்கள் பார்க்கும். கரங்கள் தொழிலைச் செய்யும். மனம் சிவனை நினைத்துக் கொண்டிருக்கும். வாய் திருவைந்தெழுத்தை ஓசைப்படாது உச்சரிக்கும். அவருக்கு முப்பத்தைந்து வயது. மூன்று பிள்ளைகள். அதில் ஒன்று ஆண். மூத்த பெண் அகல்யாவுக்கு வயது பத்து. அவர் ஒரு விவசாயி.

அன்று இரவு வயலில் இருந்து வரும் போது அவரை நாகம் தீண்டிவிட்டது. ஊரவர்கள் அவரை வைத்தியசாலையில் அனுமதித்தனர். மனைவியும் பிள்ளைகளும் இனத்தவர்களும் வைத்தியசாலைக்கு வந்தனர். அவரது மனைவி கௌசல்யா விம்மி விம்மி அழுதாள்.

“கௌசி, நான் வணங்கும் சிவன் எனக்குத் தீங்கு செய்யமாட்டான். நாம் வளர்க்கும் மரங்களைப் பார். அவை செழிப்பாக வளர்ந்து எவ்வளவு அழகாகக் காட்சியளிக்கின்றன. சில மாதங்கள் செல்லச் செழிப்பான இலைகள் பழுத்து உதிர்ந்து விடுகின்றன. அது போன்றது தான் மனித வாழ்வு. எதைப் பற்றியும் கவலை கொள்ளாதே. சிவன் தான் படைத்த உயிர்கள் அனைத்தையும் காப்பாற்றுவான். அதில் ஐயமில்லை” என்று கூறிவிட்டு மயக்கமடைந்தார்.

அன்று தில்லையம்பலம் என்ற அந்த ஊரவன் விபத்துக்குள்ளாகி அதே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான். காயம் பெரிதல்ல

எனினும் தான் இறந்து விடுவனோ என்ற அச்சத்தில் சொன்னான், “எனது மகளுக்குத் திருமணமாகவில்லை. அதைவிட மூன்று பிள்ளைகள் வயது குறைந்தவர்கள். நான் உயிரோடு இருக்கும் போதே எனது உறவினர்கள் எம்மைக் கவனிப்பதில்லை. நான் இறந்தால் யார் கவனிப்பார்கள்?” என்று அழுதான்.

மூன்று தினங்கள் மயக்க நிலையில் இருந்த சிவகுருநாதன் நான்காம் நாள் கண்விழித்தார்;

“கௌசி, நான் மயக்கமாக இருந்த மூன்று நாட்களும் சிவனுடன் இருந்தேன். அவர் என்னைத் தேற்றி ஆறுதலளித்துத் தைரிய மூட்டினார். தற்செயலாக நான் இறந்தாலும் அவர் உங்களுக்குதவி செய்வார்” என்றார்.

“கடவுளை நம்பியவர்கள் எதற்கும் அஞ்சமாட்டார்கள். எல்லாம் இறைவனின் செயல் என்று நினைத்திருப்பர்” என்றார் வைத்தியர்.

ஐவர்

**230. ஐவர்க் கொருசெய் விளைந்து கிடந்தது**
**ஐவரும் அச்செய்யைக் காத்து வருவர்கள்**
**ஐவர்க்கு நாயகன் ஓலை வருதலால்**
**ஐவரும் அச்செய்யைக் காவல்விட் டாரே.**

சிவகுருநாதன் கண்விழித்து முன்னால் நின்ற தனது மனைவியான கௌசல்யாவைப் பார்த்தார். அவளது அழகிய முகம் வாடிவதங்கிக் கறுத்து வீங்கியிருந்தது.

“கௌசல்யா மூன்று தினங்களும் சாப்பிடவில்லை. பெரிதும் குழம்பிப் போனாள். நீ தப்பியது அவளின் பிரார்த்தனையால்” என்றார் சிவகுருநாதனின் தந்தை வேலாயுதபிள்ளை.

“அப்பா, நீங்கள் சொல்வது சரியல்ல. யாரின் பிராத்தனையோ வேண்டுதலோ காலனின் விடயத்தில் பயன் தராது. அவன் சிவனின் ஆணைப்படி நடப்பவன். தர்மம் தவறாதவன். ஐம்புலன்கள் தான் உடலைச் சுமப்பது. அந்த ஐம்புலன்களும் தமது விருப்பு வெறுப்புக்கேற்ப உடலுள்ளவர்களை ஆட்டிப் படைக்கும். உடலுக்குத் தலைமை வகிப்பது அவைதான். அவற்றில் ஒன்றினது செயற்பாடு அற்றுப்போனாலும் மனிதனுக்குப் பெருங்குறைகள் உண்டாகும். ஐம்புலன்களின் தலைவன் சிவன். சிவனின் ஆணைப்படி இயங்கும் ஐம்புலன்களின் செயற்பாடுகள் சிவனின் ஏவலாளான யமனின் ஓலையுடன் முற்றுப் பெறும். யமன் ஓலையை அனுப்பாவிட்டால் ஐம்புலன்கள் இயங்கிக் கொண்டே இருக்கும். வாழ்வின் இறுதி நாளைக் குறிப்பவன் சிவன். அதனால் இறுதி நாள் குறிக்கப்படாத எந்த உயிரையும் யமன் கவர மாட்டான். எனக்குச் சிவனால் இறுதி நாள் குறிக்கப்படவில்லை. அதனால் என்னைக் கவரயமன் வரவில்லை. இது தான் உண்மை” என்றார் சிவகுருநாதன்.

“உண்மை. சிவன் நாள் குறித்தால் குறி தவறாது. நாம் எமது மன ஆறுதலுக்காகப் பல சமாதானங்களைச் சொல்கிறோம்” என்றார் வேலாயுதபிள்ளை.

ஒன்றுள் இரண்டு

**231. மத்தளி ஒன்றுள தாளம்இ ரண்டுள**
**அத்துள்ளே வாழும் அரசரும் அஞ்சுள்ள**
**அத்துள்ளே வாழும் அரசனும் அங்குளன்**
**மத்தளி மண்ணாய் மயங்கிய வாறே.**

கௌசல்யா அழுதுகொண்டிருந்தாள், “மிகவும் கொடிய நச்சுப் பாம்பு சிவகுருநாதனைத் தீண்டியுள்ளது. உணவு எதுவும் கொடாதீர்கள். மிகவும் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்” என்று வைத்தியர் கூறியதால் துயரத்தைப் பொறுக்க முடியாது அவள் அழுது கொண்டிருந்தாள். சிவனின் மீது பற்றும் நம்பிக்கையும் வைத்திருந்த சிவகுருநாதனுக்கு அவளைப் பார்க்கக் கோபம் வந்தது.

“கௌசி, வீணாகத் துயரப்பட்டு அழாதே. எல்லாம் முடிந்த காரியம். எனக்குச் சிவன் ஓலை அனுப்பவில்லை. அதனால் என்னை

யமனால் கவர்ந்து செல்ல முடியாது. ஒவ்வொருவரினதும் உடல் ஒன்று. அதற்குள் உயிர்ப்பினைவிடுதலும், நிறுத்தலுமாகிய இரண்டு இடங்கள் உள்ளன. எனது உடலில் நிறுத்தலே வலுவடைந்துள்ளது. உடலை ஆளும் கருவிகள் பல உள்ளன. அவற்றிற்கெல்லாம் தலைவன் சிவன். அவனின்றி அணுக்கள் கூட அசையாது. ஒரு உடலில் இருந்து சிவன் நீங்கிச் சென்றால் தான் அவ்வுடலில் உள்ள உயிர் நீங்கும். நான் திடமாக இருக்கிறேன். என்னுடலையாளும் கருவிகளும் திடமாக இருக்கின்றன. இந்த நிலையில் என்னையாளும் சிவன் என்னுடலை விட்டு நீங்கிச் செல்லமாட்டான். இது உறுதி. என்னை நம்பு. தயவு செய்து துயரப்பட்டு அழாதே. உயிர் நீங்கிய பின் தான் உறவினர்கள் அழுதல் வேண்டும். ஒருவன் தன் நிலை இழந்தாலும் இயங்கிக் கொண்டிருப்பான். நினைவுகள் அவனது மனத்திரையில் ஓடும். நான் நினைவிழந்த போது சிவன் என்னுடன் கூட இருந்தான். அவன் விலகுவதாயின் அப்போதே விலகிச் சென்றிருப்பான். அழாதே'' என்றார் சிவகுருநாதன்.

‘‘சிவகுருநாதன் சொல்வது சரி. நீ வீட்டுக்குச் செல்'' என்றார் வேலாயுதபிள்ளை.

வேதாந்தக் கூத்தன்

**232. வேங்கட நாதனை வேதாந்தக் கூத்தனை**

**வேங்கடத் துள்ளே விளையாடு நந்தியை**

**வேங்கடம் என்றே விரகறி யாதவர்**

**தாங்கவல் லாருயிர் தாமறி யாரே.**

“கௌசி, இந்த உடல் என்றோ ஒரு நாள் எரிந்து அழிந்து மண்ணோடு மண்ணாகக் கலந்து விடும். உயிர் உடம்பில் இருக்கும் போது உயிரின் தலைவனான வேதாந்தக் கூத்தனை வணங்கி மெய்யுணர்வு பெறல் வேண்டும். அவன் ஊழிக்காலத்தில் மக்கள் தேவர், நரகர் எனப்படும் அனைவரையும் அழித்து விட்டு, அனைத்தும் ஒருங்கே வெந்தழியும் அறிவு வெளியாகிய சுடுகாட்டில் நடனமாடுவான். அத்தகைய தலைவனை நாள் தோறும் போற்றி வணங்குவோர்க்கு அழிவில்லை. அவர்கள் அழிவில்லாத சிவஞானப்பேறு பெற்று அழியாத வேதநாதனுடன் கூட இருப்பர்.

அவர் அடிக்கடி சிவனின் பெருமைகளைப் பற்றிக் கூறுவதாலும், அவர் கூறுபவை நடைபெறுவதாலும் கௌசல்யா மனம் மகிழ்ந்து சிரித்தாள். பூரண நிலவு போல அவளது முகம் பிரகாசித்தது. அதைக் கண்ட சிவகுருநாதன் மிக்க மகிழ்வுடன் சொன்னார், “கௌசி, உனக்கு என்னைவிடச் சிவனைப் பற்றித் தெரியும். அதனால் தான் கலங்கித் தவித்தபின் களங்கமில்லாது சிரிக்கிறாய். உலகில் உள்ளவர்களுக்கு எந்நேரமும் உதவி செய்பவன் சிவன். அவன் இளமையில் உடலை அழித்தாலும், அவ்வுடலின் சொந்தக்காரர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வான். உலகில் அனாதைகள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள். அவர்களெல்லோருக்கும் உணவும் தேவையான பொருட்களும் கொடுத்துக் கொண்டு தானே இருக்கிறான். எமது மடத்தில் எத்தனை பேர் தங்கியிருக்கிறார்கள். அவர்கள் குறைகள் இல்லாமல் தானே வாழ்கிறார்கள்” என்றார் சிவகுருநாதன்.

## அளப்பித்தல்

**233. சென்றுணர் வான்திசை பத்துந் திவாகரன்**

**அன்றுணர் வால்அளக் கின்ற தறிகிலர்**

**நின்றுண ரார்இந் நிலத்தின் மனிதர்கள்**

**பொன்றுணர் வாரிற் புணர்க்கின்ற மாயமே.**

சிவகுருநாதன் வைத்தியசாலையில் தங்கியிருந்த போது அவரது குடும்பத்தினரும் வைத்தியசாலையில் சிவகுருநாதனின் நினைவாக இருந்தனர். அதனால் திருடர்கள் அவரது வீட்டுக் கதவை உடைத்துப் பெறுமதியான பொருட்கள் சிலவற்றைத் திருடினர். சிவகுருநாதன் எல்லாம் சிவன் செயலென்று நினைத்தார். கௌசல்யா பொருள் போனமையால் தான் தனது கணவன் உயிர் பிழைத்தார் என்று நினைத்து ஆறுதலடைந்தாள்.

ஆறுமாதங்கள் கழிந்தன. அன்று காவல்துறை அதிகாரி சிவகுருநாதனின் வீட்டில் திருடப்பட்ட பெறுமதியான பொருட்களுடனும் அதைத் திருடியவர்களுடனும் வந்தார்.

“இவர்கள் திட்டமிட்டு ஆட்களில்லாத வீடுகளில் திருடுபவர்கள். இவர்களுக்கிடையில் பங்கு பிரிப்பதில் பிரச்சினை வந்தது. அதனால் இவர்கள் சண்டையிட்டுக் காவல்துறைக்கு முறையிட வந்த போது உங்கள் வீட்டில் திருடியதை அறிந்தோம். உங்கள் பொருட்கள் யாவும் சரியா என்று பாருங்கள்” என்றார் காவல்துறை அதிகாரி.

“சிவன் சூரியனைக் கொண்டு உலகினில் வாழும் உயிர்களது வாழ்நாளையும் அவர்கள் செய்யும் பாவபுண்ணியங்களையும் அளப்பிக்கிறான் என்று அறிவுள்ள மனிதர்களுக்குத் தெரிவதில்லை.

அதனால் தான் அவர்கள் பெருந்துன்பப்படுகிறார்கள்” என்றார் சிவகுருநாதன்.

நைந்தபட்டு

**234. மாறு திருத்தி வரம்பிட்ட பட்டிகை**
**பீறு மதனைப் பெரிதுணர்ந் தாரிலை**
**கூறுங் கருமயிர் வெண்மயி ராவது**
**ஈறும் பிறப்புமொ ராண்டெனுத் நீரே.**

சிவகுருநாதனின் தந்தை வேலாயுதபிள்ளை. அவரின் தந்தை கைலாயபிள்ளை. அவருக்குத் தொண்ணூறு வயது. உடல் தளர்ந்து தலைமயிர் நரைத்துக் கண்கள் மயங்கித் தடுமாற்றத்துடன் தனது இரண்டாவது மனைவிக்குப் பிறந்த பிள்ளையுடன் வாழ்கிறார். அவருக்கு ஐம்பது வயது நடக்கும் போது தனது மனைவியை விட்டு விட்டு இன்னொரு பெண்ணை மணந்தவர். அதன் பின் தொடர்புகளை அறுத்துக் கொண்டார். திடீரென்று அவருக்குத் தனது மூத்த தாரத்தின் மகனையும், பிள்ளைகளையும், பேரப்பிள்ளைகளையும் பார்க்க வேண்டும் என்ற ஆசை பிறந்தது. அதைச் சொல்லியனுப்பினார். வேலாயுதபிள்ளையும் அவரது பிள்ளைகளும் மருமக்களும் பேரப்பிள்ளைகளும் கைலாயபிள்ளை வாழும் வீட்டுக்குச் சென்றனர். வேலாயுதபிள்ளைக்கு அவரைப் பார்க்கச் செல்ல விருப்பமில்லை.

“அப்பா, தவறுகள் செய்தாலும் அவர் உங்களைப் பெற்றவர். ஒவ்வொருவரையும் சிவன் சூரியனைக் கொண்டு அளக்கிறான். அதனால் எவரின் வாழ்நாளும் எவரின்கைகளிலும் இல்லை. விலைமதிப்பற்ற பட்டுச்

சேலையும் நாளாக நாளாக இத்துக்கிழிந்துவிடும். அது போன்றது தான் உடலும். இதைப் பலர் உணராமையால் தான் துன்பப்படுகின்றனர். அவர் செய்தது தவறென்று இப்பொது உணர்கிறார். அவரது வாழ்நாளையும் அவர் செய்த பாவபுண்ணியங்களையும் சிவனறிந்து அதற்கேற்பப் பிறப்புக்களைக் கொடுப்பான். தவறு செய்பவர்களைத் தண்டிக்கும் உரிமை எமக்கில்லை. அதனால் செல்வோம்" என்றான் வேலாயுதபிள்ளையின் மகன் சிவகுருநாதன். அதன் பின்பு தான் வேலாயுதபிள்ளை தகப்பனைப் பார்க்கச் சென்றார்.

மிகவும் சிறிய காற்றோட்டமில்லாத அறைக்குள் கைலாயபிள்ளை படுத்திருந்தார். அவர் மகனைக் கண்டதும் எழுந்திருக்க முயற்சித்தார். முடியவில்லை. அவரது அழகிய திடகாத்திரமான உடல் காலங்கடந்த பட்டுச்சேலை கிழிந்து மங்கியிருப்பது போலிருந்தது. சுருள் சுருளான தலைமயிர் உதிர்ந்திருந்தது. தப்பிய மயிர்கள் வெண்மையாக இருந்தன. அவரால் பேசமுடியவில்லை. கண்களால் கண்ணீர் வழிந்தது. வேலாயுதபிள்ளையின் கையைப் பிடிக்க முயன்றார். முடியவில்லை. அதனால் அவரின் அருகில் அமர்ந்த வேலாயுதப்பிள்ளை அவரது கையைப் பிடித்தார்.

"இளமையில் இரத்தமிடுக்கால் இயற்கையை உணராதவர்கள் பிற்காலத்தில் இரத்தத் துடிப்புக் குறைந்ததும் உணர்வர்" என்று சிவகுருநாதன் நினைத்தார்.

**235. துடுப்பிடு பானைக்கும் ஒன்றே அரிசி**

**அடுப்பிடு மூன்றிற்கும் அஞ்செரி கொள்ளி**

**அடுத்தெரி யாமற் கொடுமின் அரிசி**

**விடுத்தன நாள்களும் மேற்சென் றனவே.**

கைலாயபிள்ளையின் மனைவி பூரணம். அவள் இளமையானவள். இருபது வயதில் அவருடன் கூடச்சென்றவள். அவள் சொன்னாள், "பிற்காலத்தில் அவர், தான் செய்த செயலுக்காக மிகவும் வருந்தினார். தான் உங்களைச் சந்தித்து மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று அடிக்கடி சொல்வார். தான் மன்னிப்புக் கேட்டாலும் நீங்கள் மன்னிக்க மாட்டீர்கள் என்றும் சொன்னார். உடலின் சக்திக்கு உணவு உண்பது போல மனதின் சக்திக்கு அமுத உணவு உண்ண வேண்டும் என்று சொல்வார். அமுத உணவைச் சமைக்க ஐம்புலன்களும் சுத்தமாக இருத்தல் வேண்டும் என்பார். உடலைப் பானையாகவும், உயிர்ப்பை அரிசியாகவும், இடகலை பின் கலையைத் துடுப்பாகவும், கொப்பூழை அடுப்பாகவும் சூரியனையும் சந்திரனையும் எரியும் தீயாகவும், உடலிலுள்ள ஐந்து காற்றுக்களையும் விறகாகவும் கொண்டு அமிழ்தைத் தயாரிக்க வேண்டும். பற்றுக்களற்றுப் புருவ நடுவின் கண் செலுத்தி இடையறாத பயிற்சியின் மூலம் அமிழ்தை உண்டாக்காதவனின் வாழ்நாள் வீண்நாளே என்றும் கவலைப்படுவார். தனது ஐம்புலன்களும் தீயநினைவுகளுடன் இருந்ததால் தனது வாழ்வு அழிந்து விட்டதென்றும் கவலைப்படுவார். அதனால் அவரை மன்னித்து விடுங்கள். அப்போது தான் அவரது ஆத்மா சாந்தியடையும்" என்றாள்.

முக்கண்ணன்

**236. இன்புறு வண்டிங் கினமலர் மேற்போய்**

**உண்பது வாச மது போல் உயிர்நிலை**

**இன்புற நாடி நினைக்கிலு மூன்றொளி**

**கண்புற நின்ற கருத்துள்நில் லானே.**

பூரணம் மிகுந்த கவலையுடன் சொன்னாள், "மகனே, நான் கல்வியறிவில்லாதவள். பரமஏழை. உங்கள் வீட்டில் வேலை செய்யும் போது உங்கள் தந்தை எனக்குப் பொருட்களை அள்ளித் தருவார். அவர் தவறான நோக்குடன் தருவதை உணராத நான் பொருள் பெறும் ஆசையால் அவருடன் கூடியிருந்தேன். அதனால் கர்ப்பமானேன். பின் உங்கள் வீட்டார் தமக்கு அவமானமென்று உங்கள் தந்தையை விலக்கியமையால் நான் அவருடன் கூடவாழ்ந்தேன். இது மாபெரும் தவறுதான். அதை அப்போது நான் உணரவில்லை. எனது கணவர் பெரும் சிவபக்தர். அவர் காலப்போக்கில் தான் செய்தது மகாதவறு என்று உணர்ந்து கொண்டார். வழிந்த நீர் குடத்துள்ச் செல்லாது என்பது போலத் தவறு செய்து அதன் பயனாகக் குழந்தைகளைப் பெற்ற அவரால் அதை உணரமுடிந்ததே தவிரத் திருந்த முடியவில்லை" என்று அழுதாள். அதைக் கேட்ட பின்பு வேலாயுதபிள்ளையினதும் சிவகுருநாதனதும் மனம் இரங்கியது.

பூரணம் தொடர்ந்து சொன்னாள், "பூவின் நறுமணத்தால் கவரப்படும் வண்டு பூவினுள்ச் சென்று சுவை மிகுந்த தேனைச் சுவைக்கும். அது போலச் சூரியன், சந்திரன், தீ என்னும் மூன்று ஒளிப் பொருட்களைக் கண்ணாகவுள்ள சிவபெருமான் ஆருயிர்களின் மனம் என்ற பூவிற்குள் திருவருள் என்ற பேரின்பக் கடலுடன் வீற்றிருக்கிறார். அதை நுகர்ந்து

அறிந்து பேரின்பத்தைப் பெறாது பூக்குள் நுளையும் வண்டு பூவைச் சிதைப்பதைப் போல மனதில் இருக்கும் சிவனை உணராது பாவம் செய்து விட்டேன் என்பார். அவருடைய கடைசி ஆசை உங்கள் எல்லோரிடமும் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்பதே. வேலாயுதபிள்ளை தன்னைத் தன் தகப்பனாக ஏற்றுக் கொள்ளி வைக்க வேண்டும் என்பதே. அது நடவாது. எனக்குப் பாவமன்னிப்புக் கிடையாது" என்று தினமும் அழுதவர். பாவம் அவர். என்னால் தான் பாவம் செய்தார். அவரைத் தயவு செய்து மன்னித்து அவரது ஆசையை நிறைவேற்றி, அவரது ஆன்மா சாந்தியடைய வழி செய்யுங்கள்" என்று வேலாயுதபிள்ளையின் கால்களில் விழுந்தாள் பூரணம். அதை அவர் எதிர்பாராததால் திகைத்துவிட்டார்.

தமிழாகமவழி

**237. ஆம்விதி நாடி அறஞ்செய்மின் அந்நிலம்**
**போம்விதி நாடிப் புனிதனைப் போற்றுமின்**
**நாம்விதி வேண்டும் தென்சொலின் மானிடர்**
**ஆம்விதி பெற்ற அருமைவல் லார்க்கே.**

தனது தகப்பன் தான் செய்த தவறை உணர்ந்து வருந்தியதாகப் பூரணம் சொல்லக் கேட்ட வேலாயுதபிள்ளை கவலைப்பட்டார். அவர், தான் செய்தவை எல்லாம் பிழையென்று உணர்ந்து பிள்ளைகளைச் சமாதானம் செய்யப் பலரை அனுப்பிய போது தான் அவர்களை மதியாது கொடுஞ் சொற்பேசி அனுப்பியதை நினைத்துப் பார்த்தார். ஒரு நாள் பெரும் சிவபக்தரும் சமூகத்

தொண்டருமான கதிரேசன் வந்து சொன்னார், “வேலாயுதம், அசுரர்கள் செய்த கொடுமைகளையெல்லாம் சிவன் மன்னித்துத் தனது அடியவர்களாக ஏற்றருளியவர். அசுரர்கள் செய்த கொடுமைகள் உனக்குத் தெரியும். அதைவிட உனது தந்தை கொடுமை செய்யவில்லை. நீங்கள் அவரை ஏற்று உங்கள் குடும்பத்தவனாக்க வேண்டாம். மன்னியுங்கள். அவர் சுயநினைவின்றிப் படுத்திருக்கிறார். இன்றோ நாளையோ அவரின் உயிர் பிரிந்துவிடும். அவர் நினைவுடன் இருக்கும் போது ஒரு முறை சென்று பாருங்கள். அதனால் அந்த மனிதனுக்கு நிம்மதியுண்டாகும். நிம்மதியாக அவரின் உயிர் செல்லட்டும். இதைச் சிவனின் வாக்காகச் சொல்கிறேன்” என்றார். அதன் பின் பல நாட்கள் கழித்துத் தான் அவர் வந்திருந்தார்.

“எல்லாம் விதிப்படி தான் நடக்கும். பணமுள்ளவன் பிச்சைக்காரனாகிறான். பிச்சைக்காரன் பணக்காரனாகிறான். நீ நாயன்மார்களின் வரலாற்றைப் படிக்கவில்லையா? சுந்தரமூர்த்தி நாயனாருக்கு இரு மனைவிகள். இருவரையும் சேர்த்து வைத்தது சிவபெருமான். மனிதர்களுக்கு ஏழு வகையான பிறப்புக்கள் உண்டு. அந்த ஏழிலும் மனிதப் பிறப்புத்தான் சிறந்தது; உயர்ந்தது. சிவனை உள்ளத்தில் குடியமர்த்திய நீ, இல்வாழ்வு பற்றி அறநூல்கள் கூறுபவற்றை அறியவில்லையா? தகப்பனுக்குக் கொள்ளி வைக்க வேண்டியது மூத்த மகனின் கடன். அது விதி; ஆகமவிதி. இதிலிருந்து நீ தவறக்கூடாது. நீவைக்காவிட்டால் இன்னொருவன் வைப்பர். அதனால் அந்த ஆன்மா இறந்தபின்பும் துன்பப்பட்டு நிம்மதியில்லாமல் அலையும். நான் தவறை ஏற்கச் சொல்லவில்லை. நீ தவறு செய்யாதே என்று சொல்கிறேன்” கதிரேசனின் குரல் ஓங்கி ஒலித்தது.

நாற்பது வருடங்களின் பின்அறநூல்கள் கூறியவற்றை எண்ணிப் பார்த்த வேலாயுதபிள்ளை, ‘‘நான் அப்பாவுக்குக் கொள்ளி வைக்கிறேன்’’ என்றார். பூரணம் திகைத்துப்போனாள்.

சிவநீதி

**238. அவ்வியம் பேசி அறங்கெட நில்லன்மின்**

**வெவ்விய னாகிப் பிறர்பொருள் வவ்வன்மின்**

**செவ்விய னாகிச் சிறந்து ண்ணும் போதொரு**

**தவ்வி கொடுமின் தலைப்பட்ட போதே.**

‘‘மிகவும் மகிழ்ச்சி மகனே, இதை உன் தந்தை கேட்டிருந்தால் மகிழ்ந்திருப்பார். அவர் உணர்வோடு இருக்கும் போது இவ்வினிய வார்த்தையைக் கூறாமைக்கு விதிதான் காரணம். எப்படியோ அவரின் ஆசை நிறைவேறிவிட்டது” என்று மகிழ்ந்தாள் பூரணம்.

சிவகுருநாதன் அதிர்ச்சியுடன் தன் தந்தையைப் பார்த்தான். கைலாயபிள்ளை மிகுந்த வறுமையுற்று மடத்தில் உணவுக்காகக் காத்திருக்கும் போது அவனது நண்பர்கள் அவருக்கு உதவி செய்யுமாறு கூறுவர். அதை வேலாயுதபிள்ளை தகப்பனுக்குச் சொன்ன போது அவர் பிரம்பால் அவரைத் தண்டித்தார். அதை நினைத்துச் சிவகுருநாதன் கதைப்பதில்லை. மனதுள் வேதனைப்படுவார். இறுதி நேரத்திலாவது அவர் மனம் மாறியதைக் கண்டு மகிழ்ந்தார்.

‘‘அப்பா, பூரணத்துடன் சென்ற போது எதையும் எடுத்துச் செல்லவில்லை. அவர் பெரும் நிலச்சுவாந்தர். தனவந்தன். வசதியாக

வாழ்ந்த அவர் பெருங்கஷ்டப்பட்டார். அதைக் கண்டும் நான் இரங்கவில்லை. சிவாகமம் பிறரை வஞ்சிக்காதே; தீய சொற்களைப் பேசாதே; அறந்தவறாதே; பிறரின் சொத்தை நடுநிலையின்றிக் கவராதே என்று சொல்லியுள்ளது. இத்தனையும் நான் செய்து விட்டேன். அப்பா தேடிய சொத்துக்கள் ஏராளம். இருப்பினும் அவர் எதையும் கேட்கவில்லை. வறுமையால் துன்பப்பட்டார். நான் அவர் தேடிய சொத்தில் ஒரு சிறு பகுதியையாவது கொடுத்திருந்தால் அவர் மூன்று நேரமும் வயிறாற உண்டிருப்பார். நற்பண்புகள் உடையவர்கள் சிறப்படைவார்கள். சிவனும் மனமுவந்து உதவுவான் என்று தமிழாகமம் கூறுகிறது. அப்பா இருக்கும் போது விளைந்தது போல இப்போ வயல் விளைவதில்லை. வருமானம் குறைந்து கொண்டே செல்கிறது. அவரின் சொத்தைப் பிரித்து அவரின் இளையதாரப் பிள்ளைகளுக்குக் கொடுக்கப் போகிறேன்'' என்றார் வேலாயுதபிள்ளை.

''சிவனே'' என்றாள் பூரணம்.

''இப்போதாவது உண்மையை உணர்ந்தீர்கள். உங்கள் தகப்பன் தவறு செய்திருக்கலாம். ஆனால் சிவநீதியை மதிக்காது அவரின் சொத்தை நாம் அனுபவித்த பாவம் எம்மைச் சும்மாய்விடாது'' என்றார் சிவகுருநாதன்.

## 6. கொல்லாமை

அகப்பூக்கள்

**239. பற்றாய நற்குரு பூசைக்கும் பன்மலர்**

**மற்றோர் அணுக்களைக் கொல்லாமை**

**ஒண்மலர்**

**நற்றார் நடுக்கற்ற தீபமுஞ் சித்தமும்**

**உற்றாரும் ஆவி அமர்ந்திடம் உச்சியே.**

அன்று வெள்ளிக்கிழமை. இரவுப் பூசைக்காகச் சித்திரவேலன் பல வகையான பூக்களைப் பறித்துக் கூடையில் போட்டு எடுத்துக் கொண்டு வந்து தனது மனைவி காயத்திரியிடம் கொடுத்தான். அவள் விதம் விதமாக மாலை கட்டுவாள். ஊரில் அவள் கட்டும் மாலை தான் அழகானது. அதனால் குருக்கள் அவளது மாலையையே சிவனுக்குச் சூட்டுவார். அதை மக்கள் அனைவரும் கண்டு மகிழ்வர்.

சித்திரவேலன் பெரும் சிவபக்தன் போல நடிப்பவன். சிவன் கோவிலில் இருக்கும் நாகலிங்கம் சுவாமியாரைத் தனது குருவாக ஏற்றுத் தினமும் அவரது பாதங்களில் மலர்களை வைத்து வணங்குவான். பின் கள்ளுக் குடிப்பான், களவெடுப்பான், மக்களுடன் பிரச்சினைப்படுவான், பொய் பேசுவான்.

அன்று சனிக்கிழமை. சித்திரவேலன் மலர்களைக் கொண்டு வந்து நாகலிங்கம் சுவாமியாரின் பாதங்களில் வைத்து வணங்கினான். அப்போது நாகலிங்கம் சுவாமியார் சொன்னார், "இனிமேல் நீ என்னை வணங்கக் கூடாது. சிவனுக்கும் மாலை கட்டிப்போடக் கூடாது"

"ஏன் சுவாமி?" பதைபதைத்தான் சித்திரவேலன். "மகனே நீ பக்தன். சிவனுக்குப் பூசைக்கேற்ற மலர்களைப் பறித்துக் கொடுக்கிறாய். அதைச் சுத்தமாகச் செய்தல் வேண்டும். குளித்து நீறணிவதால் உடல் சுத்தமாகும். மனம் சுத்தமாக வேண்டுமானால் தீயவற்றை எண்ணக்

கூடாது. உயிர்களைக் கொல்லக் கூடாது. ஐம்பொறிகளை அடக்காது விடலாகாது. கோபப்படக் கூடாது; மற்றவர்களைக் கேலி செய்யக் கூடாது; அறிவைப் பாவித்தல் வேண்டும்; தவம் செய்பவர்களைப் போல இருத்தல் வேண்டும். அன்புடன் பழகுதல் வேண்டும். இதனால் தான் மனம் சுத்தமாகும். மனம் சுத்தமில்லாவிட்டால் பூசைகளாலும் தொண்டுகளாலும் பயன்வராது. பாவம் தான் வரும். கொல்லாமை, ஐம்பொறிகளையும் அடக்கல், பொறுமை, இரக்கம், அறிவு, மெய், தவம், அன்பு என்ற எட்டும் சிவனின் எட்டுக் குணங்களும் எம்மீது பதியச்செய்யும் காரணிகளாகும். இதை அப்பர் சுவாமிகள், 'எட்டு நாண் மலர் கொண்டவன் சேவடி மட்டலரிடு வார்வினை மாயுமால' எனப்பாடியுள்ளார். புறத்தே காணப்படும் பூக்கள் பாற்கலனை ஒக்கும். அகத்தே காணப்படும் எட்டும் பாலை ஒக்கும். அகத்தேயுண்டாகும் ஒழுக்கம் திருவடியுணர்வையும், அத்திருவடியை அடையும் தன்மையையும் கொடுக்கும். ஆகையால் மனச்சுத்தமில்லாது பூக்களை வைத்து வணங்குதல் பாவத்தையே உண்டாக்கும்" என்றார் நாகலிங்க சுவாமியார்.

## கொடியவர்கள்

**240. கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை**
**வல்லடிக் காரர் வலிக்கயிற்றாற் கட்டிச்**
**செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை**
**நில்லிடும் என்று நிறுத்துவர் தாமே.**

சித்திரவேலனது நண்பன் கணேசன். இருவருமாகச் சேர்ந்து மிருகங்களையும் பறவைகளையும் கண்ணி வைத்துப் பிடிப்பார்கள்.

கல்லால் எறிந்து பிடிப்பார்கள்; கவணால் எய்து பிடிப்பார்கள். உயிரோடு பிடிக்கப்பட்ட பறவைகளையும் மிருகங்களையும் கொன்றபின் உரித்து உண்பார்கள். சில சமயங்களில் முயல், பன்றி போன்ற பெரிய பிராணிகள் அகப்பட்டால் அதை உயிருடன் விற்பனை செய்வார்கள். அதை வாங்குபவன் கொன்று உரித்துத் தரும்படி கேட்டால் அதைக் கொன்று உரித்துக் கொடுப்பார்கள்.

சிவன் கோவிலுக்கு முன்னால் தோப்பாக மரங்கள் வளர்த்து நின்றன. அங்கு பல வகையான பறவைகளும் பிராணிகளும் வாழ்ந்து வந்தன. பக்தர்கள் அங்கு வாழும் உயிரினங்களுக்கு வீட்டில் இருந்து தானியங்களைக் கொண்டு வந்து கொடுப்பார்கள். அதனால் அங்கு வாழும் உயிரினங்கள் மக்களுடன் பயமின்றிப் பழகி வந்தன. அந்தத் தோப்புக்குள் வாழும் உயிரினங்களைப் பிடிக்கக் கூடாது என்று நாகலிங்கம் சுவாமியார் கட்டளையிட்டிருந்தார். அதனால் சித்திரவேலன் அத்தோப்புக்குள்ச் செல்வதில்லை. அன்று சித்திரவேலன் நன்றாகக் குடித்து விட்டு அரிசியை எடுத்துக் கொண்டு தோப்பின் பிற்பக்கமாக வந்து அரிசியை நிலத்தில் தூவினான். முயல்கள் இரண்டு ஓடிவந்து அரிசியை உண்டன. உடனே சித்திரவேலன் இரண்டையும் பிடித்துக் கழுத்தை நெரித்துக் கொன்றான். பின் ஒன்றை விற்றுவிட்டு மற்றதைக் காட்டில் பிடித்த முயலென்று வேலைக்காரியிடம் கொடுத்தான்.

மறுநாள் அங்கு வந்த சிறுவர்கள் இரண்டு முயல்களைக் காணாது வருத்தப்பட்டு நாகலிங்கம் சுவாமியாரிடம் சென்று கூறினர். நாகலிங்கம் சுவாமியார் சித்திரவேலனையும் கணேசனையும் அழைத்து விசாரித்தார். இருவரும் தாம் அதைப் பிடிக்கவில்லை என்று சத்தியம் செய்தனர். ஆனால் வேலக்காரி தான் சித்திரவேலன் கொண்டு வந்த முயலைக் கறி

சமைத்துக் கொடுத்ததாகச் சொன்னாள். அதனால் சுவாமியார் சித்திரவேலனை அழைத்துக் கேட்ட போது அவன் மீண்டும் மறுத்துச் சத்தியம் செய்தான்.

“நீ கோவில் தோப்பில் நின்ற முயல்களைப் பிடிக்காவிட்டாலும் வேறு எங்கோ வாழ்ந்த ஒரு முயலைப் பொறி வைத்தோ, அல்லது எறிந்தோ பிடித்துக் கொன்று தின்றுள்ளாய். இது மிகக் கொடிய பாவம். மிருகங்களை இரக்கமில்லாது கொடுமைப்படுத்திக் கொல்பவர்களை இயமனின் கொடிய தூதுவர்கள் கொடுமைப்படுத்திக் கொன்று கொடிய கயிற்றால் கட்டி நரகத்தில் தள்ளுவார்கள். எத்தனை பிறப்புக்கள் எடுத்தாலும் துன்பப்பட்டுத் தான் இறப்பர். பின்பு துன்பமான நரகத்தில் சித்திரவதைப்படுவர். ஊரில் பார். தானதர்மம் செய்தோர் பிற்காலத்தில் மகிழ்வுடன் பிள்ளைகள் உற்றார் உறவினருடன் மகிழ்வாக வாழ்கின்றனர். கொடுமைகள் புரிந்தோர் கொடிய நோய்களுக்குள்ளாகிக் கவனிப்பாரின்றித் துன்பப்படுகின்றனர். இவற்றைக் கண்டும் உன்போன்றவர்கள் திருந்தவில்லை. தோப்பில் வாழும் பிராணிகள் சிவனின் அடியவர்களின் செல்லப்பிள்ளைகள். அதைப் பிடித்துக் கொல்பவர்கள் ஒரு போதும் இன்பமாக வாழமாட்டார்கள்” என்றார் சுவாமியார்.

மகாபாவங்கள்

**241. கொலையே களவுட் காமம்பொய் கூறல்**
**மலைவான பாதக மாம்அவை நீக்கித்**
**தலையாஞ் சிவனடி சார்ந்தின்பஞ்**
**சார்ந்தோர்க்கு**

**இலையாம் இவைஞானா னந்தத் திருத்தலே.**

“நீ பல முறை சத்தியம் செய்துள்ளாய். இருப்பினும் அச்சத்தியத்திற்குச் சார்பாக வாழ்ந்ததில்லை. இப்போதும் இரண்டு முறை சத்தியம் செய்துள்ளாய். அது பொய் என்று எல்லோருக்கும் தெரியும். ஏனென்றால் தோப்பிலுள்ள உயிரினங்களை இவ்வூரவர்கள் தம்பிள்ளைகளைப் போலவே நேசிக்கின்றனர். இரு முயல்களையும் காணாததால் துன்பப்படுவோர் பலர். பிள்ளைகள் பலர் உணவுண்ணாது இருக்கிறார்கள். அதனால் வரும் பாவம் இரட்டிப்பாகும். கொலை செய்ய அஞ்சாதவன் கள்ளுண்பான். பின் களவெடுப்பான். பிறர் மனைவியை இச்சிப்பான். நீ மறைத்தாலும் என்னை நம்பிய பலர் தமக்கேற்பட்ட துன்பதுயரங்களை எனக்குக்கூறி ஆறுதல் அடைகின்றனர். வீட்டில் அழகான மனைவி இருக்கப் பிறபெண்களை இச்சிக்கிறாய். இது கொடிய பாவம். இதற்கான தண்டனை மிகமிகக் கொடியது. யமதூதுவர்கள் உன்னைக் கட்டி வைத்துச் சித்திரவதை செய்வார்கள். முற்பிறப்பின் தவப்பயனாக உன்னிடம் பணம் பொருள் சேர்ந்துள்ளது. அதை அறவழியில் செலவு செய்து அறவனாக வாழ்ந்தாயேயானால் எடுக்கும் பிறப்புக்கள் தோறும் இன்பமுள்ளவனாக வாழ்ந்து சிவனடியைச் சேர்வாய். பஞ்சமாபாதகங்களைச் செய்வதை விட்டுவிட்டு அன்பு, அடக்கம், ஒப்புரவு, இரக்கம், உண்மை பேசுதல் என்பவற்றைக் கைக்கொள். அதனால் பிறந்த பலனை அடைவாய்” என்றார் நாகலிங்கம் சுவாமியார்.

## 7. புலால் மறுத்தல்

புலையர்கள்

**242. பொல்லாப் புலாலை நுகரும் புலையரை**

**எல்லாருங் காண இயமன்றன் தூதுவர்**

**செல்லாகப் பற்றிக் தீவாய் நரகத்தில்**

**மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே.**

“புலால் என்பது புண். எம்மோடு அன்பு வைத்துப் பழகிய பிள்ளையின் தசை. அந்த முயல்கள் தமக்கு அன்புடன் உணவு தருகிறார்கள் என்று நினைத்து மகிழ்வுடன் ஓடிவர, அதைப்பிடித்துக் கழுத்தை அறுத்து உண்பது எவ்வளவு பாவம். இதை ஆறறிவு படைத்த மனிதன் செய்யலாமா? இப்படியான புலையரை யமதூதுவர்கள் கதறக் கதறக் கலைத்துப் பிடித்து ஈவிரக்கம் காட்டாது சித்திரவதை செய்வார்கள். இதைத் தவிர்க்க முடியாது. உயிரைக் கொன்று தின்னாதவர்களை யமதூதுவர்கள் அன்புடன் அரவணைத்து அழைத்துச் சென்று சிவனிடம் ஒப்படைப்பார்கள். அவர்கள் சிவனோடு கலந்து சிவமயமாகிப் பேரின்பத்தை அனுபவிப்பார்கள். உனக்கு இப்போதும் காலங்கடந்துவிடவில்லை. இனிமேலாவது பஞ்சமா பாவங்களைச் செய்யாது வாழ்” என்றார் நாகலிங்கம் சுவாமியார்.

பன்றிப் பிறப்பு

**243. கொன்றி லாரைக் கொலச்சொலிக் கூறினார்**

**தின்றி லாரைத் தினச்சொலித் தெண்டித்தார்**

**பன்றி யாப்படி யிற்பிறந் தேழ்நரகு**

**ஒன்று வார்அரன் ஆணையி துண்மையே.**

“சித்திரவேலா, உனது மனைவியின் தந்தையார் நேற்று என்னை வந்து சந்தித்தார். நீ உனது அயல் வீட்டுக் காரனைக் கோழியை வெட்டிச் சுத்தம் செய்து கொடுக்கச் சொன்னாயாம். சிலர் தாம் உண்பதற்காகக்கூட மிருகங்களை வெட்டமாட்டார்கள். உனது பக்கத்து வீட்டுக்காரன் உன்னிடம் வேலை செய்கிறான் என்பதற்காக அவனைக் கொண்டு பஞ்சமாபாதங்களில் ஒன்றான கொலையைச் செய்விக்காதே. அது மகா பாவம். அத்துடன் அவன் மாமிசம் உண்ணாதவன். இருந்தும் நீ அவனைக் கொண்டு சமைப்பிக்கிறாய். ஏழ்மைநிலையால் அவன் அதைச் செய்கிறான். உனது மனைவி சிவபக்தை. அவள் நீ மாமிசம் உண்பதை அறிந்து உன்னை விவாகரத்துச் செய்யப் போகிறேன் என்கிறாள். சிவப்பாவம் செய்வதை விடக் கணவனை விட்டுப் பிரிவது மேலானது என்று உனது மாமனார் நேற்றுச் சொன்னார். நீ மது அருந்திவிட்டு உனது மனைவியைப் புலால் உண்ணும் படிவற்புறுத்துவதாகவும் சொன்னார். அவளைப் புலால் உண்ணப்பண்ணினால் அவள் புலாலைச் சமைத்துத் தருவாள் என்று எண்ணுகிறாய். உனது உந்தப் பாதகமான நினைப்பு ஒரு போதும் சரிவராது. மிருகங்களைக் கொல்லாதவர்களைக் கொல்லச் சொல்வதும், புலால் உண்ணாதவர்களை உண்ணச் சொல்வதும் பெரும் பாவம். அப்படியானவர்கள் பன்றியாகப் பிறந்து சாக்கடையில் குளிப்பர். அத்துடன் அவர் எடுக்கும் ஏழேழு பிறவிகளிலும் நரகலோகத்திலேயே இருந்து பெருந்துன்பங்களை அனுபவிப்பர். அதனால் நீ அந்த இரண்டு செயல்களையும் விட்டு விடு. விடாவிட்டால் உனது மனைவி உன்னை விட்டுச் சென்றுவிடுவாள். அவள் சென்றால் அதன் பின் நிரந்தரமாக நரகத்தில் வீழ்ந்து விடுவாய்” என்றார் நாகலிங்கம் சுவாமியார்.

## 8. பிறன்மனை நயவாமை

தான் தேடும் ஆபத்து

**244. ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே**

**காத்த மனையாளைக் காமுறுங் காளையர்**

**காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்**

**ஈச்சம் பழத்துக் கிடருற்ற வாறே.**

சித்திரவேலனின் மனைவி காயத்திரி நல்ல அழகி. கணவனைத் தெய்வமாக மதிப்பவள். அவன் எந்த நிலையில் வந்தாலும் அவனது மனமறிந்து அவனைத்திருப்திப்படுத்துவாள். தான் அவனது காமஉணர்வைத் தீர்க்காவிட்டால் இயல்பாகவே கெட்டவனான அவன் மோசமாகக் கெட்டு விடுவான் என்பதற்காக அவன் விரும்பும் போதெல்லாம் மறுக்காமல் மகிழ்வுடன் சேர்ந்திருப்பாள்.

சித்திரவேலனின் வேலைக்காரன் மகாதேவன். அவனது மனைவி அகல்யா. இருபது வயது நிரம்பிய பேரழகி. அவளது அழகில் மோகங் கொண்ட சித்திரவேலன் தருணம் வரும் போது அவளை மடக்கிவிடவேண்டுமென்று நினைத்தான். அதற்காக அவளுடன் திட்டமிட்டுப் பழகினான். சித்திரவேலனைப் பற்றி நன்கு தெரிந்த அகல்யா அவனோடு பழகுவதைத் தவிர்த்து வந்தாள். அப்படியிருந்தும் அவன் நெருக்கமாகப் பழக எத்தணித்தான்.

அன்று காயத்திரி வெளியே சென்று விட்டாள். அகல்யா சமையலறையில் சமைத்துக் கொண்டு நின்றாள். அங்கு சென்ற

சித்திரவேலன் அகல்யாவை நெருங்கி வந்து அவளை அணைத்தான். அகல்யாவின் உடல் தீப்பற்றி எரிந்தது. அவள் சமையல் அறையில் இருந்த கத்தியை எடுத்து அவனது கையை வெட்டினாள். அதனால் பெருங்காயம் ஏற்பட்டது. சித்திரவேலன் வலியைத் தாங்கமுடியாது பலமாக அலறினான். அவனது அலறல் சத்தம் கேட்டு ஓடிவந்த வேலையாட்கள் அவனை வைத்தியசாலையில் சேர்த்தனர்.

ஒரு மாதம் வரை வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெற்ற சித்திரவேலன் அன்று வீட்டுக்கு வந்தான். அகல்யா அதன் பின் வேலைக்கு வரவில்லை. காயத்திரியின் வற்புறுத்தலுக்காக அன்று வந்தாள்.

“ஏதோ பெரிய காரியம் செய்ததாக நினைக்காதே. பழிவாங்குவேன்” என்றான் சித்திரவேலன்.

“இவ்வுலக வாழ்க்கையும், வானுலக வாழ்க்கையும் இன்பமாக அமைவதற்காக ஒருவனுக்கு ஒருத்தியாய் வாழ்வது தான் இல்வாழ்க்கை. பெரியோரால் நிட்சயிக்கப்பட்டுச் சிவனைச் சாட்சியாக வைத்து அவனருளால் மனம் பேதலியாது உள்ளதைக் கொண்டு வாழ்வது தான் ஆத்ம மனையாளின் கடமை. உனக்கு அழகான மனைவி உண்டு. அவளோடு சிவநினைப்புடன் வாழ். உனது மனைவி உள்ளத்தால் கற்பு நெறி காத்து வாழும் உத்தமி. அவளுக்குத் துரோகம் செய்யாதே. செய்தால் பழியும் பாவமும் உன்னைத் தொடரும். ஏழேழு ஜென்மங்களும் நரகவாழ்வு கிடைக்கும். அதைவிட அச்சமும் பயமும் எந்நேரமும் உள்ளத்தில் இருக்கும். இப்போது எனது மானங்கருதி உண்மையை நான் சொல்லவில்லை. இனிமேல் நீ தவறாக நடக்க

முற்பட்டால் நான் கொலையும் செய்யத் தயங்கமாட்டேன்'' என்றாள் அகல்யா.

அவளது நிலையைக் கண்ட சித்திரவேலன் பயந்து விட்டான்; ''முன்பு அவள் வெட்டியதால் கைநரம்புகள் துண்டிக்கப்பட்டன. அதனால் பெரும் வேதனையும் பொருட்ச் செலவும் ஏற்பட்டது. அத்துடன் அக்கை முன்பு போல இயங்குவதும் இல்லை. அவளின் நிலையைப் பார்த்தால் அவள் சொல்வது போலச் செய்து விடுவாள்'' என்று பயந்தான் சித்திரவேலன்.

தேமாங்கனி

**245. திருத்தி வளர்த்ததோர் தேமாங் கனியை**
**அருத்தமென் றெண்ணி அறையிற் புதைத்துப்**
**பொருத்தமி லாத புளிமாங்கொம் பேறிக்**
**கருத்தறி யாதவர் காலற்ற வாறே.**

கோபத்துடன் அகல்யா சொன்னாள், ''உனது தந்தையாரின் விருப்பத்திற்கேற்ப எனது தாயாரும் மூத்த சகோதரியும் உங்கள் வீட்டில் வேலை செய்தனர். உங்கள் தந்தை சிவனைப் போலப் பற்றற்றவர். அவர்கள் வேலையாட்களாக இருந்த போதும் ஏறிட்டு நோக்காதவர். அவர்களுக்கு ஏதாவது உதவி செய்வதானால் அவர் உனது தாயாரைக் கொண்டே செய்விப்பார். அவர் பெரும் தனவந்தர் மட்டுமல்ல ஊருக்கு அள்ளிக் கொடுத்து வாழ்ந்தவர். அதனால் அவர் பெறுதற்கரிய பேறுகளையெல்லாம் பெற்றார். அதையருகில் இருந்து பார்த்த நீ ஏன் இவ்வாறு நடக்கிறாய்? பல முறை என்னுடன் காமஉணர்வுடன் கதைத்துள்ளாய். எனது உடலைத் தீண்டியுள்ளாய். மதிப்பிற்காகப்

பொறுத்தேன். புத்திமதிகளும் சொன்னேன். இவற்றைக் கேட்காமையால் தான் தண்டித்தேன். தேமாங்கனியைப் போல என்றும் இன்பத்தை அள்ளித்தரும் உனது மனைவிக்குத் துரோகம் செய்ய உனக்கு எப்படி மனம் வந்தது? இனிய கனியை விட்டு விட்டுப் புளிப்பான புளியம் பழத்திற்கு ஆசைப்பட்டுப் புளியம் மரமேறி விழுந்து முறிந்துள்ளாய். இனியாவது திருந்திச் சிவஉணர்வுடன் தேமாங்கனியான மனைவியோடு கூடி இன்பம் அனுபவி. அதனால் சொர்க்கம் கிடைக்கும். துன்பத்தைத் தரும் பிறவிகளும் ஏற்படாது'' என்றாள் அகல்யா.

அரசனேயானாலும்

**246. பொருள்கொண்ட கண்டனும் போதகை யாளும்**
**இருள்கொண்ட மின்வெளி கொண்டுநின் றோரும்**
**மருள்கொண்டு மாதர் மயலுறு வார்கள்**
**மருள்கொண்ட சிந்தையை மாற்றகில் லாரே.**

''ஐயா, மனிதனைக் காமுகனாக்குவது பொருள். அளவுக்கதிகமாகப் பொருள் சேர்த்தவனுக்குத் திருவடியுணர்வு வரவேண்டும். இது போல மன்னனுக்கும் திருவடியுணர்வு வருதல் வேண்டும். பொருளாலும் அதிகாரத்தாலும் காமஉணர்வு வந்து பிறரின் மனைவியை இச்சித்தால் பெருந்துன்பமுண்டாகும். அதற்கு நீ உதாரணமாகவிட்டாய். உன்னால் இனிமேல் முன்பு போல இயங்க முடியாது. கருவூர் என்ற நாட்டின் மன்னன் சூரியகுமாரன். அவன் ஒரு நாள் தனது போர் வீரனின் மனைவியைக் கண்டு மோகங் கொண்டான். அவளை அடைவதற்கு வழிவகைகளைத் தேடினான். முதலில் அவளது கணவனைப் படைத்தளபதியாக்கினான். அதனால் மகிழ்ந்த படைவீரனின்

மனைவி அரசசபைக்கு அருகில் உள்ள மாளிகைக்குச் சென்று வந்தாள். அரசனுக்கு அவளை நன்கு பிடித்துவிட்டது. அதனால் அரசன் இரவில் அவளிடம் சென்று வந்தான். இதையறிந்த பதவி இறக்கப்பட்ட தளபதி அந்த மாளிகையைக் காவல் காத்த வீரர்களின் துணையுடன் மன்னனை வெட்டிக் கொன்று விட்டு தான் அரசனானான். அவளிடம் சென்றமையால் தான் மன்னன் கொலை செய்யப்பட்டான் என்று அறிந்த மக்கள் அவளை கேவலப்படுத்தி ஒதுக்கி வைத்தனர். அவளின் கணவனான போர் வீரன் அவளைக் கைவிட்டு விட்டு இன்னொரு பெண்ணை மணந்தான். அதனால் பிறரின் மனைவி மீது இச்சைப்படுபவன் மன்னனாக இருந்தாலும் துன்பப்படுவான். இதை நினைவில் வைத்துக் கொள்'' என்றாள் அகல்யா. சித்திரவேலன் எதுவும் பேசவில்லை.

## 9. மகளிர் இழிவு

எட்டிக்கனி

**247. இலைநல வாயினும் எட்டி பழுத்தால்**
**குலைநல வாங்கனி கொண்டுண லாகா**
**முலைநலங் கொண்டு முறுவல்செய் வார்மேல்**
**விலகுறு நெஞ்சினை வெய்துகொள் ளீரே.**

கயல்விழி பேரழகி. அவளது கண்கள் மருண்டிருக்கும். புருவங்கள் வளைந்திருக்கும். உதடுகள் சிவந்திருக்கும். முகம் மலர்ந்த தாமரை மலரைப் போலப் பொலிவுடன் இருக்கும். இவற்றிற்கெல்லாம் மேலும் அழகூட்ட வர்ணப்பூச்சுக்கள் பூசியிருப்பாள். தனங்கள் இரண்டும் பூரித்துப் பெருத்திருக்கும். அவள் வீதியால் நடந்து வந்தால் வயது

வித்தியாசமின்றி அனைவரும் கண் இமைக்காது அவளைப் பார்த்து ரசிப்பர்.

அவள் அன்று பட்டுடுத்தி அலங்கார தேவதையாகத் தனது வீட்டு வாசலில் நின்றாள். சித்திரவேலன் தனது மோட்டார் வாகனத்தில் அவ்வழியாக வந்தான். அவளைத் தனியாக வீதியில் சந்தித்ததும் அவன் தன்னை மறந்து போனான். அவனது கட்டுப்பாட்டையும் மீறி மோட்டார் வண்டி அவளருகே வந்து நின்றது. கவர்ச்சியான மோகம் மிகுந்த சிரிப்புடன் அவனருகே வந்த கயல்விழி சொன்னாள், "பட்டணத்திற்கு அவசரமாகச் செல்ல வேண்டும். வாடகை வண்டிக்குச் சொல்லியனுப்பியிருந்தேன். வரவில்லை. என்னைப் பட்டணத்தில் கொண்டு சென்று விடமுடியுமா..?"

பழம் நழுவிப் பாலில் விழுவது போலிருந்தது சித்திரவேலனுக்கு, "சரி சரி ஏறுங்கள்" என்றான். அவள் அவனின் அருகில் ஏறி அமர்ந்தாள். அவளது விரித்துவிட்ட கூந்தல் காற்றுக்கு அசைந்து அவனது முகத்தில் பரவிக் கிழுகிழுப்பைக் கொடுத்தது. இன்ப மோகத்தில் மிதந்த அவனை, "இங்கே இறக்கிவிடுங்கள்" என்றவாறு புன்னகைத்தாள் கயல்விழி. அவன் தடுமாறியபடி இறங்கி வாகனத்தின் முன் கதவைத் திறந்தான். அவள் அவனை உரசியபடி இறங்கினாள். "உங்களுக்கு ஏதாவது வேலை இருக்கிறதா..?" என்று கேட்டாள்.

"இல்லை" என்றான் சித்திரவேலன்.

"உள்ளே வாருங்கள். பத்து நிமிடத்தில் திரும்பிவிடுவேன்" என்றாள்.

அது ஒரு தங்கஆபரணக் கடை. அவள் அவனை உரசியபடி நடந்து உள்ளே சென்றாள். கடைக்காரன் எழுந்து மகிழ்வுடன் வரவேற்றான். அவள் பலவிதமான ஆபரணங்களை வாங்கிவிட்டு, “எவ்வளவு பணம் தரவேண்டும்” என்று கேட்டாள்.

“இரண்டு இலட்சம் ரூபா” என்றான் கடைக்காரன்.

“இப்போ என்னிடம் அவ்வளவு பணம் இல்லை. கடன் தரமுடியுமா?” என்று கேட்டாள் கயல்விழி.

அவளது செயல்கள் முதலாளிக்குத் தெரியும். கூட்டிவந்தவன் பணம் கொடுக்கச் சம்மதிக்கும் வரை கடைக்காரன் பேசாதிருந்தான்.

“உங்களிடம் எவ்வளவு பணம் இருக்கிறது? அதைக் கொடுங்கள் மிகுதியை நான் கொடுக்கிறேன்” என்றான் சித்திரவேலன்.

“என்னிடம் ஐம்பதினாயிரம் ரூபா இருக்கு” என்றாள் கயல்விழி.

“மிகுதியை நான் கொடுக்கிறேன்” என்றான் சித்திரவேலன்.

“தேவையில்லை. நீங்கள் பிறகு தாருங்கள்” என்றான் கடைக்காரன்.

“சரி” என்றாள் கயல்விழி.

“இல்லை நான் கொடுக்கிறேன்” என்று மிகுதிப்பணத்தைச் சித்திரவேலன் கொடுத்தான்.

“ரொம்ப நன்றி. பின் நேரம் வீட்டுக்கு வாருங்கள். தருகிறேன்” என்று அவனை உரசியபடி நின்றாள் கயல்விழி.

சித்திரவேலன் செயலிழந்து போனான். அவனது மனத்திரையில் கயல்விழி கவர்ச்சியாக நின்றாள்.

அவர்கள் போனபின் கடைக்காரன் தனது சிப்பந்திக்குச் சொன்னான், ‘‘கயல்விழிக்கு அடிக்கடி பணக்காரர்கள் அகப்பட்டு விடுவார்கள். பாவம் அவனது குடும்பம். இனிச் சொத்து முழுவதும் அவளுக்காகிவிடும்.’’

சுழி

**248. மனைபுகு வார்கள் மனைவியை நாடில்**
**சுனைபுகு நீர்போற் சுழித்துடன் வாங்குங்**
**கனவது போலக் கசிந்தெழும் இன்பம்**
**நனவது போலவும் நாடவொண் ணாதே.**

அன்று மாலை சித்திரவேலன் தன்னை அலங்கரித்துக் கொண்டு கயல்விழியின் வீட்டுக்குச் சென்றான். அவனைக் கண்ட கயல்விழி மகிழ்வான புன்னகையை வலிந்திழுந்து அவனை வரவேற்றாள். வாசலுக்குச் சென்று அவனது கையைப் பிடித்து அழைத்து வந்து உள்ளே இருந்த சொகுசான ஆசனத்தில் அமர்த்திவிட்டு அவனின் அருகில் அமர்ந்தாள். சித்திரவேலனின் மனம் துடித்தது. மெதுவாக அரக்கி அவளோடு ஒட்டியமர்ந்தான். மனதில் இன்பவெள்ளம் கரைபுரண்டோடக் கனவுகள் பல எழுந்து ஆர்ப்பரித்தன. அவளும் நெருங்கினாள். அவன் அவளது கையைப் பிடித்தான். அவள் எதுவும் சொல்லவில்லை. நெருக்கம் அதிகரித்தது. உணர்வுகள் உடைப்பெருத்தன. அப்போது கைத்தொலைபேசி அலறியது. அதை எடுத்து, ‘‘இப்போ பட்டணத்தில் இருக்கிறேன். ஒரு மணித்தியாலம்

கழியவாருங்கள்'' என்று கூறிவிட்டு, ''எனக்கு ஓர் அவசிய வேலை இருக்கு. இப்போ சென்று நாளைக்கு இந்நேரம் வாருங்கள். வரும் போது பணம் தருகிறேன்'' என்றாள்.

சித்திரவேலனுக்குப் பெரும் அதிர்ச்சியாக இருந்தது, ''எனது மனைவியென்றால் எனது எண்ணமறிந்து நடப்பாள். இவள் மனதைக் குழப்பிவிட்டாள்'' என்று நினைத்தான். அப்போது அவனுக்கு அகல்யா சொன்னது காதில் ஒலித்தது; ''ஐயா, ஒருவனுக்கு ஒருத்தி என்று வாழ்வது தான் அறவாழ்வு. உங்கள் மனைவியோடு கூடி இன்பம் அனுபவியுங்கள். பிறரின் மனைவி மீது மோகங் கொள்ளாதீர்கள். உங்களுக்குத் தேவையானால் கயல்விழி போன்ற விலைமாதர்களிடம் செல்லுங்கள். அவர்கள் சுழியைப் போன்றவர்கள். ஆற்று நீரில் நீராடுவது இன்பமானது. சுழியுள்ள ஆற்றில் நீராடுவது துன்பமானது. அதனால் உயிரும் போய்விடும்''

''உண்மை தான். இன்று ஒன்றரை இலட்சம் ரூபா இவளால் செலவாகிவிட்டது. ஒன்றரைச்சதம் செலவில்லாமல் மனைவியோடு நினைத்த நேரம் கூடி மகிழலாம். இவளுக்காகக் காத்திருக்க வேண்டியுள்ளது. அது வரை உணர்வுகள் கேட்குமா..?'' என்று சிந்தித்தான் சித்திரவேலன்.

''நான் அவசரமாகச் செல்ல வேண்டும்'' என்று கூறிவிட்டு எழுந்தாள் கயல்விழி.

தேவர்கள்

**249. இயலுறும் வாழ்க்கை இளம்பிடி மாதர்**

**புயனுறப் புல்லிப் புணர்ந்தவர் எய்தும்**

**மயலுறும் வானவர் சார்விது என்பார்**

**அயலுறப் பேசி அகன்றொழிந் தாரே.**

கயல்விழியிடம் தஞ்சமடைந்திருந்த சிவபாலன் என்ற வணிகன் கயல்விழி கேட்ட பொருட்களையெல்லாம் வாங்கிக் கொடுத்தாலும், தனது தொழிலைக் கவனிக்காததாலும் பெரும் நட்டமடைந்தான். இருப்பினும் கயல்விழியின் மேல் இருந்த மோகம் குறையவில்லை. அவன் பொருள் இருக்கும் போது வந்தால் அவனை இன்முகத்துடன் வரவேற்று அவனைப் புகழ்ந்து அவன் நினைத்துப் பாராத புதுப்புது இன்பங்களைக் கொடுப்பாள். அதனால் அவன் வீட்டையும் தன் தொழிலையும் மறந்து அவளே தஞ்சமென நினைத்து அவளுடன் வாழவாரம்பித்தான். பொருள் குறைவடைந்ததும் அவனை விலக்குவதற்குப் பல முயற்சிகள் செய்தும் அவை பலிக்கவில்லை. அதனால் கையாட்களை வைத்து அடிப்பித்தாள். இப்போ அவன் மனம் குழம்பிப் பைத்தியக்காரன் போல வீதிகளில் அலைகிறான்.

சித்திரவேலன் தன்னை நன்றாக அலங்கரித்துக் கொண்டு அவள் முதல் நாள்க் கேட்ட தங்கஅட்டியலுடன் வந்தான். அவனைக் கண்டதும் தனது படுக்கையறைக்குள் அழைத்துச் சென்று அவனை இறுக்கமாகத் தழுவினாள். அவளது செயல்கள் அவனை ஆச்சரியப்படுத்தின. உணர்ச்சிகள் பொங்க அவளை இறுகத் தழுவிய போது அவள் கேட்டாள்; "நேற்று அட்டியல் வாங்கி வருவதாகச் சொன்னீர்கள். வாங்கி வந்தீர்களா.?" என்று கேட்டுத் தனது அணைப்பை விலக்கினாள்.

சித்திரவேலன் துடிதுடித்துப் போனான். அணைப்பு விலகியதும் உடல் பற்றி எரிந்தது. உடனே எழுந்து சென்று தான் வாங்கிக் கொண்டு வந்த தங்க அட்டியலை எடுத்துக் கொடுத்தான். அவள் அதைக் கட்டிவிட்டு முன்பிலும் இறுக்கமாக அணைத்தாள். சித்திரவேலனது மனம் அந்தரத்தில் பறந்தது. கயல்விழி; “இது எத்தனை பவுண். எவ்வளவு பணத்திற்கு வாங்கினீர்கள்” என்று கேட்டாள். அவள் பேசிய எதுவும் அவனுக்குக் கேட்கவில்லை. அவன் இன்பபோதைக்குள்ளாகி உலகை மறந்து போனான்.

உற்றதுணை

**250. வையகத் தேமட வாரொடுங் கூடியென்**

**மெய்யகத் தோருளம் வைத்த விதியது**

**கையகத் தேகரும் பாலையின் சாறுகொள்**

**மெய்யகத் தேபெறு வேம்பது வாமே.**

சித்திரவேலன் மிகவும் களைத்துப் போய் வந்து கயல்விழியின் வீட்டின் வெளியே வைக்கப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்தான். சில நாட்களுக்கு முன் அவனது உடலெங்கும் புண்கள் உண்டாகியிருந்தன. அத்துடன் தோல் கறுத்துக் கொண்டு வந்தது. அவன் வந்திருப்பதை அறிந்த கயல்விழி கோபத்துடன் வந்து சொன்னாள், “உன்னை வரவேண்டாமென்று எத்தனை தடைவகள் சொல்வது. உனக்குத் தொழு

நோய் வந்துவிட்டது. அதை எனக்கும் தரவந்துவிட்டாயா..?'' என்று கேட்டாள்.

“நீ கேட்ட புதிய வடிவிலமைந்த காப்புக் கொண்டு வந்துள்ளேன்'' என்று மிகவும் பணிவாகச் சொன்னான் சித்திரவேலன்.

“உதைக் கொண்டு போ. இனி மேல் இங்கு வரவேண்டாம்'' கோபமாகக் கூறினாள் கயல்விழி.

“நீ தான் எனக்கு எல்லாம். உன்னைத் தயவாகவும் கெஞ்சியும் கேட்கிறேன்..'' வார்த்தைகளை அவன் முடிக்க முன் அவள் சொன்னாள், “வேலாயுதம், இவனைப் பிடித்திழுத்துச் சென்று வெளியே விடு. இனிமேல் வரவிடாதே''

வேலாயுதம் அவனை இழுத்துச் சென்று வெளியே விட்டு விட்டுப் படலையைப் பூட்டினான்.

சித்திரவேலன் வீட்டுக்குச் சென்று படுத்தான். அவனால் எழுந்து நடமாட முடியவில்லை. அவனது மனைவி வைத்தியரை அழைத்து வந்தாள். அவனைச் சோதித்த வைத்தியர் சொன்னார்; “சித்திரவேலு, உனக்கு பெண்களிடமிருந்து தொற்றும் தொழு நோயுண்டாகியுள்ளது. கயல்விழியிடம் செல்லும் பலருக்கு இந்நோய் உண்டு. குலவிளக்கான மனைவி தான் கணவனுக்கு வழித்துணையாக எப்போதும் இருப்பாள். திருவடியுணர்வை உண்டாக்கி நல்லொழுக்கமுள்ள சமூகத்தவரை உருவாக்குபவள் கற்புள்ள பெண். பாவப்பட்ட பெண்கள் தமது உடற்சுகத்திற்காகவும் தமக்கு வேண்டிய பொருளைத் தேடவும் பல பணக்கார ஆடவர்களை நாடி அவர்களையும் அவர்களது

குடும்பத்தினரையும் கெடுத்துச் சமூகத்தை அழிக்கின்றனர். கயல்விழி உன்னிடம் பெருந்தொகையான பணத்தினைப் பெற்றுக் கொண்டாள். அதனால் நீ ஏழையானதும் உன்னைத் துரத்தி விட்டாள். தொழுநோயும் வந்துவிட்டது. நீ நோயாளியாகிப் பொருளை இழந்த போதும் உனது மனைவி உன்னை வெறுத்தொதுக்காது அன்புடன் வரவேற்று இன்னொருத்தி மூலம் வந்த கொடிய நோய்க்கு வைத்தியம் செய்விக்கிறாள். இதை யோசித்துப் பார்'' என்றார் வைத்தியர். சித்திரவேலன் எதுவும் பேசாதிருந்தான்.

பெரியோரின் கடன்

**251. கோழை ஒழுக்கங் குளமூடு பாசியில்**

**ஆழ நடுவார் அளப்புறு வார்களைத்**

**தாழத் துடக்கித் தடுக்ககில் லாவிடில்**

**பூழை நுழைந்தவர் போகின்ற வாறே.**

''சித்திரவேலா, உனது மனைவி புனிதமான பரம்பரையில் பிறந்தவள். தெய்வ பக்தி மிக்கவள். கணவனைத் தெய்வமாக மதிப்பவள். அதனால் தான் நீ செய்யக் கூடாத பாவத்தைச் செய்த போதும் உன்னை மன்னித்து உனது நலன்களைக் கவனிக்கிறாள். ஓர் ஆணின் பரிசுத்தமான விந்து புனிதமான கர்ப்பப்பையை அடைந்து குழந்தையாகிப் பிறந்தால் தான் அது ஊர்மெச்ச வாழும். கயல்விழியின் தாய் மிகமிக மோசமானவள். அதனால் அவளுக்குப் பிறந்த பிள்ளைகள் ஊரைக் கெடுக்கின்றன. கயல்விழி எத்தனை குடும்பங்களின் நல்வாழ்வைக் கெடுத்தவள் என்று நான் உனக்குக் கூறத்தேவையில்லை. அவளது கர்ப்பப்பை அழுக்கானது. குற்றங்கள் நிறைந்தது. அந்தக்

கர்ப்பப்பையுடன் தொடர்பு கொண்ட உனது உடல் புனிதமான உன் மனைவியின் உடலோடு சேர்ந்தால் நோய்கள் தான் மிகும். இப்போழுது நீ கொடிய நோயாளியாகிவிட்டாய். இதிலிருந்து உனது நிலையை நீ புரிந்து கொண்டுள்ளாய். கயல்விழியின் குடும்பத்தவர்கள் செய்யும் அநியாயங்களை இவ்வூரில் உள்ள நல்ல குடும்பத்தவர்களில் யாராவது ஒருவர் செய்கிறாரா..? இல்லையே. ஒரு விபச்சாரியிடம் செல்பவர்கள் தீயவர்கள். அதனால் தான் தீயவர்கள் பிறக்கிறார்கள். உனது விந்தின் மூலம் கயல்விழிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தால் எதிர் காலத்தில் அது பலருடன் உறவு கொள்ளும். அதை நினைத்துப்பார். அத்துடன் நல்ல சமூகத்தைக் கெடுப்பவர்களைத் திருத்த வேண்டியது பெரியவர்களது கடமை. அதனால் தான் சொன்னேன்" என்றார் வைத்தியர்.

## 10. நல்குரவு

ஆகாப்புடைவை

**252. புடைவை கிழிந்தது போயிற்று வாழ்க்கை**

**அடையப்பட் டார்களும் அன்பில ரானார்**

**கொடையில்லை கோளில்லை கொண்டாட்ட**

**மில்லை**

**நடையில்லை நாட்டில் இயங்குகின் றார்கட்கே.**

மணிவண்ணன் நல்ல அழகன். தனவந்தனான தம்பிப்பிள்ளையின் மகன். அவன் ஏழைப் பெண்ணான யசோதாவை விரும்பினான். அவள் பரம ஏழை. தம்பிப்பிள்ளை யசோதாவை ஏற்றுக் கொள்ள மறுத்து வேறோர் இடத்தில் மணிவண்ணனுக்குத் திருமணம் பேசினார். இதையறிந்த மணிவண்ணன் தனது உயிர் நண்பனான ஆரூரனுக்குச் சொல்ல அவன் யசோதாவை அழைத்துச் செல்லும்படி சொன்னான். மணிவண்ணன் யசோதாவை அழைத்துச் சென்று சிவன் கோவிலில் திருமணம் செய்தான்.

வருடங்கள் சில கழிந்தன. யசோதாவின் பெற்றோர் ஏழைகள். மணிவண்ணனின் தந்தை பெரும் தனவந்தன். அதனால் வேலை செய்யாது சொகுசாக வாழ்ந்து சுவையான உணவு வகைகளை உண்ட மணிவண்ணனால் வேலை செய்ய முடியவில்லை. அவர்கள் கொடுக்கும் சுவையற்ற உணவு வகைகளையும் உண்ண முடியவில்லை. அதனால் அவன் பெருந்துன்பப்பட்டான். அவனது உறவினர்கள், நண்பர்கள் எல்லோரும் இவனைக் கண்டதும் காணாதது போலச் சென்றனர். அத்துடன் அவனது உறவினர்கள் தமது வீட்டில் நடைபெறும் வைபவங்களுக்கும் சொல்லுவதில்லை. யசோதாவின் தகப்பன் ஐயாத்துரை கஷ்டப்பட்டு உழைத்துத் தனது குடும்பத்திற்கும் மணிவண்ணனது குடும்பத்திற்கும் உணவு கொடுக்க முடியாது வருந்தினார். அதனால் யசோதா கூலி வேலைகள் செய்யத் தொடங்கினாள். அதனால் மூன்று நேரமும் உண்ண முடிந்ததே தவிரச் சுவையான உணவு வகைகளை உண்ண முடியவில்லை. அதனால் அன்பாக இருந்த யசோதா மணிவண்ணனை வாயில் வந்தபடி ஏசத் தொடங்கினாள்.

“மனிதனாகப் பிறந்தால் மானத்துடன் வாழவேண்டும். எமக்கு உழைத்துத் தரவேண்டாம். உனக்காக உழை. உனது வேட்டி இத்துக் கிழிந்து விட்டது. அதை உடுத்திக் கொண்டு கோவில் மடத்தில் போய்ச் சாப்பிடுகிறாய். கிழிசலுக்குள்ளால் உனது அங்கம் தெரிவதால் இளைஞர்கள் பரிகசிக்கின்றனர். அப்படி இருந்தும் உனக்கு ரோசம் வரவில்லை. எனது தங்கையைத் திருமணம் செய்த நாகநாதன் ஊருக்குதவாத பெருங்குடிகாரன். அவன் திருமணம் செய்தபின் வியாபார நிலையம் ஒன்றை நிறுவி இப்போ பெரும் பணக்காரன். அவன் உனது நண்பன் தானே. உன்னுடன் வந்து தான் அவளைத் திருமணம் செய்தான். அவனை மாதிரி நீயும் உழைத்தால் தான் நாம் முன்னேறலாம். போய் அவனது கடையிலாவது நின்று வேலையைப் பழகு. சோம்பற்பட்டுத் தொழில் செய்யாததால் மானம் மரியாதை நட்பு உறவு எல்லாம் போய்விட்டது” என்று அழுதாள் யசோதா.

நிரம்பாக் குழி

**253. பொய்க்குழி தூர்ப்பான் புலரி புலருதென்று**
**அக்குழி தூர்க்கும் அரும்பண்டம் தேடுவீர்**
**எக்குழி தூர்த்தும் இறைவனை ஏத்துமின்**
**அக்குழி தூரும் அழுக்கற்ற போதே.**

யசோதாவின் தங்கை பகீரதி. அவள் நல்ல அழகி. மணிவண்ணனுடன் வந்த நாகநாதன் அவளை விரும்பினான். நாகநாதன் ஏழை. அத்துடன் குடிகாரன். அதனால் யசோதாவும் பெற்றோரும் அவனுக்குப் பகீரதியைத் திருமணம் செய்து கொடுக்க மறுத்தனர். பகீரதி அவனைத் தான் திருமணம் செய்வேன் என்று அடம்பிடித்ததால்

பகீரதியின் பெற்றோர் வேறுவழியின்றித் திருமணத்தைச் செய்து வைத்தனர். ஐந்து வருடங்களுக்கு முன் பெட்டிக் கடையாகத் தொடங்கிய அக்கடை இன்று பெருத்து மாளிகையாகிவிட்டது.

அன்று பசிக்கொடுமையைத் தாங்க முடியாத மணிவண்ணன் நாகநாதனின் கடைக்கு வேர்த்து விறுவிறுக்க வந்தான். அவனை வரவேற்று உணவளித்த நாகநாதன் சொன்னான், "மணி, ஒன்றும் இல்லாமற் பிறக்கிறோம். பின் எதுவுமில்லாமல் இறக்கிறோம். வாழும் போது இன்பமாக வாழ்பவன் தான் இறந்த பின்பும் இன்பமான பிறப்பெடுப்பான். அதற்குத் தேவை பொருள். பொருள் உள்ளவர்கள் தான் உயர்ந்தவர்கள்; சிறந்தவர்கள்; மகிழ்ச்சியுள்ளவர்கள்; நினைத்ததைச் செய்து முடிப்பவர்கள். நான் ஏழையென்பதால் ஏழைப் பெற்றோர் கூடத்தமது பெண் பிள்ளையை எனக்குத் தரவில்லை. பகீரதியின் பிடிவாதத்தால் தான் எனது திருமணம் நடைபெற்றது. என்னை விரும்பி எனக்காகத் தன்னைத் தியாகம் செய்த பகீரதியைப் பெருவாழ்வு வாழவைக்க வேண்டுமென்று விடாமுயற்சியுடன் அயராது உழைத்துத் தான் இந்நிலையை அடைந்தேன். அன்று வெறுத்தவர்களெல்லாம் இன்று போற்றுகின்றனர். நீ எனது உயிர் நண்பன். உன்னுடன் வந்து தான் பகீரதியைக் காதலித்தேன் என்று குறைப்பட்டவர்களெல்லாம் இன்று மெச்சுகின்றனர். என்னைப் போல நீயும் உழைத்தால் தான் என்றும் நிரம்பாத வயிற்றை நிரப்பலாம். அதைவிட நோய், துன்பம், பிறவிகள் போன்றவற்றை நீக்க வேண்டுமானால் பொருளைத் தேடவேண்டும். மூன்று வருடங்களுக்கு முன்பு நோய்வாய்ப்பட்ட உனது குழந்தைக்கான மருத்துவச் செலவைச் செய்ய முடியாததால் தான் உனது குழந்தை இறந்தது. பொருள் இருந்தால் தான் தானதர்மம் செய்து பிறவிப் பிணியை அகற்றலாம். அத்துடன்

இறைவனை வணங்கலாம். மெய்யுணர்வுடன் இறைவனை வணங்கினால் தான் மனதில் இருக்கும் அழுக்காறு அவா வெகுளிகள் அகலும். அதனால் பொருளைத் தேடு” என்றான் நாகநாதன்.

கற்குழி

**254. கற்குழி தூரக் கனகமுந் தேடுவர்**
**அக்குழி தூர்க்கை யாவர்க்கும் அரியது**
**அக்குழி தூர்க்கும் அறிவை அறிந்தபின்**
**அக்குழி தூரும் அழுக்கற்ற வாறே.**

“மணி, எல்லோரும் வயிற்றை நிரப்பத்தான் அரும்பாடுபடுகிறார்கள். இந்த வயிறு என்றும் நிரம்பாத கற்குழியாகும். நிரப்பிவிட்டோம் என்று நினைத்த சிலமணிநேரங்களில் பசியெடுத்துவிடும். இருக்கிறது என்பதற்காக இருநாட்களுக்குரிய உணவையும் ஏற்காது. ஒரு நாளைக்கு உணவில்லையென்றால் உடலைக் கொன்றுவிடும். இதனால் தான் உயிரினங்கள் உணவைத் தேடுகின்றன. மக்கள் உணவுக்காகப் பொன்னையும் பொருட்களையும் தேடுகின்றனர். பொருள் தேடும் முயற்சிக்கு இறைவனின் துணைவேண்டும். அதனால் நான் தினமும் கோவிலுக்குச் சென்று வணங்குகிறேன். சிவனின் திருவடியுணர்வை ஏற்படுத்திக் கொள்கிறேன். திருவடியுணர்வு உண்டானால் மலங்கள் யாவும் அழியும். மலங்கள் அழிந்தால் கற்குழியை நிரப்ப முடியும். நீ உழைக்காதிருந்து பாவம் செய்கிறாய். நீ வரும் போதெல்லாம் நான் உனக்குப் புத்திமதிகள் கூறுகிறேன். நீ கேட்பதில்லை. கோவிலுக்குச் செல். இறைவனை வணங்கு. உழைக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டாகும். எனக்கொரு நம்பிக்கையான உதவியாளன் தேவை.

உன்னை நான் நம்புகிறேன். கோவிலுக்குச் சென்று வணங்கிவிட்டு வா” என்றான் நாகநாதன்.

திருவிளக்கு

**255. தொடர்ந்தெழு சுற்றம் வினையினுந் தீய**
**கடந்ததோர் ஆவி கழிவதன் முன்னே**
**உடந்தொரு காலத் துணர்விளக் கேற்றித்**
**தொடர்ந்துநின் றவ்வழி தூர்க்கலு மாமே.**

“மணி, வினைகளைவிடச் சுற்றத்தவர்கள் கொடியவர்களென்று அறநூல்கள் கூறுகின்றன. வினைகளில் இரண்டுண்டு. நல்வினை எப்போதும் நன்மையையே தந்து கொண்டிருக்கும். தீயசெயல்கள் தான் தீமையைத் தரும். இரண்டையும் செய்யாதிருக்க முடியாது. நீ தொடர்ந்து தீவினையையே செய்கிறாய். எனது மனைவியின் பெற்றோரும் உறவினர்களும் நான் தீயசெயல்களைச் செய்த போது என்னை ஒதுக்கினர். இப்போ நல்ல செயல்களைச் செய்யும் போது ஒதுக்க முடியாது திண்டாடுகின்றனர். இதற்கெல்லாம் காரணம் எனது உழைப்புத்தான். உழைப்பாலும் சிவனை வணங்குவதால் உண்டான திருவடியுணர்வாலும் எனது உள்ளத்தில் திருவிளக்கைத் திருவருளால் ஏற்றியுள்ளேன். அதனால் எனக்கு விருப்பு வெறுப்பில்லை. அதனால் நான் எதிரிகளையும் நேசிக்கிறேன். எனக்கு எதிரிகள் பலர். வியாபாரத்தில் எதிரிகள் உண்டு. இனத்தவர்களுக்குள் விரோதிகள் உண்டு. நண்பர்களுக்குள் மாறுபாடுள்ளவர்கள் உண்டு. நல்வினை செய்தால் முன்பு செய்த தீவினைகள் அகலும். நன்மையுண்டாகும். ஆனால் சுற்றத்தவர்கள் அப்படியல்ல. நன்மை செய்தாலும் எனது

நன்மை கருதித்தான் செய்கிறேன் என்று நினைக்கிறார்கள். இதனால் தான் வினைகளிலும் பார்க்கச் சுற்றத்தவர்கள் கொடியவர்களென்று அறநூல்கள் கூறுகின்றன. பொருளைத் தேடித் தருமம் செய்தால் என்றும் நிரவாத பிறப்புக்குழி நிரவும். ஆகையால் நீ பாடுபட்டு உழை. சிவனை வணங்கு. உனது நிரப்பப்படாத குழிகள் யாவும் நிரம்பும். பசிக்குழியும் நிரவும். இது எனது அனுபவம்" என்றான் நாகநாதன்.

துன்பங்கள் நீங்க

**256. அறுத்தன ஆறினும் ஆனின மேவி**
**அறுத்தனர் ஐவரும் எண்ணிலி துன்பம்**
**ஒறுத்தன வல்வினை ஒன்றல்ல வாழ்வை**
**வெறுத்தனன் ஈசனை வேண்டிநின் றானே.**

மணிவண்ணனின் தந்தை தம்பிப்பிள்ளை பெருந்தனவந்தர். நியாயம் நீதி மனிதநேயம் பாராதவர். அறுசுவை உணவுகளை எப்பொழுதும் விரும்பி உண்பவர். அதனால் அவரது தேகம் பருத்திருந்தது. அவரால் நடக்க முடியவில்லை. வேலை செய்யவும் முடியவில்லை. ஓய்வாக இருந்தாலும் களைப்பாகவும் பலவீனமாகவும் இருந்தது. அதனால் அவர் அளவுக்கதிகமாகப் பயப்பட்டார். இருப்பினும் தகுதி சாதிபாராது திருமணம் செய்த மகனை மன்னிக்க அவர் தயாராக இல்லை. அவருடைய ஏனைய ஆறுபிள்ளைகளும் மணிவண்ணனைச் சேர்க்கக் கூடாது என்று பிடிவாதமாக இருந்தனர். அவர் மனம் சஞ்சலமடையும்

போது நாகநாதனை அழைத்துக் கதைப்பார். அவனுடன் கதைத்தால் அவரது மனம் ஆறுதலடையும்.

அன்று வந்த நாகநாதனுக்கு அவர் சொன்னார், "பணமிருக்கு, பொருளிருக்கு, மற்றவையெல்லாம் இருக்கு. ஆனால் நிம்மதியில்லை. இப்போ எனக்குப் பசிக்குதில்லை. மனம் சஞ்சலப்படுகிறது. யாரையும் நம்பமுடியவில்லை. எல்லோரும் எனது பொருளுக்காக நடிக்கிறார்கள்" என்று பெருமூச்சு விட்டார்.

"உலகில் உள்ளவையெல்லாம் பொய். எல்லோரும் நடிக்கிறார்கள். அளவுக்கதிகமான அறுசுவை உணவுண்டதால் உங்கள் உடல் பெருத்துள்ளது. அதனால் தான் களைப்பும் பலவீனமும் வருகிறது. புலன்கள் கட்டுப்படாவிட்டால் நிம்மதிக் குறைவும் குழப்பமும் துன்பமும் தான் வரும். ஐம்புலன்களும் தம்தம் இச்சைகளைப் பூர்த்தி செய்யமுற்படுவதால் தான் கோபம், காமம், பொறாமை, வஞ்சனை போன்ற குணங்கள் உண்டாகின்றன. அதைவிட நாம் செய்த தீயசெயல்கள் தீவினையாகிப் பலவீனமான போது வந்து வருத்தும். தைரியமுள்ள காலத்தில் திமிரும் ஆணவமும் தன்னை உணரவிடாது. பலவீனமடையும் போது பயம் மனதைப் பிடித்து ஆட்டும். இவை யாவும் ஒவ்வொருவரது செயல்களால் வருபவை. இவற்றிலிருந்து விடுபட வேண்டுமானால் சிவபெருமானின் திருவடியினை நினைத்துத் திருவடியுணர்வை ஏற்படுத்துதல் வேண்டும். அப்படி ஏற்படுத்தினால் உணவால் வரும் தீமையும், ஐம்புலன்களால் வரும் துன்பங்களும், வினைகளால் வரும் பேரிடர்களும் படிப்படியாகக் குறையும். அதனால் நீங்கள் சிவனை வணங்குங்கள்" என்றான் நாகநாதன்.

# 11. அன்புடைமை

அன்பே சிவம்

**257. அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.**

“உங்கள் பிள்ளைகள் எல்லோரும் எதைச் சொன்னாலும் மணிவண்ணன் உங்கள் பிள்ளை. உங்கள் இரத்தம். அன்பு தான் சிவம். நாம் யார் மீது அன்பு வைத்தாலும் அது சிவத்தைச் சென்றடையும் என்று உபநிடதங்கள் கூறுகின்றன. அதனால் தான் சைவசமயம் உயிர்களுக்குத் துன்பம் செய்யக்கூடாதென்று கூறுகிறது. எல்லா உயிர்களையும் படைத்தவன் சிவன். அவ்வுயிர்களைப் படைத்த சிவன் அவ்வுயிர்களுக்குள்ளே அன்பு வடிவாக இருக்கிறானென்று சமயநூல்கள் சொல்கின்றன. கொடிய மிருகங்களின் மீதும் அன்பு வைத்தால் அவற்றிற்கு அது தெரியும். அன்பைப் புரிந்து கொள்ளும் தன்மையும் அதைச் செயற்படுத்தும் தன்மையும் மனிதர்களைவிட மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் அதிகம் என்று புராணங்கள் கூறுகின்றன. நீங்கள் யார் மீதும் அன்பு செலுத்துவதில்லை. என்னையும் உங்கள் மகனின் நண்பனெனக் கருதி என்னையும் எதிரியாகவே நினைத்தீர்கள். காலம் அதை மாற்றிவிட்டது. அதனால் என்னுடன் கதைப்பதை விரும்புகிறீர்கள்.

அதனால் ஆறுதலும் நிம்மதியும் கிடைக்கின்றதென்று கூறுகிறீர்கள். என்னில் வைத்த அன்பு சிவனைச் சென்றடையும். அதனால் சிவன் மீதும் அன்பு வையுங்கள். அதனால் திருவருள் உங்களை நாடிவரும். அன்பு செய்பவரைச் சிவன் அறிவான். அறிந்து நாடிவருவான். வந்தடைந்தால் அதன்பின் துன்பமே இராது. அதனால் சிவன் மீது அன்பு வைத்துப் பாருங்கள்'' என்றான் நாகநாதன்.

அன்புக் கடல்

**258. பொன்னைக் கடந்திலங் கும்புலித் தோலினன்**
**மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை**
**துன்னிக் கிடந்த சுடுபொடி யாடிக்குப்**
**பின்னிக் கிடந்ததென் பேரன்பு தானே.**

நாகநாதன் சொன்னதைக் கேட்ட தம்பிப்பிள்ளை சொன்னார், "என்னைக் கற்பித்த ஆசிரியர் கணபதி. அவர் அன்பு தான் பேரின்பத்தைத் தருவது. அன்பு தான் உறவுகளை உண்டாக்குவது; அந்த அன்பு தான் சிவன்; அதனால் சிவன் மீது பற்று வையுங்கள். உங்கள் துன்பமெல்லாம் போகும். புதிய துன்பங்கள் எதுவும் வராது. சிவன் பேரின்பக் கடல். அதில் மூழ்கித் தேவையானவற்றைப் பெறலாமென்றவர். பள்ளிப் படிப்புத் தொழிலுக்கு உதவுமே தவிர வாழ்க்கைக்கு உதவாது என்று எனது நண்பன் ஒருவன் அடிக்கடி சொல்வான். அதற்கு உதாரணமாக ஊரில் வாழும் படித்த ஆசிரியர்களின் ஏழ்மை நிலையைப் பற்றிச் சொல்வான். எனது ஆசிரியர் தர்ம உபதேசங்கள் செய்வார். தானதர்மங்கள் செய்வார். ஏழைகளை வீட்டுக்கு அழைத்து வந்து உணவு கொடுத்துக் கற்பிப்பார். அதனால்

வாழ்க்கை முழுவதும் துன்பப்பட்டார்'' என்று கூறுவான். அதை நம்பியதால் தான் நான் இந்த நிலையை அடைந்தேன். கணபதி ஆசிரியருக்கு ஐந்து பெண் பிள்ளைகள். ஐந்தும் கோடீஸ்வரிகள். எனது பிள்ளைகள் அனைத்தும் தமக்குள்ளேயே முரண்படுகின்றனர். எனது நண்பனுக்கு ஏழு பிள்ளைகள். சொத்துப் பிரச்சினைக்காகச் சண்டையிட்டு இருவர் இறந்துவிட்டனர். மூவர் சிறையில் உள்ளனர். மிகுதியாக உள்ள இருவர் பிரச்சினைப்பட்டுக் கொண்டேயிருக்கின்றனர். எனது நண்பன் இறந்த போது ஊரவர்கள் ஒப்புக்குக்கூட வரவில்லை. எனது ஆசிரியரின் மனைவி இறந்த போது ஊரே கூடியிட்டது. அதிலிருந்து அன்பு தான் உன்னதமானது என்று உணர்ந்து கொண்டேன். எனது ஆசிரியரும் நீயும் கூறியபடி அன்புக் கடலான சிவனை வணங்கப் போகிறேன்'' என்றார் தம்பிப்பிள்ளை. அவரின் கண்கள் கலங்கின.

அன்பே அருள்

**259. என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்**

**பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்**

**அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி**

**என்போல் மணியினை எய்தவொண் ணாதே.**

சிவநாதனுக்குத் தீராத நோய் ஒன்று வந்ததால் அவன் ஆயிரத்து எட்டுச் செடில்களை உடலெங்கும் குத்திக் காவடி எடுத்தான். அவன் சிவபக்தனல்ல. சிவனை வணங்கும் எல்லோரும் பெரு வாழ்வு வாழ்கிறார்களென்று எண்ணிக் காவடி எடுத்தான். ஆனால் அவன்

ஏழைகளுக்கு உணவு கொடுப்பதில்லை. உறவினர் நண்பர்களுடன் அன்பாகப் பேசியதில்லை. சிவன் கோவிற் குருக்களையும் பெரியவர்களையும் மதித்ததில்லை. அன்று இரண்டு கூட்டம் மேளமும் ஒலிபெருக்கியும் பிடித்துக் காவடி எடுத்தான். அவனது வீட்டுக்கு அருகில் இருக்கும் பிள்ளையார் கோவிலில் இருந்து சிவன் கோவில் வரை காவடி எடுத்தான். அவன் சென்ற பாதையில் வெடிகளும் வாணங்களும் கொழுத்தப்பட்டன. மிகவும் ஆடம்பரமாக அந்நிகழ்வு நடைபெற்றது.

கதிரேசன் அமைதியானவர். உயிர்கள் மீது இரக்கமுள்ளவர். கஷ்டப்படும் ஏழைகளுக்கு உணவும் உடையும் கொடுப்பவர். ஏழை மாணவர்கள் கற்க உதவி செய்பவர். சிவனை மனமுருகி வணங்குவாரே தவிரச் சிவனுக்கு விழாச் செய்யமாட்டார். ஆனால் மற்றவர்களிலும் பார்க்க இரண்டு மடங்கு விளைச்சலை அவரது வயல்கள் கொடுக்கும். இதைப் பார்க்கும் சிவநாதனுக்கும் ஊரவர்களுக்கும் அது பெரும் ஆச்சரியத்தைக் கொடுக்கும். அதைப் பற்றி ஊரில் உள்ளவர்கள் பெரிதாகக் கதைப்பார்கள். அதனால் பொறாமைப்படும் பலர் நாகநாதனின் கடையில் கூடியிருந்து கதைப்பார்கள்.

ஒரு நாள் நாகநாதன் சொன்னான், “உலகைப் படைத்து, உலகில் வாழ உயிர்களைப் படைத்து அவற்றிற்கான பொருட்களையெல்லாம் படைத்த கடவுளுக்குத் தனக்குத் தேவையானவற்றை உருவாக்கத் தெரியாதா..? அதை மனிதர்களா கொடுக்க வேண்டும். இது நகைப்புக்குரிய விடயமல்லவா..? இறைவன் அன்பு வடிவானவன். அவனை அன்புடன் நினைத்து ஒரு பச்சிலை போட்டாலே போதும். இலை, பூ, நீர், பழம் போன்றவற்றைப் படைத்தாலே போதும். உடலை வருத்திச் செடில்கள் குத்தி வணங்கத் தேவையில்லை. ஏழை

எளியவர்களுக்கு உணவளித்தால் உணவளிப்பவனுக்குக் கடவுள் அள்ளிக் கொடுப்பார். உணவளியாதவர்களின் வயல்கள் நல்ல விளைச்சலைப் பெறாது. ஏழைகளுக்கு இடும் உணவு இறைவனின் வயிற்றை நிரப்பும் என்று அறநூல்கள் கூறுகின்றன. அன்புதான் சிவம். அன்புக்கு எலும்பும் கூட உருகும் என்று பெரியவர்கள் கூறுவார்கள். கதிரேசன் சிவன் மீதும் உயிர்கள் மீதும் வைத்த அன்பு தான் அவரைத் தனவந்தனாக்குகிறது. கிரியைகளையும் வேள்விகளையும் கொடுமையான பிரார்த்தனைகளையும் இறைவன் ஏற்றுக் கொள்வதில்லை. அன்பைத் தான் ஏற்று மகிழ்வான்.''

அன்பின் ஆர்வம்

**260. ஆர்வம் உடையவர் காண்பர் அரன்தன்னை**
**ஈரம் உடையவர் காண்பார் இணையடி**
**பாரம் உடையவர் காண்பார் பவந்தன்னைக்**
**கோர நெருக்கொடு கோங்குபுக் காரே.**

மாலை வேளைகளில் நாகநாதனின் கடைக்கு முன்னால் நிற்கும் வேப்ப மரநிழலில் அமர்ந்திருப்போர் ஊர்வம்பு பேசுவர். அதனால் அடிக்கடி சண்டைவரும். சிவநாதன் விதண்டாவாதம் பேசுவான். அது பலருக்குப் பிடிப்பதில்லை. அவனோடு கதைத்தால் பிரச்சினை வருமென்று பலர் கதைப்பதில்லை. அதனால் அவன் தனக்குத் தான் யாவும் தெரியும் என்று நினைத்துக் கண்டபடி கதைப்பான்.

``கடவுளை வணங்குவதால் பிரயோசனம் இல்லை. காலம் நல்லாயிருந்தால் தான் செய்தொழில் விருத்தியாகும். வயலில்

பிராமணரைக் கொண்டு பூசை செய்வதால் வயல் விளையுமா..?" என்றான் சிவநாதன்.

"பூசைகள் மனதைச் சுத்தப்படுத்திச் சிவனின் நினைவை உண்டாக்கும். அது ஆர்வத்தை அதிகரிக்கச் செய்து சிவபெருமானுடன் அன்பான தொடர்பை உண்டு பண்ணும். அத்தொடர்பால் அன்பு பெருகும். கடவுளின் மீது அன்புள்ளவன், கடவுளின் குழந்தைகளான ஏழைகள் மீதும் அன்பு கொள்வான். அன்பு தான் திருவருள். திருவருள் கைவரப் பெற்றால் சிவன் அவனுடன் கூட இருந்து உதவி செய்வார். அதனால் தான் கதிரேசனுக்குப் பெரும் விளைச்சல் உண்டாகிளது. கதிரேசனது வயல் அறுவடைமுடிந்த மறுநாள் மழை கொட்டோ கொட்டென்று கொட்டிப் பலரின் வயலை அழித்தது. ஆனால் சிவன் மீது ஆர்வமுள்ள கதிரேசனின் நினைவில் செயலை முடித்துவிடு என்ற உணர்வைச் சிவன் நட்புக்காரணமாகத் தெரிவித்திருந்தார். அதனால் தான் அவரது வயலில் அறுவடை முடிந்ததும் பெருமழை பொழிந்தது. எனவே சிவன் மீது அன்பு வைத்தால் அவனைக் காணவேண்டுமென்ற ஆர்வம் தோன்றும். அது ஆர்வப்படுபவனை வாழவைக்கும்" என்றான் நாகநாதன்.

அன்பால் உருகுங்கள்

**261. என்னன் புருக்கி இறைவனை ஏத்துமின்**
**முன்னன் புருக்கி முதல்வனை நாடுமின்**
**பின்னன் புருக்கிப் பெருந்தகை நந்தியுந்**
**தன்னன் பெனக்கே தலைநின்ற வாறே.**

நாகநாதனின் கடையில் நின்ற வேப்பமரநிழலில் பலர் அமர்ந்திருந்த போது கடையிற் பொருட்களை வாங்குவதற்காகக் கதிரேசன் வந்தார். அவரது வாய் திருவைந்தெழுத்தை ஓதிக் கொண்டிருந்தது.

அவரை எழுந்து நின்று வரவேற்ற நாகநாதன் கேட்டான், “ஐயா, கிராமத்தில் உள்ளவர்கள் சரியைத் தொண்டுகள் புரிகின்றனர். கட்டிடங்கள் கட்டிக் கொடுக்கின்றனர். கிரியைகள் செய்கின்றனர். இதனால் தமக்கு எந்தப் பயனும் கிடைப்பதில்லையென்று துயரப்படுகின்றனர். ஆனால் நீங்கள் எதையும் யாருடனும் கதைப்பதில்லை. உங்களுக்குச் சிவன் அள்ளிக்கொட்டுகிறார். இது ஏன்?”

“யாமறியோம். எனது வயல்கள் குளத்திற்கு மழை நீர் வழிந்தோடிவரும். வாய்க்காலின் இருமருங்கிலும் உள்ளன. வெள்ள நீர் சில காலம் எனது வயலில் தங்கி நிற்பதால் அது தள்ளி வரும் பசளைகள் எனது வயலில் தங்குகின்றன. அத்துடன் உள்ளன்போடு பற்றுக்களின்றி நான் சிவனை வழிபடுகிறேன். விளைந்த நெல்லில் எனது தேவைக்கென எடுத்தபின் மிகுதியை ஏழைகளுக்குக் கொடுத்துவிடுவேன். எனது வயல் விளையாவிட்டால் தன்னை அன்போடு வணங்கும் ஏழைகளுக்கு உணவில்லாமற் போய்விடும் என்று சிவன் நினைக்கிறார் போலும். உள்ளன்போடு திருமுறைகளை ஓதி, கண் குளிரச் சிவனைக் கண்டு மகிழ்ந்தால் எல்லாம் தேடிவரும்” என்றார் கதிரேசன்.

## தானே தோன்றியவன்

**262. தானொரு காலஞ் சயம்புவென் றேத்தினும்**

**வானொரு காலம் வழித்துணை யாய்நிற்குந்**

**தேனொரு பால்திகழ் கொன்றை அணிசிவன்**

**தானொரு வண்ணம்என் அன்பில்நின் றானே.**

“நாகநாதா, நீ முன்பு நாத்திகம் பேசினாய். பின் எனது சொல்லைக் கேட்டுத் தானே தோன்றிய சுயம்புலிங்கேஸ்வரரான சிவபெருமானை அன்பால் பூசித்தாய். உமையம்மையாரை இடப்பாகத்தில் வைத்துக் கொன்றை மாலையை அணிந்த சிவன் உனது அன்புக்கடிமையாகி உன்னோடு கலந்து உறைந்திருக்கிறான் என்று எனக்குத் தெரியும். அன்புக்குருகாத நெஞ்சு உலகில் இல்லை. கொடிய மிருகங்களின் மீதும் அன்பு வைத்தால் மிருகத்தின் குணம் காலப்போக்கில் மாறிவிடும். பலர் காட்டு மிருகங்களைப் பழக்கி வீட்டில் வைத்திருந்து வித்தை காட்டிப் பிழைக்கின்றனர். எமது சிவன்கோவிலில் வசிக்கும் கொடிய நாகத்தைக் கண்டு யார் பயப்படுகிறார்கள்? அந்தக் கொடிய நாகம் மக்களிடம் வந்து உணவு வாங்கி உண்பதை நீங்கள் பார்த்ததில்லையா? கொடிய நாகமே அன்புக்கு அடிபணிந்த போது உலகஉயிர்களின் தந்தையும் தாயுமான சிவனும் உமையம்மையும் அன்பு கொள்ள மாட்டார்களா..? அந்த அன்பால் இறைவனுக்கும் பக்தருக்கும் நட்பு உண்டாகிவிடும். அந்த நட்பு உயிருள்ள வரை மட்டுமல்ல எடுக்கும் பிறப்புக்கள் தோறும் பயன் தரும். அதனால் தான் நான் சிவனின் மீது பற்றில்லாத அன்பு கொண்டுள்ளேன்” என்றார் கதிரேசன்.

உணராதவர்கள்

**263. முன்படைத் தின்பம் படைத்த முதலிடை**

**அன்படைத் தெம்பெரு மானை அறிகிலார்**

**வன்படைத் திந்த அகலிடம் வாழ்வினில்**

**அன்படைத் தான் தன் அகலிடத் தானே.**

சிவநாதன் சிவன் கோவிலுக்கு வந்த போது காலைப் பூசை முடிவடைந்து விட்டது. தான் வருவதாகச் சொல்லியனுப்பியும் அதைக் கவனியாது பூசையை முடித்தது அவனுக்குக் கோபத்தை உண்டாக்கியது. அதனால் கோவில் தலைவருக்குச் சொன்னான், "நான் அவசிய தேவை காரணமாக ஒருவரைச் சந்திக்க வேண்டியிருந்தது. அதை விபரமாகக் கதிரேசனிடம் கூறியிருந்தேன். இருந்தும் அதைக் கவனிக்காது பூசையை முடித்துவிட்டனர். இன்று எனது திருமணநாள். நானும் மனைவியும் பிள்ளைகளும் ஏமாந்துவிட்டோம். பணம் பொருள் தேவையென்று என்னிடம் வருவீர்கள். பூசையைத் தாமதித்துச் செய்தால் என்ன?" ஆத்திரப்பட்டான் சிவநாதன்.

கோவில் தலைவர் அதைக் கேளாதது போலச் சென்றுவிட்டார். கதிரேசன் அதைப் பற்றிச் சொல்லவில்லை. இருந்த போதும் குருக்கள் சொன்னார், "நாம் இறைவனுக்காகக் காத்திருக்கலாமே தவிர இறைவனைக் காத்திருக்க வைக்க முடியாது. ஏராளமான மக்கள் பூசை நேரத்திற்கு வந்து விட்டனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு நேரத்திற்கு வருவதாக அறிவித்தால் எப்போ பூசை செய்வது? இறைவன் தனது ஆற்றலால் உலகையும் உடலையும் உணவையும் படைத்து உடலுள் உயிரை அடைத்துள்ளான். அந்த உயிர்கள் அன்பால் சிவனை வழிபட வேண்டும். பூசை முடிந்தபின் வணங்கக் கூடாதென்றில்லை. காலைப் பூசை முடிந்தால் மதியப் பூசை, மாலைப் பூசை என்று நடைபெறும்.

அப்போது வணங்கலாம். இவற்றை யாரும் உணர்கிறார்களில்லை. அன்புடன் வீட்டில் இருந்து வணங்குவதையும் இறைவன் உணர்வான். இத்தகைய பேரன்பும் பேராற்றலும் வாய்ந்த இறைவனின் பெருமையை உணராது நிலையில்லாத கௌரவம், புகழ், மானம் என்பவற்றைப் பெரிதாக எண்ணிப் பெரும்பான்மையானவர் துன்பப்படுகின்றனர்'' என்றார் குருக்கள்.

அருளால் உணருங்கள்

**264. கருத்துறு செம்பொன்செய் காய்கதிர்ச் சோதி**
**இருத்தியும் வைத்தும் இறைவஎன் றேத்தியும்**
**அருத்தியுள் ஈசனை யாரருள் வேண்டில்**
**விருத்தி கொடுத்திடும் விண்ணவர் கோனே.**

குருக்களின் பேச்சுச் சிவநாதனின் கோபத்தை அதிகரிக்கச் செய்தது, "குருக்கள், சும்மா ஆகமம் விதிமுறைகள் என்று சொல்ல வேண்டாம். ஆகம முறைப்படி கட்டிடம் அமைக்கவும் விதிமுறைப்படி பூசை செய்யவும் பொருள் வேண்டுமே தவிர அன்பு வேண்டியதில்லை. ஏழை எளியவர்களின் அன்பைக் கொண்டு கட்டிடம் கட்டுங்கோ, பூசைகளைச் செய்யுங்கோ..'' என்றான் சிவநாதன். அவனது குரல்படபடத்தது.

"சிவநாதா, பயனில்லாத சொற்களைப் பேசிப் பாவத்தைத் தேடாதே. கட்டிடத்தைச் சிவன் தனது ஆற்றலால் கட்டுவிப்பான். நீ பொருள்

தராமல் விடு. கட்டிடம் கட்டப்படும். பூசைகள் நடைபெறும். உலகில் உள்ள சகல காரியங்களும் யார் இல்லாவிட்டாலும் நடைபெறும். சிவஉலகத் தலைவனான சிவன் எல்லாச் செயல்களையும் செய்பவர்களைக் கொண்டு செய்விப்பான். பேரொளிப் பிழம்பான சிவனை அன்புடன் உள்ளத்தில் இருத்தி, அன்பால் ஆராதித்தால் இவ்வுலக இன்பங்களும் அவ்வுலகப் பேரின்பங்களும் கிடைக்கும். நீ ஒருவனல்ல. ஊரில் உள்ள அரைவாசிக்கும் அதிகமான மக்கள் கட்டிடத்திற்கோ திருவிழாக்களுக்கோ பெரும் பங்களிப்புச் செய்வதில்லை. ஏனென்றால் அவர்கள் ஏழைகள். உண்ணக் கூட வழியில்லாத சண்முகத்தின் இரண்டு பிள்ளைகள் மருத்துவக் கல்லூரிக்குத் தெரிவான போது கதிரேசன் உதவினார். அவரைச் சிவனென்று சண்முகமும் குடும்பமும் ஊரவர்களும் வணங்குகின்றனர். அதனால் பணத்தை ஒரு பொருளாகக் கருதாதே. அன்பு தான் சிவமென்று கருது. உனது வாழ்க்கை மேலும் சிறப்புறும்'' என்றார் குருக்கள்.

மெய்யுணராதவர்கள்

**265. நித்தலுந் துஞ்சும் பிறப்பையும் செய்தவன்**
**வைத்த பரிசறிந் தேயு மனிதர்கள்**
**இச்சையு ளேவைப்பர் எந்தை பிரான்என்று**
**நச்சியே அண்ணலை நாடுகி லாரே.**

“நான் சிவனை எனது தந்தையாகவும் தலைவனாகவும் கொண்டதால் தான் பொருளுதவி செய்கிறேன். இன்று திருமணநாளென்று பூசை செய்ய வந்தேன்” என்றான் சிவநாதன்.

“சிவனைத் தந்தையென்றும் தலைவனென்றும் கூறினால் போதாது. அதை நம்பி அதற்கேற்ற வகையில் வாழவேண்டும். உனது தந்தைக்குக் கொடுக்கும் உணவுக்குப் பணம் கேட்பாயா..? கணக்குப் பார்ப்பாயா..? பார்க்கிறாய்..? உனது தந்தையை நீ முறைப்படி பராமரிக்காததால் அவர் உனது சகோதரனின் வீட்டுக்குச் சென்றார். அவனும் வரவேற்காததால் மடத்தில் வாழ்கிறார். தந்தையென்றும் தலைவனென்றும் சொல்லும் நீ அதன்படி நடவாது கணக்குச் சொல்கிறாய். நீ நினைத்தபடி பூசையைச் செய்யச் சொல்கிறாய். சிவனின் பெருமையை உணர்ந்து அவனைத் தலைவனாக ஏற்றிருந்தால், நீ உனது தந்தை மீதும் ஏனையஉயிர்கள் மீதும் அன்பு செலுத்தியிருப்பாய். அன்பு தான் சிவம். அன்பு வைத்தவர்களை நாடிச் சிவன் செல்வான். உயிர்களும் செல்லும். ஆனால் உன்னைப் பெற்று வளர்த்த உனது தந்தை மீதே நீ அன்பு செலுத்தவில்லை. எல்லோரும் வாய்ச் சொல்லில் வீரர்களாக இருக்கிறார்களே தவிரச் செயலில் ஈடுபடுவதில்லை” என்றார் குருக்கள்.

அன்பிற்கு அகப்படுவான்

**266. அன்பினுள் ளான்புறந் தானுட லூயுளான்**
**முன்பினுள் ளான்முனி வர்க்கும் பிரானவன்**
**அன்பினுள் ளாகி அமரும் அரும்பொருள்**
**அன்பினுள் ளார்க்கே அணைதுணை யாமே.**

குருக்கள் அப்படிச் சொல்லிய பின்பும் சிவநாதனுக்கு நம்பிக்கை வரவில்லை, ‘‘சிவனின் மீது அன்பு வைத்திருந்தால் எதுவும் செய்யத் தேவையில்லை. சிவனது திருவடியுணர்வு எல்லாவற்றையும் செய்யுமென்றால் நானும் அப்படியே செய்கிறேன். இனிமேல் கோவிலுக்கு என்று எதுவும் கேட்டு மக்களை வருத்தாதீர்கள்’’ என்றான்.

‘‘நீ சிவனது பெருமையை உணராது சிவனை வணங்குகிறாய். பின் சிவனுக்காகப் பொருட்களைச் செலவு செய்கிறாய். உனக்கு உந்தப் பொருளைத் தந்தது யார்? நீ இனிமேல் எதுவும் தரவேண்டாம். சிவன் மீது அன்பு கொள். உயிர்களிடத்தும் அன்பு கொள். அதனால் நீ இதுவரை அடையாத இன்பத்தை அடைவாய். வாயால் எதையும் சொல்வது இலகுவானது. செய்வது சிரமமானது. நீ ஒரு நாளைக்கு மற்றவர்களுக்குத் துன்பம் செய்யாது மகிழ்வாக இரு. நீ உதவிகள் செய்யாவிட்டாலும் மகிழ்ச்சியாகப் பேசினால் சிவனின் அருள் உன்னை வந்தடையும். ஏனென்றால் சிவனது உடல் அன்பு, அவன் அன்புக்குக் காவலாக முன்னும் பின்னும் உள்ளேயும் உள்ளான். முற்றும் துறந்த முனிவர்களின் தலைவன் அவன். ஏனென்றால் முற்றும் துறந்த முனிவர்கள் சிவனில் அளவுக்கதிகமான அன்பை வைத்திருக்கின்றனர். அன்பு தான் சிவம் என்பதால் அன்பு செலுத்து’’ என்று கூறிவிட்டுச் சென்று விட்டார் குருக்கள்.

மூன்று மாதங்கள் கழிந்தன. சிவநாதனின் பிறந்த தினம் அன்று. அன்று அவன் நேரத்துடன் பூசைக்கு வந்தான். இதுவரை அவனை வெறுத்த ஊரவர்கள் அவனைச் சூழ்ந்திருந்தனர். பூசை முடிந்ததும் ஏழைகளுக்கு உடைகளும் கல்வி கற்பதற்கான உபகரணங்களையும் சிவநாதன் கொடுத்தான். அப்போது குருக்கள் அங்கே வந்தார். அவரை வணங்கிய சிவநாதன் சொன்னான், ‘‘குருக்கள் நீங்கள் சொன்னபடி நான்

சிவன் மீதும் மக்கள் மீதும் அன்பு செலுத்தினேன். அது வளர்ந்து பேரின்பத்தைத் தருகிறது. எதிரிகள் மகிழ்வுடன் உதவி செய்கின்றனர். ஏமாற்றிய கடன்காரர் வலிய வந்து தாம் வாங்கிய கடனைத் திருப்பித் தருகின்றனர். குடும்பத்தினர் மகிழ்வுடன் இருக்கின்றனர். அன்பு தான் உலகம், அன்பு தான் சிவன். அன்பு தான் பேரின்பமென்று தெரியாமையால் வாழ்வின் பெரும் பகுதியைத் துன்பத்துடன் கடந்து விட்டேன்'' என்றான்.

## 12. அன்பு செய்வாரை அறிவான் சிவன்

அன்பு வைத்துப்பார்

**267. இகழ்ந்ததூம் பெற்றதும் ஈசன் அறியும்**
**ஊகந்தருள் செய்திடும் உத்தம நரதன்**
**கொழுந்தன்பு செய்தருள் கூரவல் லார்க்கு**
**மகிழ்ந்தன்பு செய்யு மருளது வாமே.**

நாவலூரில் நாகநாதன் என்றொரு பெரிய மனிதர் வாழ்ந்து வந்தார். அவர் இரக்க சுபாவம் உள்ளவர். இரப்பவர்களுக்கு இல்லையென்று கூறாது தன்னிடம் இருப்பவற்றைக் கொடுப்பவர். அவரது இனத்தவன் நடராசன். அவன் மகிழ்வாக யாருடனும் கதைப்பது கூட இல்லை. பெற்றோரையும், மனைவி பிள்ளைகளையும் வாய்க்கு வந்தபடி ஏசுவான். அதனால் அவன் இருக்கும் இடங்களுக்கு யாருஞ்செல்வதில்லை. அவன் வீமன் என்றொரு நாயை வளர்த்து வந்தான். நாய் பெயருக்கேற்றபடி வீரனாக இருந்தது. நாகநாதனின்

வீட்டிற்கு அடிக்கடி வருவான். அவர் அன்போடு அவனை வரவேற்றுச் சிற்றூண்டி வகைகள் கொடுத்து அன்புடன் உரையாடுவார். நடராசாவின் பெற்றோரும், மனைவி பிள்ளைகளும் நடராசா தமக்குச் செய்யும் கொடுமைகளை நாகநாதனுக்குச் சொல்வார்கள். ஆதனால் நாகநாதன் அடிக்கடி நடராசாவின் வீட்டுக்கு வந்து அன்பாக கதைத்துப் பிரச்சினைப்படாமல் இருக்குமாறு கூறுவார். அவர் வரும் போது வீமனுடனும் அன்பாகப் பேசுவார். வீமன் மகிழ்வுடன் அவருடன் விளையாடும். ஆனால் அதற்கு நடராசாவைப் பிடிக்காது. நடராசா அடிக்கடி அதற்கு அடிப்பதால் அவர் கம்பை எடுத்தால் அது கோபம் கொள்ளும். அன்று மனைவியுடன் நடராசா சண்டைபிடித்த போது வீமன் அவ்விடத்திற்கு உறுமியபடி வந்தது. தனது சோற்றைத் திண்டுவிட்டுத் தன்னைக் கோபித்த வீமனை அவரால் மன்னிக்க முடியவில்லை. கோபமிகுதியுடன் அதற்குக் காலால் அடித்தார். உடனே அது பாய்ந்து பல முறை அவரைக் கடித்து விட்டது. அதனால் கோபம் கொண்ட நடராசா பெரியதொரு கம்பை எடுத்து வீமனைத் துரத்தினார். வீமன் நாகநாதனின் வீட்டிற்குச் வந்து ஊளையிட்டு அழுதுவிட்டு அவரின் காலடியில் படுத்துவிட்டது.

நாகநாதன் நடராசாவின் வீட்டுக்கு வந்தார். நடராசா ஆஸ்பத்திரிக்குச் சென்று ஏற்பூசி போட்டுவிட்டு வீட்டுக்கு வந்த போது வீட்டில் யாரும் இருக்கவில்லை. நாகநாதனைக் கண்ட நடராசா கோபமிகுதியுடன் நடந்தவற்றைச் சொன்னார். நாயையும் வீட்டாரையும் கொலை செய்ய வேண்டும் என்று ஆத்திரத்துடன் கத்தினார்.

நாகநாதன் அமைதியாகச் சொன்னார், ‘‘நடராசா அன்பு தான் சிவம். அன்பு செலுத்தி வாழ்கின்றவர்களுக்கு ஒரு போதும் மகிழ்ச்சிக்குக் குறைவில்லை. அவர்களுக்கு மகிழ்வையும் சகல செல்வங்களையும்

நமது முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் எப்போதும் கொடுப்பார். அவர் அன்பு செலுத்துபவர்களையும், அன்பு செலுத்தாதவர்களையும் அறிந்து அவரவர்க்கேற்ற வெகுமதிகளைக் கொடுப்பார். பகுத்தறிவில்லாத உனது நாய்க்கே அன்பு செலுத்துபவர்களையும் அன்பு செலுத்தாதவர்களையும் தெரிகிறது. அது நீ அடித்ததால் எனது வீட்டிற்கு வந்துள்ளது. நாய்க்கே இவையெல்லாம் தெரியுமாயிருந்தால் இவ்வுலகைப் படைத்த சிவனுக்கு அது தெரியாதா என்ன? அன்பு தான் சிவம், அன்பு தான் செல்வம், அன்பு தான் உலகம். நீ யார் மீதாவது அன்பு செலுத்திப்பார். அவர்கள் உன் மீது அன்பு செலுத்தும் போது உண்டாகும் இன்பத்தை அனுபவித்துப்பார்.அதன் பின் உனக்கு அன்பின் பயன் தெரியவரும். உலகில் வாழும் உயிர்கள் அனைத்தும் இன்பமாக வாழவே விரும்புகின்றன. இன்பமாக வாழவேண்டுமானால் பிறஉயிர்கள் மீது அன்பு செலுத்த வேண்டும். இவ்வுலகில் இன்பமாக வாழ்பவர்கள் தான் மறு உலகிலும் இன்பமாக வாழ்வார்கள். அதனால் நீ உனது குடும்பத்தின் மீது அன்பு செலுத்து. குடும்பத்தின் மீது அன்பு கொண்டவன் உயிர்கள் அனைத்திலும் அன்பு கொண்டவனாக இருப்பான். அதனால் அவன் கடவுள் மீதும் அன்பு கொள்வான். கடவுளும் அவன் மீது அன்பு கொண்டு அவனுக்குச் சகல சௌபாக்கியங்களையும் அளிப்பார். நீ அன்புள்ளவனாக இருந்திருந்தால் உனது நாய் உனக்குக் கடித்திருக்காது.உனது பெற்றோரும் மனைவி மக்களும்வீட்டைவிட்டுச் சென்றிருக்கமாட்டார்கள். இப்போது நீ நடக்க முடியாமல் இருக்கிறாய். மேற்கொண்டு என்ன செய்யப்போகிறாய்? உன்னைக் கவனிப்பது யார்? எனவே இனியாவது அன்புள்ளம் கொண்டவனாக வாழப்பார்" என்று கூறிவிட்டு நடராசாவின் மனைவி பிள்ளைகளை அழைத்துவரச் சென்றார் நாகநாதன்.

கருவி

**268. இன்பப் பிறவிக் கியல்வது செய்தவன்**
**துன்பப் பிறவித் தொழில்பல என்னினும்**
**அன்பிற் கலவிசெய் தாதிப் பிரான்வைத்த**
**முன்பிப் பிறவி முடிவது தானே**

“குருக்கள், முன்பு நான் அறியாமையால் பல தவறுகளைச் செய்து விட்டேன். பணத்தால் யாவற்றையும் செய்யலாமென்றும், பணத்தைச் செலவு செய்து கோபுரங்களைக் கட்டியும், பெரும் பூசைகள் செய்தும் சகல வித்தைகளையும் பெறலாமென நினைத்தேன். அப்படியே செயற்பட்டேன். ஆனால் எதுவும் நடக்கவில்லை. பகை வளர்ந்தது, திமிர் அதிகரித்தது, ஆணவம் தலைக்கேறியது. ஆனால் பொருளைச் செலவு செய்யாது அன்புள்ளவனாக மாறினேன். மகிழ்வும் நிம்மதியும் உதவிகளும் பெருமைகளும் என்னைத் தேடி வந்தன. முன்பு என்னை ஏசிய ஊரவர் இப்போது புகழ்கிறார்கள், திமிராக நடந்தவர்கள் எழுந்து மரியாதை செய்கிறார்கள். இதைவிட வேறு என்ன வேண்டும்? இவ்வுலகில் அன்பால் இன்பப் பிறவியெடுத்து இன்பமாக வாழச்சிவன் வழிவகுத்துள்ளான். வரும் துன்பங்களை அன்பால் வெல்லவும் வழிவகுத்துள்ளான். இதையறியாது நான் வாழ்ந்து விட்டேன். இப்போது உங்கள் மூலம் சகலவற்றையும் அறிந்து மகிழ்கிறேன்” என்றான் சிவநாதன்.

**269. அன்புறு சிந்தையின் மேலெழும் அவ்வொளி**
**இன்புறு கண்ணியொ டேற்க இசைந்தன**
**துன்புறு கண்ணியைந் தாடுந் துடக்கற்று**
**நண்புறு சிந்தையை நாடுமின் நீரே.**

“குருக்கள், கந்தவனத்தின் மகளை எனது மகன் விரும்பினான். கந்தவனம் பரம ஏழை. அதனால் எனது மகனை அவளைத் திருமணம் செய்யாதே எனத் தடுத்து வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து வைத்தேன். அன்பைப் பற்றித் தெரியாமையால் தான் நான் அன்று அப்படி நடந்தேன். அதனால் மணமுடைந்த கந்தவனத்தின் மகள் தற்கொலை செய்து கொண்டாள். அதை நான் அப்போது பெரிதாக நினைக்கவில்லை. ஆனால் இப்போது நினைக்க நெஞ்சு வெடித்து விடும் போல் உள்ளது. சிற்றின்பத்தையும் பேரின்பத்தையும் தரவல்ல அம்மையுடன் சிவன் சேர்ந்திருக்கிறான். அம்மையுடன் சேர்ந்திருப்பது ஆருயிர்களுக்கு இன்பத்தைத் தருவதற்காக என்று ஆகமங்கள் கூறுகின்றன. சிவன் மீது அன்று அன்பு செலுத்தாததால் தான் நான் அப்படி நடந்தேன். அதனால் எனது மகன் பாதிக்கப்பட்டுள்ளான். எல்லாம் சிவன் செயல். இன்பத்தைத் தருவதற்காகத் துன்பங்களை அவன் தருகிறான் என்று நினைத்தால் துன்பங்கள் யாவும் இன்பமாகி விடும். ஐம்புலன்களும் தம் செயலை இழக்கும். அன்பு பெருகப் பெருக ஆணவம் மறையுமென்று இப்போது எனக்குத் தெரிகிறது. அதற்குப் பரிகாரமாக எனது இளைய மகனைக் கந்தவனத்தின் இளைய மகளுக்குத் திருமணம் செய்து கொடுக்கலாமென்றிருக்கிறேன். சிவனைப் போல மக்கள் மீது அன்பைச் சொரியும் நீங்கள் தான் இதை நடத்தி வைத்தல் வேண்டும். நான் சென்று கேட்டால் பிரச்சினைகள் வரும்” என்று அழுதான் சிவநாதன்.

அணைத்தருளுபவன்

**270. புணர்ச்சியுள் ஆயிழை மேல்அன்பு போல**

**உணர்ச்சியுள் ஆங்கே ஒடுங்கவல் லாருக்கு**

**உணர்ச்சியில் லாது குலாவி உலாவி**

**அணைத்தலும் இன்பம் அதுவிது வாமே.**

“சிவநாதா, உனது ஆணவத்தால் அன்று ஓர் உயிர் பலியானது. உனது இளைய மகன் சிவலிங்கத்தின் மகள் சாரதாவை விரும்புகிறான். உனக்குப் பயந்து அவர்கள் இரகசியமாகத் தமது நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். உனது மகன் என்னிடம் தன் காதலைத் தெரிவித்து உன்னிடம் சொல்லிச் சம்மதம் பெற்றுத் தரச் சொன்னான். நான் பழைய சம்பவங்களைக் கூறிப் பொறுத்திருக்குமாறு கூறியுள்ளேன். அவர்கள் திருட்டுத் திருமணம் செய்ய நினைக்கின்றனர். அதைச் சிவலிங்கம் விரும்பவில்லை. சிவலிங்கம் சாதியில் குறைந்தவனானாலும் சிவபக்தன். சிவன் தனக்கு அருள்வார் என்று சொல்கிறான். தனது மகளும் சிவனின் அடியவள். அதனால் அவள் தனது காதலனுடன் கூடிக்குலாவி இன்புற்றிருக்க அனுக்கிரகம் செய்வானென்கிறாள். நீயும் சிவபக்தனாகி விட்டாய் அதனால் அன்பின் பெருமையைப் பற்றி உனக்குத் தெரியும். கந்தவனத்தின் இனத்தவன் தான் சிவலிங்கம்” என்றார் குருக்கள்.

அதைச் சிவநாதன் எதிர்பார்க்கவில்லை. தான் செய்த பழிக்குப் பிராயச்சித்தம் தேடவே விரும்பினார்.

“சிவநாதா, கருத்தொருமித்த காதலர்களை இன்பம் பெற வைப்பவன் சிவன். நீ பிராயச்சித்தமாகச் செய்யும் செயல் சிலசமயம் தீமையைத் தரலாம். அதனால் அவர்களை வாழவிடு” என்றார் குருக்கள்.

சில நிமிடங்கள் கண்களை மூடியபடி நின்ற சிவநாதன் கண் விழித்ததும் சொன்னான், ‘‘எனக்கு விருப்பம். மேற்கொண்டு செயல்களைச் செய்யுங்கள்’’ என்றான் சிவநாதன்.

சித்தர்களாலும் உணரப்படாதவன்

**271. உற்றுநின் றாரொடு மத்தகு சோதியைச்**
**சித்தர்கள் என்றுந் தெரிந்தறி வார்இல்லை**
**பத்திமை யாலே பணிந்தடி யார்தொழ**
**முத்தி கொடுத்தவர் முன்புநின் றானே.**

‘‘சிவநாதா, சித்தர்கள் தம் முனைப்பால் சிவனைக் கொண்டு வேலை வாங்குவர். சித்தர்களின் எண்ணப்படி பக்தர்களுக்குச் சிவன் தொழிலாளியாகப் புராணங்களில் செயற்பட்டுள்ளான். ஆனால் வல்லமை வாய்ந்த சித்தர்களால் கூடச் சிவபெருமான் தேர்ந்துணரப்படுபவனல்ல. ஆனால் அளவிறந்த அன்பினால் தன் திருவடியைப் பணியும் அடியார்க்குத் தன்னைக் காட்டித் தன்னோடு சேர்த்துக் கொள்ளும் தன்மை சிவனுக்குண்டு. நீ சித்தனல்ல. பக்தன் என்பதை இப்போது தான் நான் உணர்கிறேன். என்னை மதித்துக் குருவாக ஏற்று என்னையே செய்து வைக்கும்படி சொல்லியுள்ளாய். இனிமேல் மனம் மாறமாட்டாய் என்ற துணிவில் நான் சிவலிங்கத்தின் வீட்டுக்குச் செல்கிறேன்’’ என்றார் குருக்கள்.

‘‘நான் சிவனின் பக்தன். வாக்குத் தவற மாட்டேன்’’ என்றான் சிவநாதன்.

கண்டேன் அவன் திருப்பாதம்

**272. கண்டேன் கமழ்தரு கொன்றையி னான்அடி**
**கண்டேன் கரியுரி யான்றன் கழலிணை**
**கண்டேன் கமல மலர்உறை வானடி**
**கண்டேன் கழலதென் அன்பினுள் யானே.**

“குருக்கள், எப்போதும் ஒருவன் ஒரே மாதிரியாக வாழ்வானென்று நினைத்தலாகாது. அறியாமையால் தான் என்னைப் போன்ற பலர் சிவனது பெருமையை அறியாதிருக்கின்றனர். சிவன் மீது அன்பு வைத்தால் அது காட்டாறு போலப் பெருகிக்கொண்டேயிருக்கும். அப்பெருவெள்ளத்தால் ஐம்புலன்களின் பற்றுக்கள் பாசங்கள் யாவும் அடித்துச் செல்லப்பட்டுவிடும். கொன்றை மாலையை அணிந்த சிவனை, ஆணவத்துடன் கொல்ல யானை உருவில் வந்த அசுரனைக் கொன்று அதன் தோலை உரித்து ஆடையாக அணிந்த சிவபெருமான், என்உள்ளத்தாமரையில் உறைந்திருப்பதையும் கண்டேன். அன்புப் பெருக்கால் அவனது கழலையும் கண்டேன். கண்டபின் என்னால் திருவடியைத்தவிர வேறு எதையும் அறிந்து கொள்ள முடியவில்லை. அதனால் உங்களுடன் சிவலிங்கத்தின் வீட்டுக்கு நானும் வருகிறேன்” என்றான் சிவநாதன்.

குருக்கள் திகைத்துப்போனார்.

அன்பு வைத்தவர் அறிவர்

**273. நம்பனை நானா விதப்பொரு ளாகுமென்று**
**உம்பரில் வானவர் ஓதுந் தலைவனை**
**இன்பனை இன்பத் திடைநின் றிரதிக்கும்**

**அன்பனை யாரும் அறியகி லாரே.**

“குருக்கள், சிவனை நான் முன்பு நம்புவதில்லை. அதனால் எனக்குத் தொடர்ந்து துன்பங்களே வந்தன. சிவனை நம்புபவர் மகிழ்வோடு இருக்க நான் துன்பப்படுவது ஏன் என்று நினைத்தேன். நீங்கள் தான் ஒரு நாள் மட்டும் சிவனில் அன்பு வைத்துப்பார் என்றீர்கள். ஒரு நாள் வைத்தேன். மறு நாள் அது அதிகரித்தது. பின் நாளாக நாளாக அது பெருகியது. ஒரு நாள் ஆறுமுகம் தனது மகனான செந்தூரனுக்குச் சத்திரசிகிச்சை செய்ய ஒரு இலட்சம் ரூபா கேட்டான். அவன் கேட்டதும் சிவனை நினைத்தேன். அப்போது என்னிடம் பணம் இல்லை. என்ன செய்வதென்று கலங்கிய போது ஐந்து வருடங்களுக்கு முன் என்னை ஏமாற்றி ஐந்து இலட்சம் ரூபா கடன் வாங்கிக் கொண்டு வெளிநாட்டிற்குச் சென்ற பரம்சோதி என்றவன் என்னைத் தேடி வந்து தன்னை மன்னிக்கும்படி கூறி வட்டியும் முதலுமாகப் பத்து இலட்சம் ரூபா தந்தான். நான் அதில் இரண்டு இலட்சம் ரூபாவைக் கொடுத்தேன். அதைக் கண்டு திகைத்த ஆறுமுகம், “ஐயா, நான் வணங்கும் சிவன் நீங்கள் தான். சிவன் தான் எனக்குதவ உங்கள் உருவில் வந்துள்ளார்” என்று கூறி எனது கால்களில் விழுந்து வணங்கினான்.

“சிவன் நம்பியவர்க்குப் புகலிடமானவன். தேவர்கள் போற்றும் தலைவன். ஆருயிர்களுக்கு என்றும் பேரின்பத்தை வழங்குபவன் என்று புராணங்கள் கூறுகின்றன. அது உண்மை . எனக்கும் அவன் தான் புகலிடம்” என்றான் சிவநாதன்.

இறைவனை அறியும் விதம்

**274. முன்பு பிறப்பும் இறப்பும் அறியாதார்**

**அன்பில் இறைவனை யாம்அறி வோம்என்பர்**

**இன்பப் பிறப்பும் இறப்பும் இலான்நந்தி**

**அன்பி லவனை அறியகி லாரே.**

அன்று ஊரில் பெரும் வர்த்தகனான பேரின்பநாதன் திடீரென்று இறந்து விட்டான். அவனோடு வர்த்தகத்தில் பங்காளிகளாக அவரது சகோதரர்கள் மூவர் இருந்தனர். பேரின்ப நாதன் எதையும் எழுதி வைப்பதில்லை. அத்துடன் யார் யாரிடம் எவ்வளவு பணம் கடனாகப் பெற்றார் என்பதும் யாருக்கும் தெரியாது. அதனால் மரணவீட்டில் பெரும் கலவரம் நடைபெற்றது. பிரேதத்தைக் கவனிக்காது ஒவ்வொருவரும் தத்தமது நிலையைக் கூறிச் சண்டையிட்டனர். அதைப் பார்த்த சிவநாதனுக்குத் துக்கமாக இருந்தது. அவர் பேரின்ப நாதன் இறப்பதற்கு முதல் நாள் அவரிடஞ் சென்று விபத்துக்குள்ளாகியிருக்கும் நாராயணனைத் தனியார் வைத்தியசாலையில் சேர்ப்பதற்குப் பணவுதவி செய்யுமாறு கேட்டார்.

“சிவநாதா, எனக்கு நாராயணனைப் பற்றித் தெரியும். கஷ்டப்பட்டு உழைக்காது உறவினரிடம் தண்டி வாழ்பவன். இப்படியான நிலை வருமென்று நினைத்துப் பணத்தைத் தேடி வைத்திருத்தல் வேண்டும். அவனைப் போலப் பலர் கஷ்டப்படாமல் வாழ்ந்து மற்றவர்களின் உழைப்பைச் சுரண்டுகிறார்கள். நீ முட்டாள். பலருக்கு உதவி செய்கிறாய். நான் புத்திசாலி. இறைவன் அன்பே வடிவானவன். அவனை வணங்கினால் எல்லாம் கிடைக்கும். பலர் இறைவனை மதிக்காது திமிரோடு வாழ்கின்றனர். அதனால் என்னால் எதுவும் தரமுடியாது” என்றார்.

“உன்னைப் போல யாருக்கும் எதுவும் கொடாது வாழ்ந்த நாகமணி திடீரென்று இறந்த போது பிள்ளைகள் சொத்துக்காகச் சண்டையிட்டனர்.

அது கொலையில் முடிவடைந்ததை நீ அறிவாய். அன்பே வடிவான இறைவனை அன்போடு துதிக்கும் அடியவர்களுக்கு இரங்கி உதவிகள் செய்தால் இறைவன் அன்போடு உதவுபவர்களுக்குப் பேரின்பத்தைக் கொடுப்பான். அன்போடு வணங்காது இறைவனைப் பற்றி அறிந்ததாகக் கூறுவதால் பயனில்லை'' என்று கூறிவிட்டு வந்தார். அதை நினைக்க அவருக்கு வேதனையாக இருந்தது. படித்தென்ன பணமிருந்தென்ன அன்பு மனதில் இருக்காவிட்டால் வாழும் வாழ்க்கையில் இன்பமிராது. இன்று பேரின்பநாதன் இறந்து விட்டார். அவர் இறைவன் மீது அன்புள்ளவர், இறைவனை அறிந்தவறென்றால் தினமும் நடைபெறும் பிறப்புக்களையும் இறப்புக்களையும் உலகநடப்புக்களையும் பார்த்துத் திருந்தியிருத்தல் வேண்டும். நாகமணியின் மரணவீட்டில் நடந்ததை உணர்ந்திருந்தால் பேரின்பநாதன் திருந்தியிருப்பான்'' என்று எண்ணினார் சிவநாதன்.

அடிமைகள்

**275. ஈசன் அறியும் இராப்பக லுந்தன்னைப்**
**பாசத்துள் வைத்துப் பரிவுசெய் வார்களைத்**
**தேசுற் றறிந்து செயலற் றிருந்திடில்**
**ஈசன்வந் தெம்மிடை ஈட்டிநின் றானே.**

பேரின்பநாதனின் சகோதரன் தில்லைநாதன். அவன் சிவநாதனிடம் வந்து சொன்னான், ''அண்ணை நீங்கள் ஊரில் பெரிய மனிதர். உங்களின் சொல்லை ஊரவர் கேட்பர். நீங்கள் தான் எமது பிரச்சினையைத் தீர்த்து வைத்தல் வேண்டும். ஊரிலுள்ள பெரிய மனிதர்கள் எவரும் அண்ணனின் மரணவீட்டிற்கு வரவில்லை. பிரேதம் எடுத்து நாலைந்து தினங்களின் பின்பு வந்து துக்கம் விசாரித்து விட்டுச்

சென்றனர். அண்ணன் எல்லாருடைய நல்ல கெட்ட விடயங்களையும் முன்னின்று செய்பவர். அதை நினைக்கக் கவலையாக இருக்கிறது'' என்றான்.

''தில்லை, பிரச்சினைகள் உள்ள இடத்திற்கு நல்லவர்கள் செல்லமாட்டார்கள். அதனால் அவமானமும் துன்பமும் ஏற்படும். உங்களின் குடும்பச் சண்டையை விலக்க வந்த பலரை நீங்கள் தாங்கியுள்ளீர்கள். உங்களுக்குக் கடவுளின் மீது நம்பிக்கையில்லை. இரவும் பகலும் மறவா நிலையில் சிவனைத் தொழுதல் வேண்டும். திருவைந்தெழுத்தைத் தினமும் முறைப்படி ஓதுதல் வேண்டும். அப்படி ஓதிவந்தால் சிவன் மீது பற்று அதிகரிக்கும். பற்று அதிகரிக்க அதிகரிக்க அதைச் சிவன் உணர்ந்து அவர்களின் செயல்களைச் சிவமயப்படுத்துவான். அதனால் அவர்கள் சிவத்துடன் கலந்து கொள்வர். சிவத்துடன் கலந்த ஆருயிருக்கு வேறு பற்றுக்கள் இராது. நேர்மை, நிதானம், பற்றின்மை, திங்கிழையாமை, மனப்பக்குவம் என்பன உண்டாகும். இவையுண்டானால் சண்டை சச்சரவுகள் வராது. இதற்காகத் தான் கடவுளை வணங்கும்படி பெரியவர்கள் சொல்லியுள்ளனர். உனது சகோதரனுக்கோ அல்லது அவரது பிள்ளைகளுக்கோ சிவநினைவு சிறிதளவாவது இருந்திருந்தால் அன்று பெரும் சண்டை நடந்திருக்காது. தீய குணங்களை இல்லாதொழிக்கத் தான் சிவவழிபாடு உதவுகிறது. தீய குணங்கள் இல்லாவிட்டால் அன்பு பண்பு பாசம் மனித நேயம் என்பன உண்டாகும். அவை தான் கடவுள். அன்பு தான் சிவன். நீங்கள் அன்பை உணராதபடியால் சிவனை அவமதிக்கிறீர்கள். சிவனை அன்புடன் தொழுங்கள், உங்கள் பிரச்சினைகள் தீரும். இல்லாவிட்டால் பிரச்சினைகள் பெருகுமே தவிரக் குறைவடையாது. சிவசிந்தனையில்லாதவர்களுக்குப் புத்திமதிகள் கூறுவதால் பயனில்லை'' என்றார் சிவநாதன்.

திருமஞ்சனம்

**276. விட்டுப் பிடிப்பதென் மேதகு சோதியைத்**

**தொட்டுத் தொடர்வன் தொலையாய்**

**பெருமையை**

**எட்டுமென் னாருயி ராய்நின்ற ஈசனை**

**மட்டுக் கலப்பது மஞ்சன மாமே.**

"அண்ணை உங்களை விட்டால் எமது குடும்பத்தினரைக் காப்பாற்ற யாரும் இல்லை. தயவு செய்து வந்து எனது சகோதரனின் பிள்ளைகளுக்கு நீதியை எடுத்துரையுங்கள்" என்று கெஞ்சினான் தில்லைநாதன்.

"தில்லை, அன்புள்ளம் கொண்டவர்களுக்குத் தான் சொல்வது விளங்கும். ஏனென்றால் அவர்கள் சிவன் மேல் அன்பு கொண்டவர்கள். சோதிமயமான சிவனைத் தமது உள்ளத்தில் இருத்தித் தினமும் இடையறாது ஆராதனை செய்பவர்கள். அப்படியானவர்களுக்குத் தான் நீதி நியாயம் விளங்கும். அருட்பெரும் சோதியான சிவனை மனதில் இருத்தாதவர்களுக்கு எதுவும் விளங்காது. சிவன் மனதில் இருந்தால் பயமில்லை, துக்கமில்லை, பற்றுக்கள் எவையும் இராது. ஏனென்றால் அன்பு மயமான தூயமனதை முழுமையாகச் சிவன் நிரப்பி விடுவதால் வேறு எவையும் அங்கு குடியேற முடியாது. உங்கள் மனதில் சிவனைத் தவிர மற்றெல்லாம் இருக்கின்றன. அதனால் சிவனே வந்து சொன்னாலும் அவை கேளா. உனது மனதிலும் சிவன் இல்லை. இருந்திருந்தால் நான் கூறியவற்றை ஏற்றிருப்பாய். முதலில் நீ அருட்பெரும் சோதி வடிவான சிவனை உனது மனதில் இருத்தி

அவனைப் போற்றி வணங்கு. அப்போது உனக்கு யாரும் கூறாமலே நீதி நியாயம் விளங்கும். அதைச் சிவனே உனக்கு விளக்குவார். சிவனைப் பேரன்புடன் நினைத்து அவனோடு கலப்பதைத் திருமஞ்சன வழிபாடு என்பர். நீ அதைச் செய் உனக்கு வந்த பிரச்சினைகள் யாவும் தீரும்'' என்றார் சிவநாதன்.

## 13. கல்வி

மெய்யுணர்வுக் கல்வி

**277. குறிப்பறிந் தேனுடல் உயிரது கூடிச்**
**செறிப்பறிந் தேன்மிகு தேவர் பிரானை**
**மறிப்பறி யாதுவந் துள்ளம் புகுந்தான்**
**கறிப்பறி யாமிகுங் கல்விகற் றேனே.**

``தில்லை, நீ கற்றவன். பட்டப்படிப்பை மேற்கொண்டு ஆசிரியராகப் பணிபுரிபவன். நான் பெரிதாகக் கற்காதவன். அதனால் கல்வியறிவில்லாதவன். உனது குடும்பத்தவர்கள் அனைவரும் கல்வியில் மேம்பட்டவர்கள். அப்படியிருக்கப் பல்கலைக்கழகம் சென்று உயர்கல்வி கற்காத என்னை உனது குடும்பத்தவர்கள் மனிதனாகக் கூட மதிக்க மாட்டார்கள். சிவனைத் தவிர வேறெதுவும் எனக்குத் தெரியாது. ஒவ்வொருவரும் செய்யும் வினைக் கேற்பவே பிறப்புக்கள்

உருவாகின்றன. அதற்கேற்பவே உடல்களும் அமைகின்றன. சிவன் மீது அன்பு செலுத்தினால் அவன் அன்பு செலுத்துபவர்களுடன் கலந்திருப்பானென்று சமய நூல்கள் கூறுகின்றன. சிவனும் நானும் உவப்புடன் கலந்திருக்கிறோம். இது மெய்யுணர்வுக் கல்வி. சிவனின் மெய்யுணர்வைப் பெற்றவர்கள் எல்லா உயிர்களையும் அன்புடன் நேசிப்பார்கள். அவ்வுயிர்களும் அவர்களை அன்புடன் நேசிக்கும். கோவிலுக்குச் சென்றால் அங்குள்ள பறவைகளும் மிருகங்களும் என்னுடன் வந்து கோவிலுள் நான் செல்லுமிடமெல்லாம் கூடவருகின்றன. இது அன்பால் வந்த உறவு. அன்பே சிவமென்று உணர்ந்தவர்கள் தான் அன்பைப் பற்றித் தெரிந்திருப்பார்கள். மற்றவர்களுக்குப் பணம் பொருள் பதவி பகட்டுப் பற்றித் தான் தெரியும். அதனால் என்னை விட்டுவிடு'' என்றார் சிவநாதன்.

கல்வியே கண்

**278. கற்றறிவாளர் கருதிய காலத்துக்**

**கற்றறிவாளர் கருத்திவோர் கண்ணுண்டு**

**கற்றறிவாளர் கருதிஉரை செய்யுங்**

**கற்றறி காட்டக் கயலுள வாக்குமே.**

நாவலூரில் சிவஞானம் என்றொரு பண்டிதர் இருந்தார். அவர் வேதங்களையும் உபநிடதங்களையும் சைவசித்தாந்த நூல்களையும் கற்றுத் தேர்ந்தவர். அவ்வூரவர்கள் எக்காரியத்தையும் அவரைக்கேளாது செய்யமாட்டார்கள்.

அவ்வூரில் சுந்தரம், மாணிக்கம் என்று இரு வணிகர்கள் இருந்தனர். சுந்தரன் சிறிய வணிகன். அவனிடம் ஒரு கப்பல் மட்டும் இருந்தது. அதில் அவன் பொருட்களை ஏற்றி உள்ளூரில் வியாபாரம்

செய்து வந்தான். மாணிக்கனிடம் பத்து கப்பல்கள் இருந்தன. அவற்றில் அவன் பொருட்களை ஏற்றிப் பிறநாடுகளில் வியாபாரம் செய்து வந்தான்.

சுந்தரமும் மாணிக்கமும் சிவஞானத்தின் வீட்டிற்கு வருவார்கள். சுந்தரம் கால் நடையாக வருவான். ஆனால் மாணிக்கம் ஆடம்பரமான மோட்டார் வண்டியில் வருவான். சுந்தரன் வந்து நிலத்தில் அமர்ந்திருந்து கதைப்பான். மாணிக்கன் ஆடம்பரமாக வந்து நாற்காலியில் காலுக்கு மேல் கால்போட்டு அமர்ந்திருந்து கதைப்பான்.

அன்று மாணிக்கனை அயல்நாட்டரசன் ஐந்து கப்பல்களில் உணவு வகைகளும்,இயந்திரங்களும், பொன்னாபரணங்களும் விலையுயர்ந்த மாணிக்கங்களும், மரகதங்களும் கொண்டு வருமாறு கூறியிருந்தான்.அதனால் அவன் கப்பல்கள் புறப்படுவதற்கான நல்ல நேரத்தைக் கேட்க வந்திருந்தான். சிவஞானம் சிறிது நேரம் யோசித்து விட்டுச் சொன்னார்,''மிகமிகப் பெறுமதியான பொருட்களை ஒரு நாளில் பல கப்பல்களில் கொண்டு செல்லாதே. ஒவ்வொன்றாக அனுப்பு. முதலில்உணவுக் கப்பல்களை அனுப்பு'' என்றார்.

அவன் சென்ற பின் சுந்தரன் சொன்னான்,''ஐயா, நான் முதன் முதலாகப் பொருட்களை ஏற்றி வெளிநாடொன்றிற்கு அனுப்பவுள்ளேன், அதற்கு நாள் குறித்துத் தாருங்கள். நான் வெளிநாட்டிற்குப் பொருட்களை அனுப்பலாமா என்றும் கூறுங்கள்'' என்றான்.

சிவஞானம், ''இன்று மாலையே அனுப்பு'' என்றார். மாணிக்கனுக்குச் சிவஞானம் சொன்னதில் நம்பிக்கையில்லை. அதனால் அயல்நாட்டரசன் கேட்ட பொருட்களையெல்லாம் திரட்டி அன்றே அனுப்பிவிட்டான்.

அயல்நாட்டரசனின் மந்திரி கடற்கொள்ளைக்காரர்களுடன் தொடர்புள்ளவன். அதனால் மாணிக்கனின் கப்பல்கள் பெறுமதியான பொருட்களுடன் வருவதைக் கடற்கொள்ளைக்காரர்களுக்கு அறிவித்துவிட்டான். கடற்கொள்ளைக்காரர்கள் பெறுமதியான ஆபரணங்கள் கொண்டு சென்ற கப்பலை ஆயுத முனையில் கடத்திச் சென்றனர். ஆதனால் மாணிக்கன் தனது எட்டுக் கப்பல்களை விற்றுக் கடனைக் கட்டினான். அந்த எட்டுக் கப்பல்களில் ஐந்தைச் சுந்தரன் சிவஞானத்தின் சொற்படி வாங்கினான்.

“கல்வியுடன் திருவருட்கல்வி பெற்ற செந்நெறியாளர் சிவனருளால் பின் நடப்பவையெல்லாவற்றையும் அறிந்து கொள்வார்கள். அவர்களுக்கு அவர்கள் கற்ற கல்வி ஓர் அகக்கண்ணைக் கொடுக்கும். அந்த ஞானக்கண்ணுக்குப் புலப்படாதது எதுவும் இல்லை. சிவஞானம் ஐயா ஞானக்கண் உடையவர். அதனால் தான் அவர் உன்னை ஐந்து கப்பல்களையும் ஒன்றாக அனுப்பவேண்டாம் என்று கூறினார். நீ அதைக்கேளாததால் நட்டமடைந்தாய்” என்று மாணிக்கனுக்குச் சுந்தரன் கூறினான், ‘தான் கல்வியறிவில்லாததால் அதை உணர்ந்து கொள்ளவில்லை’ என்று மாணிக்கன் வருந்தினான்.

மணிவிளக்கு

**279. நிற்கின்ற போதே நிலையுடை யான்கழல்**
**கற்கின்ற செய்மின் கழிந்தறும் பாவங்கள்**
**சொற்குன்றல் இன்றித் தொழுமின் தொழுதபின்**
**மற்றொன் றிலாத மணிவிளக் காமே.**

தில்லைநாதன் சென்ற பின்பு நாகநாதன் வந்து சிவநாதனுக்குச் சொன்னான், "தில்லைநாதன் உங்களிடம் வந்து கதைத்ததைப் பற்றிச் சொன்னான். அவர்களைத் திருத்த முடியாது."

தில்லைநாதன் ஆசிரியன். அவனது மனைவியும் ஆசிரியை. ஆறு வயதுப் பாலகனுக்கு அவள் இரத்தம் வரும்படி கொடுமையாக அடித்துள்ளாள். அது விசாரனையில் உள்ளது. அந்த ஆறு வயதுப் பாலகனுக்கு நல்லது கெட்டது தெரியுமா? அதைவிடப் பாவமான விஷயம் தில்லைநாதன் அப்பாலகனுக்கு அடித்தது சரியென்றும், ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாதென்கிறான். இப்படிப்பட்டவர்களுடன் சமாதானம் பேசமுடியுமா என்ன? கற்றவர்கள் கற்றபடி வாழவேண்டும். எல்லோரிடத்தும் அன்பாக இருத்தல் வேண்டும். திருவைந்தெழுத்தை முறைப்படி ஓதுதல் வேண்டும். திருமுறைகளைப் பண்ணுடன் பொருளுணர்ந்து பாடுதல் வேண்டும். கோவில் திருவிழாக் காலங்களில் தில்லைநாதன் பஞ்சபுராணங்களை ஓதுவான். பண் இல்லாதிருந்தால் பரவாயில்லை. பிழையாகவல்லா ஓதுகிறான். அதைக் கதிரேசன் சுட்டிக் காட்டிய போது அவருடன் சண்டைக்குப் போனான். தான் பல்கலைக்கழகத்தில் கற்றவனாம். கதிரேசன் ஊர்ப்பாடசாலையில் ஐந்தாம் வகுப்புக் கற்றவராம். அதன் பின் யாரும் அவனுடன் கதைப்பதில்லை. திருவைந்தெழுத்தை ஓதியபடி திருத்தொண்டு செய்தல் வேண்டும். அன்புடன் அடியவர்களை நேசிக்க வேண்டும் என்று தெரியாதவனா ஒப்பற்ற மணி விளக்கான சிவனின் பெருமையை உணரப்போகிறான். தனது பொருளும் கல்வியும் தான் தன்னை வாழவைக்கிறது என்று திமிருடன் கூறும் அவனைத் திருத்தவே முடியாது. அத்துடன் ஐந்தெழுத்தையும் திருமுறைகளையும் பொருள் விளங்காது பிழையாக ஓதினால் பாவமுண்டாகுமென்பதையும் அறியாத அவன், கற்ற கல்வியால் என்ன பலனைப் அடையப்போகிறான்?

மெய்யுணர்வைத் தரும் கல்வியை அன்பால் தான் கற்கலாம். அத்துடன் இளமையிலேயே கற்கவேண்டும். இதெல்லாம் படித்த அந்தப் பெரிய மனிதனுக்குத் தெரியவில்லையே'' என்று கவலைப்பட்டார் சிவநாதன்.

பல்லியும் வல்லியும்

**280. கல்வி யுடையார் கழிந்தோடிப் போகின்றார்**
**பல்லி யுடையார் பாம்பரிந் துண்கின்றார்**
**எல்லியுங் காலையும் ஏத்தும் இறைவனை**
**வல்லியுள் வாதித்த காயமு மாமே.**

சிவஞானத்தை அவ்வூர் மக்கள் சிவனாகவே மதித்தனர். அவர் சிவபாலனையும் நாகநாதனையும் அழைத்துக் கொண்டு சிவன் கோவிலுக்கு வந்தார். அன்று சிவன் கோவிலுக்குச் சரியைத் தொண்டுகள் செய்ய மக்கள் வந்திருந்தனர். வணிகனான சுந்தரன் தொண்டு செய்பவர்களுக்கு உணவு, நீர், சிற்றூண்டி வகைகளைக் கொடுத்துக் கொண்டு நின்றான்.

சிவஞானம் வயது முதிர்ந்தவர். அவர் மண்வெட்டியை எடுத்து புற்களை வெட்டிக் கொண்டிருந்தார். அவருக்கு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியது. இருந்தும் அவர் தொடர்ந்தும் வேலை செய்து கொண்டிருந்தார். சுந்தரன் அவரின் அருகிற் சென்று சொன்னான், ''ஐயா, களைத்து விட்டீர்கள் சற்று ஓய்வெடுங்கள்''

சிவஞானம் சிரித்தார். பின்பு சொன்னார், ''மகனே, சிவன் மீது பேரன்பு பூண்டவர்கள் உடல் வலியைத் தாங்கிக் கொண்டு தொண்டுகள் பலவும் செய்வார்கள். மெய்யுணர்வுள்ளவர்கள் தான் கற்றவர்கள் என்று

வேதங்களும் உபநிடதங்களும் கூறுகின்றன. அப்படியிருக்கையில் நான் தொண்டு செய்யாவிட்டால் கற்றவனாக மாட்டேன். உடல் தொடர்ந்து ஒன்றன் பின் ஒன்று பல்குவதற்கு இடனாக இருப்பதால் உடலுக்குப் பல்லியென்று பெயர். அத்தகைய உடம்பின் மீது பற்றுக் கொண்டவர்கள் அதிகமாக உண்டு வேலைகள் எதுவும் செய்யாதிருந்து குண்டலியினை வருத்துகின்றனர். தொண்டுகள் செய்வதாலும் திருமுறைகளை ஓதுவதாலும் உடல் பலமடைகிறது. அத்துடன் பொன் போலப் பளபளக்கிறது. தொண்டுகள் செய்து திருமுறைகளை முறைப்படி ஓதும் நாகநாதனையும் சிவநாதனையும் பார். இருவரது உடல்களும் உரம் பெற்று இளமையுடன் பளபளக்கின்றன. அதற்குக் காரணம் திருவருளாகிய வல்லி. எதுவும் செய்யாது நன்றாக உண்டு படுத்திருக்கும் மாணிக்கனையும் பார். உடல் பருத்ததால் எழுந்து நடமாடக்கூடச் சக்தியற்றவனாக இருக்கிறான். அவனுக்கு நாற்பது வயது. எனக்கு எழுபது வயது. என்னால் தொடர்ந்து வேலை செய்ய முடியும். அதிகமாக உண்டுவிட்டு வேலை செய்யாவிட்டால் உண்ட உணவு சமிபாடடையாது. உணவைச் சமிக்கச் செய்யும் குண்டலினி என்ற பாம்பு மோசமாகப் பாதிக்கப்படும். அதனால் என்னை வேலை செய்ய விடு'' என்றார் சிவஞானம்.

தூய நற்கல்வி

**281. துணையது வாய்வருந் தூயநற் சோதி**
**துணையது வாய்வருந் தூயநற் சொல்லாந்**
**துணையது வாய்வருந் தூயநற் கந்தந்**
**துணையது வாய்வருந் தூயநற் கல்வியே.**

சிவஞானம் கோவிலின் வெளிப்புறத்தைத் துப்பரவாக்கிக் கொண்டிருக்கும் போது செந்தூரன் என்ற மாணவன் வந்து

சிவஞானத்தின் பாதங்களை நீரால் கழுவி விட்டு அதைத் தொட்டு வணங்கி விட்டுச் சொன்னான், “ஐயா, இன்று சென்ற வருடம் நடைபெற்ற க. பொ. த. உயர்தரப்பரீட்சையின் முடிவுகள் வெளியாகி விட்டன. நான் மருத்துவப் பீடத்திற்குத் தெரிவாகியுள்ளேன்.”

“மகனே, பேரொளிப் பிழம்பான சிவபெருமான் எந்த நிலையிலும் எவற்கும் எல்லாவற்றாலும் விளங்கத் துணையாக நிற்பான். அவனை அன்போடு வணங்கினால் அவனது மனம் கரைந்து உருகிவிடும். உனது தந்தை சிவபக்தன். அதனால் தான் நானும் உனக்கு வேண்டிய உதவிகளைச் செய்யும்படி சிவனை இரப்பேன். எனது எண்ணம் நிறைவேறி விட்டது” என்று மகிழ்தார் சிவஞானம்.

“நீங்கள் தான் எனது குரு. சிவன் தான் சிவகுருவாக வந்து ஐந்தெழுத்தைச் செவிக்குள் கூறுவதாகச் சித்தாந்த நூல்கள் கூறுகின்றன. எனது செவிக்குள் ஐந்தெழுத்து மந்திரத்தை நீங்களே கூறினீர்கள். அதனால் உங்களை நான் சிவனாகக் கருதுகிறேன்.”

அதைக் கேட்டு உருகிப் போனார் சிவஞானம், “மகனே, சிவன் எல்லோருக்கும் துணையாக எப்போதும் இருப்பான். அவன் மலர்கள் தம் மணத்தை இதழ்களுக்குள் அடக்கி வைத்திருப்பதைப் போல, சிவன் ஆருயிர்களைத் தன் திருவடிக்குள் அடக்கி இன்புறுத்துகிறான். அத்துடன் கல்விக்குத் துணையாக இருந்து தூயநற்கல்வியைக் கற்பிப்பவனும் அவனே. அதனால் தான் நீ அரிய மருத்துவக் கல்வியைப் பெறப் போகிறாய்” என்றார் சிவஞானம்.

செங்கோல்

**282. நூலொன்று பற்றி நுனியேற மாட்டாதார்**

**பாலொன்று பற்றினாற் பண்பின் பயன்கெடுங்**

**கோலொன்று பற்றினாற் கூடா பறவைகள்**

**மாலொன்று பற்றி மயங்குகின் றார்களே.**

அப்போது செந்தூரனுடன் கல்வி கற்கும் சயந்தனும் அவனது தந்தையான கேசவனும் வந்தனர். அவனது முகம் கறுத்துத் துயரப்பட்டிருந்தது, "ஐயா, செந்தூரனும் சயந்தனும் ஒரே வகுப்பில் கல்வி கற்பவர்கள். செந்தூரன் உங்களது சொற்படி நடப்பான். திருவைந்தெழுத்தை முறைப்படி ஓதுவான். திருத்தொண்டுகள் பலவும் செய்வான். தேவார திருவாசகங்களைப் பண்ணுடன் படிப்பான். எனது மகன் இதற்கு நேர்மாறானவன். கோவிலுக்கு வேலையில்லாதவர்கள் தான் செல்வார்கள். தேவாரம் படிக்கும் நேரத்தில் விளையாடலாம் என்பான்'' என்று துயரத்தைத் தாங்கிக் கொள்ள முடியாது கேசவன் அழுதான்.

"சயந்தா, உனது தந்தையைப் பார். அவர் நீ பரீட்சையில் சித்தியடையவில்லையென்று துக்கப்படுகிறார். நீ கெட்டிக்காரன். ஆனால் உனது கெட்டித்தனம் தீய செயல்களில் தான் செயற்படுகிறது. செந்தூரன் உன்னை விட அறிவிற் குறைந்தவனென்றாலும் அவன் திருமுறைகளை விதிப்படி ஓதுபவன். சிவனை அன்போடு தொழுபவன். ஐந்தெழுத்தென்ற செங்கோலைக் கையில் வைத்திருப்பவன். அதனால் எல்லாவிதமான துன்பங்களையும் நெருங்கவிடாதவன். ஐந்தெழுத்து மந்திரத்தின் மகிமையால் பரீட்சைக்கு வரப்போகும் வினாக்கள் அனைத்தையும் சிவன் அவனது மனதில் தெரிய வைத்தார். அவன் பரீட்சை முடிய முடிய என்னிடம் வந்து தான் தயாரித்துப் படித்த வினாக்கள் தான் பரீட்சைக்கு வந்தன என்று கூறுவான். நீ அப்படியல்ல. நான் கெட்டிக்காரன் கட்டாயம் சித்தியடைவேன் என்று கர்வப்பட்டாய்.

அத்துடன் சிவனிடம் நீ உதவி கோரவில்லை. கல்விக்குத் துணையாக வருபவன் சிவன். ஐந்தெழுத்தையோதி அன்புடன் சிவனை நினைத்துத் தினமும் செந்தூரனைப் போல் நீயும் படி. கட்டாயம் சிவன் உனக்கு உதவி செய்வார். ஐந்தெழுத்தாகிய செங்கோலைக் கையில் எடு. எல்லாம் இன்பமாகும்'' என்றார் சிவஞானம்.

''சரி ஐயா, நீங்கள் முன்பு கூறியவற்றை விளையாட்டாகக் கருதி விட்டேன். இனி அப்படிக் கருத மாட்டேன்'' என்றான் சயந்தன்.

உடன் வெளிப்படுபவன்

**283. ஆய்ந்துகொள் வார்க்கரன் அங்கே வெளிப்படும்**
**தோய்ந்த நெருப்பது தூய்மணி சிந்திடும்**
**ஏய்ந்த இளமதி எட்டவல் லார்கட்கு**
**வாய்ந்த மனமல்கு நூலேணி யாமே.**

சிவஞானம் சொன்னதைக் கேட்டுச் சயந்தன் விம்மி விம்மி அழுதான்.

''மகனே, துயரப்படுவதால் தீமை தான் வரும். துயரத்தால் அழுதால் சிவன் வரமாட்டான். அன்போடு அழைத்தால் தான் வருவான். அன்போடு தினமும் அவனது திருவடியை நினைத்து ஐந்தெழுத்து மந்திரத்தை ஓது. அவன் உன் அன்புக்கு அடிமையாகி உடனே வெளிப்பட்டு வந்து உனது துயரைத் தீர்ப்பான். இதை விட்டு விட்டுக் கவலையால் அழுதால் அழுபவரின் குரல் அவனுக்குக் கேட்காது. சூரியகாந்தக் கல்லின் மீது சூரியஒளிபட்டதும் அது தீ பற்றிக் கொள்ளும். அது போல உனது அன்பு சிவனைச் செயலில் ஈடுபடுத்தச் செய்யும். திங்களான சந்திரன் ஒவ்வொருவரது புருவ நடுவிற்

காணப்படும் மதிமண்டலமாகும். அம்மண்டலத்தை கூடற்குரிய பயிற்சியால் தேர்ந்தவர்களுக்கு மனமே சிவனை அடைய ஏணியாகச் செயற்படும். இது உனது வயதிற்கு அப்பாற்பட்டது. எனவே எந்நேரமும் திருவைந்தெழுத்தை மனதுக்குள் ஓதியபடி உனது பணியைச் செய். அப்படிச் செய்யும் போது சிவன் அப்பணியை உன்னோடு சேர்ந்து செய்வான்'' என்றார் சிவஞானம்.

வழித்துணை

**284. வழித்துணை யாய்மருந் தாயிருந் தார்முன்**
**கழித்துணை யாங்கற் றிலாதவர் சிந்தை**
**ஒழித்துணை யாய்உம்ப ராய்உல கேழும்**
**வழித்துணை யாம்பெருந் தன்மைவல் லானே.**

சிவன் கோவிலில் பூசை முடிந்து விட்டது. தில்லைநாதனின் சகோதரனின் நண்பன் நடராசா. அவன் தில்லைநாதனைப் பற்றி இழிவாகப் பேசுபவன். அன்று அவன் கோவிலுக்கு வந்த போது தில்லைநாதன் தனது கையாட்களை ஏவித்தாக்குவித்தான். தாக்கியவர்களில் ஒருவனை மக்கள் மடக்கிப் பிடித்தனர். அவன் தில்லைநாதன் தான் அவனைத் தாக்கும்படி கூறியதாகக் கூறினான்.

சிவஞானமும் நாகநாதனும் தில்லைநாதன் கற்பிக்கும் பாடசாலைக்குச் சென்றனர். அவர்களைக் கண்டதும் பரபரப்புடன் தில்லைநாதன் வந்தான்.

“தில்லை, பல்கலைக்கழகத்தில் படித்தவர்கள் எல்லோரும் பண்பானவர்களில்லை. திருவடிக் கல்வியைக் கற்றவர்கள் தான் கற்றவர்களாகக் கருதப்படுவர். அவர்கள் தான் மற்றவர்களின்

வாழ்க்கைக்குத் துணையாக இருப்பார்கள். நீ ஓர் ஆசிரியன். கற்றவாறு நடக்கிறாயா..? காலையும் மாலையும் சிவன் கோவிலுக்கு வந்து சிவனை வணங்குகிறாய். பின் அடாவடித்தனத்திலீடுபடுகின்றாய். சிவனை வழிபடுபவர்கள் வழித்துணையாக இருக்க வேண்டுமே தவிரப் பழித்துணையாக இருக்கக் கூடாது. வினைகளை அறுக்கும் சிவனை வணங்குவோரும் வினையைப் பெருக்காமல் வாழுதல் வேண்டும். அத்துடன் மருந்தாகச் செயற்படவேண்டும். நடராசாவை நீ கோவிலடியில் தாக்குவித்திருக்கிறாய். கோவிலடி புனிதம் நிறைந்த அமைதியான இடம். அதைக் கெடுப்பவன் மகாபாவி. சிவன், விண்ணவர் முதலாகச் சொல்லப்படுகின்ற ஏழு உலகத்தாருக்கும் இம்மை, உம்மை, அம்மை என்று கூறப்படும் மும்மை நலமெய்தச் செம்மையான வழித்துணையாக இருப்பவன். மண்ணுலகத்தவர்களில் திருவடிக்கல்வி கற்றவர்களே திருவருளால் நன்னெறிக்கு மக்களை அழைத்துச் செல்லும் வழித்துணையாகச் செயலாற்றுவர். ஏனையோர் பழிகளுக்குட்பட்டுப் பிறப்புக்களெடுத்துத் தொடர்ந்து துன்பப்படுவார். நீ கற்றவன். சிவனை வணங்குபவன். இருந்தும் உன்னால் நல்வாழ்வு வாழ முடியவில்லை. அன்புள்ளம் கொண்டவனாகச் சில காலம் வாழ்ந்து பார். அதன் இயல்பு தெரியும்'' என்றார் சிவஞானம்.

பற்றுக பற்றற்றானை

**285. பற்றது பற்றிற் பரமனைப் பற்றுமின்**

**முற்றது எல்லா முதல்வன் அருள்பெறில்**

**கிற்ற விரகிற் கிளரொளி வானவர்**

**கற்றவர் பேரின்பம் உற்றுநின் றாரே.**

“உனக்கு என்றும் இன்பம் வேண்டுமென்றால் அன்பே மயமான சிவபெருமானின் திருவடியினைப் பற்றிப்பிடி. அதை விட்டு விட்டுத் தீய

செயல்களை மனங்கூசாது செய்யும் துட்டர்களின் துணையை நாடாதே. அது இன்பத்தை அளிப்பது போலப் பெருந்துன்பங்கள் பலவற்றைக் கொண்டு வந்து தரும். திருவருள் கைவரப் பெற்றால் செய்யும் செயல்கள் யாவும் துணையின்றி இனிது முடிவடையும். இதைக் கற்ற உனக்கு நாங்கள் சொல்லத் தேவையில்லை. படிப்பறிவில்லாத பாமரர்கள் மெய்யுணர்வுக் கல்வி கற்ற சிவஉலகத்தினரை நம்பி அவர்களின் சொற்கேட்டு நிம்மதியாகவும் இன்பமாகவும் வசதிகள் பலவற்றுடனும் வாழ்கின்றனர். உன்னைப் போன்ற பொய்மையான கல்வி கற்ற அதிமேதாவிகள் தான் மெய்யுணர்வுக் கல்வி கற்ற சிவஉலகத்தினரை அவமதிக்கின்றனர். சிவனை நம்பு. அவனது திருவடியைப் பற்றின்றித் தொழு. செய்யும் செயலெல்லாம் வெற்றியைத் தரும்'' என்றார் சிவஞானம்.

உறைவிடம்

**286. கடலுடை யபன்மலை யானைந்து பூதத்**
**துடலுடை யான் பல ஊழிதொ றூழி**
**அடல்விடை யேறும் அமரர்கள் நாதன்**
**இடமுடை யார்நெஞ்சத் தில்லிருந் தானே.**

“தில்லை, உனது கெட்ட எண்ணங்களை மனதிலிருந்து அகற்று. சிவன் செய்யும் நன்மைகளின் பேரெல்லையாகக் கடலையும், அடக்கத்தின் இருப்பிடமாக மலையையும் கொண்டவன். ஐம்பூதங்களும், ஐம்பூதங்களால் உருவான பூவுலகும் அவனது உடலாகும். அப்படியாயின் நாமெல்லோரும் அவனுக்குள்ளேயே இருக்கிறோம். எத்தனை ஊழிக்காலங்கள் வந்து போய் விட்டன. அவ்வூழிக்காலங்களில் சகல ஜீவராசிகளும் அழிய உமையை இடப்பாகத்தில் கொண்டு எருதினில் ஏறிச் சவாரி செய்யும் சிவன் மட்டும் அழியவில்லை.

இப்படியான பெருமைகளை உடைய சிவபெருமான் திருவடியுணர்வுள்ள மெய்யன்பர்களது உள்ளத்தில் விரும்பிக் குடியிருக்கிறாராம். சிவன் உறைந்து வாழ்கின்ற உனது மனத்தில் தீய எண்ணங்களை வளர்த்தாயேயானால் சிவன் குடியிருக்க மாட்டார். அதனால் உனக்கு எவ்வேளையிலும் துன்பங்கள் தான் வரும். அதனால் தீய எண்ணங்களால் நிரம்பிய உனது மனதைச் சுத்தப்படுத்து. சுத்தப்படுத்தினால் மெய்யுணர்வுண்டாகும். மெய்யுணர்வாகிய திருவடி நினைவு இதயத்தில் புகுந்தால் அது தீயவற்றை விலக்கி விடும். அதனால் உனது இதயத்தில் சிவன் குடியேறுவார். இவற்றையெல்லாம் நீ கற்றிருப்பாய். ஆனால் உணர்ந்திருக்க மாட்டாய். எனவே இனியாவது உணர்ந்து பேரின்பமாக வாழ்'' என்றார் சிவஞானம்

## 14. கேள்வி கேட்டமைதல்

சிவநிலை

**287. அறங்கேட்டும் அந்தணர் வாய்மொழி கேட்டும்**
**மறங்கேட்டும் வானவர் மந்திரங் கேட்டும்**
**புறங்கேட்டும் பொன்னுரை மேனி யெம் ஈசன்**
**திறங்கேட்டும் பெற்ற சிவகதி தானே.**

''தவறுகள், தீங்குகள், குற்றங்கள் செய்யாதவர்கள் யாருமில்லை. குற்றமென்று தெரிந்து செய்பவன் பாவி. அதன் பின்பும் அதை உணராதவன் மகாபாவி. குற்றம் செய்த பின் அது குற்றமென்று உணர்ந்து திருந்துபவன் புண்ணியவான். ஒரு குற்றவாளி திருவடி உணர்வுள்ள அந்தணர்களிடம் அறிவுரை கேட்டும், மறைமொழியான மந்திரங்களைக் கேட்டும், பிற அறநூல்களில் கூறப்பட்ட நல்லுரைகளைக் கேட்டும் திருந்திச் சிவநிலையை அடையலாம். அதற்கு உதாரணமாகக்

கோவில் மடத்தில் வாழும் சிவசாமியைக் கூறலாம். அவன் சமூகத்திற்கு உதவாதவனாக வாழ்ந்தான். குடித்து விட்டு மனைவியைத் துன்புறுத்தினான். பலரைக்காரணமின்றித் தண்டித்தான், கொள்ளையடித்தான். கோவில் குருக்களுடன் சண்டையிட்டான். இதைத் தாங்க முடியாத அவனது மனைவி தற்கொலை செய்தாள். அதனால் வேதனையுற்ற அவன், கோவில் குருக்களிடம் வந்து அழுதான். அவரது அறிவுரைகளும் அவர் உரைத்த மந்திரமும் சிவனது பெருமையும் அவனைத் திருத்தி மேலான சிவநிலையைக் கொடுத்துள்ளது. பெரும் ஞானமுள்ள ரிஷிகள், முனிவர்கள் கூடத் தவறுகள் செய்து பின் திருந்தியவர்களாவர். நீ படித்தவன் உனக்கு அதிகம் சொல்லத் தேவையில்லை. திருந்திவாழ்'' என்றார் சிவஞானம்.

ஓங்கி நிற்போர்

**288. தேவர் பிரான்தனைத் திவ்விய மூர்த்தியை**
**யாவர் ஒருவர் அறிவார் அறிந்தபின்**
**ஓதுமின் கேள்மின் உணர்மின் உணர்ந்தபின்**
**ஓதி உணர்ந்தவர் ஓங்கிநின் றாரே.**

``தில்லை, நீ போ. நான் சிவசாமியிடம் அருள்மொழி கேட்கப் போகிறேன். உனக்கும் விருப்பமானால் வா. நாகநாதனும் சிவநாதனும் என்னுடன் கூடவருகிறார்கள்'' என்றார் சிவஞானம்.

``நானும் வருகிறேன்'' என்றான் தில்லைநாதன்.

நால்வரும் கோவில் மடத்திற்கு வந்த போது சிவசாமி உரையாற்றிக் கொண்டிருந்தார். ஏராளமான பக்தர்கள் மெய்மறந்து

கேட்டுக் கொண்டிருந்தனர். சிவசாமி சிவனின் பெருமைகளைக் கூறிவிட்டுத் திருவைந்தெழுத்தை ஓதினார். மக்கள் பரவசத்துடன் கேட்டுக் கொண்டிருந்தனர். பின் அவர்களும் ஓதினார்கள். ஒரு மணித்தியாலத்தின் பின் சிவசாமி கண்களை மூடினார். சிறிது நேரத்தின் பின் அவர் சொன்னார், "எல்லாத் தேவர்களும் சிவனை முழுமுதற் கடவுளெனத் தெரிந்து திருவைந்தெழுத்தை ஓதி வணங்குகின்றனர். சிவனை உணர்ந்த திருவடியுணர்வுள்ளவர்கள் தான் கேட்டலுக்குரியவராவார். அதனால் சைவ மாண்புடையவர்கள் ஓதும் போது கேளுங்கள். அதன் பின் அது போல ஓதுங்கள். சிவனின் திருவடியை அடையும் வரை ஓதுங்கள். உங்கள் மனம் ஒரு நிலைப்பட்டுச் சிவனை நாடும் வரை ஓதுங்கள். அப்படி ஓதித் திருவடி உணர்வு பெற்றவர்களே மேலானவராவர். திருவடியுணர்வு பெற்றவர்க்கு துன்பமில்லை, துயரமில்லை, பிரச்சினைகள் இல்லை. எந்நாளும் இன்பம் தான். அதனால் ஓதுங்கள்" என்று கூறிவிட்டு மீண்டும் திருவைந்தெழுத்தை ஓதத்தொடங்கினார்.

சிவஉலகக்கடவுள்

**289. மயன்பணி கேட்பது மாநந்தி வேண்டின்**
**அயன்பணி கேட்பது அரன்பணி யாலே**
**சிவன்பணி கேட்பவர் தேவரு மாவர்**
**பயன்பணி கேட்பது பற்றது வாமே.**

சிவசாமி மடத்து மண்டபத்தில் பல முறை பேசும் போது கேட்டிருக்கிறான் தில்லைநாதன். அப்போது அவன் தனது மனைவியைக் கொன்ற பாவத்தைத் தீர்க்கவும், அதனால் வந்த பழியைப் போக்கவுமே நடிக்கிறான் என்றே நினைப்பான். சிவஞானம் சிவனின் பெருமைகளைக்

கூறியபின் கடவுளைப் பற்றி அக்கறை இல்லாதிருந்த தில்லைநாதனின் மனதில் சிறுபொறியாக அப்பேச்சு விழுந்தது. ஊரில் எந்தவித யோசனையுமின்றிக் கோவிலுக்குச் சென்று வணங்கி விட்டு தமது தொழிலைச் செய்வோர் இலாபம் அடைகின்றனர். கோவிலுக்குச் செல்லாது தொழிலேகதியென்று இருப்போர் தன்னைப் போல மிகவும் கஷ்டப்படுவதை முதல் முறையாக உணர்ந்தான் தில்லைநாதன். அதனால் சிவசாமி சொல்வதை மிகுந்த அவதானத்துடன் கேட்டான்.

“அன்பானவர்களே, மாநந்தி ஓதிய பொருள் நூலைப் பற்றி நான் உங்களுக்கு அடிக்கடி கூறியுள்ளேன். சிவனின் திருவாணையால் பிரமாவும் விஷ்ணுவும் செய்யும் பணிகளைப் பற்றியும் விளக்கமாகக் கூறியுள்ளேன். அத்துடன் சிவபூசை செய்யும் முறைகள் பற்றியும் கூறியுள்ளேன். சிவபூசை செய்து திருவடி வழிபாடு செய்வது பற்றிக் கேட்பவர் தேவர்களாகி விடுவர். அதுவே பிறந்ததன் பயனாகும். சிவபூசையைத் தினமும் செய்யுங்கள். அதன் மூலம் நீங்கள் விரும்பும் வாழ்வு விரும்பியபடி கிடைக்குமென்பது உங்களுக்குத் தெரியும். சிவபூசை செய்வோர் சிவஉலகக் கடவுளாகி விடுவர். அதன் பின் அவர்களுக்குப் பிறப்பில்லை. துன்பமில்லை. பேரின்பம் தான்” என்றார் சிவசாமி.

திருமானிடர்

**290. பெருமான் இவனென்று பேசி யிருக்குந்**
**திருமா னிடர்பின்னைத் தேவரு மாவர்**
**வருமா தவர்க்கு மகிழ்ந்தருள் செய்யும்**
**அருமா தவத் தெங்கள் ஆதிப் பிரானே.**

சிவசாமி சிவன் கோவில் மடத்தில் நிற்கும் வேப்ப மரநிழலில் அமர்ந்திருப்பார். பக்தர்கள் அவரைச் சந்தித்து நல்வாழ்வுக்குரிய வழிமுறைகளைக் கேட்பார்கள்.

அன்று தில்லைநாதன் கற்பிக்கும் பாடசாலையின் அதிபர் சிவசாமியிடம் வந்து அவரது பாதங்களைத் தொட்டு வணங்கிய பின் ஏதோ கதைத்தார். சிவசாமி சில நிமிடங்கள் கண்களை மூடியவாறு இருந்து விட்டு எதையோ சொன்னார். மிகுந்த மரியாதையுடன் தலையாட்டிய அதிபர் எழுந்து கோவிற் பக்கம் சென்றார்.

அதைப் பார்த்த தில்லைநாதனுக்கு ஆச்சரியமாக இருந்தது, “அதிபர் பெரும் அறிவாளி. சமூகத்தவராலும் கல்வி அதிகாரிகளாலும் நன்கு மதிக்கப்படுபவர். அத்தகைய அவர் மழைக்குக் கூடப் பாடசாலை வளவுள்ச் செல்லாத ஒரு குடிகாரனின் காலில் விழுந்து நமஸ்கரிப்பது எந்தவகையில் நியாயமானது” என்று யோசித்தான்.

அதிபர் கோவிலுக்குச் சென்று சிவனை வணங்கிக் கற்பூரம் கொழுத்தி விட்டுத் தில்லைநாதனின் அருகில் வந்து சொன்னார், “தில்லை, சுவாமியார் மகான். சிவபெருமான் தான் அழிவில்லாத விழுப்பொருள் என்றுணர்ந்து வாழும் திருமுறைத் தொண்டர். ஞானிகளால் திருமானிடம் என்று புகழப்பட்டவர். திருவடியுணர்வு பெற்ற அவர் சிவனை நினைத்தே வாழ்வதால் முக் காலங்களையும் உணர்ந்தவர். நான் எதைச் செய்வதானாலும் அவரிடஞ் சொல்லி ஆலோசனை பெற்ற பின்பு தான் செய்வேன். எனது தங்கைக்குத் திருமணம் பேசிய போது நான் அவரிடம் வந்து ஆலோசனை கேட்டேன். அவர் அவனைத் திருமணம் செய்ய வேண்டாம் என்றார். அப்பாவும் மாமாவும் அதைக் கேட்க மறுத்து அவனையே தங்கைக்குச் செய்து வைத்தனர். அவன் ஊருக்குதவாதவன்.

குடிகாரன். திருமணமாகி ஒரு வருடத்திற்குள் நாம் தங்கைக்குக் கொடுத்த தங்கநகைகளை விற்றுக் குடித்து விட்டான். பின் அவன் வீட்டிற்கு வருவதே இல்லை. ஊரில் கேட்டால் இப்படியான பல சம்பவங்களைக் கூறுவார்கள். அவையெல்லாம் உண்மை. இப்போ எனது மகளுக்கு ஒரு வரன் வந்திருக்கு. செய்யலாம் என்று கூறியுள்ளார்'' என்று மகிழ்வுடன் சொன்னார் அதிபர்.

தில்லைநாதன் பேச முடியாது நின்றான், ''சுவாமியாரின் உள்ளே நின்று சிவன் அவரை அருள்புரிய வைக்கிறார். திருத்தொண்டுகளின் பயனாக அவர் சிவஉலகக் கடவுளாகி விட்டார். அவரின் செயல்களால் மகிழ்வடைந்த சிவனும் உமையும் மானிடர்களை உய்விக்கும்படி அவரைப் பணித்துள்ளனர். சொல்கிறேன் என்று குறைநினையாதே. தயவு செய்து நீயும் சுவாமியாரிடம் போ. பெரு நன்மையுண்டாகும்'' என்று கூறிவிட்டுச் சென்றார் அதிபர். அவர் போவதைச் செய்வதறியாது பார்த்துக் கொண்டு நின்றான் தில்லைநாதன். அவனது மனம் சஞ்சலப்பட்டது, ''இக் கிராமத்தில் உள்ள பெரியவர்கள் சிவசாமியை மதிப்பதற்கு ஏதோ ஒரு காரணம் இருக்கு'' என்று நினைத்தான். முதன் முதலாக அவனது மனம் சிவசாமியை நாடியது.

நேசமாகுங்கள்

**291. ஈசன் அருளும் இறப்பும் பிறப்பையும்**
**பேசி யிருந்து பிதற்றி மகிழ்வெய்தி**
**நேசமு மாகும் நிகழொளி யாய்நின்று**
**வாச மலர்க்கந்த மன்னிநின் றானெ.**

தில்லைநாதன் சிவசாமி இருக்கும் வேப்ப மரத்தைப் பார்த்தான். அங்கே பலர் கூடியிருந்தனர். நாகநாதன் கூடியிருந்த மக்களுக்கு உரையாற்றிக் கொண்டிருந்தான், "அன்பானவர்களே, சிவம் ஒன்று தான் நிலையான இன்பம் தரும் பொருள். அதனால் எந்நேரமும் சிவனை நினையுங்கள், துதியுங்கள், ஐந்தெழுத்து மந்திரத்தைக் கூறுங்கள். சிவபெருமான் அன்பு மயமானவர். அவரோடு சேர்வது தான் இன்பம். அவரோடு சேர்ந்து விட்டால் துன்பத்தைத் தரும் பிறப்புக்கள் தொடராது. இது உண்மை. அதனால் நிலையில்லாத பொருட்களை நிலையானதென்றெண்ணி ஏமாற்றமடையாது நீடித்த இன்பம் தரும் மெய்ப் பொருளை அடைய எண்ணுங்கள். சிவனுடன் நேசமாகுங்கள்" என்று நாகநாதன் பேசிக் கொண்டிருந்தான்.

ஒரு வயது முதிர்ந்த மூதாட்டி வந்து சிவசாமிக்குச் சொன்னாள், "சுவாமியார் என்னைப் பிள்ளைகள் கவனிப்பதில்லை. அவர்கள் சொத்துக்காகத் தினமும் சண்டையிடுகின்றனர். என்னால் நிம்மதியாக வாழமுடியவில்லை" என்று அழுதாள்.

"அம்மா, இது தான் இன்றைய உலகின் நிலை. நீயும் உன் கணவரும் தேடிய சொத்துக்கள் இன்று உனக்கு உதவவில்லை. அதனால் பிரச்சினைகளும் சண்டைகளுமே உண்டாகின்றன. பொருள் தேடுவது இன்பமாக வாழ்வதற்கு. தேடிய பொருள் துன்பத்தைக் கொடுக்குமானால் அதனால் என்ன பயன்? என்றும் இன்பத்தைத் தரும் பரம்பொருளை அன்பினால் நாடுங்கள். அவனை நம்பினால் அவன் உங்கள் இதயத்துள் வந்திருந்து துன்பங்கள், துயரங்கள், பிரச்சினைகள் வராது காப்பாற்றுவான். நீ அருள்ச் செல்வத்தைத் தேடியிருந்தால்

இவ்வளவு துன்பம் வந்திராது. தள்ளாடும் வயதில் துன்பம் வந்திராது. அதனால் உனது கணவனையும் அழைத்துக் கொண்டு வந்து மடத்தில் இரு. நிம்மதியும் மகிழ்ச்சியுமில்லாத வயோதிபர்கள் பலர் மடத்திற்கு வந்து சிவனைப் புகழ்ந்து பாடித் திருவைந்தெழுத்தை ஓதிச் சிவனுடன் நேசமாகி இன்பத்துடன் இருக்கிறார்கள்'' என்றார் சுவாமியார்.

அதைக் கேட்டுக் கொண்டு நின்ற தில்லைநாதனின் மனம் சஞ்சலப்பட்டது.

சிறந்தவை

**292. விழுப்பமுங் கேள்வியும் மெய்நின்ற ஞானத்**
**தொழுக்கமுஞ் சிந்தை உணர்கின்ற போது**
**வழுக்கி விடாவிடில் வானவர் கோனும்**
**இழுக்கின்றி எண்ணிலி காலம் தாமே.**

தில்லைநாதனது மனம் ஒரு நிலைப்படாது பரிதவித்தது. சுவாமியார் கூறும் வார்த்தைகளைக் கேட்க மனதிற்கு ஆறுதலாக இருந்தது. ஒரு நாள் சிவசாமியை அதிபர் மாணவர்களுக்கு அறிவுரை கூற வரும்படி அழைத்திருந்தார். அது தில்லைநாதனுக்குப் பிடிக்கவில்லை. அதனால் அவன் அதிபருக்குச் சொன்னான், ''ஐயா, மாணவர்கள் வளரும் பயிர்கள். அவர்களுக்கு நல்ல ஆலோசனைகள் கூறுதல் வேண்டும். சிவசாமி ஒழுக்கமில்லாமல் வாழ்ந்தவன்'' என்று கூறும் போது அதிபர் இடைமறித்துக் கூறினார், ''தில்லை, நதி மூலமும் ரிஷி மூலமும் ஆராயக்கூடாது. நதி அழுக்குகள் எல்லாவற்றையும் தள்ளி வரும். ஆனால் அதன் நீர் புனிதமானது. ரிஷிகளும் தீயன பல

செய்திருப்பர். ஆனால் திருந்திச் சிவனை உணர்ந்திருப்பர். எமது நாயனார்களினதும், சுவாமிகளினதும் வாழ்க்கை தீதாக இருக்கலாம். அருணகிரிநாதரின் வாழ்க்கையைப் பார். அவரைவிடச் சிவசாமி குற்றம் செய்யவில்லை. சிவசாமி முப்பொருட்களின் உண்மையை உணர்ந்தவர். திருவைந்தெழுத்தை முறைப்படி ஓதுபவர். நல்லோர் கூறும் அறிவுரைகள் பலவற்றைக் கேட்டவர். அவர் மெய்ஞ்ஞானியாகிய பின் இருந்த இடத்தை விட்டு அகலாது இருந்து சிவனைத் தியானிப்பவர். அதனால் சிவன் மகிழ்ந்து அவரை ஆட்கொண்டுள்ளார். அதனால் அவர் கூறும் வார்த்தைகள் சிவவார்த்தைகளாகின்றன. இன்று அவரைப் பற்றி அவருடைய பழைய எதிரிகள் கூட வாய் திறந்து பேசார். அவர் சொன்னால் சொன்னபடி நடக்கும். அவர் கூறும் அறிவுரைகளை இருபட்டங்களைப் பெற்ற என்னால் கூடக் கூறமுடியாது. கல்வியறிவுள்ளவர்களுக்கும், இல்லாதவர்களுக்கும், சிறுவர்களுக்கும் விளங்குமாறு பேசுவார். அவர் பேசிமுடிய மாணவர்களிடம் கேள்வி கேட்டால் அவர்கள் சரியான பதிலைக் கூறுவர். எனது பேராசிரியர் ஒருவர் சைவசித்தாந்தத்தைக் கற்பிப்பவர். அது யாருக்கும் விளங்காது. அதைச் சிவசாமியிடம் கேட்டால் சிறுவர்களுக்குக் கூட விளங்கும் வகையில் கதையாகக் கூறுவார். அவர் திருக்குறள் பாக்கள் அனைத்திற்கும் கதை கூறுவது உங்களுக்குத் தெரியாதா..? இப்படி இதுவரை யார் கதை கூறினார்கள்? சொல்லுங்கள் பார்ப்போம்'' அதிபரின் குரல் பலமாக ஒலித்தது. அதைத் தில்லைநாதனால் மறுக்க முடியவில்லை. அதனால், "உண்மை தான்'' என்று ஒப்புக் கொண்டான்.

சிறுவர் போல்வர்

**293. சிறியார் மணற்சோற்றில் தேக்கிடு மாபோல்**

**செறிவால் அனுபோகஞ் சித்திக்கும் என்னில்**

**குறியாத தொன்றைக் குறியாதார் தம்மை**

**அறியா திருந்தார் அவராவர் அன்றே.**

அன்று மாணவர்களுக்கு அருள் உரை கூறிய பின்பு ஆசிரியர் தங்கும் ஓய்வு அறையில் சிவசாமி வந்து தங்கினார். அப்போது ஆசிரியர்களிற் பலர் அவரை வணங்கி ஆசிபெற்றனர். இதுவும் தில்லைநாதனுக்குப் பிடிக்கவில்லை. அவன் கேட்டான், “ஐயா, நீங்கள் எல்லாம் வல்ல சிவபெருமானைப் பற்றி ஏதோவெல்லாம் பேசுகிறீர்கள். நீங்கள் சிவபெருமானைக் கண்டீர்களா..? பேசினீர்களா..?”

சிவசாமி சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டுச் சொன்னார், “மகனே சிவபெருமானை யாரும் காணமுடியாது. ஏனென்றால் அவர் மனிதரைப் போல வீதிகளில் திரிவதில்லை. சிறுவர்கள் மணலில் சோறு கறி காய்ச்சித் தாமும் உண்டு தமது நண்பர்களுக்கும் கொடுத்துத் தம் பெற்றோருக்கும் கொடுப்பர். அதை அவர்கள் உண்மையான உணவை உண்பது போல உண்டு மகிழ்வுடன் மிகவும் சுவையானதென்று சொல்லித் தம் பிள்ளைகளை மகிழ்விப்பர். அது போலச் சிவனைக் கண்டேன் எனக் கூறுவது சிறுவர்களின் மணற்சோற்றைச் சுவையானது என்று சொல்வதைப் போன்றது. சிவனைச் சுட்டுணர்வாலும் சிற்றுணர்வாலும் காணமுடியாது. அவனைக் காண வேண்டுமானால் அவனது திருவருளால் அகக்கண் கொண்டு காண வேண்டும். சிவன் அன்பு மயமானவன். திருவைந்தெழுத்தை மெய்யுணர்வுடன் ஓதுவோர்க்கு அவன் இலகுவாக அகப்படுவான். அவன் இல்லாத உடல்கள் இல்லை. உடலுக்குள் உயிராக நிற்பவன் அவன். உயிரைக் கண்டவர்கள்

உண்டா. காற்று வீசுகிறது. அதைக் கண்டதுண்டா? இல்லாதவற்றிற்கு இருப்பு இல்லை. உள்ளவற்றிற்கு இருப்பு இருந்தாலும் அதை உணர்ந்தவர்கள் தான் அதன் இருப்பை உணர்ந்தவராவர். நீ சிவனைக் காணவேண்டுமானால் உன்னை நம்பு. உன்னைப் போல பிறரையும் நேசி. பொருளைத் தேடாதே. எல்லாம் சிவமென்றிரு. உன்னைத் தேடி சிவன் வருவான்'' என்றார்.

அன்று விதண்டாவாதமாகப் பேசிய பேச்சும் அதற்குச் சிவசாமி அளித்த பதிலும் அவனது காதில் ஒலித்தன.

உறுதுணை

**294. உறுதுணை யாவ துயிரும் உடம்பும்**
**உறுதுணை யாவ துலகுறு கேள்வி**
**செறிதுணை யாவது சிவனடிச் சிந்தை**
**பெறுதுணை கேட்கிற் பிறப்பில்லை தானே.**

அன்று சிவசாமி பாடசாலையில் பேசியவற்றை நினைத்துப் பார்த்தான் தில்லைநாதன், "அன்பானவர்களே, உங்கள் உடம்பு தான் நீங்கள் பெருவாழ்வு வாழப் பெருந் துணையாக இருப்பது. எல்லோரும் பிறக்கிறார்கள். இறக்கிறார்கள். உடற்பலம் உள்ளவன் தான் வீரன். அவன் தான் அரசன். உடல் வெற்றிகள் பலவற்றைப் பெற்றுக் கொடுக்கிறது. உடல் ஒரு கோவில். அதற்குள் இருக்கும் உயிர் சிவன். அதனால் உடலை வருத்தினால் உயிர் துன்பப்படும். உடலுக்குள் தான் மூளையுள்ளது. மனம் உள்ளது. இந்த இரண்டையும் நல்ல முறையில் பயன்படுத்தும் உடலே சகல விடயங்களிலும் வெற்றி பெறுகிறது. உயிர்

உய்ய வேண்டுமானால் திருவடியுணர்வு பெற்ற மெய்யுணர்ந்தோரின் அனுபவமான வார்த்தைகளைக் கேட்க வேண்டும். மக்களிற் பலர் மது அருந்தியும் மாமிசமுண்டும் சிவத்துரோகங்கள் செய்தும் வருகிறார்கள். அத்துடன் நல்லோர் வார்த்தைகளைக் கேட்பதும் இல்லை, அவர்களை மதிப்பதும் இல்லை. இது உடலுக்கும் உயிருக்கும் கேடு விளைவிக்கும். நம்மைவிட்டுப் பிரியாத துணை செறிதுணை எனப்படும். செறிதுணையாவது சிவனை மறவாதிருத்தலாகும். பெற வேண்டிய துணை, பிறப்பில்லாத துணை, இறப்பின் பின் சிவனுடன் சேர்ந்து கலந்திருக்கும் துணை. இதற்கு நீங்கள் ஒழுக்கமாக வாழ வேண்டும். பெரியவர்களை மதிக்க வேண்டும். எந்நாளும் திருவைந்தெழுத்தை ஓத வேண்டும். அப்படி ஓதினீர்களானால் சிவனின் நினைவைத் தவிர வேறெந்த நினைவும் வராது. அந்த நினைவு உங்களைச் சிவத்துடன் சேர்க்கும்''

பெருமூச்சு விட்டான் தில்லைநாதன். ''பட்டப்படிப்பை படித்திருந்தும் இவற்றை உணராமல் இருந்து விட்டேன்'' என்று கலங்கினான் தில்லைநாதன்.

கற்பசு

**295. புகழநின் றார்க்கும் புராணம்எம் ஈசன்**
**இகழநின் றார்க்கும் இடும்பைக் கிடமா**
**மகிழநின் றாதியை ஓதி உணராக்**
**கழியநின் றார்க்குகொரு கற்பசு வாமே.**

நினைக்க நினைக்க தில்லைநாதனுக்குப் பைத்தியம் பிடித்து விடும் போலிருந்தது. சிவனை நம்பியவர்கள் தன் கண்னெதிரே பெரு வாழ்வு வாழ்வதை அவன் காண்கிறான். சிவனை நிந்திப்பவர்கள் பெரும் துன்பப்படுவதையும் அவன் காண்கிறான். துன்பப்பட்டது போதும் இனிமேலாவது இன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்று எண்ணியவாறு சிவன் கோவில் மடத்தின் அருகே சென்றான். அவனைக் கண்ட சிவசாமி, ‘‘மகனே வா. இப்போதென்றாலும் உனக்குச் சிவனின் மகிமை புரிந்ததை எண்ணி மகிழ்கிறேன். சிவனை நினைப்பவர்கள் என்றும் இன்பமாக இருப்பார்கள். அவர்களுக்குத் துன்பங்கள் வரச் சிவன் விடமாட்டான். அத்துடன் சிவநாமமான ஐந்தெழுத்து ஆன்மாக்களைத் தேடிவரும் துன்பங்களையெல்லாம் துரத்திவிடும். சிவனை நினைக்காதவர்களுக்கு எந்நாளும் துன்பம் தான். அவர்களுக்குச் சிவன் கற்பசு வாசவே காட்சியளிப்பான். கற்பசு பெயரும், உருவும், மடியும் பிறவும் கொண்டு உண்மையான பசுவைப்போலக் காட்சியளிக்கும். எனினும் அதிலிருந்து பால் கறக்க முடியாது. நீ இவ்வளவு காலமும் கற்பசுவை உண்மையான பசுவென்று நம்பி மனப் பால் குடித்துக் கொண்டிருந்தாய். சிவனை மனதில் இருத்து. ஐந்தெழுத்து மந்திரத்தை ஓது. திருவடியுணர்வுண்டாகும். திருவடியுணர்வுண்டானால் சிவன் கற்பசுவாக காட்சி தராமல் காமதேதுவாகக் காட்சி தருவான். அவரிடமிருந்து உனக்குத் தேவையான அனைத்தையும் பெற்றுக் கொள்ளலாம்’’ என்றார் சிவசாமி.

அஞ்சேல்என அருள்வான்

**296. வைத்துணர்ந் தான்மனத் தோடும்வாய் பேசி**

**ஒத்துணர்ந் தான்உரு ஒன்றொடொன்**

**றொவ்வாது**

**அச்சுழன் றாணி கலங்கினும் ஆதியை**

**நச்சுணர்ந் தார்க்கே நணுகலு மாமே.**

“நான் பெரும் தவறு செய்து விட்டேன். என் வாழ்நாளில் இது வரை நான் சிவனை நினைத்ததில்லை. அதனால் எந்நாளும் துன்பம் தான். நான் ஒரு பட்டதாரி ஆசிரியன். ஆனால் என்னை யாரும் மதித்ததில்லை” அழுதான் தில்லைநாதன்.

“ஆணும் பெண்ணும் கலந்த ஒன்றோடு ஒன்று ஒவ்வாத் திருவுருவத்தை உடைய சிவனை யார் மனதிலிருத்தி ஆராதனை செய்கிறார்களோ அவர்களுக்குச் சிவன் எல்லா உதவிகளையும் செய்வான். சிக்கல்கள், பிரச்சினைகள், துன்பங்கள் வராமற் காப்பான். உடல் தளர்ந்து இயங்க முடியாத நிலையை ஏற்படுத்தும். வயோதிபம் வந்த காலத்திலும் அவனை எண்ணிப் பஞ்சாட்சர மந்திரத்தை ஓதிக் கொண்டிருப்பவர்களைத் தளர்ச்சியில் இருந்து விடுபட வைப்பான். இது அவனது இயல்பு. ஒவ்வொரு வரும் துன்பங்களைத் தாமே வரவழைக்கிறார்கள். துன்பங்கள் அழைக்காமல் வராது. இன்பங்களை அழைத்தால் தான் வரும். எனவே சிவனை நம்பு. ஐந்தெழுத்தை ஓது. நலன் பெறுவாய்” என்றார் சிவசாமி.

## 15. கல்லாமை

கல்லாதவர்கள்

**297. கல்லா தவருங் கருத்தறி காட்சியை**

**வல்லா ரெனில்அருட் கண்ணான் மதித்துளோர்**

**கல்லாதார் உண்மைபற் றாநிற்பர் கற்றோருங்**

**கல்லாதார் இன்பங் காணுகி லாரே.**

“உண்மை தான் சுவாமி. நான் சமூகவியலில் பட்டம் பெற்றேன். எனக்குத் திருவடியுணர்வு இல்லாததால் சமூகத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை. கற்றவன் என்ற திமிரில் சகஆசிரியர்களுடனும் மாணவர்களுடனும் சமூகத்தினருடனும் விதண்டா வாதம் பேசி முரண்படுவேன். அவர்கள் எல்லோரும் என்னைப் படித்த முட்டாள், உலகம் தெரியாதவன் என்று சொல்வர். அதைக் கேட்டு நான் அவர்களுடன் முரண்படுவேன். எனது நண்பனான நாகநாதன் எனது இனத்தவரான கதிரேசன் போன்றோர் பெரிதாகக் கற்றதில்லை. நாகநாதன் சிறுவயதிலேயே படிப்பைக் குழப்பி விட்டுக் குடிகாரனாகத் திரிந்தான். பின் திருந்திச் சிவனை வழிபடத் தொடங்கினான். இன்று அவன் பெரும் ஞானியைப் போலக் கதைக்கிறான். ஊரவர்கள் அவனைத் தெய்வமாக மதிக்கின்றனர். தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அவனை அணுகின்றனர். பெரும் படிப்புப் படித்த எனது பாடசாலை அதிபர் கூடப்பாடசாலை விடயங்களில் அவனிடம் ஆலோசனை கேட்கிறார். என்னிடம் கேட்பாரில்லை. இது ஏனென்று எனக்கு இது வரை புரியவில்லை. இப்போது தான் புரிகிறது. சிவனது திருவடியுணர்வுள்ளவனுக்குச் சிவன் எல்லாவற்றையும் கற்றுக் கொடுக்கிறார் என்பதை உணர்ந்து கொண்டேன். இனித் தவறு செய்ய மாட்டேன்” என்றான் தில்லைநாதன்.

இனித்துன்பமில்லை

**298. வல்லார்கள் என்றும் வழியொன்றி வாழ்கின்றார்**
**அல்லா தவர்கள் அறிவு பலஎன்பார்**
**எல்லா இடத்தும் உளன்எங்கள் தம்இறை**
**கல்லா தவர்கள் கலப்பறி யாரே.**

அப்போது அங்கே நாகநாதன் வந்தான். சிவசாமியுடன் தில்லைநாதன் நிற்பதைக் கண்டு சொன்னான், “இதை நான் எதிர்பார்தனான். ஆனால் இவ்வளவு சீக்கிரம் நடைபெறும் என்று எதிர்பார்க்கவில்லை. திருவடியுணர்வுடையவர்கள் சிவனின் நினைவுடன் இருப்பதால் என்றும் நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பார்கள். அவர்கள் உலகம் போற்றும்படியாகச் சிறப்புடன் வாழ்வார்கள். திருவடியுணர்வு இல்லாதவர்கள் பல்வேறு விதமாகக் கதைபேசித் தம்மைத் தாமே ஏமாற்றி வாழ்வார்கள். அதில் அவர்களுக்கு அலாதியான இன்பம் உண்டாகுமே தவிர உண்மையான இன்பம் உண்டாகாது என்று உனக்கு நான் பல முறை சொன்னேன். நீ கேட்கவில்லை. இப்போது பல்வேறு விதமான துன்பங்கள் ஒன்றாக வந்து துன்பப்படுத்திய போது தான் உணர்ந்துள்ளாய். ஒரு காலத்தில் உன்னைப் போலத் தான் நானும் சிவநினைவின்றி நாத்திகம் பேசி இன்புற்றிருந்தேன். அதனால் வந்த துன்பங்கள் எவ்வளவு. எந்த நாளும் பிரச்சினைகள் தான் வரும். இன்று சிவனருளால் எல்லாத் துன்பங்களும் விலகி விட்டன. மகிழ்வுடனும் நிம்மதியுடனும் வாழ்கிறேன். இந்த இன்பமான வாழ்வு சிவன் தந்தது. அதை உனக்கு நான் பல முறை கூறியும் நீ அதற்குப் பல காரணங்கள் கூறினாய். இன்று உணர்ந்து

சிவன் தான் தஞ்சமென்று எண்ணி வந்துள்ளாய். இனி உனக்குத் துன்பமில்லை'' என்றான் நாகநாதன்.

மறைந்து நிற்பவன்

**299. நில்லா நிலையை நிலையாக நெஞ்சத்து**
**நில்லாக் குரம்பை நிலையென் றுணர்வீர்காள்**
**எல்லா வுயிர்க்கும் இறைவனே யாயினுங்**
**கல்லாதார் நெஞ்சத்துக் காணவொண் ணாதே.**

"தில்லைநாதனைப் போலப் பலர் திருவடியுணர்வில்லாதவர்களாக வாழ்கிறார்கள். அவர்கள் இறைவனை நம்பாது தம்மை நம்புகிறார்கள். இதற்குக் காரணம் தமது உடலும் தாம் தேடிய பொருட்களும் நிலையானவையென்றும், அவை தம்மைக் காப்பாற்றும் என்றும் அறியாமையால் நினைக்கின்றனர். சிவபெருமான் உலகிலுள்ள அனைத்து உயிர்களிடத்துள்ளும் உள்ளான். திருவடியுணர்வு இல்லாதவர்களின் உள்ளத்தில் பாலில் நெய் போல மறைந்து நிற்கின்றான். அதை திருவைந்தெழுத்து என்ற மத்தால் கடைந்து திருவடியுணர்வு என்ற நெய்யை எடுத்தல் வேண்டும். அதைச் சிரமம் எனப் பலர் நினைக்கின்றனர். அதனால் தான் சிவனை நினையாதிருக்கின்றனர். இருப்பினும் என்றோ ஒரு நாள் அவர்களுக்குச் சிவனின் நினைவு உண்டாகும். அப்படி உண்டானதும் அவர்கள் சிவனைத் தேடிவருவார்கள். அது வரை பொறுத்திருத்தல் வேண்டும்'' என்றார் சிவசாமி.

கல்லேன்

**300. கில்லேன் வினைத்துய ராக்கு மயலானேன்**
**கல்லேன் அரனெறி அறியாத் தகைமையின்**
**வல்லேன் வழங்கும் பொருளே மனத்தினுட்**
**கல்லேன் கழியநின் றாடவல் லேனே.**

தில்லைநாதனுக்கு உண்மை புரிந்தது, “திருவடியுணர்வைப் பெற வேண்டுமென்ற நினைவில்லாமையால் நான் ஒழுக்கமாக வாழவில்லை. அதனால் பிறப்பிற்கு வித்தாகும் தீவினைகள் பலவற்றையும் செய்தேன். திருவடியைச் சேர்க்கும் அறநெறியையும் புண்ணியப் பேறில்லாமையால் கற்கவில்லை. அதனால் சிவநினைவின்றித் தீய செயல்களைச் செய்து இன்புற்றேன். ஐம்புலன்களின் தூண்டுதலுக்குட்பட்டு அவாமிகுந்து பொருட்களைத் தேடிக் குவித்தேன். அப்போது நன்நெறி எனக்குப் புரியவில்லை. அதனால் தொடர்ந்தும் தீய செயல்களையே செய்தேன். பொருட்களைச் சேர்த்து வைத்தலே இன்பமானதென்று நினைத்து நன்னெறியைக் கைவிட்டு பொருட்களைச் சேர்த்தேன். அந்தப் பொருட்கள் தான் இப்போது நீங்காத துன்பங்களைக் கொடுக்கிறது. கள்ளத் தனம் செய்து வாங்கிய பொருட்களால் நீதிமன்றுக்குச் செல்ல வேண்டிய நிலை பல முறை ஏற்பட்டது” என்று அழுதான் தில்லைநாதன்.

கயவர்

**301. நில்லாது சீவன் நிலையன் றெனவெண்ணி**
**வல்லார் அறத்துந் தவத்துளும் ஆயினார்**
**கல்லா மனித்தர் கயவர் உலகினில்**
**பொல்லா வினைத்துயர் போகஞ்செய் வாரே.**

தில்லைநாதன் கலங்குவதைக் கண்ட சிவசாமி சொன்னார், “மகனே, பிறப்பை அகற்ற முயலும் வல்லாராகிய அறவோர் உயிரும் உடலும் உலகமும் நிலைத்து நில்லாதன என்று தெரிந்து சிவனை மெய்யுணர்வுடன் வழிபடுவர். இவர்கள் உண்மையை உணர்ந்தவர்கள். தமது இம்மை வாழ்விற்கும் உம்மை வாழ்விற்கும் துணை செய்கின்ற அறத்தினைச் செய்வர். அம்மை வாழ்விற்கு அழைத்துச் செல்லும் சிவனைப் பேணுதலாகிய தவத்தினையும் மேற்கொள்வர். இவ்வுண்மை மெய்யுணர்வுக் கல்வியைக் கற்காத மனிதருக்குத் தெரியாது. அதனால் மெய்யுணர்வுக் கல்வியைக் கற்ற சான்றோர் இவர்களைக் கயவர் என்றழைப்பர். சாதாரணமான ஒரு மனிதன் சிவனை உணர்ந்து கொள்ளச் சில காலம் பிடிக்கும். உலகில் நடைபெறும் நிகழ்வுகளைக் கண்டு வருந்தி இவை ஏன் நடைபெறுகின்றன, இத்துன்பங்களை நீக்குவது எப்படி என்று சிந்திக்கும் மனிதன் தான் சிவனைக் காண ஆவற்படுவான். இவ்வளவு காலமும் பொருளும் பணமும் போகங்களும் தான் உண்மையானவையென்று உணர்ந்த நீ இப்போது துன்பமேலீட்டால் அதைப் போக்க நினைத்துச் சிவனை உணரத் தொடங்கியுள்ளாய். இது நல்ல அறிகுறி. கயவராய் வாழ்ந்த நீ மெய்யுணர்வுக் கல்வியைக் கற்க ஆரம்பித்துள்ளாய். இனி உனக்குத் துன்பம் வரவாய்ப்பில்லை” என்றான் சிவசாமி.

விளாம்பழம்

**302. விண்ணின் உள்ளே விளைந்த விளக்கனி**
**கண்ணினின் உள்ளே கலந்தங் கிருந்தது**
**மண்ணினின் உள்ளே மதித்து மதித்துநின்று**
**எண்ணி எழுதி இளைந்துவிட் டாரே.**

“தில்லை, சிவபெருமான் புறக்கண்ணுக்குச் சார்பு வாயிலாக அளிக்கும் பொதுக் காட்சியுடையவன். அகக்கண்ணுக்குச் சிறப்புக் காட்சியுடையவன். இவற்றையளித்துக் காட்சி கொடுப்பவர்களுடன் கலந்திருப்பவன். இதை உணராதவர்கள் முரணாகப் பேசுவர், நூல்களில் மாறுபாடாக எழுதுவர். இவையெல்லாம் அவர்களுக்கு முன்பே அழிந்து விடும். விளாம்பழம் சிவனுக்கு விருப்பமான பழமாகும். அத்துடன் சிறந்த மருந்தாவதுடன் பித்தத்தை உடன் அகற்றும் தன்மை வாய்ந்தது. சிவன் மலப் பித்தத்தை அகற்றுவதால் விளாம்பழத்துடன் ஒப்பிடப்பட்டான். சிவனை வணங்குபவர்களுக்கு அவன் பொதுக் காட்சியளித்து அவர்களது தேவைகளை நிறைவேற்றுவான். திருவடியுணர்வுள்ளவர்களுக்கு அவர்களின் உணர்வுக்குள்ளே கலந்து நின்று அருளுவான். உன்னைப் போன்றவர்களுக்கு அவன் கட்டாயம் காட்சி தருவான். மெய்யுணர்வில்லாதவர்கள் சிவனைப் பற்றிப் புரியாது தாம் நினைத்தவற்றையெல்லாம் பேசுவர், எழுதுவர். ஆனால் அவை எதுவும் நிலைக்காது” என்றார் சிவசாமி.

கணக்கறிந்தோர்

**303. கணக்கறிந் தார்க்கன்றிக் காணவொண் ணாது**

**கணக்கறிந் தார்க்கன்றிக் கைகூடா காட்சி**

**கணக்கறிந் துண்மையைக் கண்டகண்ட நிற்குஞ்**

**கணக்கறிந் தார்கல்வி கற்றறிந் தாரே.**

பேசிக் கொண்டிருக்கும் சிவசாமி கண்களை மூடினாரென்றால் அதைத் திறக்கப் பல நாட்களாகும். அன்று தில்லை நாதனுடன் பேசிவிட்டுக் கண்களை மூடினார். தில்லைநாதனுக்குச் சிவசாமியின் மேல் நம்பிக்கையுண்டானது. அதனால் அவன் தினமும் கோவில் மடத்திற்கு வருவான். பல நாட்கள் வந்தும் அவர் கண்களைத் திறக்கவில்லை. அது தில்லைநாதனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. தனது எண்ணங்களை நாகநாதனிடத்தில் வெளிப்படுத்தினான்.

"தில்லை, சிவயநம என்ற ஐந்தெழுத்தைக் கணிக்கும் வகையை அறிந்தவர்கள் தான் கணக்கறிந்தவர்கள் என்று சொல்லப்படுவார்கள். திருவைந்தெழுத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லி உருவேற்ற வேண்டும். அப்படி உருவேற்றினால் சிவனின் அருளால் சிவனின் திருவடியைக் காணலாம். அவர்களுக்குத் தான் சிவனின் உண்மைக் காட்சியை உணரும் தன்மை உண்டாகும். சிவனின் உண்மைக் காட்சியைக் காண்போர் வாழும் போதே பேரின்ப நிலையாகிய சிவயோக நிலையை அடைவர். சிவயோக நிலை என்பது தன்னையும் உலகையும் மறத்தல். இப்போது சுவாமியார் பல நாட்களாகத் தன்னையும் உலகையும் உலகில் நடப்பவற்றையும் அறியமாட்டார். சமாதி நிலையில் இருப்பார். சுவாமி அவர்கள் இவ்வாறு பல தடவைகள் இருந்திருக்கிறார். அப்போது சிவனைக் கண்டு அவருடன் கலந்து பேரின்பத்தை அனுபவிக்கிறாரென்று மக்கள் பேசிக் கொள்கிறார்கள். இந்நிலை ஐந்தெழுத்தைக் கணிக்கும் முறையால் வந்தது. அதைக் கணிக்க முடியாதவர்கள் தன்நிலையை இழக்க மாட்டார்கள். தன்னிலையை இழந்தவர்கள் தான் கணக்கறிந்தவர்கள்" என்றான் நாகநாதன்.

காணக்கூடாதவர்கள்

**304. கல்லாதமூடரைக் காணவும் ஆகாது**

**கல்லாதமூடர் சொல் கேட்கக் கடன்அன்று**

**கல்லாதமூடர்க்குக் கல்லாதார் நல்லாராம்**

**கல்லாதமூடர் கருத்தறியாரோ.**

நாவலூரில் சிவஞானராசா என்றொரு பண்டிதர் இருந்தார். அவர் வேதஉபநிடதங்களையும் சைவசித்தாந்த நூல்களையும் கற்றுத்தேர்ந்தவர். ஆனால் கடவுளின் மீது நம்பிக்கை இல்லாதவர். கடவுளைப் பற்றிய நூல்கள் யாவும் புனைகதைகள் என்று சொல்பவர், “சிவன் துன்பப்பட்ட பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்தவர். அப்படியான சிவன் உணவில்லாமல் கஷ்டப்படும் மக்களுக்கும் உணவு கொடுக்கலாம் தானே” என்பார். அவர் எப்போதும் சிவநிந்தனை செய்வதால் நல்லவர்கள் எவரும் அவரைக் காண விரும்புவதில்லை. கோவில் உற்சவகாலங்களிலும் ஊரில் நடைபெறும் விழாக்காலங்களிலும் உரையாற்ற அவரை யாரும் அழைப்பதில்லை. அதனால் அவர் கோவிற்பிரமுகர்களுடனும் ஊர்ப்பெரியவர்களுடனும் தர்க்கத்திலீடுபடுவார்.

சிவஞானராசா பெரும் தனவந்தனின் மகன். கோடிக்கணக்காண சொத்திற்கு வாரிசு. அவரது தந்தை அவருக்குத் திருமணம் செய்து வைக்க விரும்பினார். ஆனால் ஊரிலுள்ள எவரும் சிவஞானராசாவிற்கு பெண்கொடுக்க முன்வரவில்லை.

ஒரு நாள் சிவஞானராசா தனது வீட்டில் கூலிவேலை செய்யும் கதிரவேலுவின் மகளை வீதியில் கண்டு காதல் கொண்டான். கதிரவேலுவின் மகள் கௌரி சிவபக்தை. சிவனின் விரதங்கள் அனைத்தையும் முறைப்படி அனுட்டிப்பவள்.

சிவஞானராசா கதிரவேலுவின் மகள் கௌரியைத் தான் காதலிப்பதாகத் தனது தந்தைக்குக் கூறி அவளைத் தனக்குத் திருமணம் செய்து வைக்குமாறு கூறினான். முதலில் அவர் மறுத்த போதும் பின் சிவஞானராசாவின் பிடிவாதத்தால் மணமிளகிக் கதிரவேலுவை அழைத்துத் தனது மகனின் விருப்பத்தைத் தெரிவித்தார். அதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த கதிரவேலு சில நிமிடங்களின் பின் சொன்னான், “எனது மகள் சிவபக்தை. உங்கள் மகன் சிவசிந்தனை இல்லாதவன். அத்துடன் சிவனை நிந்திப்பவன். உங்கள் மகனது சிவநிந்தனையைக் கேள்விப்படும் அவள் உங்கள் மகனைக் கொல்ல வேண்டும் என்று அடிக்கடி கூறுவாள். அப்படியானவள் நீங்கள் கூறுவதைக் கேட்டால் என்ன சொல்வாளோ..?” என்றார்.

சிவஞானராசாவின் தகப்பன் எதுவும் கூறவில்லை. அதனால் எதுவும் கூறாது கதிரவேலு தனது வீட்டுக்குச் சென்றான். ஒரு நாளுமில்லாது கதிரவேலுவைக் கண்ட கௌரி எழுந்து வந்து அவருக்கருகில் நின்று சொன்னாள், “அப்பா. சிவநிந்தனை செய்வோரைக் காண்பது பாவம். அவர்சொற் கேட்பது பழி. ஆகவே நீங்கள் இனிமேல் சிவநிந்தனை செய்பவரின் வீட்டிற்குச் செல்ல வேண்டாம். நாம் உணவில்லாது இறந்தாலும் பரவாயில்லை. ஆனால் சிவநிந்தனை செய்பவனின் வீட்டில் வேலை செய்து பணம் பெற்று உணவு சமைத்துண்பது பாவம். அதனால் இனிமேல் அங்கு செல்லாதீர்கள்” என்றாள். கதிரவேலு மூச்சுவிட்டார். அதன் பின் அவர் வேலைக்குச் செல்லவில்லை. சிவஞானராசாவின் தகப்பன் பல முறை ஆள் அனுப்பிச் சொல்லியும் கதிரவேலு செல்லவில்லை. “சிவநிந்தனை செய்பவரிடம் வேலை செய்து வாழ்வதை விட இறப்பது மேல்” என அவர் நினைத்தார்.

சிவஞானக் கல்வி

**305. கற்றுஞ் சிவஞானம் இல்லாக் கலதிகள்**
**சுற்றமும் வீடார் துரிசறார் மூடர்கள்**
**மற்றும் பலதிசை காணார் மதியிலோர்**
**கற்றன்பில் நிற்போர் கணக்கறிந் தார்களே.**

‘‘தில்லை, நீ ஏராளமான உலகநூல்களைக் கற்றுள்ளாய். அதில் பெரும் பட்டமும் பெற்று ஆசிரியனாகி மாணவர்களுக்கு அவற்றைக் கற்பிக்கிறாய். ஆனால் திருவடியுணர்வைத் தரும் சிவஞானத்தைக் கற்காததால் உன்னால் நிம்மதியாக வாழ முடியவில்லை. அத்துடன் அதைக் கல்லாததால் சமூகத்தின் நிலைப் புரிந்து கொள்ள முடியாது உற்றார் உறவினர்களுடன் முரண்படுகிறாய். திருவடியுணர்வுத் திருமுறையைக் கற்ற பின் கற்றபடி வாழ்பவர்களே வாழும் மனிதர்களாவர். அவர்கள் கணக்கறிந்தவர்களாக இருப்பதால் உலகத்தைப் புரிந்தவர்களாவர். அதைக் கற்காதவர் மூடர்களாவர். சிவசாமி மழைக்குக் கூடப் பாடசாலையில் ஒதுங்காதவர். அதனால் சிவத்துரோகங்கள் பலவற்றைச் செய்தார். அதன் பின் சிவனை உணர்ந்து சிவஞானக் கல்வியைத் தாடிச் சாமியாரிடம் பெற்றார். தாடிச்சாமியார் இந்த ஊரவர் அல்ல. எங்கிருந்தோ வந்து கோவில் மடத்தில் தங்கியவர். அவரிடம் சிவஞானக் கல்வியைக் கற்ற சிவசாமியை இன்று ஊரவர்கள் மதிக்கின்றனர், போற்றுகின்றனர், செயல்களைச் செய்யுமுன் அவரைக் கேட்டு விட்டே செய்கின்றனர். பல நூல்களைக் கற்றுப் பட்டம் பெற்ற பலர் ஊரில் இருந்தும் மக்கள் அவர்களைக் கல்வியாளர்களென்று நினைக்கவில்லை. அதற்குக் காரணம் மெய்யுணர்வில்லாமையே’’ என்றான் நாகநாதன்.

ஆதிப்பிரானாவன்

**306. ஆதிப் பிரான்அம ரர்க்கும் பரஞ்சுடர்**

**சோதி அடியார் தொடரும் பெருந்தெய்வம்**

**ஓதி உணரவல் லோம்என்பர் உள்நின்ற**

**சோதி நடத்துந் தொடர்வறி யாரே.**

“தில்லை, ஆறுமாதங்களுக்கு முன்பு பத்து நாட்கள் சிவசாமியார் கண்விழிக்கவில்லை. இவ்வூர் மக்களிற் பெரும்பான்மையானவர்கள் அவருடன் கூட இருந்தனர். அவர் கண் விழித்ததும் யாருக்காவது வாழ்க்கையில் நடைபெறும் சம்பவங்களைப் பற்றிக் கூறுவார். அவர் கூறுவது நடைபெறும். சென்ற முறை வேலாயுதபிள்ளைக்குச் சொன்னார், “உனது பேர்த்தியின் திருமணம் தடல்புடலாக நடைபெறும். அதற்கு முன் சிவனுக்கு ஓர் அபிசேகம் செய்” என்றார். பல காலமாக நாகதோஷத்தால் தடைப்பட்டிருந்த திருமணம் சிவசாமி சொல்லி ஒரு வாரத்துள் நடந்து விட்டது. இப்படி எத்தனையோ சம்பவங்களைச் சொல்லலாம். அவர் சொல்வார், “சிவன் சோதி மயமானவன். அவன் தன்னை அன்போடு துதிக்கும் விண்ணவர்களினதும், மண்ணுலகத்தவரினதும் உயிருக்குள்ச் சோதியாக நின்று அருள்புரிபவன்” என்பார். சோதியாக நிற்பவனை உணர அகக் கண்கள் வேண்டும். நல்ல குரு அமைதல் வேண்டும். குருவைப் பணிந்து அவர் கூறும் முறைப்படி ஐந்தெழுத்தை ஓதினால் தான் பயன் கிடைக்கும். தாமே ஓதியறியலாம் என்று கூறுபவர்கள் மெய்யுணர்வில்லாத மூடர்கள் என்றும் சொன்னார். அதனால் நீ அவர் விழித்ததும் ஐந்தெழுத்தையோதும் முறைகளைக் கேட்டறி” என்றான் நாகநாதன்.

# 16. நடுவு நிலைமை

யார்க்கும் அஞ்சாதவர்

**307. நடுவுநின் றார்க்கன்றி ஞானமும் இல்லை**
**நடுவுநின் றார்க்கு நரகமும் இல்லை**
**நடுவுநின்றார் நல்ல தேவருமாவர்**
**நடுவு நின்றார் வழி நானும் நின்றேனே**

வளவநாட்டில் சதானந்தன் என்றொரு சிவனடியார் வாழ்ந்து வந்தார். அவரின் ஆச்சிரமத்தில் பல தேசத்து அரசகுமாரர்கள் தங்கிக் கல்வி கற்று வந்தனர். வளவை நாட்டின் அரசகுமாரன் கற்றலில் அக்கறைகாட்டுவதில்லை. அத்துடன் சிவநினைவும் அவனிடம் இருக்கவில்லை. அங்கு வரும் சிவனடியார்களை அவன் சாதாரண மக்கள் என்று நினைத்து அவர்களை மதிக்காது அவமதிப்பான். அது பற்றி அடிக்கடி சதானந்தன் எடுத்துச் சொல்லியும் அவன் கேளாது தொடர்ந்து சிவனடியார்களை அவமதித்து வந்தான். அதனால் சதானந்தன் வளவை நாட்டரசனை அழைத்து இளவரசனை அழைத்துச் செல்லும்படி கூறினார்.

வளவை நாட்டரசன் திமிர் பிடித்தவன். நடுவுநிலையைப் போற்றாதவன். அதனால் நாட்டில் அடிக்கடி குழப்பங்கள் உண்டாகும். அத்துடன் அயல்நாடுகளோடும் அடிக்கடி பிரச்சினைப்படுவான். அயல்நாட்டரசர்கள் சதானந்தனுக்குத் தமது பிரச்சினைகளைக் கூறுவர்.

தனது மகனுக்குக் கற்பிக்காவிட்டால் சதானந்தனைக் கொலை செய்வேன் என்று மிரட்டிய வளவை அரசன் சிவனடியார்கள் பலரைத் தண்டித்தான். சிவனடியார்களின் நடுவில் வீற்றிருக்கின்ற சதானந்தனுக்கு

அது பொறுக்கவில்லை. அவர் வளவை நாட்டரசனைப் பற்றி அயல்நாட்டரசர்களுக்குச் சொன்னார்.

அயல்நாட்டரசர்கள் ஒன்று சேர்ந்து வளவை நாட்டைக் கைப்பற்றினர், ''நடுவுநிலை நிற்கும் சிவனடியார்களுக்குப் போர் பயிற்சி தேவையில்லை. படை தேவையில்லை. ஆனால் தேவைப்படும் போது நடுநிலை நிற்கும் ஆன்மாவிற்கு உதவியாகச் சிவன் வருவார். இதையே 'சிவயசிவ' என்றும் பஞ்சாட்சரம் குறிக்கிறது. ஆகையால் ஆன்மாக்கள் நடுவுநிலை நின்று தம் வாழ்வை மேம்படுத்துதல் வேண்டும். நடுவுநிலை நிற்பவர்கள் முத்தியடைந்தவர்கள்.சிவனின் மனதில் இருப்பவர்கள். அதனால் எதுவுமில்லாத அவர்கள் தேவையேற்படும் போது எல்லாவற்றையும் பெற்று விடுவார்கள்'' என்று சதானந்தன் தனது மாணவர்களுக்குப் போதித்துக் கொண்டிருந்தார்.

சிவபெருமானானவர்

**308. நடுவுநின் றான்நல்ல கார்முகில் வண்ணன்**
**நடுவுநின் றான்வல்ல நான்மறை யோதி**
**நடுவுநின் றான்சிலர் ஞானிக ளாவோர்**
**நடுவுநின் றார்நல்ல நம்பனு மாமே.**

''தில்லை, காக்கும் தொழிலைச் செய்யும் கார் முகில் வண்ணனும், படைத்தல் தொழிலைச் செய்யும் திருமாலும் சிவனின் ஆணைப்படி நடுவுநிலை நின்று காத்தும் படைத்தும் வருகின்றனர். சிவன் தான் ஐந்தொழில்களையும் மறைத்து நின்று செய்வதாகப் புராணங்கள் கூறுகின்றன. ஐந்தொழில்களையும் சிவன் வெவ்வேறு பெயர்களிற்

செய்கிறார். இந்தவகையில் காத்தலும் படைத்தலும் பக்கச்சார்பின்றி நடுவுநிலை நின்று செய்யப்படுகின்றன. நடுவுநிலை நின்று செய்யாவிட்டால் பெருந் தீமைகள் உண்டாகிவிடும். உலகின் சமநிலை தவறிவிடும். இந்தவகையில் சிவஞானிகளாகியவர்களும் நடுவுநிலை நின்றமையால் தான் சிவஞானிகளாகினர். அவர்களும் சிவனைப் போல விருப்பு வெறுப்பு இல்லாதவர்கள். பற்றற்றவர்கள், உணர்ச்சியற்றவர்கள், பந்தபாசமில்லாதவர்கள். சதாசிவனையே நினைத்துக் கொண்டு நிஷ்டையில் இருப்பவர்கள். இவர்கள் உயிரோடு இருக்கிறார்கள் என்பதைக் கண்டறிவது கஷ்டமானது. சிலவேளைகளில் இவர்கள் மூச்சை அடக்கியும் இருப்பார்கள். உடல் விறைத்தும் குளிர்ந்தும் இருக்கும். ஆனால் உடல் கெடாது, துர்நாற்றம் வீசாது. சிவசாமியின் குருவான தாடிச்சாமியார் மூன்று மாத காலம் நிஷ்டையில் இருந்தார். பின் கண் விழித்து, "நான் சிவராத்திரியன்று சிவனை அடைவேன்" என்று கூறிவிட்டுக் கண்களை மூடினார். சிவராத்திரியன்று அவரைச் சுற்றியோர் ஒளிவட்டம் தென்பட்டுப் படிப்படியாக மறைந்தது. அதைக் கொண்டு சிவசாமி தனது குரு சிவனைச் சென்றடைந்து விட்டார் என்று கூறிக் கிரியைகளைச் செய்தார். இந்த வகையில் சிவஞானிகளும் சிவபெருமானாகித் திகழ்வர்" என்றான் நாகநாதன்.

சிவஉலகக் கடவுள்

**309. நடுவுநின் றார்சிலர் ஞானிக ளாவர்**

**நடுவுநின் றார்சிலர் தேவரு மாவர்**

**நடுவுநின் றார்சிலர் நம்பனு மாவர்**

**நடுவுநின் றாரொடு நானும்நின் றேனே.**

“தில்லை, நடுவுநின்றார் சிவனாவர். சிலர் தேவராவர். இந்த வகையில் திருமூலர் நடுவுநிலை நின்று சிவஞானியாகிப் பின் சிவனானவர். என்னைப் பொறுத்தவரை சிவன் தான் மக்களின் நன்மைக்காகச் சிவஞானிகளின் வடிவில் மண்ணில் தோன்றுகிறார். இவர்களின் நினைவெல்லாம் சிவனைப் பற்றியதாகவே இருக்கும். இவர்கள் மக்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காக உழைப்பார்கள். மக்களுடன் அன்பாகப் பழகுவதனால் மக்களும் இவர்களை நெருங்கியிருப்பார்கள். மக்களைக் கவர்ந்து அவர்களைச் சிவநினைவாக்குவதே இவர்களின் தொழிலாக இருக்கும். இவர்கள் சமூகத்தில் நடக்கும் அநியாயங்களைத் தாம் நீக்காது தமக்குத் தேவையானவர்கள் மூலம் நீக்குவார்கள். இந்த வகையில் தாடிச்சாமியார் முன்பு சிவசாமியைக் கொண்டு நீக்கினார். சிவசாமி, கதிரேசன் போன்றோரைக் கொண்டு நீக்குகிறார். நான் செய்த தீமைகளைத் தடுத்துப் புத்திமதிகள் கூறிச்சிவநினைவாக்கியவர் சிவநாதன். சிவநாதன் சிவசாமியின் அன்புக்குப் பாத்திரமானவன். தாடிச்சாமியார் சிவன் என்று இன்றும் பலர் நம்புகின்றனர். அவர் பெரிதாகப் பேசியதில்லை. தேவையேற்படும் போது பேசுவார். சீடர்களைக் கொண்டு பேசுவிப்பார். ஒரு சிவஞானிக்குரிய இலக்கணங்கள் யாவும் அவரிடம் இருந்தன. நான் விதண்டா வாதம் பேசியகாலங்களில் தாடிச்சாமியாரைப் போலிச் சாமியார் என்று சொல்வேன். ஒரு நாள் அவர் சொன்னார், “மகனே, உலகத்தில் நீ காணும் பொருட்களெல்லாம் போலியானவை. இன்று இருப்பது போல அவை நாளை இருப்பதில்லை. மாறுபாடு அடைகின்றன. அப்படியிருக்கையில் நான் எப்படிப் போலியில்லாதவனாக இருக்க

முடியும்'' என்றவர். அப்போதும் எனக்குப் புத்திவரவில்லை. ஒரு நாள் நான் குடித்து விட்டு ஆலய முன்றலில் பிரச்சினைப்பட்ட போது அவர் எனக்கருகில் வந்து எனது நெற்றியில் திருநீற்றைப் பூசி விட்டுச் சொன்னார், ''மகனே, துன்பங்களில் இருந்து விடுபடு. இன்பமடைவாய். உனது குடும்பமும் நிம்மதியாக வாழும்'' என்றார். நான் திகைத்துப் போனேன். அன்று இரவு முழுவதும் தாடிச்சாமியாரைக் கனவில் கண்டேன். அவரின் கழுத்தில் நாகம் உருண்டு விளையாடியது. தலையில் பிறைச் சந்திரன் இருந்தது. நான் பயந்து விட்டேன். எழுந்து கோவிலடிக்கு வந்த போது, ''வா மகனே, உனக்காகத் தான் காத்திருக்கிறேன்'' என்றார். அதன் பின் என்னால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. தீய செயல்களையெல்லாம் விட்டு விட்டு அவரின் அருகிலேயே இருந்தேன். அவர் சிவன் தான்'' என்று உணர்ச்சிவசப்பட்டான் நாகநாதன்.

நடுவுநின்றவராவர்

**310. தோன்றிய எல்லாந் துடைப்பன் அவனன்றி**
**ஏன்றுநின் றாரென்றும் ஈசன் இணையடி**
**மூன்றுநின் றார்முதல் வன்திரு நாமத்தை**
**நான்றுநின் றார்நடு வாகிநின் றாரே.**

''தில்லை, நானும் ஊரில் உள்ள பெரியவர்கள் சிலரும் ஊரவர்களின் பிரச்சினைகளில் தலையிட்டுச் சமாதானத்தை ஏற்படுத்தி வைப்போம். ஒரு நாள் தாடிச்சாமியார் எம்மை அழைத்துச் சொன்னார், ''அன்பானவர்களே, அருமையான செயல்களைச் செய்கிறீர்கள். மக்களிற்

பலா் அறியாமையால் சிவத்துரோகங்களைச் செய்கின்றனா். பிறரின் சொத்துக்களை அடைய ஆசைப்படுகின்றனா். பிறரின் மனைவிமாா் மீது இச்சைப்படுகின்றனா். கள்ளருந்துகின்றனா். சூதாடுகின்றனா். இவை தான் சிவத்துரோகங்கள். இவற்றைச் செய்வோரை நீங்கள் திருத்த முயற்சிக்கிறீர்கள். செய்வோா் எல்லாரும் திருந்தாவிட்டாலும் ஒரு சிலராவது உணர்ந்து திருந்துகிறாா்கள். இதனால் உங்களுக்குச் சிவனின் அருள் என்றென்றும் கிடைக்கும். அதனால் நடுவுநின்று செயற்படுங்கள். நடுவுநிற்பது என்பது சிவனை மறவாமை. சிவநாமமான செந்தமிழ்த் திருவைந்தெழுத்தை முறை தவறாது ஓதுவது. அதன் பொருளை மனத்தில் இருத்தி, எவ்வேளையிலும் அதைப் பற்றி நில்லுங்கள். சிவன் தான் உலகின் கடவுள். படைப்பவனும் அவன் தான், அழிப்பவனும் அவன் தான். இந்த இரு தொழில்களையும் அவனையன்றி வேறுஎவராலும் செய்ய முடியாது. அதனால் திருவைந்தெழுத்தை ஓதினால் மனதில் நல்ல சிந்தனைகளைப் படைப்பான். அத்துடன் தீய சிந்தனைகளை அழிப்பான். பற்றுக்கள், அவாக்கள், தீமைகள் மனதுள் வர இடங்கொடான். அதனால் மனம் எவ்வேளையிலும் சுத்தமாகவே இருக்கும். சுத்தமான மனதில் குடியிருக்கும் சிவன் குடியிருப்பவர்களை நடுவுநிற்கச் செய்வான். அதற்காகத் தான் சொன்னேன்" என்றாா். அதனால் நான் எப்போதும் திருவைந்தெழுத்தைப் பற்றிப் பிடித்துள்ளேன்" என்றான் நாகநாதன்.

## 17. கள்ளுண்ணாமை

**311. கழுநீர்ப் பசுப்பெறிற் கயந்தொறும் தேரா**
**கழுநீர் விடாய்த்துத்தங் காயஞ் சுருக்கும்**
**முழுநீர்க் கள்ளுண்போர் முறைமை அகன்றோர்**
**செழுநீர்ச் சிவன்றன் சிவானந்தத் தேறலே.**

“ஒரு நாள் நான் நன்றாகக் குடித்து விட்டு எனது மனைவியையும் பிள்ளைகளையும் தாக்கி விட்டேன். அவர்கள் தாடிச்சாமியாரின் பக்தர்கள். அவர்கள் சென்று தாடிச்சாமியாரிடம் முறையிட்டு விட்டனர். எனது சகோதரன் ஒரு முறை குடித்து விட்டு வீதியில் சென்ற ஒருவரைத் தாக்கி விட்டான். அவர் தாடிச்சாமியாரின் சீடர். உடனே அவர் கோபப்பட்டு, “அற்பனே, நான் சிவனின் சீடன். நீ மயக்கத்தைத்தரும் கள்ளைக் குடித்து விட்டு மதிமயங்கி யார் என்று தெரியாமல் என்னைத் தாக்கி விட்டாய். அதன் பலன் உனக்கு உடனே தெரியவரும்” என்று கூறிவிட்டுச் சென்றார். அன்று மாலை எனது சகோதரன் விபத்தில் சிக்கியதால் தலையில் பெருங்காயம் உண்டானது. அது மாறிய பின்பும் அவரால் சரியாகப் பேசமுடியவில்லை. அதை நினைக்க எனக்குப் பயமாக இருந்தது. அதனால் தாடிச்சாமியாரிடஞ் சென்றேன், “மகனே, பாவத்தைத் தரும் கள்ளை ஏன் குடிக்கிறாய்? அது மனிதனை நிம்மதியாக இருக்கவிடாது. வீட்டிலே அருமையான மோர் உள்ளது அதைக்குடி. பசுக்கள் வீட்டில் வயிறுமுட்ட நீரைக் குடித்தால் குளத்து நீரைக் குடியாது. மனிதர்கள் தான் கண்டவற்றையெல்லாம் குடிக்கிறார்கள், தின்கிறார்கள். பின்பு குடும்பத்தவருடனும் ஏனையோரிடமும் சண்டை பிடிக்கிறார்கள். இது தேவை தானா..? உனது

பிள்ளைகள் கல்வியில் வல்லவர்கள். அவர்களது எதிர்காலத்தை அழிக்காதே. சிவனை வணங்கு. சிவஞானம் என்னும் அரிய தேன் கிடைக்கும். அதை அருந்து, பேரின்பப் பெருவாழ்வு பெறுவாய்'' என்றார். அதன் பின் நான் குடிப்பதில்லை. நீயும் குடித்து விட்டு உனது குடும்பத்தவர்களை அடிக்கடி தாக்குகிறாய். அதில் என்ன இன்பங்கண்டாய்? மது மனதை மயக்கித் தீமைகள் பலவற்றைச் செய்விக்குமே தவிர நன்மைகள் எதையும் செய்யவிடாது. இப்போ நீ சிவனை வணங்க ஆரம்பித்துள்ளாய். இனியாவது கள்ளைக் குடியாது சிவானந்தத் தேனைக் குடி'' என்றான் நாகநாதன்.

அன்பினால் சிறப்பர்

**312. சித்தம் உருக்கிச் சிவமாஞ் சமாதியில்**
**ஒத்த சிவானந்தத் தோவாத தேறலைச்**
**சுத்த மதுவுண்ணச் சுவானந்தம் விட்டிடா**
**நித்தல் இருத்தல் கிடத்தல்கீழ்க் காலே.**

நாகநாதனும் தில்லைநாதனும் கோவிலைவிட்டுப் புறப்பட்டு வீதிக்கு வந்தனர். வீதியோரத்தில் அவ்வூரில் வாழும் சுப்பிரமணியம் என்பவன் நன்றாகக் குடித்து விட்டு மயக்கத்தில் கிடந்தான். அவனது வேட்டி கலைந்திருந்தது. மலநாற்றம் வயிற்றைப் புரட்டியது. வீதியால் செல்வோர் மூக்கைப் பிடித்துக் கொண்டு சென்றனர். பெண்கள் அவ்வீதியால் செல்வதைத் தவிர்த்தனர், "ஒரு காலத்தில் இப்படித் தான் நானும் குடித்து விட்டு வீதியில் கிடந்தேன். மக்கள் காறித் துப்பி விட்டுச் சென்றனர். அப்போது அது எனக்குப் பெரிதாகத் தெரியவில்லை.

இப்போது அதை நினைத்தால் உயிர் போவது போல இருக்கிறது. சிவனை நினைத்தால் பேரின்பம். அவனது திருவடி இன்பத்தைப் பருகுவோர் தன் நிலையை இழப்பர். அப்படியான சமாதி நிலையில் பேரின்பத்தேனை அருந்துவது இன்பமானது. சிவஇன்பம் மனதுள் நிகழும். இவற்றைச் செய்யாது கள்ளருந்துவது தான் இன்பம் என நினைப்போர் கீழ் நிலையடைந்து கேவலப்படுவார். சுப்பிரமணியத்தின் மகள் வைத்தியர். அவளை அவளுடன் வைத்தியத் தொழில் பார்க்கும் ஒருவன் விரும்பினான். அவளது தந்தை குடித்து விட்டு வேட்டியில்லாமல் வீதியில் கிடப்பதைக் கண்டதால் அவளை மறந்து விட்டான். கேவலமான அறிவை மயக்கும் கள்ளால் தானே இந்த நிலை வந்தது. நல்ல வேளை நான் கள்ளை மறந்து சிவனின் அடிமையாகி விட்டேன். அதனால் எனது குடும்பமும் தப்பியது'' என்றான் நாகநாதன்.

இழிவும் அழிவும்

**313. காமமுங் கள்ளுங் கலதிகட் கேயாகும்**
**மாமல முஞ்சம யத்துள் மயலுறும்**
**போமதி யாகும் புனிதன் இணையடி**
**ஓமய ஆனந்தத் தேறல் உணர்வுண்டே.**

‘‘உண்மை தான் நாகநாதா. நான் கள்ளருந்துவதற்காகச் சிவயோகனின் வீட்டுக்குச் செல்வேன். அங்கு என்னைப் போலக் கள்ளருந்தப் பலர் வருவார்கள். சிவயோகன் இல்லாத வேளைகளின் அவனின் மனைவி அருந்ததி தான் கள்ளைத் தருவாள். அவள் நல்ல அழகி. அதனால் அவளின் அழகை ரசிப்பதற்காகப் பலர் வருவார்கள். அதற்காகத் தான் நானும் செல்வேன். எனது மனைவியில் இல்லாத ஓர்

அபூர்வ அழகு அவளில் குடிகொண்டிருப்பதாக எனக்குத் தெரிந்தது. அதனால் அடிக்கடி அங்கு செல்வேன். அன்று அளவுக்கதிகமாகக் கள்ளைக் குடித்ததால் மயக்கமதிகரித்தது. அவள் குடிக்க வருவோரை அதிக நேரம் தாமதித்து நிற்க அனுமதியாள். நான் நின்றால் எதுவும் பேசாள். அன்று மது மயக்கத்தில் அவளைக் கட்டியணைத்தேன். அவள் எதுவும் பேசாததால் எனது விருப்பம் பூர்த்தியானது. அதன் பின் அவளே தஞ்சமெனக்கிடந்தேன். எனது சொத்துப் பாதியாகக் குறைந்தது. அவளது உறவு வெளியுலகத்திற்குத் தெரிந்தமையால்ஊரவர்கள் என்னை மதிப்பதில்லை. ஏனென்றால் எமது வீட்டில் மாமிசங்கள் சமைப்பதில்லை. எமது குடும்பம் பரம்பரை பரம்பரையாகச் சிவனை வணங்கி வருகிறது. அத்துடன் சைவஅனுட்டானங்களை மீறுவதில்லை. அவள் மீது கொண்ட காமத்தால் நான் மாமிசம் உண்ணத் தொடங்கினேன். இதைத் தெரிந்து கொண்ட உறவினர்கள் என்னைத் தம்மோடு சமமாக இருக்க விடுவதில்லை. அத்துடன் தமது விசேடங்களுக்கு என்னை அழைப்பதுமில்லை. எனது மனைவியின் சகோதரனின் மகளுக்குத் திருமணம் நடைபெற்ற போது அவன் சொன்னான், ''தில்லை, நீ இப்போது எமது சாதிக்காரன் அல்ல, கீழ் சாதிக்காரன். கீழ்சாதியினர் விற்கும் கள்ளைக் குடிக்கிறாய், அவர்கள் சமைக்கும் புலாலை உண்கிறாய். நீ எமது வீட்டுக்கு வந்தால் எனது மகளின் திருமணம் குழம்பி விடும். அதனால் வராதே'' என்றான். கள்ளால் நான் அழிந்து போனேன். இப்போ அதை நினைக்கப் பெரும் அவமானமாக உள்ளது. சிவனின் அருள் தான் என்னைக் காப்பாற்றியது'' என்று கலங்கினான் தில்லைநாதன்.

வாமத்தோர்

**314. வாமத்தோர் தாமும் மதுவுண்டு மாள்பவர்**
**காமத்தோர் காமக்கள் ளுண்டே கலங்குவர்**
**ஓமத்தோர் உள்ளொளிக் குள்ளே உணர்வர்கள்**
**நாமத்தோர் அன்றே நணுகுவர் தாமே.**

“நாகநாதா, என்னோடு கற்பிக்கும் ஓர் ஆசிரியன் சக்தி தான் முழுமுதல் தெய்வம் என்று கூறிச் சக்தியை வழிபடுவான். அது சம்பந்தமான நூல்கள் பலவற்றைக் கொண்டு வந்து எனக்குத் தருவான். நான் அவற்றை வாசிப்பேன். வாசிக்கும் போது அந்தப் பொய்யான நூல்களை மெய்யானவையென்றெண்ணி அவற்றில் கூறியவற்றைப் பின்பற்றுவேன். அந்நூலில் இறைவியின் திருவடியை அடையக் கள்ளுண்ண வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. கள்ளுண்டால் சக்தி மகிழ்வடைந்து வரங்களை அள்ளித் தருவாளாம். அத்துடன் அவன் சொல்வான், “கள்ளுண்டு விட்டுப் பெண்ணோடு சேர்ந்தால் சொர்க்கத்தைக் காணலாம். கள்ளுண்பதை எனது மனைவி விரும்பமாட்டாள். அத்துடன் கள்ளுண்டு விட்டு உறவு கொள்ளவும் விடமாட்டாள். அதனால் நான் கள்ளுண்டு விட்டு அருந்ததியோடு கூடியிருப்பேன். சிவசுவாமியாரின் அருளால் இவை யாவும் அநீதியானவை என்றும் பாவத்தை அதிகரிக்கச் செய்து பிறப்பைக் கூட்டுபவையென்றும் அறிந்து தெளிவடைந்தேன். சக்திக்கு விருப்பமானது சிவனந்தத்தேறல் என்றும், சிவவழிபாட்டாளர் ஓமம், தீ வளர்த்தல், மனஅடக்கம், தியானம் ஆகியவற்றை மேற்கொண்டு சிவனடியுள் ஒடுங்கித் தம்முணர்வுள் சிவஇன்பத்தேறலினை உண்பர் என்றும் சிவசாமியார் சொல்வார்.

அதைக்கேட்டே நான் சிவபக்தனானேன். திருவைந்தெழுத்தைத் திருவருளாற் காண்போர் அப்பொழுதே திருவடியுணர்வை அடைவர் என்பது தான் உண்மை. இப்போ திருவைந்தெழுத்தை முறைப்படி ஓதுவதால் எனக்கு பயமில்லை, என்னை அழிக்கக் காமத்தாலோ கள்ளாலோ முடியாது'' என்றான் உறுதியாக.

பதியை அறியாதவர்கள்

**315. உள்ளுண்மை ஓரார் உணரார் பசுபாசம்**

**வள்ளண்மை நாதன் அருளினின் வாழ்வுறார்**

**தெள்ளுண்மை ஞானச் சிவயோகஞ் சேர்வுறார்**

**கள்ளுண்ணும் மாந்தர் கருத்தறி யாரே.**

''நாகநாதா, கள்ளைக் குடித்தால் மயக்கத்துடன் காமமும் சேர்ந்து வரும். அது வந்தால் உயிருக்குள்ளே உயிராய்க் கலந்து நின்று உணர்வை அளிக்கின்ற சிவனின் நினைவு வராது. இன்னும் குடிக்க வேண்டும். அருந்ததியை அணைக்க வேண்டும் என்ற எண்ணமே மனதில் உருவாகிப் பூதாகலமாகும். உடனே முதல் நாள் அவள் கேட்ட பொருட்களைச் சேகரித்துக் கொண்டு அவளிடஞ் செல்ல வேண்டும் என்ற முனைப்பு வருமேதவிரக் குடும்பநினைப்பு வராது. ஒரு நாள் எனது இளைய மகனுக்குக் கடுமையான நோய் வந்துவிட்டது. வைத்தியரை அழைத்து வரச் சென்றேன். வீட்டில் வைத்தியர் இல்லை. நான் அங்கிருந்தவர்களிடம் விபரத்தைக் கூறிவிட்டு வீட்டுக்குத் திரும்பினேன். வரும் வழியில் தான் அருந்ததியின் வீடு இருந்தது. அங்கு சென்று கள்ளைக் குடித்தேன். குடிக்கும் போது உடனே வீட்டிற்குச் செல்ல

வேண்டும் என்ற நினைவு இருந்தது. குடித்த பின் இன்னும் குடிக்க வேண்டும் என்ற நினைவு வந்ததே தவிர இளைய மகனின் நினைவு வரவில்லை. நன்றாகக் குடித்து விட்டு நடுச்சாமத்தில் வீட்டுக்குச் சென்று முற்றத்தில் படுத்துவிட்டேன். மறுநாள் காலையில் எனது மகனை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற எனது மனைவியின் தகப்பனார் வந்து எழுப்பிய போது தான் மகனின் நினைவு வந்தது. மனைவியின் தகப்பன் வாய்க்கு வந்தபடி என்னை ஏசினார், “நீ ஒரு மனிதனா? பெற்ற பிள்ளை சாகக் கிடக்கும் போது அந்த நினைவில்லாமல் கள்ளுக் குடித்துவிட்டுக் குடித்த வீட்டிலையே படுத்துறங்கிவிட்டுவாறாய். உன்னைப் போன்ற ஒருவர் எமது சாதியில் இல்லை. கேவலமானவனே உனக்கேன் குடும்பம், பிள்ளை. வீட்டைவிட்டுப் போ. நாங்கள் அவர்களைப் பார்த்துக் கொள்கிறோம். குடிப்பவர்களுக்குச் சிவனின் நினைவே வராது. சிவன் கோவிலையே இடிப்பார்கள். அப்படியிருக்க எப்படி ஆன்மாவைப் பற்றியும், பாசமுள்ள குடும்பங்களைப் பற்றிய நினைவும் வரும். அந்த நினைவு மனதில் இருந்தால் தான் கடவுளைப் பற்றிய நினைவு வரும். அவரின் பெருமைகள் தெரியும். திருவருளால் வரும் திருவடியுணர்வு வரும். இவற்றைவர அழிக்கும் தன்மை மிக்க கள்ளு விடாது” என்று ஏசினார். இப்போ அதை நினைத்தாலும் வெட்கமாக இருக்கிறது” என்றான் தில்லைநாதன்.

மூடர்கள்

**316. மயக்குஞ் சமய மலமன்னு மூடர்**

**மயக்கு மதுவுண்ணு மாமூடர் தேரார்**

**மயக்குறு மாமாயை மாயையின் வீடு**

**மயக்கில் தெளியின் மயக்குறும் அன்றே.**

“நாகநாதா, மது என்ற சொல்லுக்குப் பல அர்த்தங்கள் உண்டு. அறிவினைக் கெடுத்துத் துன்பங்கள் தருவதெல்லாம் கள்ளென்று ஆன்றோராற் சொல்லப்பட்டுள்ளது. சிவத்தைப் பற்றிய அறிவும் தெளிவுமில்லாதவர்கள் மூடர்களாவர். இவர்களின் வாய்ச்சொற்களும் எண்ணங்களும் என்றும் துன்பத்தையே தரும். சக்தி தான் உலகத்தின் தலைவி என்று கூறிய அவ்வாசிரியனால் பல ஆசிரியர்களும் மாணவர்களும் ஏமாற்றப்பட்டனர். அவன் கூறும் சமயத் தத்துவங்கள் பொய்யானவையாக இருந்த போதும் அதிலுள்ள மோகத்தால் அதை மெய்யென்று நினைத்து விட்டேன். இப்படியானவர்கள் மதுவினையுண்ணும் மாமூடர்களைவிடக் கொடியவர்கள். சமயத்தின் பொய்யான கருத்துக்களின் மீதுள்ள பற்றும் மதம் என்றே சொல்லப்படும். மதம் என்பது கள் அருந்திவிட்டு மயக்கத்தில் பொய்யானவற்றை மெய்யென்று நிறுவுவது. அந்த ஆசிரியன் நல்ல பேச்சாளன். நன்றாக மதுவருந்துவான். தீயதைச் செய்வதன் மூலம் நன்மை வருமென்று சொல்லும் மூடனை நான் ஆராயாது நம்பிவிட்டேன். கள்ளைக் குடித்தால் கடவுளைக் காண முடியும் என்றும் சொன்னான். குடிக்கக் குடிக்கத் தீவினை தான் மேலெழுந்தது. பழைய பகைகள் நினைவுக்கு வந்தன. ஒருவர் நல்ல வார்த்தைகளைப் பேசினால் அது தீயவார்த்தைகளாகியது. இப்படியானவர்கள் அசுத்த மாயையால் பீடிக்கப்பட்டுப் பாவங்களைச் சேர்ப்பவர்களாகி வாழ்நாள் முழுவதும் துன்பப்படுவார்கள். இத்தகைய தீய நிலையிலிருந்து மீண்டெழச் சிவனின் அருள்வேண்டும். அவனின் அருளால் தான் தூவாமாயையென்று சொல்லப்படுகின்ற அசுத்த மாயை அகலும்” என்றான் தில்லைநாதன்.

கள்ளும் காமமும்

**317. மயங்குந் தியங்குங்கள் வாய்மை அழிக்கும்**
**இயங்கும் மடவார்தம் இன்பமே எய்தி**
**முயங்கும் நயங்கொண்ட ஞானத்து முந்தார்**
**இயங்கும் இடையறா ஆனந்தம் எய்துமே.**

“நாகநாதா, கள்ளும் காமமும் மிகக் கொடியவை. ஆனால் கள்ளை விடக் காமம் கொடியது. கள்ளினை உண்போர் வழி, குழி தெரியாதுவிழுந்தெழும்புபவர். இழிந்த காமம் உடையோர் காணும் பெண்கள் மீதெல்லாம் இச்சைப்படுவர். கற்புள்ள பெண்கள் கணவனைத் தவிர்ந்த வேறு ஆடவர்களை ஏறெடுத்துக்கூடப் பார்க்கமாட்டார்கள். ஆனால் இழிந்த பெண்கள் பல ஆடவர்களைத் தம் செயல்களால் அழைப்பார்கள். இப்படியான பெண்கள் கழிகாமத்தை உடையவர்கள். இன்பமாகப் பொழுதைக் கழிப்பதையே நோக்கமாகக் கொண்டிருப்பர். அருந்ததியின் வீட்டிற்கு கள்ளுண்ணச் சென்று அருந்ததியை மோகித்தேன். அவளது தங்கை வேறோர் ஊரில் வசித்து வந்தாள். அவள் பெருநாட் காலங்களில் அருந்ததியின் வீட்டிற்கு வந்து சில நாட்கள் தங்குவாள். ஒரு முறை அவள் வந்த போது அவளைக் கண்டேன். அவள் கன்னிப் பெண். அருந்ததியைவிட அழகி. அடிக்கடி என்னைப் பார்ப்பாள். சிரிப்பாள். அவளின் போக்கிலிருந்து அவள் என்னோடு உறவு கொள்ள விரும்புகிறாளென்று தெரிந்தது. அதனால் துணிந்து கையைப் பிடித்தேன். அதன் பின் பல தடவைகள் உறவாடினோம். என்னால் அவளை மறக்க முடியவில்லை. அவள் தந்த இன்பம் எனது உயிரைக் கொன்றது. சில நாட்களின் பின் அவள் தனது

ஊருக்குச் சென்று விட்டாள். அவள் தந்த பேரின்பத்தை என்னால் இழக்க முடியவில்லை. அவளைத் தேடிச்சென்று, அவளது ஊரில் அவளது வீட்டை விசாரித்தேன். ஊரவர்கள் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தனர். எனக்கு அவமானமாக இருந்தது. ஒரு பெரியவர் சொன்னார், “அவள் பெரும் விபச்சாரி. திருமணமாகாமலே கர்ப்பமானவள். அது வீட்டாருக்குத் தெரியவர அவள் தற்கொலை செய்து கொண்டாள்.”

“என்னால் அதைத் தாங்க முடியவில்லை. அப்போது எனக்குத் திருவடியுணர்வில்லை. அதனால் அவளே பேரின்பம் என்றிருந்தேன். அதனால் எனக்குப் பல துன்பங்கள் வந்தன. அருந்ததி, நான் தான் தனது தங்கையைக் கெடுத்ததாக காணும் வேளையில் திட்டுவாள். கள்ளும் காமமும் என் சிந்தையை மறைத்ததால் நான் தினமும் செத்துப் பிழைக்கிறேன்” என்றான் தில்லைநாதன்.

காலகாலன்

**318. இராப்பகல் அற்ற இடத்தே இருந்து**
**பராக்கற ஆனந்தத் தேறல் பருகார்**
**இராப்பகல் அற்ற இறையடி இன்பத்து**
**இராப்பகல் மாயை இரண்டிடத் தேனே.**

“அருந்ததியின் சகோதரி தற்கொலை செய்த பின் அருந்ததியும் அவளது பெற்றோரும் வீட்டிற்கு வந்து என்னைப் பயமுறுத்தத்

தொடங்கினர். ஊரிலும் விசயம் கசிய ஆரம்பித்தது. அதனால் ஊரவர்கள் என்னைக் கேவலமாகக் கதைத்தனர். அதனால் எனது குடும்பத்தவர்கள் தெருவில் தலைகாட்ட அஞ்சினர். அவர்கள் இரவு பகலாக அழுதழுது துன்பப்பட்டனர். என்னால் பகலிலும் இரவிலும் நிம்மதியாக இருக்க முடியவில்லை. அப்போது நான் கள்ளும் காமமும் தான் பேரின்பத்தைத் தரவல்லன என்று நினைத்து அதில் மூழ்கியிருந்தேன். அதன் பின் இரவையும் பகலையும் காண எனக்குப் பயமாக இருந்தது. அதனால் இரவு பகலற்ற ஓர் இடம் தேவையெனத் தேடியலைந்தேன். அந்த இடம் சிவபெருமானின் திருவருள் வெளிநிலையம் எனத்தெரிந்தது கொண்டேன். சிவனை மனதில் இருத்தி வேறெந்த எண்ணமுமில்லாது திருவைந்தெழுத்தை முறைப்படி ஓதிவந்தேன். அப்போது சிவனை மறவாத நிலை ஏற்பட்டது. அதனால் தீயவற்றை மறந்து சிவனின் நினைப்பானேன். இப்போ என்னால் கள்ளைக் குடிக்க முடியவில்லை. ஏனென்றால் எல்லாம் வல்ல சிவன் எனது உள்ளத்தை நிரப்பிவிட்டார். காலகாலனான சிவன் என்னை ஆட்கொண்டு விட்டான். இதனால் எனது துயரங்கள் படிப்படியாகக் குறைந்து வருகின்றன" என்றான் தில்லைநாதன்.

சிவஞானம்

**319. சத்தியை வேண்டிச் சமயத்தோர் கள்ளுண்பர்**
**சத்தி அழிந்தது தம்மை மறத்தலால்**
**சத்தி சிவஞானந் தன்னில் தலைப்பட்டுச்**
**சத்திய ஞானஆ னந்தத்திற் சார்தலே.**

“என்னைக் கெடுத்தது சக்தி வழிபாட்டில் ஈடுபடவைத்த அந்த ஆசிரியன் தான். அவரது வீட்டில் சித்தர்கள் வந்து சக்தி பூசை செய்வார்கள். அப்போது கள்ளும் படைக்கப்படும். போலிச்சித்தர்களும் அடியார்களும் கள்ளைக்குடித்துவிட்டே வழிபாட்டில் ஈடுபடுவார். அதனால் தம்மை மறக்கின்றனர். மறந்த நிலையில் சக்தி அழிக்கப்படுகிறது. சக்தியழிய வழிபாடும் அழிகிறது. அன்று போலிச்சித்தர் நன்றாகக் கள்ளினை அருந்தினார். வழிபட வந்தோரும் கள்ளை அருந்தினர். அதனால் அவர்கள் தம்மை மறந்து உருவாடத் தொடங்கினர். போலிச்சித்தர் ஒருவர் வேகங்கொண்டு ஆடினார். வழிபட வந்த ஒரு பெண்ணும் ஆடினாள். சில நிமிடங்களில் சித்தர் அப்பெண்ணைக் கட்டியணைத்தார். அவளும் விருப்புடன் கட்டியணைத்தாள். வெகுநேரம் வரை அந்த நிலை நீடித்தது. சக்தி வழிபாட்டின் போது நன்றாகக் கள் அருந்தித் தன்னிலை மறப்பது போல மறந்து பெண்ணைக் கட்டியணைக்கலாம் என்ற நிலையால் நானும் நன்றாகக் கள் அருந்திவிட்டுப் பெண்களை அணைப்பேன். இதனால் தினமும் சித்தர்களை அழைத்து வழிபாடு செய்ய வேண்டும் என்ற எண்ணம் உருவாகியது. இதுவும் நான் கெடக்காரணமாக இருந்தது. சிவனைச் சக்தியிலிருந்து பிரிக்க முடியாது. அப்படிப் பிரிக்க முடியாத நிலையில் உள்ள சக்தியை இவர்கள் தனியே காண்கின்றனர். சிவத்திடமிருந்து பிரிக்க முடியாத சக்தியின் திரிபு தான் உலகமும் உயிர்களும் என்பதும், சக்தியிடம் ஒடுங்குவதே வீடு பேறென்பதும் பொய். சிவனில்லாவிட்டால் சக்தியில்லை. சக்தியில்லாவிட்டால் சிவமில்லை. இரண்டும் கலந்தது தான் சிவஞானம் என்று இப்போது உணர்கின்றேன். கள்ளும் காமமும் ஒரு போதும் திருவடியுணர்வைத்தராது. அது

திருவடியுணர்வைப் பிரித்து வாழ்வையழிக்கும் என்று இப்போது தான் புரிகிறது'' என்றான் தில்லைநாதன்.

நடப்பாற்றல்

**320. சத்தன் அருள்தரிற் சக்தி அருளுண்டாஞ்**
**சக்தி அருள்தரிற் சத்தன அருளுண்டாஞ்**
**சக்தி சிவமாம் இரண்டுந்தன் னுள்வைக்கச்**
**சத்தியம் எண்சித்தித் தன்மையு மாமே.**

''நான் விலகினாலும் போலிச்சித்தர்கள் என்னை விடுவதில்லை. அதனால் நான் ஒரு நாள் தாடிச்சாமியாரிடம் வந்து எனது நிலையைக்கூறி விளக்கம் கேட்டேன். அவர் சொன்னார், ''மகனே சக்தியையும் சிவத்தையும் ஒரு போதும் பிரிக்க முடியாது. உனது தாயாரும் தந்தையும் இருவர். ஆனால் நீ தாய்க்கும் தந்தைக்கும் பிறந்த ஒருவன். நீ தந்தையின் பிள்ளையா இல்லைத் தாயின் பிள்ளையா? உன்னைவிட்டுத் தாயையும் தந்தையையும் பிரிக்க முடியாது. அதை விளக்குவதே சிவசக்தியின் கூட்டு. சிவன் தனக்குள் சக்தியை ஒடுக்கி வைத்துள்ளான். இது பேரொடுக்கப் பேரூழியன்று நடைபெறும். பின் மார்கழித் திருவாதிரையில் சிவனால் அன்னை வெளிப்படுத்தப்படுவாள். சக்தி என்பது அருள். அது வனப்பாற்றல் அல்லது பறை எனப்படும். இவ்வனப்பாற்றலாகிய சக்தி சிறந்த அருளைத்தரும். அவ்வருள் நடப்பாற்றல் எனப்படும். நடப்பாற்றலருள் என்பது திருவருளாகும். திருவருள் ஆருயிர்களின் வினைக்கேற்ப உடல்களுடன் கூடிச் செந்நெறிக்கண் செலுத்தும். அப்படிச் செலுத்துவதன் மூலம் திருவடிப்பேற்றினை எய்துவிக்கும். சக்தி சிவம் ஆகிய இரண்டும்

ஆருயிர்களை ஆற்றல் அன்பு அறிவுகளாகிய தம்முள் அடக்கிக் கொள்ளும். அதனால் வாய்மையும் எண்குணப்பேறும் எய்தும். இதுவே தடையிலா ஞானம் எனப்படும். எனவே சிவத்தோடு சேர்ந்திருக்கும் சக்தி தான் திருவருள். சிவனும் சக்தியும் பிரியமாட்டாது பிரிந்தால் திருவருள் இல்லாது போய்விடும். ஆண்பெண் உறவால் பிறக்கும் மகவைப் போலச் சிவமும் சக்தியும் பிரிக்க முடியாத ஒரு சேர்க்கையாகும். இதைப் பிரித்துப் பார்ப்போர் பொய்ச் சமயத்தினர். இவர்கள் இவற்றை உணராத மூடர்கள். சிவனிருக்கும் இடத்தில் சக்தியும் இருப்பாளென்று புராணங்கள் கூறுகின்றன. நீரையும் குளிரையும், தீயையும் வெப்பத்தையும் போன்ற சிவசக்திப் பிணைப்பை யாராலும் பிரிக்க முடியாது. அதனால் நீ ஐயத்தை விட்டுவிடு'' என்றார். அதன் பின்பு தான் நான் எனது எண்ணத்தை மாற்றினேன்'' என்றான் தில்லைநாதன்.

இரவல்பொருள்

**321. தத்துவம் நீக்கி மருள்நீக்கித் தானாகிப்**

**பொய்த்தவம் நீக்கிமெய்ப் போகத்துட் போகியே**

**மெய்த்த சகமுண்டு விட்டுப் பரானந்தச்**

**சித்திய தாக்குஞ் சிவானந்தத் தேறலே.**

எனது தடுமாற்றத்தைக் கண்ட தாடிச்சாமியார் சொன்னார், “மகனே, நான் சொல்வதை நீ புரிந்து கொள்ளவில்லைப் போலத் தெரிகிறது. இவற்றைப் புரிந்து கொள்ள மாயாகாரியங்களைத் திருவருளால் நீக்குதல் வேண்டும். மாயாகாரிய மெய்யாகிய தத்துவம் முப்பத்தாறு, மெய்யாக்கம் என்று சொல்லப்படும் தாத்துவிகம் அறுபது. மொத்தம் தொண்ணூற்றாறு மெய்களின் தொடர்புண்மைகளைத் திருவருளால் கண்டுணரல் வேண்டும். எமக்குத் தரப்படுபவையெல்லாம் ஆண்டவனது உடைமை. அவற்றை ஆண்டவன் ஆருயிர்கள் அனுபவிப்பதற்காக இரவலாகக் கொடுக்கிறான். ஆனால் உயிர்கள் இவ்வுண்மையை ஒரு போதும் ஏற்றுக்கொள்வதில்லை. அவையெல்லாம் தாம் தேடிய, தமக்குரிய பொருள்களென்று நினைத்து இறுமாந்திருக்கின்றன. கேளாமல் வந்த பொருட்கள் சொல்லாமல் போய்விடும் என்ற உண்மையை உயிர்கள் உணருதல் தான் தத்துவ நீக்கம். அந்த நிலை ஏற்பட்டால் தான் உயிர்களைப் பற்றி நிற்கும் மருள் நிலை நீங்கும். நீங்கினால் உலகப்பற்று அறும். அதனால் ஆருயிர்களுக்குத் தமது நிலை புரியும். இது திருவருளின் அருளால் தான் நடைபெறும். அந்த நிலையில் நிலையில்லாத பொருட்களை வேண்டிச் செய்யும் வேள்வி முதலிய பொய்த்தவம் நீக்கப்படும். அது நீங்கினால் நிலையாத பொய்ப்போகம் கழியும். திருவடியுணர்வாகிய மெய்ப்போகம் உண்டாகும். இதனால் பேரின்பப் பெருவாழ்வு உண்டாகும். இறைவனை ஐந்தெழுத்தால் முழுமனதுடன் அர்ச்சித்தால் திருவடியுணர்வு நிலை தோன்றிச் சிவஞானப்பேறு கிடைக்கும். இது வேள்விகளாற் கிடைக்காது” என்றார். வீட்டிற்குச் சென்று யோசித்துப் பார்த்தேன். இறைவன் எமக்கு அனுபவிக்கத்தந்த பொருட்கள் யாவும் நிலையில்லாதவையென்று புரிந்து கொண்டேன். எனது நண்பன் ஒருவன்

ஒரு பெண்ணைத் தீவிரமாக எட்டு வருடங்களாகக் காதலித்தான். அவளும் அவனைக் காதலித்தாள். அவள் தான் தனது உடைமையென்று நினைத்தான். ஆனால் அவள் இன்னொருவனோடு சென்று விட்டாள். சில காலம் செல்ல அவன் இன்னொரு பெண்ணை மணந்தான். அவள் விபத்தில் இறந்து விட்டாள். அதனால் அவன் பைத்தியமானான். இந்த நிலை இறைவன் தந்த இரவல் பொருளைத் தனது உடமையென்று நினைத்ததால் வந்தது'' என்றான் தில்லைநாதன்.

சிவானந்த அமிழ்து

**322. யோகிகள் கால்கட்டி ஒண்மதி ஆனந்தப்**

**போத அமுதைப் பொசித்தவா் எண்சித்தி**

**மோகியா் கள்ளுண்டு மூடராய் மோகமுற்று**

**ஆகும் மதத்தால் அறிவழிந் தாரே.**

``தாடிச்சாமியாருக்கு எனது நிலையில் சந்தேகமேற்பட்டது. அதனால் சொன்னாா், ``தில்லை, அருளால் அருந்தவம் புரியும் யோகிகள் பிராணவாயுவை அடக்கி நடுநாடிவழியாச் செலுத்திப் புருவ நடுவாகிய மதிமண்டலத்திற்கு ஏற்றி, அங்கு தோன்றும் இயற்கை உண்மை அறிவு இன்பமாகிய திருவடியுணர்வு என்ற அமிழ்தை உண்பர். அப்படியானவர்கள் சிவபெருமானது எண்குணசித்தியையும் பெறுவர். அப்படியானவர்களிற் சிலா் கூட அறிவை அழிக்கின்ற கள்ளினை உண்டு பின்னும் மோக மிகுதியால் உண்டு உண்டு தம் அறிவை அழிப்பா். அதனால் இவா்கள் தன்னிலையை இழப்பா். இப்படியானவா்களுக்குத் திருவடியுணர்வு அழிந்துவிடும். அதனால் இவா்களது தவமும் கால்கட்டிப் பெற்ற பயனும் இல்லாமற் போய்விடும். சக்தியை உபாசிக்கின்ற

சித்தர்களுக்குத் தான் பெரும்பாலும் இந்த நிலை உண்டாகும். பொய் வேடமும், பொய்த்தவமும், போலியான வாழ்வும் மெய்யான உணர்வுகளை உண்டாக்காது. அதனால் அவற்றை விடுத்துப் பற்றில்லாத மனத்துடன் திருவைந்தெழுத்தையோதினால் சிவானந்த அமிழ்தான திருவடியுணர்வையடைந்து சிவனின் எண்குணச் சித்திகளையும் பெறலாம். நீ சிவனின் அருளைப் பெறப் பெரும் முயற்சிகள் செய்ய வேண்டும் என்று நினைக்கிறாய். அப்படியல்ல. முதலில் சிவன் தான் முழுமுதற் கடவுள் என்று நம்பு. பின் திருவைந்தெழுத்தையோதிக் கணக்கீடு செய். எல்லாம் உன்னைத் தேடிவரும்'' என்றார். நான் இப்பொழுது திருவைந்தெழுத்தை முறைப்படி ஓதுகிறேன். அதனால் எனது மனம் மகிழ்கிறது. துன்பங்கள் படிப்படியாக விலகிச் செல்கின்றன. காலப்போக்கில் நான் சிவஞானத்தைப் பெற்று விடுவேன்'' என்றான் தில்லைநாதன். அவனது முகத்தில் ஒளி தெரிந்தது.

**முதல் தந்திரம் முற்றும்**